D
V211,31'807
807.25-1.
227660

25-4-2007

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-36 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 5 மற்றும் 6) | 37-160 |
| **2. கவன ஈர்ப்பு—** | |
| வனத் துறையில் பணிபுரியும் சமூக வன ஊழியர்கள் மற்றும் தோட்டக் காவலர்கள், பணி நிரந்தரம் செய்தல் | 160-165 |
| *திரு. சி. கோவிந்தசாமி | 160-161, 162-163, 164-165 |
| திரு. கோவை தங்கம் | 163 |
| மாண்புமிகு திரு. என். செல்வராஜ் | 161-162, 163-164, 165 |
| **3. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 165 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 165-166 |
| (இ) அரசு உறுதிமொழிக் குழு | 166 |

பக்கங்கள்

**மானியக் கோரிக்கைகள், 2007–2008,**
**விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| (அ) கோரிக்கை எண் 22 – காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)<br>(ஆ) கோரிக்கை எண் 23 – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)<br>(இ) கோரிக்கை எண் 37 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 166-267, 269-319 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 166-167, 192, 213, 229 |
| திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 195, 229-238, 240-247 |
| * திரு. பெ.சு. விஜயகுமார் | 171, 247-254 |
| * திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் | 255-267 |
| திரு. தி. வேல்முருகன் | 169, 193-194, 216, 269-281 |
| * திரு. சி. கோவிந்தசாமி | 281-290 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 168-169, 198-199, 218, 290-298 |
| திரு. வீர. இளவரசன் | 183, 223, 298-303 |
| திரு. கு. செல்வம் | 303-313 |
| திரு. சி. ஞானசேகரன் | 176, 201, 313-319 |




பக்கங்கள்

**5. விதி 110-ன்கீழ் அறிக்கை**—

| | |
|---|---|
| நகர்ப்புற வளர்ச்சி, சாலைப் போக்குவரத்து மேம்படுத்துதல் குறித்த மாநில அளவிலான குழு அமைத்தல் – மாண்புமிகு செய்தித் துறை அமைச்சரின் அறிக்கை | 267-268 |

**6. அரசினர் தீர்மானம்**—

| | |
|---|---|
| விதி 32-ஐத் தளர்த்துதல் | 319-320 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 320-322 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஓழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

2. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

   நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

3. **மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:**

   மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

227660

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்—அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**13. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு

**16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு; மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR — THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Statistics and Ex-Servicemen** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Statistics and welfare of Ex-Servicemen

| | | |
|---|---|---|
| 6. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development |
| 7. **Minister for Public Works and Law** | .. | **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts |
| 8. **Minister for Higher Education** | .. | **The Hon. Dr. K. Ponmudi:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals |
| 9. **Minister for Transport** | .. | **The Hon. Thiru K.N. Nehru:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act |
| 10. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act |
| 11. **Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Rural Industries including Cottage Industries and Small Industries |



| | | |
|---|---|---|
| 12. **Minister for Revenue and Prisons** | .. | **The Hon. Thiru I. Periasamy:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies |
| 13. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation |
| 14. **Minister for Information** | .. | **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:** Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority |
| 15. **Minister for Food and Co-operation** | .. | **The Hon. Thiru E.V. Velu:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Co-operation |
| 16. **Minister for Housing and Slum Clearance** | .. | **The Hon. Thiru Suba. Thangavelan:** Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control |
| 17. **Minister for Health** | .. | **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:** Health, Medical Education and Family Welfare |

18. **Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. **Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. **Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2007 **அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.**

| | |
|---|---|
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம். | .. குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி அ. லெற்றிஸால், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. பிரேமா, பி.காம்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கயற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமாமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. .. ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். .. தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. .. வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. .. பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. .. ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. .. நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. .. பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. .. திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். .. ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. .. சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. .. அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. .. தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. .. பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. .. கடலூர்
42. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
44. கண்ணப்பன், திரு. மு. .. தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. .. தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. .. செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. .. காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. .. தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. .. முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. .. அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்.
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. .. மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. .. எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். .. கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. .. குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. .. திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஓட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. ஸ்ரீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்

110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்

111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி

113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி

114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)

115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி

117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)

118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு

119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை

120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி

121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்

122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)

123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்

124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)

125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்

126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்

127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு

128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்

129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)

130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு

132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)

133. துரைமுருகன், திரு. - காட்பாடி

134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி

135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)

136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு

137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை

138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை

139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி–2

140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி

141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)

142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்

143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)

145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி

146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)

147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு

150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்

151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்

152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்

153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். .. அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். .. கடையநல்லூர்
157. புஷ்பாராஜ், திரு. செ. .. கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. .. பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். .. பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆவா.)
167. பொன்னுதுரை, திரு. செ. .. பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. .. திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. .. உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. .. திருவோணம்
173. மணி, திரு. எஸ். .. பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. .. மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. .. திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. .. நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். .. திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. .. முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. .. திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. .. சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. .. காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். .. சேலம்–I
193. ராணி வெங்கடேசன், திருமதி .. சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. .. கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா. .. கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. .. பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். .. இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். .. மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்

| | | |
|---|---|---|
| 200. | ராஜன், திரு. அ. | .. நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்கேகே.பி. | .. ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | .. திருப்பத்தூர் |
| 203. | லட்சுமணன், திரு. ச. | .. போடிநாயக்கனூர் |
| 204. | லதா, திருமதி ஜி. | .. குடியாத்தம் |
| 205. | லீமா றோஸ், திருமதி ரா. | .. திருவட்டாறு |
| 206. | வசந்தகுமார், திரு. எச். | .. நாங்குநேரி |
| 207. | வரதராஜன், திரு. ரா. | .. விருதுநகர் |
| 208. | விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 209. | விடியல் எஸ். சேகர், திரு. | .. காங்கேயம் |
| 210. | விஜயகாந்த், திரு. | .. விருத்தாசலம் |
| 211. | விஜயகுமார், திரு. கே.எஸ். | .. கும்மிடிப்பூண்டி |
| 212. | விஜயகுமார், திரு. பெ.சு. | .. போளூர் |
| 213. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | .. செய்யாறு |
| 214. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | .. பேராவூரணி |
| 215. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. சேலம்–2 |
| 216. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 217. | வேலு, திரு. எ.வ. | .. தண்டராம்பட்டு |
| 218. | வேலுசாமி, திரு. இல. | .. தருமபுரி |
| 219. | வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 220. | வேலுமணி, திரு. சு.ப. | .. பேரூர் |
| 221. | வேல்துரை, திரு. பா. | .. சேரன்மகாதேவி |
| 222. | வேல்முருகன், திரு. தி. | .. பண்ருட்டி |



| | | |
|---|---|---|
| 223. | வைத்திலிங்கம், திரு. ஆர். | .. ஒரத்தநாடு |
| 224. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | .. கிள்ளியூர் |
| 225. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | .. விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | .. அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 228. | ஜெயக்குமார், முனைவர் கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | .. குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | .. வந்தவாசி (செ.வ.) |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 233. | ஹசன் அலி, திரு. கு. | .. இராமநாதபுரம் |
| 234. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | .. நியமனம் |
| 235. | (வெற்றிடம்) | .. மதுரை மேற்கு |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | |
|---|---|
| திரு. இரா. விடுதலை | .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 12, சர்வஜித்—திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஏப்ரல் 25, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்*
*போற்றலுள் எல்லாம் தலை."*

ஒரு செயலைச் செய்து முடிக்க வல்லவரின் ஆற்றலை இகழாது இருந்தால், அதுவே தம்மைக் காத்திடும் காவல்கள் அனைத்தையும்விடச் சிறந்த காவலாக அமையும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள், வினா எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**131—**

### இலவச மின் இணைப்பு

***543—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதியில் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின் இணைப்பு உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2007 ஏப்ரல் 25

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு வருடமும் அரசு நிர்ணயிக்கும் குறியீட்டிற்குத் தகுந்தவாறு பதிவு அடிப்படையில், வரிசைப்படி சாதாரண வரிசையில், இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில், 31-3-1989 வரை, சாதாரண வரிசையில் பதிவுசெய்த இலவச விவசாய விண்ணப்பங்களுக்கு, மின் இணைப்பு இதுநாள் வரை வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம் என்பது பின்தங்கிய, வறட்சி அடிக்கடி பாதிக்கிற மாவட்டம். அந்த மாவட்டத்தில் ஒவ்வோர் ஆண்டும், விளைகிற நேரத்திலேகூட, தண்ணீர் பற்றாக்குறையினால் விவசாயம் பாதிக்கிற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டுகூட, கடுமையான வறட்சியால் விவசாயம் பாதித்திருக்கிற சூழ்நிலை ஏற்பட்டது. ஒவ்வோர் ஆண்டும், இந்த மாவட்டத்தில் 300-க்கும் குறையாத மின் இணைப்புகள் வேண்டி, விவசாயிகள் பதிவு செய்து வருகிறார்கள். ஆனால், இதுவரை, அரசு 1989 ஆம் ஆண்டு வரைதான் இலவச மின்சாரம் வழங்கி இருக்கிற ஒரு சூழலில், விவசாய உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தை அதிகமாக முன்னேற்ற வேண்டுமென்று சொல்லுகிற நாம், 17 ஆண்டுகள் ஒரு விவசாயி மின் இணைப்புப் பெறுவதற்குக் காத்திருக்கிற ஒரு நிலை ஏற்பட்டால், கிராமப்புறப் பொருளாதாரத்தை, உற்பத்தியை, விவசாயத்தை எப்படிப் பெருக்க முடியும் என்ற கவலையோடு, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், எல்லா முனைகளிலும் தமிழகத்தை முன்னேற்றுகிற இந்த நேரத்தில், ஒரு சீரிய திட்டத்தின் அடிப்படையில், வறட்சியால் பாதிக்கிற இப்படிப்பட்ட மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, விரைவாக அனைத்து விவசாயிகளுக்கும், அவர்கள் பதிவு செய்த அந்த ஆண்டே, மின் இணைப்புக் கிடைப்பதற்கான நடவடிக்கை எடுத்து உதவுவார்களா என்று உங்களின்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே

சென்னை-600 009



2007 ஏப்ரல் 25]

தெரிவித்ததைப்போல, சிவகங்கை மாவட்டத்திலே விவசாயிகள் அதிகமானவர்கள் பதிவு செய்துவிட்டு, விவசாய மின் இணைப்புக் கிடைக்காமல் இருக்கிறார்கள் என்ற ஒரு கருத்தை, மத்திய நிதி அமைச்சர் நேரிலேயே சொல்லி, "ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி, 500 மின் இணைப்புகளைக் கூடுதலாக வழங்குங்கள்" என்று கடந்த ஆண்டு கேட்டுக்கொண்டார்கள். அதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்தபோது, "நிதி அமைச்சரே கேட்கின்றபோது, இல்லையென்று சொல்லாமல் அவசியம் கொடுத்துவிடுங்கள்" என்று சொன்னார். எனவே, கடந்த ஆண்டு 500 மின் இணைப்புகள் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக மின் வாரியத்திற்கு 5 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை; நிதி அமைச்சரைத் திருப்திப்படுத்த வேண்டுமென்பதற்காக, அந்த மாவட்டத்திற்குமட்டும், கூடுதலாக 500 மின் இணைப்புகள் கடந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் மின் இணைப்புக்காகப் பதிவுசெய்து 15 ஆண்டுகள், 16 ஆண்டுகள் ஆகிற சூழ்நிலையில், அந்த நிலங்களை விற்றுவிடுகிற ஒரு நிலையும் ஏற்படுகிறது. அந்தச் சமயத்தில், குடும்பத்தில் பங்குகள் எல்லாம் பிரிக்கப்பட்டு, அந்த நிலங்களின் சர்வே எண்கள் மாறுகிற ஒரு சூழ்நிலையில், அவர்களுக்கு, இப்பொழுது தற்சமயம், 15 ஆண்டுகளுக்குப் பின்னால் மின் இணைப்புக் கிடைக்கிற நேரத்தில், ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டவர்களுக்குத்தான் மின் இணைப்பு எனச் சொல்லப்படுகிறது. அப்படிப் புதிதாக விற்றிருக்கிற அந்த நிலங்களின்மீது பதிவு செய்திருக்கிறவர்கள், தற்போது அவர்கள் வேறு சர்வே எண் உள்ள நிலத்தில் Bore அல்லது கிணறு வெட்டியிருக்கிற நேரத்தில், மின்சார வாரியம் அவர்களுக்கு மாற்று இடத்தில் மின் இணைப்புக் கொடுப்பதற்குச் சட்டத்தில் விதி இல்லையென்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குகிறது. அதனால் விவசாயிகள் பாதிக்கிற ஒரு சூழல் ஏற்படுகிறது. எனவே, அப்படிப்பட்ட நடைமுறைச் சிக்கலை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதோடு, இப்போது மின்னிணைப்பு கொடுக்கிற நேரத்தில், 25 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் என்று minimum கட்டணங்களை வைத்திருக்கிறார்கள். ஆனால், 25 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் என்ற minimum கட்டணங்களைக்

[2007 ஏப்ரல் 25

கட்டக்கூடிய அந்த விவசாயிகளுக்கு, முன்னுரிமையின் அடிப்படையில் மின்னிணைப்பு கொடுக்கிற நேரத்தில், 50 ஆயிரம் ரூபாய் கட்டுகிறவர்களுக்குக் கூடுதலாக 1 இலட்சம் ரூபாய், 1½ இலட்சம் ரூபாய் கட்டவேண்டுமென்று வந்தால், அவர்கள் 1½ இலட்சம் ரூபாய் வரை பணம் கட்டவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது; அதைத் தவிர்த்து, அதில் என்ன செலவு வந்தாலும், அவர்கள் 50 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கட்டி மின்னிணைப்பைப் பெறுகிற ஒரு வாய்ப்பையும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று தங்கள்மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, self financing திட்டத்தின்கீழ், 10 ஆயிரம் ரூபாய், 25 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் என்ற பிரிவுகளிலே பணம் கட்டி, மின்னிணைப்பைக் கேட்கின்றவர்களை, எந்தக் காரணத்தைக் கொண்டும் அதற்கு மேலே பணம் கட்டும்படி, எந்த விவசாயியையும் மின்சார இலாகா வற்புறுத்துவதில்லை.

உறுப்பினர் அவர்கள், முதலிலே ஒரு கேள்வியைக் கேட்டார்கள். ஏற்கெனவே ஒரு கிணறு வெட்டி, அதில் தண்ணீர் இல்லையென்று சொன்னால், வேறொரு சர்வே நம்பரிலே bore போட்டு, அங்கே மின்னிணைப்பு கேட்டால், மின்னிணைப்பு கொடுப்பதற்கு விதிகளிலே இடம் இல்லை என்று மின் வாரியம் மறுப்பதாகச் சொன்னார்கள். ஒவ்வொரு விவசாயியும் முதலிலே ஒரு கிணற்றுக்காக சர்வீஸ் வாங்கிக்கொண்டு, பிறகு வேறொரு இடத்திலே அந்த இணைப்பை மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டால், அதைக் கொடுப்பதற்கு, ஒவ்வொரு கிணற்றுக்கும் கம்பிகள் இழுப்பது, கம்பங்கள் நடுவது போன்ற பணிகள், மின்சார வாரியத்தில், அந்தப் பணிகள்தான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும். எனவேதான், விவசாயிகள் ஒருமுறை மின்னிணைப்பைப் பெற்றால், அதே சர்வே நம்பருக்குள் வேறொரு கிணறு எடுத்து, அங்கேயே கேட்டால் மின்னிணைப்பு கொடுக்கப்படுகிறதே தவிர, வேறு சர்வே நம்பரில் கேட்டால், மின்னிணைப்பு கொடுப்பதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.



2007 ஏப்ரல் 25]

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தியிலே தமிழகம் surplus-ஆக, அதாவது, தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட, பயனீட்டிலே நாம் சில மாற்றங்களைக் கொண்டுவர வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். பழைய குண்டு பல்புகளைப் பயன்படுத்துவதன்மூலமாக, அதிகமாக மின்சாரம் செலவாகிறது. ஆகவே, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்ற C.F.L. என்று சொல்லப்படுகின்ற, Compact Fluorescent Lamp என்று சொல்லப்படுகின்ற அந்த விளக்குகளைப் பயன்படுத்துவதன்மூலம் மின்சாரம் நிறைய மிச்சமாகும் என்பதைப் பல்வேறு நிறுவனங்கள், பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களெல்லாம் வலியுறுத்தி வருகின்றன. ஆகவே, அதன் தொடர்பாக மின்சாரத் துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அரசாங்க அலுவலகங்களிலே அத்தகைய C.F.L பல்புகளைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் அறிவுறுத்துமா என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த பல்புகளைப் பயன்படுத்துவதன்மூலமாக, 40 சதவிகிதம் மின்சாரம் மிச்சப்படுத்தப்படும் என்று ஆராய்ச்சிபூர்வமாக உணரப்பட்டு, எரி சக்தித் துறையின்மூலமாக அந்த பல்புகளைப் பல இடங்களிலே அறிமுகம் செய்துகொண்டு வருகிறார்கள். குறிப்பாக, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே பேசும்போது, இப்படிப்பட்ட விளக்குகளைப் பயன்படுத்தினால், நம்முடைய உள்ளாட்சித் துறைக்கு 40 சதவிகிதம் மின்சாரக் கட்டணமும் குறையும்; இன்னொரு பக்கத்திலே, மற்ற பல்புகளைவிட அந்தப் புதிய பல்புகளைப் பயன்படுத்துவதன்மூலம் கார்பன்-டை-ஆக்சைடு வெளிவருவது கட்டுப்படுத்தப்படுகிறது; அதனாலே, நச்சுப் பொருள் தணிக்கப்படுகிறது; அதனாலே, நம்முடைய மாநிலத்திலே சுகாதாரம் பெருகுவதற்கும் வாய்ப்பிருக்கிறது என இதையெல்லாம் எடுத்துச்சொல்லி, கிராமப்பகுதிகளில் தெரு விளக்குகள், அல்லது வீட்டிற்குப் பயன்படுத்துகின்ற விளக்குகளுக்கெல்லாம், மாற்றாக அந்தப் புதிய பல்புகளைப் பயன்படுத்துவதற்கு ஒவ்வொரு துறைக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலேயும், அந்தத் துறை அதிகாரிகளிடத்திலேயும் வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது.

[2007 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மதுரை மாவட்டங்களெல்லாம் வறட்சியான பகுதிகள். ஆகையினால், இங்கு 10, 12 ஆண்டுகளுக்கு முன்பு, மின்சாரம் கேட்டுப் பதிவு செய்த விவசாயிகளுக்குத்தான் இப்பொழுது seniority படி, மின்னிணைப்பு வழங்கப்பட்டு வருகின்றது. நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, சிவகங்கை மாவட்டத்திற்கு மத்திய நிதியமைச்சர் அவர்கள் கேட்டதால், 500 மின்னிணைப்புகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கச் சொன்னதாகச் சொன்னார்கள். அதேபோல், எங்களுடைய பகுதியான மதுரை மாவட்டத்திற்கும், மேலூர் தொகுதி வறட்சியான பகுதியாக இருப்பதால், அந்தப் பகுதிக்கும், அங்குள்ள விவசாய மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக விவசாயிகளுக்குக் கூடுதலாக மின்னிணைப்பு வழங்கப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மாவட்டமாக இருந்தாலும், மின்னிணைப்பைக் கொடுக்க வேண்டுமென்பதிலே இந்த அரசாங்கத்திற்கு இருவேறு கருத்து வேறுபாடுகள் இல்லை. ஆனால், ஒரு மின்னிணைப்பு கொடுப்பதற்கு, மின்சார இலாகாவிற்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவாகிறது. அதுமட்டுமல்ல; இலவச மின்சாரம் வழங்கிக்கொண்டிருக்கின்றோம். இதை எல்லாம் எண்ணிப்பார்த்தால், மொத்தம் உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்திலே, 27 சதவீத மின்சாரம், விவசாயத்திற்கே நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். 10,000 மெகா வாட் மின்சாரத்தை நாம் பயன்படுத்துகிறோம் என்று சொன்னால், ஏறக்குறைய 2,700 மெகா வாட் மின்சாரம், விவசாயத்திற்கு இலவசமாகவே பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அதனால் ஏற்படுகின்ற இழப்பை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏறக்குறைய 1,500 கோடி ரூபாய் அளவிற்கு மின்சார வாரியத்திற்கு இழப்பாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னமும் இதை நாம் அதிகப்படுத்திக்கொண்டே போனால், அரசாங்கத்தினுடைய நிதி நிலைமையை எண்ணிப்பார்த்து, இதை



2007 ஏப்ரல் 25]

எல்லாம் பரிசீலிக்க வேண்டிய சூழ்நிலையிலே மின்சார வாரியம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கடந்த 1985 முதல் 1995 வரை மின் கம்பங்கள் செல்லுகின்ற ஓரங்களில், அதாவது ஒரு மின் கம்பம் மட்டும் அமைத்து மின்சாரம் எடுக்கவேண்டுமென்றால் உடனடியாக மின் இணைப்பு வழங்கப்பட்டு வந்தது. அந்த மின் கம்பங்களின் அருகில் இருக்கின்ற bore well மற்றும் கிணறுகளுக்கு உடனடியாக மின் இணைப்பு இலவசமாகத் தரப்பட்டது. ஆனால், 1985 முதல் 1995 வரையில் இருந்த அந்த நடைமுறை, தற்பொழுது இல்லையென்று மின் வாரிய அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். அதனால், அந்தப் பழைய நடைமுறையைப் பயன்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் சொல்வதைப்போல, இப்பொழுதும் அந்த நடைமுறை இருக்கிறது. ஆனால், அந்த நடைமுறையின்படி, seniority அடிப்படையிலே, அந்த மின் இணைப்பு கோரிய இடம் அங்கே வருமானால், அடுத்த கம்பத்திலே இருந்துகூட மின் இணைப்பு கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

**திரு. கூ.ந. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது பேரூராட்சிப் பகுதியாக இருக்கின்ற அந்தப் பகுதிகளில், முன்பு ஊராட்சியாக இருந்தபொழுது கட்டப்பட்ட அந்தத் தொகுப்பு வீடுகளில் வசிக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு, இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகின்ற அந்தத் திட்டத்தின்மூலம் ஒற்றை விளக்கு வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒற்றை விளக்கு யார் யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று

அரசாங்கம் ஏற்கெனவே அரசாணை பிறப்பித்து, அந்தத் திட்டத்தை அமல்படுத்திக்கொண்டு இருக்கிறதோ, அவர்களுக்கெல்லாம் தொடர்ந்து இப்பொழுதும் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**132—**

**மலர் விற்பனை நிலையம்**

***18553—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்ட மலர் உற்பத்தி விவசாயிகள் நலன் கருதி, காஞ்சிபுரத்தில் மலர் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் மலர் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு, காஞ்சிபுரத்தில் மலர் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் மற்றும் திருச்சி-விருச்சிகப் பூ, திண்டுக்கல்-சம்பங்கி, பெங்களூர்-ரோஜா, கிருஷ்ணகிரி-கேந்திப் பூ, செங்கம்-சாமந்திப் பூ, சித்தூர், ஓசூர், வேலூர் மற்றும் பச்சியூர், சுங்குவார்சத்திரம், பாப்பாங்குடி, இப்படிப் பல மாவட்டங்களிலிருந்தும், சிற்றூர்களிலிருந்தும் பூக்கள் நிறைய வருகின்றன. இந்தப் பூக்களை விற்பதற்கு, பூ வியாபாரிகள் அனைவரும் நடைபாதைகள் மற்றும் சரியாகப் பராமரிப்பில்லாத சாலைகளில், 50 கல் தொலைவு சென்று விற்பனை செய்கிறார்கள். இதனால்





நெருக்கடிகள் ஏற்பட்டு, மக்களுக்குச் சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, கட்டாயமாக, காஞ்சிபுரத்திலுள்ள பூக்கடைச் சத்திரத்திலாவது அல்லது வேறு இடத்திலாவது மலர் உற்பத்தி விவசாயிகள் நலன் கருதி, ஒரு மலர் அங்காடி அமைக்க அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் மலர் சாகுபடி 318 ஹெக்டேரில் செய்யப்படுகிறது. மலர் உற்பத்தி 2,222 மெட்ரிக் டன் ஆகும். இதில் ரோஜா 33 ஹெக்டேரிலும், மல்லிகை 154 ஹெக்டேரிலும், கனகாம்பரம் 71 ஹெக்டேரிலும், சாமந்தி 5 ஹெக்டேரிலும், துலுக்க சாமந்தி 2 ஹெக்டேரிலும், மற்றவை 53 ஹெக்டேரிலும் மொத்தம் 318 ஹெக்டேரிலே பயிரிடப்படுகின்றன. தற்பொழுது, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மலர்கள், காஞ்சிபுரம் பூக்கடைச்சத்திரம் மார்க்கெட்டிலும், சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிலும், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு உழவர் சந்தைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தனி விற்பனை நிலையம் ஒன்றை ஏற்படுத்தினால், போதுமான பூக்கள் வரத்து இருக்காது என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கமலாம்பாள்.

முற்பகல் 9-45

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தைச் சுற்றி நூற்றுக்கணக்கான கோயில்களுக்கு அன்றாடம் பூக்கள் தேவைப்படுகின்றன. அதுபோல மற்ற மாவட்டங்களுக்கும், சென்னைக்கும் நிறைய பூக்களை அனுப்ப வேண்டியுள்ளதால், காஞ்சிபுரத்தில் மலர் விற்பனை நிலையத்தினை அமைக்க மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகரத்தில் நிறைய கோயில்கள் இருக்கின்றன. அதற்கே, இப்போது உற்பத்தியாகின்ற பூக்கள் போதாது என்று கருதுகிறேன்.

[2007 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. கோபாலன்.

**திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கொய் மலர்கள்-Cut flowers-தயாரிக்கும் பணி, மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. அந்த விவசாயிகளுக்கு அரசுத் துறைமூலம் என்ன உதவி செய்யப்பட்டிருக்கிறது? மேலும், அவர்கள் வாழ்வு வளர என்ன ஏற்பாடுகள், நிதி உதவி செய்ய வேண்டி வரும் என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், ஊட்டியில், மலருக்கென ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம், நீல் புளாரா சர்வீசஸ் என்கிற தனியார் நிறுவனம்மூலம் அமைக்கப்பட்டு, இந்த மண்டலத்திலிருந்து மலர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. 2003-ல் எம்.ஓ.யு. போடப்பட்டு, 2006 முதல் இப்பணி செய்யப்பட்டு வருகிறது. இந்த ஏற்றுமதி மண்டலத்திலிருந்து 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.62.79 இலட்சம் அன்னியச் செலாவணி மதிப்புள்ள கீழ்க்காணும் மலர்கள், மத்திய மற்றும் தூரக் கிழக்கு நாடுகள், சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

காரனேஷன் மலர்கள்-6.41 இலட்சம் மலர்கள்-ரூ.27.59 இலட்சம் மதிப்பு; ஜெர்பரா மலர்கள்-1.12 இலட்சம் மலர்கள்-ரூ.4.50 இலட்சம் மதிப்பு; கிரைசாந்திமம் மலர்கள்-1.03 இலட்சம் மலர்கள்-ரூ.6.2 இலட்சம் மதிப்பு; லில்லியம்ஸ் மலர்கள்-0.30 இலட்சம் மலர்கள்-ரூ.8.5 இலட்சம் மதிப்பு; யூக்கலிப்டஸ் அலக்காரா இலை-3.00 இலட்சம் மலர்கள்-ரூ.9.00 இலட்சம் மதிப்பு; ஆஸ்பராகஸ் இலை-0.58 இலட்சம் மலர்கள்-ரூ.7.00 இலட்சம் மதிப்புள்ள மலர்கள், இலைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சமீபத்திலே ஊட்டியிலே, இந்த எக்ஸ்போர்ட் விற்பனை நிலையம்கூட தமிழக அரசின் சார்பிலே, தொடங்கி வைக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-செங்கம் பகுதியில் சம்பங்கி, மல்லிகை, ரோஜா



2007 ஏப்ரல் 25]

போன்ற மலர்கள் அதிக அளவில் பயிர் செய்யப்படுகின்றன. ஆனால், இவையெல்லாம் பெங்களூருக்கு அனுப்பப்பட்டுத்தான் விற்பனை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால், பல நேரங்களில் அந்த மலர்கள் கெட்டுவிடும் நிலை ஏற்படுகின்றது. ஆகவே, அந்தப் பகுதியில் சென்ட் தயாரிக்கின்ற தொழிற்சாலை அமைத்து, மலர் வியாபாரிகளுக்கு இந்த அரசு உதவி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் சென்ட் தயாரிக்கின்ற தொழிற்சாலையைத் தொடங்கிட, தற்போது உத்தேசம் இல்லை. தனியார்கள் முன்வந்தால், தேசிய தோட்டக்கலை நிதியிலிருந்து மானியம் கொடுத்து ஊக்குவிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**133—**

## கால்வாய்ப் பராமரிப்பு

***828--திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், மோட்டுப்பட்டி பெரியேரிக்கு வரும் கால்வாயைச் சீர் செய்து கரைக்குக் கான்கிரீட் அமைத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுசாமி.

[2007 ஏப்ரல் 25

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி சட்டமன்றத் தொகுதியிலே அமைந்துள்ள மோட்டுப்பட்டி பெரியேரியானது, சுமார் 200 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த ஏரிக்கு, தும்பநல்லி அணையிலிருந்துதான் மழை நீர் வந்தாக வேண்டும். ஆனால், அந்த அணையிலிருந்து இந்த ஏரிக்குக் கால்வாய் இல்லாத காரணத்தினால், பல ஆண்டுகளாக நீர் வரத்து இல்லாமல், இந்த ஏரி காய்ந்து கிடக்கிறது. அதனால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஏரிக்கு அருகில் இருக்கின்ற குட்டப்பட்டி ஏரியிலிருந்து மோட்டுப்பட்டி பெரியேரிக்குச் சுமார் ஒரு கிலோ மீட்டர் புதிய கால்வாயை வெட்டி, இந்த ஏரியைத் தூர் வாரினால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் பயன் பெறுவார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் இந்தப் பணியை இந்த ஆண்டிலேயே செய்து கொடுப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கிணங்கதான் இந்த ஏரியினுடைய கால்வாயைச் செப்பனிடுவதற்கு அரசு தீர்மானித்திருக்கிறது. கடந்த காலத்தில் பெய்த மழையின் காரணமாக, பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, 15 இலட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப் பல ஏரிகளுக்குத் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை ஒன்றாக்கி, நபார்டு வங்கிக்கு அனுப்பியிருக்கிறோம். விரைவில் ஒப்புதல் கிடைக்கும். நடவடிக்கை எடுக்கப்படும். •

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏரியைப் போன்றே என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் கடுகத்தூர் ஏரியானது, சுமார் 400 ஏக்கர் பரப்பளவு கொண்ட மிகப் பெரிய ஏரியாகும். இந்த ஏரிக்கு, பஞ்சப்பள்ளி நீர்த் தேக்கத்திலிருந்து மழைக் காலங்களில் நீர் வந்துகொண்டிருக்கிறது. அந்த நீர் வந்துகொண்டிருக்கின்ற கால்வாய்ப் பகுதியிலே பாலக்கோடு இரயில்வே பாதைக்கு அருகில், செங்கோடுப்பட்டி என்ற இடத்தில் சுமார் 20 மீட்டர் தொலைவு பாறை உடைக்கப்பட்டு, அதன் வழியாக



2007 ஏப்ரல் 25]

அந்தக் கால்வாயில் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அந்தப் பாறை முழுமையாக உடைத்து எடுக்கப்படாத காரணத்தினால், அந்த வழியாக நீர் வரத்துச் சரியாக வருவதில்லை. மேலும், எர்ரப்பட்டி என்கின்ற இடத்தில், சாலையின் அடியில், அதாவது, சொருகுப் பாலத்தின் வழியாக அங்கே மழை நீர் வரும்போது, அந்தக் கால்வாயில் தடை ஏற்படுவதால், அங்கே ஏறக்குறைய சுமார் 3 கிலோ மீட்டர் அளவிற்கு நீரானது தேங்கி நிற்கிறது. ஆகவே, இந்த 2 இடங்களையும் அமைச்சர் அவர்கள் செப்பனிட்டுக் கொடுத்தால், அந்த மிகப் பெரிய ஏரிக்கு நீர் வரத்து மழைக் காலங்களிலே சரியாக வரும் என்பதால் தயவுசெய்து இந்தப் பணியைச் செய்து கொடுப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட ஏரிகளைப் பராமரிப்பதற்கென்று, ஆண்டுதோறும் AICNMR என்ற பராமரிப்பு நிதியாக, முதல்வர் அவர்கள், சுமார் 20 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதன்மூலமாக, இப்படிப்பட்ட பராமரிப்புப் பணிகள் நடைபெறுகின்றன. அதில் குறிப்பாக, சிறப்பாக, பேரவை உறுப்பினர்கள், இன்னின்ன ஏரியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தால், அந்த ஏரிகளையும் எடுத்துக்கொள்வோம். அதேபோன்று, நபார்டு வங்கியின்மூலம் 10 ஆயிரம் ஏரிகள் எடுத்து, தூர் வாரிச் செப்பனிடுகிற காரியத்தைச் செய்துகொண்டிருக்கிறோம். சுமார் 8 ஆயிரம் ஏரிகளில் இன்றைக்கு வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்ததைப்போல், என்னுடைய மானியக் கோரிக்கையிலே தெரிவித்ததைப்போல், நீர் வள, நில வளத் திட்டம் (IAMWARM), அதாவது, உலக வங்கியினுடைய திட்டத்தின்கீழ் சுமார் 1,800 கோடி ரூபாயில் 5 ஆயிரம் ஏரிகளை எடுத்து--63 பேசின்களைக் குறிப்பிட்டுக் காட்டினேன்; அந்தப் படுகைகளிலே உள்ள 5 ஆயிரம் ஏரிகளை—தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 6 ஆண்டுக் காலத்திற்குள் 5 ஆயிரம் ஏரிகளை system and non-system என்ற முறையில் எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒவ்வொரு சட்டப் பேரவை உறுப்பினருக்கும், அவரவர்களுடைய தொகுதியில் அத்தியாவசியமாகச் செய்தே தீர வேண்டும் என்று கருதுகிற 2 ஏரிகளைப் பழுதுபார்க்கும்படி எனக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த 2 ஏரிகள் எவை என்று குறிப்பிட்டு எழுதிக் கொடுத்தால், அவற்றையும் நாங்கள் எடுத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம்.

[2007 ஏப்ரல் 25

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி பெரிய ஏரியிலிருந்து, கால்வாய்மூலமாக பர்கூர் தொகுதி ஆம்பள்ளிக்குத் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. இதனால், விவசாயிகளும், பொது மக்களும் பெரிதும் பயனடைகிறார்கள். அருகிலே இருக்கின்ற கந்திலி ஒன்றியம், வேலூர் மாவட்டத்திலே மிக மிக வறட்சியான ஒன்றியமாக இருக்கிறது. கடும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது, விவசாயம் பொய்த்துவிட்டது. எனவே, 3 கிலோ மீட்டர் கால்வாயைத் தூர் எடுத்தால், அங்கே இருக்கிற காக்கங்கரை ஏரிக்குத் தண்ணீர் விட முடியும். அதன்மூலமாக, 15 ஏரிகளுக்குத் தண்ணீர் பாயும். அதனால், வறண்டு கிடக்கிற அந்தக் கந்திலி ஒன்றிய விவசாயம் நன்றாக அமையும்; குடிநீர்ப் பஞ்சம் தீரும். எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அந்த 3 கிலோ மீட்டர் கால்வாயைத் தூர் எடுத்து, காக்கங்கரை ஏரிக்குத் தண்ணீர் விடுவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அந்தப் பகுதியினுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும். சமீபத்தில்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள்; நான் திருப்பத்துருக்குச் சென்றிருந்தபோது அதுகுறித்து விவாதித்து அதற்காக ஆய்வு நடத்தும்படி நான் அங்கேயே உத்தரவிட்டு வந்திருக்கிறேன். அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். மீண்டும், இந்த மன்றத்தில் அதை ஊர்ஜிதம் செய்ய வேண்டுமென்று கேள்வி கேட்டிருக்கிறார். நிச்சயமாக அரசு இதுகுறித்துத் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்திற்குப் பயன்படுகிற பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணை நீர்த்தேக்கங்களிலிருந்து சுமார் 650 கிலோ மீட்டர் நீளத்தில், கால்வாய்கள்மூலம் விவசாயத்திற்குத்



2007 ஏப்ரல் 25]

தண்ணீர் கொண்டு செல்லப்படுகின்றது. இந்தக் கால்வாய்களை ஆண்டுதோறும் பராமரிப்பதற்காக, ஏக்கருக்கு 100 ரூபாய்வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால், இந்த நிதி ஒதுக்கீடு அந்தக் கால்வாய்களைப் பராமரிப்பதற்குப் போதுமானதாக இல்லை. எனவே, அந்தப் பராமரிப்புப் பணி மிக மோசமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதால், விவசாயத்திற்குக் கால்வாய்களின்மூலமாக ஒழுங்காகத் தண்ணீரைக் கொண்டு செல்ல முடியவில்லை. கால்வாய்களிலே பாய்கின்ற தண்ணீர், ஏறத்தாழ 40 சதவிகிதம் வீணாகச் சென்று விடுகிறது. எனவே, இந்தக் கால்வாய்களைப் பராமரிப்பதற்கு, ஆண்டுதோறும் ஒதுக்கப்படுகின்ற நிதி, அதிகமாக ஒதுக்கித் தரப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சிப்பாறை, பெருஞ்சாணியிலிருந்து வருகின்ற தண்ணீரை, புத்தன் டேமிலே தேக்கி, பிறகு பல்வேறு கால்வாய்கள் மூலமாக கோதையாறு சிஸ்டத்திலே நாம் விடுகிறோம். கலைஞருடைய ஆட்சி 1996 ஆம் ஆண்டு வந்தபோது, அந்தக் கால்வாய்கள் எல்லாம் தூர் வாரிச் செப்பனிடப்பட்டன. அங்கிருக்கிற பட்டணம் canal ஆனாலும், தோவாளை canal ஆனாலும், மற்ற canal களையெல்லாம் செய்தோம். ஏன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கேகூட தெரியும். பேச்சிப்பாறை, பெருஞ்சாணியிலிருந்து இரண்டு அடியில் வருகிற தண்ணீர் பிரிகின்ற இடம் எங்கே? புத்தன் டேம். அந்த நிலைமை எப்படி இருந்தது? சீரழிந்து இருந்தது. ஆனால், சென்ற காலத்திலே நாங்கள் சீர்செய்துவிட்டுப் போனோம். அன்றைக்கு வந்து பார்த்தால், அது இருக்கிற இடம் மறுபடியும் சீரழிந்து இருக்கிறது. இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு வந்த பிறகு, அதற்கு ஒன்றரை கோடி ரூபாய்க்கு மேலே செலவாகும் என மதிப்பிட்டு, உடனடியாக அனுமதித்து இருக்கிறோம். எனவே, கால்வாயாக இருந்தாலும், ஏரியாக இருந்தாலும் பராமரிப்புப் பணிகளை ஆண்டுக்காண்டு கவனிக்க வேண்டும். அதற்கிடையிலே ஒரு பெரிய இடைவெளிவிட்டு, 6 ஆண்டு காலம், 7 ஆண்டு காலம் கேட்பாரற்றுவிட்டுவிட்டால், அப்படித்தான் ஆகும். இருந்தாலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற இந்த நிலைமையை எண்ணிப் பார்த்து, அந்தக் கால்வாய்களைச் சீரமைப்பதற்காக, அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

[2007 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**134—**

**கலைக் கல்லூரி**

***5165—திரு. பி. தங்கமணி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்செங்கோடு தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி ஆரம்பிப்பது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு தொகுதியைப் பொறுத்தவரை குமாரபாளையம், பள்ளிப்பாளையம், திருச்செங்கோடு பகுதிகள் விசைத்தறித் தொழிலாளர்கள் அதிகமாக உள்ள பகுதிகளாக இருக்கின்றன. கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேருக்கு மேல் விசைத்தறித் தொழிலாளர்கள் உள்ளார்கள். ஆகையால், அரசுக் கல்லூரி அமைக்க முன்வந்தால், அவர்களுக்கு வாய்ப்பாக இருக்கும் என்பதால், பேரவைத் தலைவர் வாயிலாக மீண்டும் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு இருக்கிற நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் 16 கல்லூரிகள் இருக்கின்றன. திருச்செங்கோட்டிலே மட்டும் 3 கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே, உடனடியாக அரசுக் கலைக் கல்லூரி தொடங்குவதற்கான வாய்ப்புகள் எதுவுமில்லை. வேண்டுமானால், அவர் சொல்வதைப்போல, தொழில் கல்வியிலே, பாலிடெக்னிக் போன்ற நிறுவனங்களை உருவாக்குவதற்குத்



2007 ஏப்ரல் 25]

தனியார்கள் வருவார்கள் என்று சொன்னால், அதற்கு அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு கலைக் கல்லூரிகள் உள்ளன. அங்கே விசைத்தறித் தொழிலாளர்கள் அதிகம் உள்ளபடியால், தனியார் கல்லூரிகளிலே சேர்ந்து படிக்கின்ற அளவிற்கு அவர்களுக்கு வசதி இல்லாத காரணத்தாலேதான் அரசு வாயிலாக அதை ஆரம்பிக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாக மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு கல்லூரிகள் இருக்கிற இடத்திலே மற்றொரு கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்று உறுப்பினர் கேட்கிறார். ஒரு கல்லூரிகூட இல்லாத தொகுதிகள், பல தொகுதிகள் இருக்கின்றன. அவற்றிற்குத்தான் முன்னுரிமை கொடுத்து, அந்தப் பகுதிகளிலே கல்லூரிகளைத் தொடங்குவதற்கான பரிசீலனையை அரசு செய்துகொண்டிருக்கிறது.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**135—**

**பயிற்சி**

***5008—திரு. வி.எஸ். பாபு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கென முறையான பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1988 ஆம் வருட மோட்டார் வாகனச் சட்டம், பிரிவு 8-ன்கீழ், ஓட்டுநர் உரிமம் பெற விரும்பும் 18 வயதிற்கு மேற்பட்ட மனுதாரர்களுக்கு முதலில் பழகுநர் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுகின்றது. பின், அரசு அங்கீகாரம் பெற்ற ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் முறையான பயிற்சி பெற்றவர்கள், ஓட்டுநர் உரிமம் வேண்டி, உரிய ஆதாரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். உரிமம் வழங்கும் அதிகாரிகளால் நடத்தப்படும் தேர்வில், தேர்ச்சி பெற்ற பின்னரே ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுகின்றது. ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்ட பின்னர், ஆட்டோ ஓட்டுவதற்காக மனு செய்பவர்கள் 20 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். பொதுப் பணி வில்லை வழங்கப்பட்டு ஓட்டுநர் உரிமத்தில் மேற்குறிப்பு செய்யப்படுகின்றது. மேற்குறிப்பு பெற்ற ஓட்டுநர்கள் தங்களது உரிமங்களில் இலகு ரக வாகனம் இயக்க அனுமதி பெற்றிருப்பின், அவர்கள் ஆட்டோக்களை இயக்க அனுமதிக்கப்படுகின்றனர். மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி முறையான பயிற்சிக்குப்பின் ஓட்டுநர் உரிமங்கள் வழங்கப்பட்டு வருவதால், ஆட்டோ ஓட்டுநர்களுக்கென, தனியான பயிற்சி அளிக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு.

**திரு. வி.எஸ். பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் ஆட்டோ ஓட்டுநர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகின்றது. அதனால் வாகனப் போக்குவரத்தும் கூடுதலாகி வருகின்றது. எனவே, சாலைகளில் பயிற்சியில்லாத ஆட்டோ ஓட்டுநர்களால் விபத்துகள் அதிகரித்து வருகின்றன. விலை மதிப்பற்ற உயிர்ச்சேதமும் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்க்க, முறையான பயிற்சி அளிக்க, மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்ய முன்வருவார்களா? மேலும், போக்குவரத்துக் கழகங்களுக்கு I.R.T. இருப்பதைப் போல, சென்னையில் மட்டுமாவது, முன்மாதிரி பயிற்சி அளிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.



2007 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை சரகத்தில் இயங்கும் மொத்த ஆட்டோக்கள் 47,537. அதிலே ஷேர் ஆட்டோக்கள் 286. சென்னை மாநகரத்தில் மட்டும் இயங்குபவை 45,441. ஷேர் ஆட்டோக்கள் 198. ஏற்கெனவே குறிப்பிட்டபடி, அரசின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு, அரசால் அனுமதிக்கப்பட்ட பயிற்சிப் பள்ளிகளிலே பயிற்சி பெற்ற பின்னரே, இவர்களுக்கெல்லாம் ஆட்டோ ஓட்டுகின்ற உரிமம் வழங்கப்படுகின்றது. மேலும், தரமான ஓட்டுநர்களை உருவாக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு, இந்த முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இரண்டு இடங்களிலே ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியை அனுமதித்திருக்கிறார்கள். சென்னையில் எப்படி கும்மிடிப்பூண்டியிலே I.R.T. மூலம் பயிற்சி அளிக்கப்படுகின்றதோ, அதைப்போல மாருதி நிறுவனம், ஓட்டுநர் பயிற்சிக்கு அனுமதி கேட்டிருக்கின்றது. அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று Ashok Leyland -க்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. மேலும், தரமான ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியை உருவாக்குகின்ற முயற்சியை எடுத்திருக்கின்றோம். 5 மாநகராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற 6 இடங்களில் இதேபோன்று ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியை நிறுவுவதற்கு மத்திய அரசின் மூலமாக நிதியுதவி பெற்று அதை இந்த ஆண்டு தொடங்கவிருக்கின்றோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு.

**திரு. வி.எஸ். பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கார்களுக்கும், பஸ்களுக்கும்தான் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி இருக்கின்றது. ஆனால், ஆட்டோ ஓட்டுநர்களுக்கென்று தனியாக பயிற்சிப் பள்ளி இல்லை. ஆகவே, அதை அமைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினால் உரிமம் வழங்கப்படுகின்ற எந்த வண்டியாக இருந்தாலும், அவர்களுக்காகத்தான் பயிற்சிப் பள்ளி உருவாக்கப்பட்டிருக்கிறது. கன ரக வாகனங்கள் மட்டுமல்ல; இலகு ரக வாகனங்களுக்கும் அங்கு பயிற்சி பெற்ற பின்னரே, நல்லதொரு,

[2007 ஏப்ரல் 25

தரமான ஓட்டுநர்களை உருவாக்குவதற்காகத்தான், இதுபோன்ற பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. எனவே, ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் அங்கே பயிற்சி அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன், மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**136—**

## வீட்டுமனைப் பட்டா

***591—திரு. பி. பலராமன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் மற்றும் சோழவரம் ஒன்றியங்களில் உள்ள கிராம மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மீஞ்சூர் மற்றும் சோழவரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில், கிராமக் கணக்குகளில், அதாவது அடங்கலில் பதிவாகாமல், அரசுப் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்போர் 8,939 ஆகும். அடங்கலில் பதிவாகி ஆக்கிரமிப்பு செய்துள்ளோர் 3,136 ஆகும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதில் மேய்ச்சல், மந்தைவெளி, மயானம், சாலைப் புறம்போக்கு மற்றும் இதரப் புறம்போக்கு நிலங்களும் அடங்கும்.

அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-இல் 10 ஆண்டுகளுக்கு மேல் அரசு நிலங்களில் வீடுகள் கட்டிக் குடியிருந்து வருபவர்களின் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவது குறித்து, தக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் மதுரை உயர் நீதிமன்றத்தின் உத்தரவுகளின்படியும், தக்க ஆய்வுக்குப்பின் வீட்டுமனை ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட, சம்பந்தப்பட்ட தடையாணைகளைத் தளர்வு செய்து, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



2007 ஏப்ரல் 25]

மேற்குறிப்பிட்ட ஆக்கிரமணங்களை வரைமுறைப்படுத்தும் பணியும் தற்போது நடைபெற்று வருகின்றது. இந்நேர்வுகளில், நில அளவை மற்றும் புலத் தணிக்கைக்குப்பின் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவுள்ளது.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், எனது பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய, மீஞ்சூர் மற்றும் சோழவரம் ஒன்றியத்தில், ஆதி திராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்கின்ற ஏழையெளியவர்கள் பெரும்பான்மையோர் வசிக்கின்றனர். அவர்களில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வீட்டுமனைப் பட்டா இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனது பொன்னேரி தொகுதியில், ஏற்கெனவே 10 வருடங்களாகக் குடியிருந்தால், வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமென்று அரசு கூறியுள்ளது. எனது பொன்னேரி தொகுதி, தனித் தொகுதி என்பதால், இதற்கு முன்னுரிமை அடிப்படையில், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னார். இங்கே சிறப்பு வட்டாட்சியரால், ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாக இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற திட்டம், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பொன்னேரி வட்டத்திலே, குறிப்பாக 188 வருவாய் கிராமங்களிலே, சென்னைக்கு அருகிலே இருக்கின்ற 181 கிராமங்கள், ஏற்கெனவே தடை செய்யப்பட்டிருக்கின்றன. அந்தத் தடை செய்யப்பட்ட கிராமங்களுக்கும் இப்போது தடையை நீக்கி, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இலவச வீட்டுமனைப் பட்டாவும் ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்படும். அதே சமயத்திலே, 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருகின்ற ஆதி திராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்கள் வசித்து வருகின்ற இடங்களுக்கு, வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றது.

[2007 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி, திருப்பாலைவனம் கிராமத்திலுள்ள திருப்பாலீஸ்வரர் கோயிலுக்கும், பஞ்செட்டி கிராமத்தில் இருக்கின்ற பஞ்செட்டிக் கோயிலுக்கும் சொந்தமான இடத்தில் கிட்டத்தட்ட 40 ஆண்டு காலமாக ஏழை விவசாயக் கூலிகள், கைவினைஞர்கள் குடியிருந்து வருகிறார்கள். இவர்களுக்கு, மாற்று இடம் வழங்கி, வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இங்கே இருக்கின்ற ஏரிகளிலே வாழ்கின்ற மக்களுக்கு, ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்ற நேரத்திலே மாற்று இடம் இந்த அரசு வழங்கியிருக்கின்றது; உதவித் தொகை வழங்கியிருக்கின்றது; மாற்று இடமும் வழங்கியிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, இடமாற்றம் செய்கின்ற நேரத்திலே, தமிழகத்திலே இருக்கின்ற எந்தப் பகுதியிலே இருந்தாலும், அவர்களுக்கு மாற்று இடம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்.

**137—**

**நில உரிமை**

***1345—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்தி, நீண்ட நாட்களாகப் பயன்படுத்தாமல் உள்ள நிலங்களை மீண்டும் நில உரிமையாளர்களுக்கே திருப்பித்தர அரசு முன்வருமா?



2007 ஏப்ரல் 25]

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் இதுவரை வீட்டுமனைகளுக்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் 16,770 ஏக்கர். இதில் கையகப்படுத்தப்பட்டு சுவாதீனமாக எடுக்கப்பட்ட நிலங்கள் நிலப்பரப்பு 12,221 ஏக்கர். சுவாதீனப்படுத்தப்படாமல் நடவடிக்கையில் உள்ள இடங்கள் 4,479 ஏக்கர். திட்டங்களுக்காக, இதுவரை உபயோகப்படுத்தப்பட்டு உயர் வகுப்புப் பிரிவினர், மத்திய வகுப்புப் பிரிவினர், அதேபோல, குறைந்த வருவாய்ப் பிரிவினர் என மூன்று பிரிவினர்களுக்காகவும் திட்டமிடப்பட்டு, வீட்டுமனைகள் வழங்கி முடிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலப்பரப்பு 9,182 ஏக்கர். திட்டமிடுவதற்காகக் கைவசம் உள்ள நிலத்தின் பரப்பளவு 3,089 ஏக்கர். சில நிலங்கள் உபயோகப்படுத்தப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். சில வழக்குகள் உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டில் இருக்கின்றன. சில இடங்கள், அணுகுபாதை இல்லாத காரணத்தினால், அணுகுசாலைக்கான இடம் தேர்வு செய்து, அது வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கிறது. சில இடங்கள் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அதற்கான முழுத்தொகையும் அரசுக் கருவூலத்தில் செலுத்தப்பட்டும்கூட, அந்த இடத்திற்குத் திட்டமிடுவதற்காக நமது அலுவலர்கள் செல்கிறபோது தடுத்து நிறுத்தப்படுகிறார்கள். இப்படிப் பல்வேறு இனங்களின் சார்பில் சில இடங்களிலே நிலங்கள் இருக்கின்றன. இருந்தாலும், இப்போது துறையின்மூலமாக, ஏற்கெனவே தேவையில்லாத இடங்களில், இடங்களை வாங்கிப் போட்ட நிலைமையில்லாமல், எங்கெங்கே தேவைப்படுகின்றன என்பதைக் கண்டறிந்து, ஆய்வு செய்து, demand இருக்கின்ற இடங்களில் வாங்கியும், ஏற்கெனவே வாங்கியிருக்கக்கூடிய இடங்களை இப்போது வீட்டுமனைகளாகப் போடப்பட்டும் உடனடியாக வழங்க இருக்கிறது. எனவே, எதிர்காலத் திட்டத்திற்காக மக்களுடைய தேவைகளை நிறைவு செய்வதற்காக அந்த இடங்கள் எல்லாம் தேவைப்படுகின்ற காரணத்தினால், இவற்றைத் திரும்ப வழங்குகின்ற உத்தேசம் இல்லை என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

[2007 ஏப்ரல் 25

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியம் பல ஆண்டுகளுக்கு முன்னாலே நிலத்தைக் கையகப்படுத்தி, அதை lay-out செய்து, வீட்டு மனைகளாகப் பிரித்து, இன்னும் மக்களுக்கு வழங்காமலே இருந்து கொண்டிருக்கக்கூடிய பகுதியே அதிகமாக உள்ளது. நம்முடைய அமைச்சருடைய கூற்றுப்படி பார்த்தாலும்கூட, வீட்டு வசதி வாரியம் 3,089 ஏக்கர் நிலத்தைச் சுவாதீனம் எடுத்து, இன்னும் அதன் கைவசம் வைத்துக் கொண்டிருக்கிறது. அதிலே, வழக்கிலே இருக்க்க்கூடிய பகுதி என்று எடுத்துக் கொண்டால், 4,429 ஏக்கர் நிலம் என்று வருகிறது. ஏற்கெனவே, தன்னுடைய கைவசம் வைத்திருக்கிற, சுவாதீனம் எடுத்து வைத்திருக்கக்கூடிய இந்த நிலப் பரப்புகளை, இதுவரை நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தத் துறைமூலம் வீட்டு மனைகளாகப் பிரித்து வீடு இல்லாதவர்களுக்கு வழங்காமல் இருக்கிற நிலையைப் பார்க்கிறோம். இப்பொழுதெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குக் காலனி வேண்டும்; அதேபோல I.A.S. Officers தங்களுக்குக் காலனி வேண்டும் என்று ஒவ்வொருவருமே தங்களுக்குத் தனியாகக் காலனி வேண்டும் என்று கேட்கிறார்கள். அரசு ஊழியர்கள்கூட ஆங்காங்கே தங்களுக்கு ஒரு காலனி வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைத் துறையைச் சார்ந்தவர்கள் காலனி வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி அந்தந்தப் பிரிவினர் கேட்கிறபோது, I.P.S., I.A.S. என இதுபோல பல பேருக்குக் கொடுக்கலாம். அப்படி இருக்கிறபோது, இந்த demand இருக்கிறபோது, ஏன் இந்தத் துறை இதுவரை இதைப் பிரித்துக் கொடுக்காமல் இருக்கிறது? ஆகவே, நான் நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்பொழுது நம்முடைய சென்னைக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய சோழிங்கநல்லூர், நொளம்பூர், அண்ணா நகர் போன்ற பகுதிகளிலே, சட்டமன்ற உறுப்பினர்கள்கூட, சட்டமன்ற உறுப்பினர்களுடைய காலனி உருவாக்க வேண்டும், என்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் பிரித்துக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா, முதலமைச்சர் அதற்கு ஆணையிடுவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். சபாநாயகருக்கும் சேர்த்துக் கேட்கின்ற காரணத்தினாலே சபாநாயகர் எங்களுக்குத் துணை வருவாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 25]

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3,080 ஏக்கரையும் ஏன் பயன்படுத்தவில்லை என்று கேட்டிருக்கிறார். அவற்றைக் கண்ட இடங்களிலேயெல்லாம் வாங்கி மனைகளாகப் பிரித்து, தரம் உயர்த்திப் போடுவதன்மூலமாக, சில மாதங்களிலேயே அங்கேயெல்லாம் காட்டுக்கருவை, முட்செடிகள் முளைத்து, பிளாட்டுகளை விற்பதற்கு முன்பே அவை புதர்களாக மாறிவிடுகின்றன. எனவே, எங்கே demand இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, தேவையற்ற செலவினங்களைக் குறைப்பதற்காக, demand இருக்கின்ற இடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, அங்கேயெல்லாம் நிலங்கள் வகைப்படுத்தப்பட்டு, பிளாட்டுகள் போடப்படுகின்றன. இதுவரைகூட, இந்த 8 மாதங்களில், 68 கோடி ரூபாய் மதிப்பில் 300 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், 508 தனி வீடுகளும், 283 மனைகளும் சுயநிதித் திட்டத்தின் வழியாக செயல்படுத்தப்பட்டுள்ளன. கட்டப்பட்ட கட்டடங்களை யாருமே வாங்குவதற்கு அச்சப்பட்டிருந்த இந்தத் துறையில், அவர்களே முன்வந்து பணத்தை எங்களிடத்திலே 3 பகுதியாகப் பங்களித்து, வீடுகளைக் கட்டித் தாருங்கள் என்று கேட்கின்ற அளவுக்கு இந்த வாரியத்தினுடைய கட்டுமானப் பணிகள் ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கின்றன; monitoring செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல; ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில். ரூ. 378.60 கோடி மதிப்புள்ள நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டு கையகப்படுத்தி இருக்கிறோம் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 2,933 மனைகள், 602 குடியிருப்புகள் மற்றும் 75 வணிக மனைகள் ரூ. 97.50 கோடிக்கு விற்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் பொறுப்பேற்றவுடன், தலைவர் கலைஞர் அரசு, ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்றவுடன், இந்த அளவுக்குப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. மற்றபடி என்னென்ன பணிகளைச் செய்திருக்கிறோம் என்பதை எங்களுடைய மானியக் கோரிக்கையில் விரிவாகத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நான் கேட்ட கேள்விக்கு, அவர் இன்னும் பதிலையே சொல்லாமல் சுற்றிச் சுற்றி வருகிறார். நான் தெளிவாக ஒரே ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். இந்த 3,089 ஏக்கர்

நிலத்தை உங்களுடைய சுவாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஏதோ முள்செடி முளைக்கிறது என்றீர்கள். நாங்களேகூட முள்செடிகளை வெட்டிக்கொள்கிறோம். சோழிங்கநல்லூர், நொளம்பூர், அண்ணா நகர் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய, demand இருக்கக்கூடிய இடத்தில், இப்பொழுதெல்லாம் கோரிக்கை வருகிறபோது, இங்கே இதற்கான ஒரு முயற்சியை எடுத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று தனியாக ஒரு காலனியைப் பிரித்துக் கொடுக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து ஆவன செய்வாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட ஜீவாதாரமான கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லையே என்று கேட்டார்கள். நான் கேள்விக்குப் பதில் சொல்ல எழுந்திருக்கிறபோதே, தென்திசை நோக்கிப் பார்த்துக் கொண்டே இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏனென்றால், அதற்குப் பதில் சொல்லக்கூடிய அதிகாரம் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும், எப்போது முதலமைச்சர் அவர்கள் அழைத்துக் கேட்பார்கள் என்ற அச்ச உணர்வோடு, அதற்கான இடத்தைத் தயாரான நிலையில் இந்தத் துறை வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் கடந்த காலத்தில் கட்டப்பட்டவை மிகவும் தரமற்றவையாக இருந்து வருவதைப் பல இடங்களிலே பார்க்கிறோம். உதாரணமாக, நம்முடைய தென்காசி புறநகர்ப் பகுதியிலேகூட, நான் சட்டமன்ற உறுப்பினராக அங்கு இருந்தபோது, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டன. ஆனால், கட்டப்பட்ட வீடுகளிலே பாதிக்கு மேற்பட்டவை தரமற்றவையாக இருக்கின்றன என்பதை, அவற்றை உபயோகிப்பவர்கள், அங்கே குடியிருப்பவர்கள் இன்னும்





சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது வீட்டு வசதிகளை ஏற்படுத்தித் தருவதிலே ஒரு புதிய concept, joint development, அதாவது, நிலத்தினுடைய உரிமையாளரும், வீடுகளைக் கட்டி, கட்டுமானப் பணிகளைச் செய்து அதை விற்பவர்களும் கூட்டாகச் சேர்ந்து, இரண்டு பேருமாகச் சேர்ந்து, அந்த இடத்தினை அபிவிருத்தி செய்து, புதிய குடியிருப்புகளைக் கட்டி, விற்பனை செய்து வருகிறார்கள்.

அதைப்போல, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வீட்டு வசதி வாரியத்திலே இருக்கின்ற பல சிரமங்களை, அவர்கள் தினசரி சந்தித்து, அவற்றைத் தீர்ப்பதைப்பற்றி ஆலோசனை செய்து வருகிறார்கள். தமிழகமெங்கும் இருக்கின்ற, நல்ல சிறப்பான இடங்களில் இருக்கின்ற அந்த நிலங்களை, joint development-மூலம், இந்தத் தொழிலிலே இருக்கின்ற வேலையில்லாத பட்டதாரி இளைஞர்களிடம், ஆனால், இதற்காகத் தகுதி பெற்றவர்களிடம், அரசும், வீட்டு வசதி வாரியமும், ஒப்பந்தம் செய்துகொண்டு, கட்டப்படுகின்ற குடியிருப்புகளில் ஒரு விழுக்காடு, ஒத்துக்கொண்ட விழுக்காட்டினைக் கொடுக்கலாம். இப்போது, சென்னையிலே நில உடைமையாளர், 50 விழுக்காடு இடங்களை எடுத்துக்கொள்கிறார்; நில உரிமையாளர்களுக்கு 50 இடங்களைக் கொடுக்கிறார். சில இடங்களிலே 60 விழுக்காடு என்றுகூட இருக்கிறது. சில இடங்களிலே 30, 70 என்றுகூட இருக்கிறது. அதைப்போல, வீட்டு வசதி வாரியம், தனியார் தொழில் முனைவோரோடு சேர்ந்து கூட்டு ஒப்பந்தம் செய்து, அரசுக்கு எந்தவிதமான முதலீடும் இல்லாமல், வீட்டு வசதி வாரியத்திற்கு எந்தவிதமான நிர்வாகச் சுமையும் இல்லாமல், அந்த இடங்களிலே நல்ல தரமான வீடுகளைக் கட்டி, விற்பனை செய்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துகள், எங்களுடைய துறையில் மிக ஆழமாகப் பரிசீலிக்கப்பட்டு, அதற்கான புதிய விதிகளையெல்லாம் -- joint venture -- என்னென்ன விதி திருத்தங்கள் வேண்டும் என்பதில், நம்முடைய சட்டத் துறையினுடைய ஆலோசனையும் கோரிப் பெறப்பட்டுள்ளது. இன்னும் இரண்டொரு தினங்களில் அந்தச் செயற்குறிப்புகள் அனைத்தும், எங்கள் துறையால் சேகரிக்கப்பட்ட விவரங்களோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைத்து, அவர்களுடைய

[2007 ஏப்ரல் 25

அறிவுரைகளைக் கேட்டு அனுமதி பெற்றபின், முறையாக மானியக் கோரிக்கையில் உங்களுடைய கேள்விக்கு விளக்கம் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிற வேளையில், நிலங்கள் தேவையற்ற இடங்களில் கையகப்படுத்தப்பட்டு சில இடங்களில் தேவையில்லாமல் வீடுகளைக் கட்டுகிற நிலை, கடந்த காலங்களிலே இருந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப் பல இடங்களிலே வீடுகளைக் கட்டி, 8 ஆண்டுகள், 10 ஆண்டுகள் ஆகியும்கூட, அந்த வீடுகளில் யாரும் குடியேறாமல், வீட்டைப் பெறுவதற்கு முன்வராமல் இருக்கிற நிலை இருந்துகொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு, தருமபுரியிலே பல வீடுகள் கட்டப்பட்டு, இரண்டொரு வீடுகளில்கூட யாரும் குடியேறவில்லை. அந்த வீடுகளிலே இப்போது முள்செடிகள் எல்லாம் முளைத்து, ஆள் உயரத்திற்கு மேலே, எட்டு அடி, பத்து அடி உயரமாக வளர்ந்து, அந்த வீடுகள் எல்லாம் வீணாகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட தேவையற்ற இடங்களில் கட்டிய வீடுகளை, மீண்டும் அரசு கவனத்திலே எடுத்துக்கொண்டு, குறைந்த வாடகைக்கு விடுவதற்கு அல்லது குறைந்த விலையிலே விற்பதற்கு, ஏனென்றால், இப்படிப்பட்ட பிரச்சினையைச் சமாளிப்பதற்காக அந்த நிலையை எடுத்து, அந்த வீடுகளை மற்றவர்களுக்கு வாடகைக்காவது அல்லது குறைந்த விலையிலே கொடுப்பதற்காவது அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, தேவை இருக்கிற இடத்தில்—தேவையற்ற இடங்களில் வீணாக இருக்கிறது--இப்போது மேட்டூர் போன்ற பகுதி, மின்சார வாரியத் தொழிலாளர்கள் அதிகம் குடியிருக்கிற பகுதி. வீடுகள் தேவையிருக்கிற பகுதி. தேவையாக இருக்கிற மேட்டூர் பகுதியிலே, இந்த ஆண்டிலே வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக, அங்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிகிற வேளையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரனும், மற்றவர்களும் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். நீங்கள் முதலமைச்சரிடத்திலே ஒரு வேண்டுகோள் வையுங்கள் என்றும் சொன்னார்கள். அமைச்சர் பதில் அளிக்கிற நேரத்தில், "சட்டமன்ற உறுப்பினர்களுக்காக வீடு கட்டுவதற்கு, ஒதுக்கித் தருவதற்கு நிலம் தயாராக வைத்திருக்கிறேன், தென்திசையைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொன்னார்கள். ஆகவே, எல்லா உறுப்பினர்களின் வேண்டுகோளையும் ஏற்று--இது மாண்புமிகு



2007 ஏப்ரல் 25]

முதலமைச்சர் அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க பொன் விழா ஆண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)—இந்தப் பொன் விழா ஆண்டில், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழ்நாடு வரலாற்றில் சிறப்புக்குரிய ஆண்டான இந்த ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மனை ஒதுக்கித் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, தருமபுரியில் வீடுகள் கட்டப்பட்டு 10 ஆண்டுகளாக விற்பனையாகாமல் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அதெல்லாம் நிருவாகச் சீர்கேட்டின் விளைவாக, பல ஆண்டுகள் விற்பனை ஆகாமல் இருந்திருக்கின்றன என்பதுதான் உண்மை. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், நகர் மன்றத் தலைவர் மற்றும் நண்பர்களின் துணையோடு நான் நேரில் சென்று நீங்கள் குறிப்பிடுகின்ற தருமபுரி, விருபாட்சிபுரம், போலீஸ் காலனிக்கு அருகில் உள்ள 124 வீடுகளும், 10 ஆண்டுகளாக விற்காமல் இருப்பதைப் பார்த்து வந்தவுடன் 15 நாட்களில் விற்பனை செய்து முடிக்கப்பட்டுள்ளன என்ற நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; நீங்கள் குறிப்பிட்ட அந்த முட்புதர்கள், பெரிய கற்றாழை எல்லாம் வளர்ந்திருப்பதை நானே நேரில் இருந்து பார்த்து, அங்கேயே J.C.B.-யைக் கொண்டு வரச்சொல்லி அனைத்தையும் up-rooting வரை, வேரோடு பிடுங்கி எடுத்து, சுத்தப்படுத்தி, அதுகுறித்து மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், நகராட்சி ஆணையாளர் எல்லோருடனும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், மக்கள் பிரதிநிதிகளுடனும் கலந்து பேசியபோது, இதைக் குறைத்து விற்பனை செய்தால்தான் விற்க முடியும் என்று சொன்னார்கள். நானும் ஒப்புக்கொண்டு இங்கே வந்தேன். இந்த மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. தருமபுரியில் மருத்துவக் கல்லூரி வருகிறது என்று, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பு, நிதி அமைச்சர்மூலமாக வந்தவுடன் விலை குறைப்பதையும் நிறுத்திவிட்டேன். விற்பனையும் ஆறு மாத காலத்திற்குச் செய்யக் கூடாது என்று நிறுத்தி வைத்திருக்கிறோம். மருத்துவக் கல்லூரி தொடங்கியவுடன், எஞ்சியிருக்கக்கூடிய

[2007 ஏப்ரல் 25

வீடுகளுடைய விற்பனை முறை ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 50 ஆண்டுக் காலம் இந்தச் சட்டமன்றத்திலே, (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பாகப் பணியாற்றி, இன்றைக்கு "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று உணர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மணி அவர்களுடைய கோரிக்கை, ஒரு நியாயமான கோரிக்கை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அந்தக் கோரிக்கையை நிச்சயமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிற காரணத்தால். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை அவையிலே உள்ள எல்லாக் கட்சித் தோழர்களும், கையெழுத்திட்டுத் தந்தால் நிச்சயமாகக் கவனிக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தனை உறுப்பினர்களுக்கும் ஆசை இருக்கிறது. கொடுத்தால் வாங்கிக்கொள்வார்கள். பல்வேறு சூழ்நிலையின் காரணமாக கையொப்பமிடுவதற்குத் தயங்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனாலே, தாங்கள் நிச்சயமாக, பெரும்பான்மையை மனதில் கருதி, (மேசையைத் தட்டும் ஒலி) நாம் மெஜாரிட்டியாக இருக்கிறோம்; மைனாரிட்டியைப்பற்றி நாம் கவலைப்படாமல், பெரும்பான்மையை நீங்கள் ஓத்துக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடு, மணி அவர்களுடைய கோரிக்கையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு மட்டுமல்லாமல்; கடந்த காலத்திலே பல்வேறு இடங்களிலே நிலம் கையகப்படுத்தப்பட்டது: கையகப்படுத்தப்பட்ட அந்த நிலங்கள், ஓர் இடத்திலே சுமார் 50 ஏக்கர் எனக் கையகப்படுத்தும்போது, அதிலே 25 ஏக்கர், 30 ஏக்கர் என்று விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. சாதாரணமாக இருக்கிறவர்களுக்கு, 2 கிரவுண்ட், 3 கிரவுண்ட் வைத்திருப்பவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்படவில்லை. அது இன்னும் வீட்டு வசதி வாரியத்திலே



2007 ஏப்ரல் 25]

இருக்கிறது. 20 ஆண்டுகளுக்கு மேலாக, அவர்கள் அந்த இடத்தை உபயோகப்படுத்தவில்லை. அதுமட்டுமல்ல; என்னுடைய தொகுதியிலே பருத்திப்பட்டு என்ற ஓர் இடம், 211 ஏக்கர் நிலம் 4(1) notice கொடுக்கின்ற நிலை உருவாக்கப்பட்டு, இன்றைக்குத் தனியார் எல்லாம் வீட்டுமனைகள் போடுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று, என்னுடைய தொகுதியில் நெமிலிச்சேரி என்கிற பகுதி. ஒரு 300 ஏக்கர் நிலம் கையகப்படுத்த வேண்டும் என்று எண்ணி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் வீட்டு வசதி வாரியம் செய்தது. பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக இந்த இரண்டு திட்டங்களும் நிலுவையிலே உள்ளன. நம்முடைய வீட்டு வசதித் துறை அமைச்சர், சட்டமன்றம் முடிந்தவுடனோ, அதற்கு முன்னாலோ, அந்த இடங்களையெல்லாம் பார்வையிடுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அவரும் பார்வையிட்டுவிட்டு, அந்த இடங்களையெல்லாம் கையகப்படுத்தி, வீட்டுமனைகளை எல்லோருக்கும் கொடுப்பதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பருத்திப்பட்டு, நெமிலிச்சேரி பகுதிகள் சம்பந்தமாக, அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நானும் துறை அதிகாரிகளோடு அங்கு சென்று அந்த இடங்களைப் பார்வையிட்டேன். அதில் மேற்கொண்டு முடிவு எடுக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நன்செய் நிலங்களை எடுக்கக் கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்கு மாறுபட்டு, நன்செய் நிலங்களாக நெமிலிச்சேரி இருக்கின்ற காரணத்தினால், தொடர் நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு காங்கிரஸ் கட்சி சட்டமன்றத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 138, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

138— [2007 ஏப்ரல் 25

## சித்த மருத்துவக் கல்லூரி

***6296—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் சிறுமலை அடிவாரத்தில் சித்த மருத்துவக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது தமிழ்நாட்டில் 2 சித்த மருத்துவக் கல்லூரிகள் அரசாலும், 3 சித்த மருத்துவக் கல்லூரிகள் தனியாராலும் நடத்தப்படுவதால், திண்டுக்கல் சிறுமலை அடிவாரத்தில் சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கும் உத்தேசம் ஏதும் அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் சிறுமலை அடிவாரத்தில் சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டால் தமிழகத்தினுடைய மக்களுக்கு சித்த மருத்துவத்தினுடைய நற்பயன்கள் கிடைப்பதற்கும், சிறந்த மருத்துவர்களை உருவாக்குவதற்கும் பயன்தரக்கூடிய ஒரு முயற்சியாக அது அமையும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நான் தெரிவிப்பது, இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து எதிர்வரும் காலத்திலாவது அரசு முடிவு எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்திலே புதிதாக சித்த மருத்துவக் கல்லூரிகள் தொடங்கும் யோசனை அரசுக்கு வருகின்ற நேரத்தில், உரிய பரிசீலனை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 25]

139—

## வேளாண்மைப் பட்டதாரிகள்

***91—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வேலையில்லாத வேளாண்மைப் பட்டதாரிகளை, பள்ளிகளில் வேளாண்மை ஆசிரியர்களாக நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் கல்வி ஆண்டில் 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதலாக வேளாண்மைத் தொழிற் கல்விப் பாடத்தினை அறிமுகப்படுத்தி, 100 வேளாண்மைத் தொழிற் கல்வி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, 13-3-2007 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-2000 ஆம் கல்வியாண்டில் 103 வேளாண் பட்டதாரிகளுக்குப் பள்ளிகளிலே வேலைகள் தரப்பட்டிருக்கின்றன. அதைப்போல, இந்த 2006-லிருந்து ஒவ்வோராண்டும் 100 பள்ளிகள் வீதம் அந்தப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கின்ற அந்தக் கருத்துரு, கொள்கை ரீதியாக இருப்பதாக அறிகின்றேன். அந்த வகையிலே, வேளாண் துறையிலே பட்டம் பெற்ற அந்த மாணவ, மாணவிகளுக்கு மருத்துவத் துறையிலே பட்டம் பெற்ற மாணவர்களைப்போல, வேலை கிடைப்பது எளிது அல்ல; அதைப்போல, பொறியியல் துறையிலே படித்த மாணவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும்; ஆனால், வேளாண்மைத் துறையிலே படித்த மாணவர்களுக்கு உடனடியாக வேலை கிடைப்பது என்பது அரிதான ஒன்று. ஆகவே, அந்த வகையிலே வேலை இல்லாத வேளாண் பட்டதாரிகளுக்கு எல்லா அரசுப் பள்ளிகளிலும் வேலையில் அமர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல எல்லாப் பள்ளிகளிலும் இல்லாவிட்டாலும்கூட, அரசாங்கம் அதைக் கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டு, தலைவர் கலைஞர் அவர்கள், கடந்த முறை நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்தபோதுதான், 1999-2000 ஆம் கல்வியாண்டிலே, 100 வேளாண்மை ஆசிரியர் பணியிடங்களை உருவாக்கி, இந்தத் தொழிற் கல்வியை முதன்முதலிலே கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு, அந்தத் திட்டம் இல்லாவிட்டாலும்கூட, மீண்டும் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த முறை பட்ஜெட்டிலே அறிவிக்கின்றபோது, மீண்டும் ஒரு 100 பள்ளிகளிலே இந்த வேளாண்மைத் தொழிற் கல்வி ஆசிரியர் பணியிடங்களுக்கு அவர்கள் அறிவிப்பு செய்திருக்கிறார்கள். இந்த முறையும்கூட பட்ஜெட்டிலே, அவர்கள் அதற்கான அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள். அப்படி உருவாக்கப்படக்கூடிய அந்த வேளாண்மைப் பணியிடங்கள், முழுத் தகுதியினைப் பெற்றிருக்கக்கூடிய வேளாண்மைப் பட்டதாரிகள்மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. படிப்படியாக ஒவ்வோர் ஆண்டும், தொடர்ச்சியாக, இந்தத் திட்டத்தின்மூலமாக வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய வகையிலே, ஒவ்வொரு பள்ளியிலும் இது கொடுக்கப்படும்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாடு விவசாயத்தை நம்பி இருக்கின்ற நாடு. இப்போது நம்முடைய விவசாயிகள் எல்லாம் வேதனையின் விளிம்பிலே இருக்கின்றார்கள். வெம்மைத் தீ அவர்களைத் தாக்கி, வெந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், எதிர்காலத் தலைமுறையினரைக் கருத்தில்கொண்டு, கிராமங்களில் இருக்கிற அனைத்துப் பள்ளிகளிலும் வேளாண் துறையைப் பற்றிய அறிவையும், ஆற்றலையும், திறனையும் வளர்க்கின்ற வகையில், எவ்வளவு விரைந்து அரசு நடவடிக்கை எடுக்குமோ, அந்த அளவுக்கு விரைந்து அனைத்துப் பள்ளிகளிலும் வேளாண் துறை பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்குண்டான முயற்சிகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 25]

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதைத்தான் நான் குறிப்பிட்டேன். அந்த முயற்சியை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. உடனடியாக அனைத்துப் பள்ளிகளிலும் கொண்டு வராவிட்டாலும்கூட, தொடர்ச்சியாக, ஒவ்வொரு வருடமும் படிப்படியாகக் கொண்டு வருவதற்கு அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**140—**

### சரணாலயம்

***11557—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் வன விலங்குகள் சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காட்டுப் பகுதியில் வன விலங்கு சரணாலயம் அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி என்பது, ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க இடம். அந்தப் பகுதி மைசூர் எல்லைப் பகுதி வரையிலே செல்லுகின்ற இடமாக இருக்கிறது. குறிப்பாக, யானைகள் மிக அதிகமாக வாழ்கின்ற தளி போன்ற பகுதிகள் நிரம்ப இருக்கிற இடம். அந்த யானைகளுக்கு நாட்டுக்குள்ளேயும், காட்டுக்குள்ளேயும் மதம் பிடிக்கிற காரணத்தால், மிகப் பெரிய விபத்துகளும், ஆபத்துகளும், அழிவுகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, யானைகள் சரணாலயத்தை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[2007 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தருமபுரி மாவட்டம் காப்புக் காடுகளில், காவேரி யானைகள் சரணாலயம் அமைப்பது தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு, தற்போது அது சாத்தியமில்லை என்று தலைமை வன உயிரினக் காப்பாளர் தெரிவித்திருக்கின்ற காரணத்தால், அது கைவிடப்பட்டிருக்கிறது. தற்போது அந்த எண்ணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகின்ற காரணத்தால் ஒகேனக்கல்லில் வன விலங்குகளைப் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்ற வகையிலேயும், நான் முன்னரே குறிப்பிட்டதுபோல, நாட்டுக்குள்ளேயும், காட்டுக்குள்ளேயும் அட்டகாசம் செய்கின்ற மதம் பிடித்த யானைகளை ஓரிடத்திலே சேர்த்து, மற்றவர்கள் வந்து பார்ப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்பதோடு, அரசின் சார்பாக சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள், உயிரினப் பூங்காக்கள் எத்தனை நிருவகிக்கப்படுகின்றன; என்னென்ன வகையான மிருகங்கள் எத்தனை ஏக்கர் நிலப் பரப்பில் பராமரிக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 5 தேசியப் பூங்காக்களும், 3 சுற்றுச்சூழல் காப்பகங்களும், 8 வன உயிரின சரணாலயங்களும், 12 பறவைகள் சரணாலயங்களும், 3,669 சதுரக் கிலோ மீட்டர் பரப்பளவிலே அமைந்திருக்கின்றன. இந்தப் பகுதிகளிலே, மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதிகளிலே யானைகள் இருப்பதற்காக முதுமலை, அதைப்போல, பொள்ளாச்சியிலே இந்திரா காந்தி வன உயிரின சரணாலயங்கள் போன்ற பகுதிகள் இருக்கின்றன. எனவே, அந்தப் பகுதிகளில் எல்லாம் நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2007 ஏப்ரல் 25]

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

## (பட்டியல்கள் 5 மற்றும் 6)

## ஐந்தாவது பட்டியல்

**1—**

### மின்மாற்றி

**வினா எண் 6770—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை 15-வது வார்டு ஆதி திராவிடர் காலனி, அம்பேத்கர் தெருவில் உள்ள மின்மாற்றியை மாற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை 15-வது வார்டு ஆதி திராவிடர் காலனிப் பகுதியில், ஒரு புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி 10-6-2006 அன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் காலனியில் உள்ள மொத்தம் 25 வீடுகளுக்காக ஒரு 100 கே.வி.ஏ. மின்மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது கடைநிலை மின்னழுத்தம் 220 வோல்ட் ஆக உள்ளது. எனவே, தற்போது தொழில்நுட்ப ரீதி அடிப்படையில் அந்தப் பகுதியில் மின்மாற்றியை மாற்றி அமைக்கத் தேவையில்லை.

**2—**

### சீரான மின்சாரம்

**வினா எண் 7455—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி 33-வது வார்டில் ராஜாபாளையத்தில் சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

* உடுக்குறியிடாத வினாக்களுக்கான விடைகள், அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2007 ஏப்ரல் 25

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட 33-வது வார்டு ராஜாபாளையத்திற்குக் கீழ்க்கண்ட மின்மாற்றிகள் மூலம் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது:—

| வ.எண் | மின்மாற்றி | மின்மாற்றி திறன் | கடைகோடி மின்னழுத்தம் |
|---|---|---|---|
| 1 | திருவதிகை VII | 100 கே.வி.ஏ. + 63 கே.வி.ஏ. | 230 V (Phase to Neutral) |
| 2 | ராஜாபாளையம் I | 100 கே.வி.ஏ. | 230 V (Phase to Neutral) |

3—

## இலவச மின் இணைப்பு

**வினா எண் 7470—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஜம்பை கிராமம், முத்துக்கவுண்டனூர் காலனியில் உள்ள குடிசைகளுக்கு இலவச மின்சார விளக்கு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஜம்பை கிராமம், முத்துக்கவுண்டனூர் காலனியில் உள்ள குடிசைகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்க விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. வரிசைக் கிரம அடிப்படையில் மேற்படிக் காலனியில் உள்ள குடிசைகளுக்கு ஒரு மாதத்திற்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

4—

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 7525—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 25]

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் வீரட்டானேஸ்வரர் கோயிலில், பௌர்ணமியன்று கிரிவலம் சுற்றி வருவதற்காக மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, திருவதிகை வீரட்டானேஸ்வரர் கோயிலைச் சுற்றி 12 குழல் விளக்குகளும், 2 சோடியம் ஆவி விளக்குகளும் உள்ளன. மேலும், கோயிலின் பின்புறம் சுமார் 100 மீட்டர் தூரத்திற்கு மின் கம்பங்களோ, மின் விளக்குகளோ இல்லாமல் உள்ளது. பௌர்ணமியன்று கிரிவலம் சுற்றிவரும் சாலைப் பகுதிக்குத் தெரு மின் விளக்குகள் கோரி விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், வாரிய விதிமுறைகளின்படி தெரு விளக்கு அமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

5—

## மின் கம்பிகள் மாற்றுதல்

**வினா எண் 7531—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைப்பளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வீரசிங்கன்குப்பம் ஊராட்சியிலிருந்து எலவத்தடி வரையில் உள்ள மின் கம்பிகள் மிகவும் பழுதாகிவிட்டதால் அவற்றை மாற்றி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, வீரசிங்கன்குப்பத்திலிருந்து எலவத்தடி வரை, சுமார் 6 கி.மீ. தூரத்திற்கு, 22 கி.வோ. காடாம்புலியூர் உயரழுத்த மின்பாதையில், தற்போது உள்ள 7/2.59 திறன் உள்ள மின் கம்பிகளுக்குப் பதிலாக, அதிக திறன் உள்ள 7/3.35 மின் கம்பிகளை மாற்றுவதற்கு சுமார் ரூ.3.00 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதிக்குப் பிறகு, இரண்டு மாதத்திற்குள் மேற்கண்ட மின் கம்பிகளின் திறனை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[2007 ஏப்ரல் 25

6—

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 7904—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைப்பளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, கஞ்சா நகரம் ஊராட்சியில் பொன்னுக்குடி முதல் தென்பாதி வரை புதியதாக மின் கம்பங்கள் அமைத்திட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, கஞ்சா நகரம் ஊராட்சியில் பொன்னுக்குடி முதல் தென்பாதி வரை 17 மின் கம்பங்கள் அமைத்து, 20 தெரு விளக்குகள் அமைக்க ரூ.2,37,820/-க்கு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்த, பஞ்சாயத்துத் தலைவர், கஞ்சா நகரம் ஊராட்சி அவர்களுக்கு அறிவிப்புக் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. பணம் செலுத்தியவுடன் தெரு விளக்கு அமைத்துத் தரப்படும்.

7—

## மின் வாரிய அலுவலகம்

**வினா எண் 7920—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைப்பளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் செயற் பொறியாளர் (இகா) மின் வாரிய அலுவலகம் புதியதாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாரியத்தின் நிதி நிலைமை காரணமாக ஆலங்குடியை மையமாகக் கொண்டு மின் வாரிய செயற் பொறியாளர் அலுவலகம் அமைக்க இயலாது. மேலும், அது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.



2007 ஏப்ரல் 25]

8—

## சீரான மின் விநியோகம்

**வினா எண் 7924—திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு பகுதிகளில் தொடர்ந்து ஏற்படும் மின்வெட்டினை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

திருவட்டாறு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கு மூன்று 11 கி.வோ. மின்னூட்டிகள் மூலம் மின் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த மூன்று மின்னூட்டிகளுமே அடர்ந்த காட்டுப் பகுதிகளிலும், ரப்பர் தோட்டம் மற்றும் தென்னந்தோப்புகள் வழியாகவும் செல்கின்றன. கடந்த 6/06 மற்றும் 7/06 மாதங்களில் கடுமையான காற்றுடன்கூடிய மழைக் காலமாக இருந்ததால், ரப்பர் மற்றும் காட்டு மரங்கள் ஒடிந்து, மின் பாதையில் விழுந்து, மின்தடைகள் மிக குறுகிய காலத்தில் சரிசெய்யப்பட்டு, சீரான மின் விநியோகம் அளிக்கப்பட்டது. இந்த இயற்கைச் சீற்றத்தினால் சுமார் 36 மின் கம்பங்கள் ஒடிந்துள்ளன. திருவட்டாறு பகுதிகளில் மட்டும் 14 இடங்களில் மின் பாதை தொய்வு ஏற்பட்டது. இதுவும் உடனடியாகச் சரிசெய்யப்பட்டு சீரான மின் விநியோகம் அளிக்கப்பட்டது.

9—

## இலவச மின்சாரம்

**வினா எண் 8752—திரு. வை. காவேரி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி கூடக்கல் பகுதியில் குடிசைத் தொழிலாகச் செய்து வரும் கற்கள் மெருகூட்டும் தொழிலாளர்களுக்கு மின் கட்டண விலக்கு அளிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

மின்சார சட்டம் 2003-ல், பிரிவு 62-ன்படி மின் கட்டணத்தை நிர்ணயம் செய்யும் அதிகாரம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம்தான் உள்ளது.

[2007 ஏப்ரல் 25

இந்த ஆணையம் தனது 15-3-2003 தேதியிட்ட முதல் மின் கட்டண ஆணையை 16-3-2003 முதல் அமலுக்கு வருமாறு அறிவித்துள்ளது. இதன்படி இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட்டுகள் வரை, ஒரு யூனிட்டுக்கு 180 பைசா, 501 முதல் 1,500 யூனிட்டுகள் வரை ஒரு யூனிட்டுக்கு 270 பைசா வீதமும், 1,500 யூனிட்டுக்கு மேல் ஒரு யூனிட்டுக்கு 310 பைசா வீதமும் வசூலிக்கப்படுகிறது. இது தவிர, நிலையான கட்டணமாக இணைப்பு ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.30-ம் வசூலிக்கப்படுகிறது.

ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்து விநியோகம் செய்வதற்கு சராசரியாக ஆகும் செலவு (2006-2007) ரூ.3.58 ஆகும். கற்கள் மெருகூட்டும் குடிசைத் தொழிலுக்குத் தற்சமயம் உற்பத்தி மற்றும் விநியோகம் செய்வதற்கு ஆகும் செலவைவிட குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

ஆகவே, மின் கட்டணத்தை நிர்ணயம் செய்யும் அதிகாரம் மின்சாரச் சட்டம் 2003-ன்படி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் இருப்பதாலும் தற்போது குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுவதாலும், கற்கள் மெருகூட்டும் குடிசைத் தொழிலுக்கு இலவச மின்சாரம் வழங்க இயலாது.

**10—**

## மின்மாற்றிகள்

**வினா எண் 8841—திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை, ஆதனக்கோட்டை மற்றும் வடவாளம் பகுதிகளில் புதியதாக மின்மாற்றிகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை வட்டம், கந்தர்வக்கோட்டை, ஆதனக்கோட்டை மற்றும் வடவாளம் பகுதிகளில் 483 மின்மாற்றிகள் உள்ளன. மேற்காணும் பகுதிகளில் மின்சாரம் வழங்குவதற்கு இப்போதைக்கு இந்த மின்மாற்றிகளே போதுமானதாக உள்ளன. மின்பளு அதிகமாகும்போது, தேவைப்படின் புதியதாக மின்மாற்றி அமைத்துத் தரப்படும்.



2007 ஏப்ரல் 25]

**11—**

## மின் இணைப்பு

**வினா எண் 10089—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, பிள்ளையார்புரம் பகுதியில் தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, பிள்ளையார்புரம் பகுதியில் விண்ணப்பம் பெறப்பட்ட அனைத்துத் தொகுப்பு வீடுகளுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது, விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை. மின் இணைப்பு வேண்டி மேற்கொண்டு விண்ணப்பம் பெறப்பட்டால், வாரிய விதிமுறைகளின்படி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**12—**

## மின் இணைப்பு

**வினா எண் 10090—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, சிட்கோ பகுதி மற்றும் கஸ்தூரி கார்டன் பகுதியில் உள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, சிட்கோ பகுதி மற்றும் கஸ்தூரி கார்டன் பகுதியில் உள்ள வீடுகளுக்கு ஏற்கெனவே பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு மின்

இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. நிலுவையில் எந்த விண்ணப்பமும் இல்லை. மேற்படி இடங்களில் வீட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டால் ஆய்வுசெய்து உடன் மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

**13—**

## மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 11436—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், முத்துநாயக்கன்பட்டி கிராமம், இந்திரா நகர், அருந்ததியர் காலனி பகுதி அருகில் மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், முத்துநாயக்கன்பட்டி கிராமம், இந்திரா நகர், அருந்ததியர் காலனி பகுதியில் உள்ள 25 வீட்டு மின் இணைப்புகள் மற்றும் 20 குடிசை மின் இணைப்புகளுக்கு, 0.5 கி.மீ. தொலைவில் உள்ள காரச்சாவடி SS-II/200 KVA மின்மாற்றியிலிருந்து மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் இணைப்புகளுக்கு மேலே குறிப்பிட்டுள்ள 200 கே.வி.ஏ. மின்மாற்றியின் திறனே போதுமானதாக உள்ளது. எனவே, இந்த பகுதிக்கு மேலும் ஒரு புதிய மின்மாற்றி அமைக்க தற்போது அவசியம் இல்லை. இருப்பினும் மேற்கண்ட பகுதியில் குறைவழுத்த குறைபாடு வராமல் இருக்க ஒருமுனை மின் கம்பிகளை மும்முனை கம்பிகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**14—**

## புதிய மின்கம்பம்

**வினா எண் 12283—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை, புங்கம்பாடி, பாறவலசு ஆதி திராவிடர் காலனியில் பழுதடைந்த மின்கம்பத்தை மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை, புங்கம்பாடி, பாறவலசு ஆதி திராவிடர் காலனியில் இருந்த பழுதடைந்த மின்கம்பத்தை 8-12-2006 அன்று மாற்றி புதிய மின்கம்பம் அமைக்கப்பட்டது.

**15—**

## மின் கட்டணம்

**வினா எண் 12305—திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வர்த்தக நிறுவனங்கள் அல்லாத சமூக சேவை நிறுவனங்கள் பயன்படுத்தும் மின் கட்டணங்களுக்கான தொகையை, வீட்டு உபயோக மின்கட்டணத்திற்கு இணையாக வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மின்சார சட்டம், 2003-ல் உள்ள பிரிவு 62-ன்படி மின் கட்டணத்தை நிர்ணயம் செய்யும் அதிகாரம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம்தான் உள்ளது. இந்த ஆணையம் தனது 15-3-2003 தேதியிட்ட முதல் மின் கட்டண ஆணையை 16-3-2003 முதல் அமலுக்கு வருமாறு அறிவித்துள்ளது. இந்த ஆணையில் முதியோர் இல்லம், அநாதை இல்லம், ஆதரவற்றோர் இல்லம், தொழுநோய்க் காப்பகங்கள் போன்றவைகளுக்கு மின் கட்டண விகிதம் LT tariff II B-ன்கீழ் கீழ்க்கண்டவாறு மின் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:

மின் கட்டண ஆணைப்படி உள்ள கட்டணம் அனைத்து யூனிட்டுகளுக்கும் ரூ.4.40 பைசாவாகவும் மேற்கொண்டு நிலையான கட்டணமாக மாதத்திற்கு ரூ.20-ம் வசூலிக்கப்படுகிறது. தற்சமயம் வர்த்தக நிறுவனங்கள் அல்லாத சமூக சேவை நிறுவனங்களுக்கு வீட்டு உபயோக மின் கட்டணத்திற்கு இணையாக வசூலிக்கும் திட்டம் எதுவும் இல்லை.

[2007 ஏப்ரல் 25

16—

## கழிவுகள் மூலம் மின்சாரம்

**வினா எண் 14209—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இருந்து கிடைக்கும் சக்கைகள் மற்றும் சந்தைக் கழிவுகள்மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளில் கரும்புச் சக்கையிலிருந்து 450 மெகா வாட் அளவிற்கு இணை மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதில் 31-3-2006 வரை, 3 கூட்டுறவு ஆலைகள் மற்றும் 15 தனியார் சர்க்கரை ஆலைகளில் மொத்தம் 315 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இணை மின் திட்டத்தின்மூலம் சர்க்கரை ஆலைகளின் வருவாய் அதிகரித்து, நிதி நெருக்கடியிலுள்ள நலிவுற்றிருக்கும் கூட்டுறவு ஆலைகள் தவிர, மற்ற ஆலைகள் அனைத்திலும் இன்னும் சில ஆண்டுகளில் இத்திட்டம் முழுவதும் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிகளிலுள்ள திடக்கழிவுகளின் மதிப்பீட்டினை ஆய்வு செய்துள்ளது. சேலம் மற்றும் திருச்சி மாநகராட்சிகள், நகராட்சி திடக்கழிவுகளைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் எல்லா மாநகராட்சிகளையும் தங்களுக்கு ஏற்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, கழிவிலிருந்து எரிசக்தி பெறும் திட்டத்தைச் செயல்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

சென்னை, கோயம்பேடு மொத்த காய்கறி வளாகத்திலுள்ள காய்கறிக் கழிவுகளிலிருந்து 250 கிலோ வாட் திறனில் மின்சாரம் தயாரிக்கும் திட்டம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின்மூலம் மைய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு, 13-02-2006 அன்று செயல்முறைக்கு வந்துள்ளது.



2007 ஏப்ரல் 25]

17—

## பணி நிரந்தரம் செய்தல்

**வினா எண் 643—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சிகளில் பணிபுரியும் எழுத்தர்களைப் பணி நிரந்தரம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிகளில் பணிபுரியும் எழுத்தர்களைப் பணி நிரந்தரம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், ஊராட்சிகளில் பணிபுரியும் எழுத்தர்களுக்குக் காலமுறை ஊதியத்தில் ஊதியம் நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

18—

## நிழற்கூடம்

**வினா எண் 10635—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி ஒன்றியம், வில்லிபாளையம் ஊராட்சி, ஜங்கமநாயக்கன்பட்டி பேருந்து நிறுத்தத்திற்கு நிழற்கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின்கீழ் பரமத்தி ஒன்றியம், வில்லிபாளையம் ஊராட்சி, ஜங்கமநாயக்கன்பட்டி பேருந்து நிறுத்தத்திற்கு நிழற்கூடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

19—

## சமுதாயக் கூடம்

**வினா எண் 13387—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, ஆ.விளாக்குளம் கிராமத்திற்குப் புதிதாக திருமண மண்டபம், மாங்குளம், தஞ்சாக்கூர் ஆகிய கிராமங்களில் புதிய சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதிக்குட்பட்ட ஆ.விளாக்குளம் கிராமத்தில் திருமண மண்டபம் கட்டுவதற்கும், மாங்குளம், தஞ்சாக்கூர் ஆகிய கிராமங்களில் சமுதாயக் கூடம் கட்டித் தருவதற்கும், மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதி நிதியில் நிதி ஒதுக்கீடு செய்து, பரிந்துரை செய்யும் பட்சத்தில் இந்தப் பணியினைச் செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

20—

## சமுதாயக் கூடம்

**வினா எண் 13586—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மிளகனூர் கிராமத்திற்குக் கல்யாண மண்டபம் மற்றும் ஆலடி நத்தம் கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் நிதி ஒதுக்கீடு செய்து, பரிந்துரை செய்யும் பட்சத்தில் இந்தப் பணியினைச் செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

21—

## சமுதாயக் கூடம்

**வினா எண் 13999—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, வம்பலூர், கரிக்காத்தூர் மற்றும் அனாதிமங்கலம் ஆகிய கிராமங்களில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியில் நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் வம்பலூர், கரிக்காத்தூர் மற்றும் அனாதிமங்கலம் ஆகிய கிராமங்களில் சமுதாயக் கூடம் கட்டித்தர விதிமுறைகளின்படி பரிசீலிக்கப்படும்.

22—

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

**வினா எண் 5755—திரு. அக்ரி.எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் மங்கலம், ஆதமங்கலம்புதூர், மல்லவாடி ஆகிய பகுதிகளில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில் மொத்தம் 16 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் உள்ளன. திருவண்ணாமலை மற்றும் போளூரில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் உள்ளது. கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் மங்கலம், போளூரிலிருந்து 12 கி.மீ. தூரம் உள்ளது. மேலும், ஆதமங்கலம்புதூர், போளூரிலிருந்து 12 கி.மீ. தூரத்தில் உள்ளது. எனவே, கலசப்பாக்கம் மங்கலம், ஆதமங்கலம்புதூர் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் போளூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை அணுகலாம். மல்லவாடி பகுதி திருவண்ணாமலையிலிருந்து 10 கி.மீ. தூரம் உள்ளது. எனவே, மல்லவாடி பகுதியினர் திருவண்ணாமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

எனவே, கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் மங்கலம் ஆதமங்கலம்புதூர், மல்லவாடி ஆகிய பகுதிகளில் தற்பொழுது ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் இல்லை.

**23—**

## பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல்

**வினா எண் 7016—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை மரங்களைத் தாக்கும் பூச்சிகளை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தென்னை மரங்களைத் தாக்கும் பூச்சிகளை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2006-2007-ம் ஆண்டு ரூ.22.574 இலட்சம் செலவில் (தென்னை வளர்ச்சி வாரியத்தின் பங்கு 50 சதவீதம் மற்றும் மாநில அரசின் பங்கு 50 சதவீதம்) 10 மாவட்டங்களில் 9.5 இலட்சம் தென்னை மரங்களில்



பூச்சிகளை உயிரியல் முறையில் கட்டுப்படுத்துவதற்கான திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**24—**

## குளிர்பதனக் கிடங்கு

**வினா எண் 7025—திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரமான வெங்காயம், தக்காளி மற்றும் காய்கறிகள் விளையக்கூடிய கடலூர், ஞானமேடு கிராமத்தில் காய்கறி குளிர்பதனக் கிடங்கு ஒன்று ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர், ஞானமேடு கிராமத்தில் விளையக்கூடிய தரமான வெங்காயம், தக்காளி மற்றும் காய்கறிகளைப் பாதுகாத்து வைக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

**25—**

## குளிரூட்டும் மையம்

**வினா எண் 7026—திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, துவரங்குறிச்சியில் தக்காளி குளிரூட்டும் மையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, துவரங்குறிச்சியில் தக்காளி குளிரூட்டும் மையம் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

[2007 ஏப்ரல் 25

26—

## நிரந்தர கடை

**வினா எண் 7660—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, மாநகராட்சிக்குட்பட்ட சிங்காநல்லூர் உழவர் சந்தையில் உள்ள கடைகள் அனைத்தையும் விவசாயிகளுக்கு மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உழவர் சந்தையில் ஒவ்வொரு நாளும் விவசாயிகளின் வருகையின் முன் நிலைப்படி கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன. எனவே, விவசாயிகளுக்கு நிரந்தர கடை என ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை.

27—

## கூட்டுறவு நியாய விலைக் கடை

**வினா எண் 9126—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரத்தில் உள்ள சுவாதி மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் நடத்தப்படும் கூட்டுறவு நியாய விலைக் கடையை கரூர் வேளாண் விற்பனைக் கூடத்தின்மூலம் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை சட்டம், 1987-ன்படி [Tamil Nadu Agricultural Produce Market (Regulation) Act, 1987] கூட்டுறவு நியாய விலைக் கடை நடத்த வழிவகை இல்லை.



2007 ஏப்ரல் 25]

28—

## வேளாண்மைக் கல்லூரி

**வினா எண் 12856—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கரூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைத்துத் தரும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

## சுற்றுச் சுவர்

**வினா எண் 11147—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், பூம்புகார் அண்ணா விருந்தினர் மாளிகைக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் அண்ணா விருந்தினர் மாளிகைக்குச் சுற்றுச் சுவர் கட்டும் பணிக்கு "சுனாமி" ஒதுக்கீட்டில் செய்ய ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தக்காரர் பணி நியமனம் செய்யப்பட்டு, பணி நடைபெற உள்ளது. மேற்கண்ட பணி விரைவில் தொடங்கி, முடித்துக் கொடுக்கப்படும்.

(ஆ) எழவில்லை.

[2007 ஏப்ரல் 25

**30—**

## பேருந்து வசதி

**வினா எண் 1238—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம், அரசுப் போக்குவரத்துக் கழகம்மூலம் இயங்கும் நகர தடம் எண் 7 பேருந்தை 6 முறை நல்லாப்பாளையம் வரை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

விழுப்புரத்திற்கும் நல்லாப்பாளையத்திற்கும் இடையே கண்டாச்சிபுரம் வழியாக நகரப் பேருந்து தடம் எண் 7 மற்றும் நகரப் பேருந்து தடம் 36 மூலமாக 14 நடைகளிலும், திருக்கோயிலூர் நல்லாப்பாளையத்திற்கும் இடையே கண்டாச்சிபுரம் வழியாக நகரப் பேருந்து தடம் எண் 1A மூலமாக 4 நடைகள் மற்றும் புறநகர் பேருந்து தடம் 122L மூலமாக சென்னை-திருக்கோயிலூருக்கு 2 நடைகளிலும் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், கோரிக்கையின்படி நகரப் பேருந்து தடம் எண் 7 விழுப்புரத்திற்கும் நல்லாப்பாளையத்திற்கும் இடையே கண்டாச்சிபுரம் வழியாக சென்று வரும் நடைகளிலும், இரு நடைகளில் விழுப்புரம்-கண்டாச்சிபுரம் மற்றும் இரு நடைகளில் விழுப்புரம்-அனந்தபுரம் (வழி-கெடார், கக்கனூர்) இடையேயும் சென்று வரும் வகையில் இயக்கப்படுகிறது.

**31—**

## பேருந்து வசதி

**வினா எண் 1246—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, முகையூர் ஒன்றியம், ஆதிச்சனூர் கிராமத்திற்கு பேருந்து வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருக்கோயிலூருக்கும் ஆதிச்சனூருக்கும் இடையே நாயனூர் வழியாக நகரப் பேருந்து தடம் எண் 13 மூலமாக 4 நடைகள், நகரப் பேருந்து தடம் 15 மூலமாக 2 நடைகள் ஆக 6 (சென்று வரும்) நடைகளில் பேருந்து வசதி உள்ளது. மேலும், திருக்கோயிலூர்-மதுராம்பட்டு இடையே ஆதிச்சனூர் வழியாக தனியார் மினிப் பேருந்து வசதியும் உள்ளது.



2007 ஏப்ரல் 25]

**32—**

## பேருந்து வசதி

**வினா எண் 3596—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் முதல் தொப்பூர் வரையுள்ள குக்கிராமப் பகுதிகளான காமனேரி, மரக்கோட்டை, சின்ன திருப்பதி, குப்பநாயக்கனூர், கொன்ரெட்டியூர், ஜோடுகுளி வழித் தடங்களில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மூலமாக ஓமலூர் பேருந்து நிலையத்தில் இருந்து காமனேரி, மரக்கோட்டை, ஒண்டி வீரனூர் வரை தடம் எண் 97, 79 மற்றும் 64/79 பேருந்துகள் மூலம் தினசரி 24 நடைகளும், ஓமலூர் முதல் சின்ன திருப்பதி, குப்பநாயக்கனூர், கொன்ரெட்டியூர், ஜோடுகுளி வழியாக தொப்பூர் வரை தடம் எண் ஓ1, ஓ9, ஓ15 பேருந்துகள் மூலம் தினசரி 20 நடைகளும் மற்றும் மேச்சேரியிலிருந்து காமனேரி, மரக்கோட்டை வழியாக சின்ன திருப்பதி வரை தடம் எண் 24 மூலம் தினசரி 4 நடைகளும் இயக்கப்படுகின்றன. இவ்வாறான நடைகளே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாக உள்ளது.

**33—**

## பேருந்து வசதி

**வினா எண் 3879—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூரில் இருந்து பெரிய கவுண்டனூர் வரை செல்லும் S1 என்ற அரசுப் பேருந்தை நல்லூர் கிராமம் வரை நீட்டிப்புச் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

[2007 ஏப்ரல் 25

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தடம் எண் S1 அரசுப் பேருந்து மூலமாக 8 நடைகள் நல்லூர் கிராமத்திற்கு இயக்கப்பட்டு வருகின்றது. மேலும், தடம் எண் 13 மற்றும் 99 மூலமாக ஓமலூரிலிருந்து தாசனூர் (வழி) நல்லூர் தடத்தில் தினசரி 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. இதுவே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

(ஆ) எழாது.

**34—**

## பேருந்துகள்

**வினா எண் 6431—திரு. வை. காவேரி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடங்கணசாலை, கே.கே. நகர் பகுதியில் இருந்து சென்ற 75, 81 ஆகிய இரு நகரப் பேருந்துகள் மீண்டும் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நகரப் பேருந்து தடம் எண் 75, சேலம் நகரிலிருந்து சித்தர்கோவில், கே.கே. நகர், காட்டூர், மாட்டையாம்பட்டி வழியாக சின்னப்பம்பட்டி/பாப்பம்பட்டி வரை தினசரி 10 நடைகள் இயக்கப்பட்டு, கே.கே. நகர் பகுதியினரின் போக்குவரத்துத் தேவை, பூர்த்தி செய்யப்படுகிறது.

**35—**

## மாணவர் விடுதி

**வினா எண் 9700—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 25]

மொரப்பூர் தொகுதி, சந்தப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்றினைத் துவக்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை . அமைச்சர்:**

நடப்பு ஆண்டில் 50 புதிய விடுதிகள் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் துவக்க அரசு ஆணை (நிலை) எண் 72, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 1-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மொரப்பூர் தொகுதியில் புதிதாக விடுதிகள் துவக்குவது அரசின் ஆய்வில் இல்லை.

**36—**

## நிலங்களுக்கான மதிப்புகள்

**வினா எண் 18810—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய நிலங்களுக்கான சந்தை மதிப்பை வரன்முறைப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள விவசாய நிலங்கள் உட்பட அசையாச் சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புகளைச் சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி நிறைவு பெற்று, சீரமைக்கப்பட்ட வழிகாட்டி மதிப்புகள் அமலுக்கு வரும்போது, விவசாய நிலங்களுக்கான மதிப்புகளும் வரன்முறைப்படுத்தப்படும்.

[2007 ஏப்ரல் 25

37—

## சிறுதொழில் மையங்கள்

**வினா எண் 4783—திரு. ந. கணபதி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, வானூர் மற்றும் மரக்காணம் ஒன்றியத்தில் சிறு தொழில் மையங்கள் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் குறுந்தொழில்கூடங்கள் ஏற்கெனவே சிட்கோவினால் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன:—

| தொழிற்பேட்டை | தொழிற்கூட எண்ணிக்கை |
|---|---|
| கள்ளக்குறிச்சி | 55 |
| தியாகதுர்கம் | 22 |
| திருக்கோயிலூர் | 10 |
| இளவரசன் கோட்டை | 14 |
| கொல்லியங்குணம் | 16 |
| திருச்சிற்றம்பலம் | 12 |

2. விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், ஆசனூர் கிராமத்தில் 100 ஏக்கர் நிலமும், திண்டிவனம் வட்டம், வெண்மணி ஆத்தூர் கிராமத்தில் 40 ஏக்கர் நிலமும் தொழிற்பேட்டை அமைக்க அரசு நிலம் பெறப்பட்டு, தொழில் முனைவோர் முன்வராத காரணத்தினாலும், மண்வளம், தொழிற்பேட்டை அமைக்க உகந்ததாக இல்லாததாலும், தொழிற்பேட்டை துவங்க இயலாத நிலையில் உள்ளது. வானூர் தொகுதியில் வானூர் மற்றும் மரக்காணம் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளோ முதலீட்டிற்கான வழிவகைகளோ தற்சமயம் ஏதுமில்லை. போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழிற்திட்டங்களுடனும் கணிசமான தொழிற்முனைவோர், முன்வந்தால் புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும்.



2007 ஏப்ரல் 25]

38—

## எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை

**வினா எண் 6478—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதியில் தென்னையில் இருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை தொகுதியில் தென்னையில் இருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை துவக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

2. உடுமலைப்பேட்டை தொகுதியில் உள்ளடங்கிய உடுமலைப்பேட்டை வட்டாரத்தில் ரூ.141.66 இலட்ச முதலீட்டில் அண்ணா மறுமலர்ச்சி புதிய திட்டத்தின்கீழ் தென்னை நார், முறுக்கப்பட்ட கயிறு போன்றவை தயாரிக்கும் மூன்று அலகுகள் துவக்கப்பட்டுள்ளன. மடத்துக்குளம் வட்டாரத்தில் ரூ.70.25 இலட்சம் முதலீட்டில் 2 தொழிற்சாலைகள் சித்த மருந்துகள், சத்து மற்றும் உணவு பொருட்கள் ஆகியவை தயாரிக்கும் தொழிற்சாலைகள் உற்பத்தியைத் துவக்கி உள்ளன. குடிமங்கலம் வட்டாரத்தில் ரூ.40.35 இலட்சம் முதலீட்டில் தென்னை நார் கழிவுக்கட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

3. உடுமலைப்பேட்டை தொகுதியில் தென்னையில் இருந்து எண்ணெய் எடுக்கும் தொழில் துவக்க தனியார் முன்வரும் பட்சத்தில் தகுதியின் அடிப்படையில், தொழில் துவக்கத் தேவையான ஆலோசனைகளை மாவட்டத் தொழில் மையம் அளிக்கும்.

39—

## ஊரகத் தொழில்கள்

**வினா எண் 10214—திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, ஊரகத் தொழில்களை விஸ்தரிக்க புதிய திட்டங்கள் அரசிடம் உள்ளதா?

[2007 ஏப்ரல் 25

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அவினாசி தொகுதியில் ரூ.2,449.50 இலட்சம் முதலீட்டில் 2,140 பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்கள் உள்ளன. அவற்றின் வாயிலாக 13,121 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. அண்ணா மறுமலர்ச்சி புதிய திட்டத்தின்கீழ், அவினாசி தொகுதியில் உள்ளடங்கியுள்ள அவினாசி மற்றும் அன்னூர் வட்டாரங்களில் ரூ.259.76 இலட்சத்தில் 5 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு, 316 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இத்திட்டத்தின்மூலம் கொசுவத்திச் சுருள் உற்பத்தி செய்யப் பயன்படும் தேங்காய் ஓட்டுமாவு, தேங்காய் எண்ணெய் மற்றும் நவீன அரிசி ஆலை ஆகிய தொழில்கள் துவக்கி நடத்தப்பட்டு வருகின்றன.

திருப்பூரில் ரூ.250 கோடி முதலீட்டில் நேதாஜி பின்னலாடை பூங்காவில் 52 தொழிற்சாலைகள் துவக்கப்பட்டு, பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடைகள் தயார் செய்யப்படுகின்றன. அவற்றின்மூலம் சுமார் 3,250 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

மேலும், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப்படுத்தப்படும் தொழில்களுக்கு அரசின் வட்டிவிகித பின்முனை மானியம் வழங்கப்படுகின்றது.

புதிதாகத் தொழில் தொடங்க முன்வரும் தொழில் முனைவோருக்கு ஒற்றைச்சாளர தீர்வுக் குழுமூலம் தேவையான அனுமதிகள் பெற்றுத் தருவதுடன் தகுதியின் அடிப்படையில் வங்கிக் கடன் பெறவும் பரிந்துரைக்கப்படுகிறது. தொழில் தொடங்க தேவையான ஆலோசனைகளும் மாவட்டத் தொழில் மையத்தால் வழங்கப்படுகின்றன.

**40—**

## தொழிற்சாலை

**வினா எண் 10929—திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீரங்கம் தொகுதியில் மல்லிகை வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2007 ஏப்ரல் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதியில், மல்லிகை வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க தொழில் முனைவோர் முன்வரும் பட்சத்தில் மாவட்டத் தொழில் மையம் எல்லா வசதிகளையும் செய்து தரும். மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கடந்த 2005-2006-ம் ஆண்டு 472 ஹெக்டேரில் மல்லிகைப் பூ பயிரிடப்பட்டு சராசரியாக ஹெக்டேருக்கு 7.75 டன் மல்லிகைப் பூ அந்தநல்லூர், மணிகண்டம், மணச்சநல்லூர், மணப்பாறை, வையம்பட்டி, உப்பிலியாபுரம், ஆமூர் ஆகிய இடங்களில் மகசூல் செய்யப்பட்டது. எனவே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதியில் ஆர்வமும், விருப்பமும் உள்ள தொழில் முனைவோர் எவரேனும் மல்லிகை வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க முன்வரும் பட்சத்தில் அவர்களுக்கு மாவட்டத் தொழில் மையம் மூலம், தகுதிகளின் அடிப்படையில் பொருத்தமான திட்டத்தின்கீழ் வங்கிக் கடன் பெற ஆலோசனைகள் வழங்கி தொழிற்சாலை துவக்க அனைத்து உதவிகளும் செய்து தரப்படும்.

**41—**

## சுய வேலைவாய்ப்பு

**வினா எண் 10980—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதியில் படித்த இளைஞர்களுக்கு மாவட்ட தொழில் மையம் வாயிலாகக் கடன் உதவி அளித்து சிறு தொழில் தொடங்கிட அரசு உதவி செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

பண்ருட்டி தொகுதியில் படித்த இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு வழங்குவதற்காக மாவட்டத் தொழில் மையம்மூலம் செயல்படுத்தப்படும் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2005-2006 ஆம் ஆண்டில் கடன் வழங்க இலக்கு 80 என

நிர்ணயிக்கப்பட்டு 129 விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு, வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்பட்டது. அவற்றில் 74 நபர்களுக்கு ரூ. 31.69 இலட்சம் வங்கிகளால் கடன் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 73 நபர்களுக்கு ரூ. 31.14 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

2. அதேபோல், 2006-2007 ஆம் நிதியாண்டில் கடன் வழங்க இலக்கு 80 என நிர்ணயிக்கப்பட்டு 130 விண்ணப்பங்கள், வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு, அவைகளுள் 41 நபர்களுக்கு ரூ.16.44 இலட்சம் கடன் ஒப்பளிப்பு வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இதுவரை 5 பயனாளிகளுக்கு ரூ. 2.40 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள இலக்கை மார்ச் 2007-க்குள் முடிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. எனவே, பண்ருட்டி தொகுதியில் படித்த வேலையற்ற இளைஞர்கள் தொழில் துவக்க முன்வரும் பட்சத்தில் அவர்களுக்கு வங்கிக் கடன் பெற்றுத் தந்து, தொழில் துவக்க அனைத்து உதவிகளும் மாவட்டத் தொழில் மையம்மூலம் செய்து தரப்படும்.

**42—**

## பட்டுக் கூடு

**வினா எண் 11506—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டான்சில்க் காஞ்சிபுரம் இணையம் மூலம் கோவை கிளையில் மல்பரி விவசாய உற்பத்தி செய்யும் பட்டுக் கூடு வாங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம், டான்சில்க் இணையத்தின் கோவை கிளையில் நெசவாளர்களுக்குத் தேவைப்படும் பட்டு நூல் (பாவு மற்றும் ஊடை) விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக் கூடுகள் வாங்குவதற்கு அரசுப் பட்டுக் கூடு அங்காடி ஒன்று செயல்பட்டு வருகிறது. கச்சாப் பட்டு பாவு மற்றும் ஊடை போன்ற பட்டு நூல் தொடர்புடைய நடவடிக்கைகள் மட்டுமே "டான்சில்க்" மேற்கொண்டு வருகிறது. எனவே டான்சில்க்கின் கோவை கிளையில் பட்டுக் கூடு வாங்க இயலாது.

(ஆ) வினா எழாது.



**43—**

## பழரசத் தொழிற்சாலை

**வினா எண் 15065—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் பழரசத் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் பழரசத் தொழிற்சாலை துவக்கும் கருத்துரு அரசிடம் இல்லை. இத்தொகுதியில் பழரசம் உற்பத்தி செய்யுமளவிற்கு மாம்பழ விளைச்சல் இல்லை.

வால்பாறை தொகுதிக்குட்பட்ட ஆனைமலை ஒன்றியத்தில் வேளாண் சார்ந்த தொழில்கள் மற்றும் உணவுப் பதப்படுத்தும் தொழில்கள் ஏற்கெனவே ரூ.176.48 இலட்சம் முதலீட்டில் துவக்கப்பட்டுள்ளன. ஆனைமலை பகுதியில் 100 ஹெக்டேர் நிலப்பரப்பில் மாம்பழ விளைச்சல் உள்ளது. அதில் சொற்ப அளவில், அதாவது ஆண்டு ஒன்றுக்கு 3 அல்லது 4 டன் அளவிலேயே கிடைக்கிறது. அவை யாவும் மாம்பழ வியாபாரிகளால் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விளைச்சலின் இறுதியில் விற்பனைக்குச் சென்று விடுகின்றன. எனினும் இத்தகைய தொழிற்சாலை நிறுவ தனியார் முன்வந்தால், அவர்களுக்குத் தேவையான உதவிகளை, கோவை மாவட்டத் தொழில் மையம் செய்து தரும்.

**44—**

## வாசனைத் திரவியத் தொழிற்சாலை

**வினா எண் 15724—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வாசனைத் திரவியத் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாசனைத் திரவியங்கள், குண்டுமல்லி, ஜாதிமல்லி மற்றும் ரோஜா போன்ற பூக்களிலிருந்தும் ரோஸ்மேரி, மரிக்கொழுந்து, ஜெரானியம் உள்ளிட்ட நறுமணப் பயிர்களின் இலைகளிலிருந்தும் தயாரிக்கப்படுகின்றன. வால்பாறை தொகுதியில் இப்பயிர்கள் பயிரிடப்படவில்லை. எனவே, வால்பாறை தொகுதியில் வாசனைத் திரவியத் தொழிற்சாலை ஏற்படுத்த வாய்ப்புகள் இல்லை.

**45—**

## சாதிச் சான்றிதழ்

**வினா எண் 10182—திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழங்குடியினருக்கான சாதிச் சான்றிதழ்களை வழங்கும் அதிகாரத்தை வட்டாட்சியர்களுக்கு அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 11-11-1989 வரை வட்டாட்சியர்களால் வழங்கப்பட்டு வந்த பழங்குடியின சாதிச் சான்றுகள் வழங்கும் அதிகாரம் அரசாணை எண் 2137, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்: 11-11-1989-ன் மூலம் வருவாய்க் கோட்டாட்சியர்களுக்கும், அரசாணை (நிலை) எண் 31, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்: 4-3-1999-ன் மூலம், பழங்குடியினர் சாதிச் சான்றிதழை வருவாய்க் கோட்டாட்சியர் மட்டுமில்லாமல் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலரும் வழங்கலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. பழங்குடியினருக்கு வழங்கப்படும் சலுகைகள் உரிய நபர்களுக்கே சென்றடையும் வகையில், வட்டாட்சியர் நிலையில் வழங்கப்பட்டு வந்த இச்சான்றுகளை, வட்டாட்சியர்களுக்கு அடுத்த உயர்நிலையிலுள்ள



வருவாய்க் கோட்டாட்சியர்களாலும் மேல் விசாரணை செய்யப்பட்டு வழங்கப்பட வேண்டுமென்று வருவாய்க் கோட்டாட்சியர்/மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, பழங்குடியின சாதிச் சான்றுகள் வழங்கும் அதிகாரம் வட்டாட்சியர்களுக்கு அளிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**46—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 10790—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை கக்கன்நகர், காமராஜர் நகர் மற்றும் ராஜீவ் நகரில் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை கக்கன்நகர், காமராஜர் நகர் மற்றும் ராஜீவ் நகரில் குடியிருப்பவர்கள் பஞ்சாயத்து நிலங்களிலும் ஆற்றோரங்களிலும் குடிசை போட்டு உள்ளதால், இவர்களுக்கு இவ்விடங்களில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

(ஆ) இவ்வினா எழாது.

**47—**

## பிற்பட்டோர் சான்றிதழ்

**வினா எண் 10911—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் பல்லாண்டுகளாக வாழும் ஈழவர், தீயர் இனத்தவருக்குப் பிற்பட்டோர் சான்றிதழ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2007 ஏப்ரல் 25

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

அரசாணை பல்வகை எண் 28 (பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை) நாள்: 19-7-1994-ல் வெளியிடப்பட்ட பட்டியலில் வரிசை எண் 28-ல் தெரிவித்துள்ளவாறு ஈழவர் சான்று கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டத்தில் மட்டும் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால், ஈழவர் சான்று நீலகிரி மாவட்டத்தில் வழங்கப்படுவதில்லையென்றும், தீயர் சாதி எந்தப் பட்டியலிலும் இடம்பெறவில்லையென்பதால் அதுபோன்ற சான்றும் வழங்கப்படுவதில்லை. மேலே குறிப்பிட்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட பட்டியலில் வரிசை எண் 35-ல் குறிப்பிடப்பட்டுள்ள இல்லத்துப் பிள்ளைமார், இல்லுவர், ஈழவர் மற்றும் இல்லத்தார் சாதியினருக்குத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு மட்டுமே அவ்வாறு சான்று வழங்கப்பட வேண்டுமென, அரசுக் கடிதம் எண் 8069/பி.ப.ச./93-2/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள்: 16-6-1993 மற்றும் 1641/பி.ப.ச/98-1, நாள்: 15-2-1998-ல் தெளிவுரை வழங்கப்பட்டுள்ளதால், நீலகிரி மாவட்டத்தில் வசிக்கின்ற மலையாள மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஈழவர் சாதியினருக்கு வரிசை எண் 35-ன்கீழ் சான்றுகள் வழங்கப்படுவதில்லை.

**48—**

## சிறையை மாற்றுதல்

**வினா எண் 17512—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையை மருதமலைக்கு அருகில் அல்லது மதுக்கரைக்கு மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஏப்ரல் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மத்திய சிறையினை மருதமலைக்கு அருகில் அல்லது மதுக்கரைக்கு இடமாற்றம் செய்யும் எந்த ஒரு திட்டமும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**49—**

## படகு விடும் திட்டம்

**வினா எண் 4541—திரு. வி.எஸ். பாபு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, ரெட்ஹில்ஸ் ஏரியில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகப் படகு விடும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை, ரெட்ஹில்ஸ் ஏரியில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகப் படகு விடும் திட்டம் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**50—**

## தேசப் பற்று

**வினா எண் 8458—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கல்லூரி மற்றும் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்குத் தேசப் பற்று வளரவும், நாட்டின் சுதந்திரத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ளவும் தொலைக்காட்சிமூலம் திரையிட அரசு முன்வருமா?

[2007 ஏப்ரல் 25

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

நாட்டின் தேசியத் தலைவர்களான அண்ணல் அம்பேத்கர் மற்றும் பாரதியார் போன்ற தலைவர்கள் குறித்து தமிழ்நாட்டில் கல்லூரி மற்றும் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்குத் தேசப் பற்று வளரவும், நாட்டின் சுதந்திரத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ளவும், விளக்கப் படங்கள், தமிழ்நாடு திரைப்படப் பிரிவின்மூலம் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

**51—**

## பொருட்காட்சி

**வினா எண் 16291—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் அரசின் சார்பில் பொருட்காட்சி நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் அரசின் சார்பில் பொருட்காட்சி நடத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**52—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 9133—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் உள்ள பாப்பனம்பட்டி கிராமத்தில் செயல்படும் நியாய விலைக் கடையில் பற்றாக்குறையின்றி மண்ணெண்ணெய் மற்றும் உணவுப் பொருட்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஏப்ரல் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், பாப்பனம்பட்டி கிராமத்தில் செயல்படும் நியாய விலைக் கடைக்குத் தேவையான மண்ணெண்ணெய் முழுவதுமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், குடும்ப அட்டைதாரர் அனைவருக்கும் அரிசியும் ஒழுங்காக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பாப்பனம்பட்டி நியாய விலைக் கடையில் இதுவரையில் பொருட்கள் கிடைக்கவில்லை என எவரிடமிருந்தும் புகார் வரப்பெறவில்லை.

**53—**

## குடும்ப அட்டை வழங்குதல்

**வினா எண் 9697—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியிலுள்ள அவலூர்பேட்டையில் குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு உடனடியாக குடும்ப அட்டை வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் உள்ள அவலூர்பேட்டை கிராமத்தில் கீழ்க்கண்ட விவரப்படி புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1. | விடுபட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள் | 345 |
| 2. | புதுப்பித்து வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள் | 1,525 |
| 3. | 17-9-2006 அன்று விழுப்புரத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர் பங்கேற்று விழாவில் வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள் | 39 |

[2007 ஏப்ரல் 25

| | | |
|---|---|---|
| 4. | அவலூர்பேட்டை கிராமத்தில் தற்போது நடைமுறையிலுள்ள மொத்த குடும்ப அட்டைகள் | 1,909 |
| 5. | புதிய குடும்ப அட்டை கோரி வரப்பெற்ற மனுக்கள் | 267 |
| 6. | விசாரணை முடிந்து ஏற்பு செய்யப்பட்டு, சென்னை முதன்மை ஆணையர் மற்றும் ஆணையர் அலுவலகத்தில் அச்சடிக்க ஒப்படைத்தவை | 107 |
| 7. | தள்ளுபடி செய்யப்பட்டவை | 140 |
| 8. | தற்போது விசாரணை செய்ய வேண்டி நிலுவையில் உள்ள மனுக்கள் | 20 |

**54—**

## மண்ணெண்ணெய் வழங்குதல்

**வினா எண் 16216—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வால்பாறை தொகுதிக்கு மண்ணெண்ணெயைக் கேன்களில் அடைத்து நியாய விலைக் கடைகளில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைகளில் கேன் மூலம் மண்ணெண்ணெய் வழங்குவது குறித்த திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**55—**

## குத்தகை பாக்கி

**வினா எண் 3436—திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 25]

(அ) நன்னிலம் வட்டம், திருவாஞ்சியம் ஊராட்சியில் உள்ள வாஞ்சிநாதசுவாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நில குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிக்காக வெளியேற்றம் செய்ததைத் தடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், திருவாஞ்சியம், அருள்மிகு வாஞ்சிநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான ஏக்கர் 341 சென்ட் 78 நன்செய் நிலங்கள் உள்ளன. இந்நிலங்கள் 106 நபர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டு சாகுபடி செய்து வருகிறார்கள். பசலி 1415 முடிய குத்தகை பாக்கி 29,528 கலம் நெல் ஆகும். இதன் மதிப்பு கலம் 1-க்கு ரூ.170/- வீதம் கூடுதல் ரூ.50,19,760/- ஆகும். குத்தகை பாக்கியை வசூலிக்க, திருக்கோயில் செயல் அலுவலரால் 428 வழக்குகள் வருவாய் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதில், 300 வழக்குகளில் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பசலி 1415 முடிய ரூ.2,00,000/- வசூலாகியுள்ளது. மேலும், 106 குத்தகைதாரர்கள் கூடுதலாக சுமார் ரூ.50 இலட்சம் வரை பாக்கி வைத்துள்ளனர். இந்நிலையில், திருக்கோயிலின் முக்கிய வருவாய் ஆதாரம் நெல் குத்தகை மட்டுமே என்பதாலும், இதைக் கருதியே பூஜை காரியங்கள் நடத்திவரும் சூழ்நிலை உள்ளதாலும் திருக்கோயிலின் நலன் கருதி, குத்தகை பாக்கி வைத்திருப்பவர்கள்மீது வருவாய் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து வெளியேற்றம் செய்வது தவிர்க்க இயலாது.

**56—**

## தங்கும் விடுதி

**வினா எண் 6891—திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீரங்கம் தொகுதி, திருவானைக்காவல் கோயிலுக்குத் தங்கும் விடுதி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

ஸ்ரீரங்கம் தொகுதிக்குட்பட்ட திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் மற்றும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி திருக்கோயில் அருகில் தங்கும் விடுதி கட்டுவதற்குப் போதிய இட வசதி திருக்கோயிலுக்குச் சொந்தமாக இல்லை.

**57—**

## அடிப்படை வசதி

**வினா எண் 8875–திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கங்கைகொண்டசோழபுரம் கோயிலுக்குக் கழிவறை, குளியலறை வசதிகள் செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கங்கைகொண்டசோழபுரம், அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயிலைச் சுற்றி 300 அடி சதுரத்திற்கு எவ்விதக் கட்டடங்களோ, கட்டுமானப் பணிகளோ மேற்கொள்ளக் கூடாது எனத் தொல்பொருள் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பக்தர்கள் வசதிக்காக திருக்கோயிலுக்குத் தெற்கில் சுமார் 1 பர்லாங் தூரத்தில் கங்கைகொண்ட சோழபுரம் பஞ்சாயத்து நிர்வாகம்மூலம் நவீன கழிப்பறை மற்றும் குளியலறை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான குருவாலப்பர் கோயில் கிராமத்தில் 2.00 ஏக்கர் பரப்பளவில் பக்தர்களின் வசதிக்காகச் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் ரூ.50 இலட்சம் செலவில் செய்யப்படவுள்ளது. மேற்படி திட்டத்தில் கழிவறைகள் கட்டும் பணி ரூ.3,80,000/- செலவில் செய்யப்படவுள்ளது.



**58—**

## விடுகளின் மேற்கூரை மாற்றுதல்

**வினா எண் 9051–திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், குடவாசல், அருள்மிகு கோணேஸ்வரசுவாமி கோயிலுக்குச் சொந்தமான வீடுகளின் கூரைகளை அகற்றி ஓடு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல், அருள்மிகு கோணேஸ்வரசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக 202 மனைப் பகுதிகள் உள்ளன. மேற்படி மனைப் பகுதிகள் யாவும் தனியார்களுக்கு, "தற்காலிகக் குடியிருப்பு மட்டுமே கட்டிக் குடியிருக்க வேண்டும்" என்ற நிபந்தனையுடன் வாடகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளதால், பெரும்பாலானவர்கள் அவர்கள் பெற்றிருக்கும் மனைப் பகுதியில் கூரை வீடுகளைக் கட்டிக்கொண்டு குடியிருந்து வருகிறார்கள். இம்மனைப் பகுதிகளில் மேற்கூரையினை ஓடாக மாற்றும்போது நிரந்தரக் கட்டுமான அமைப்பு ஏற்படும் என்பதால், அவ்வாறு மாற்றி அமைக்கப்படும் கட்டடத்தினை வாடகைதாரர்களின் சொந்தச் செலவில் கட்டி அதனைத் திருக்கோயிலுக்கு ஒப்படைத்து, அதற்கென நிர்ணயிக்கப்படும் நியாய வாடகையைச் செலுத்த வாடகைதாரர்கள் முன்வந்தால் இதற்கான அனுமதி வழங்கப்படும்.

**59—**

## குடிநீர் வசதி

**வினா எண் 12230—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம், குண்டடம் ஒன்றியம், ஊதியூர் செங்கோடம்பாளையம் ஊராட்சி, வட்டமலைப் பாளையத்தில் உள்ள மதுரை வீரன் கோயிலுக்குக் குடிநீர் வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் வட்டம், குண்டடம் ஒன்றியம், ஊதியூர் செங்கோடம்பாளையம் ஊராட்சி, வட்டமலைப் பாளையத்தில் உள்ள மதுரை வீரன் திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் இல்லாத திருக்கோயில். எனவே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைமூலம் குடிநீர் வசதி செய்தளிக்க இயலாது. சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவரை உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**60—**

## கடைகள் சேதாரம்

**வினா எண் 4102—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ)வால்பாறையில் உள்ள பன்னிமேடு சங்களிரோடு பகுதியில் யானைகள் கடைகளை இடித்து அழிவு செய்வதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ)ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். மேற்காண் பகுதியில் யானைகள் கடைகளை இடித்து அழிவு செய்வதைத் தடுக்க, துறை வசமுள்ள கும்கி யானைகளைக் கொண்டு, காட்டு யானைகள் காட்டின் உட்பகுதிகளுக்கு விரட்டியடிக்கப்படுகின்றன. மேலும், இப்பகுதிகளில் ரோந்துப் பணிகள் மேற்கொண்டு, காட்டு யானைகள் வசிப்பிடப் பகுதிக்குத் திரும்ப வராமல் இருக்க பட்டாசுகள் வெடித்து விரட்டப்படுகின்றன. கடைகள் சேதாரம் குறித்து உரிமையாளர்களிடமிருந்து நிவாரண நிதி கோரி வரும் விண்ணப்பங்களின்மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து, சேதாரத்தை ஆய்வு செய்து, அதற்கேற்ப நிவாரணத் தொகை துறையால் வழங்கப்படுகிறது.





**61—**

## ஆக்கிரமிப்பு

**வினா எண் 4103—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில், வனத் துறையினர் இடத்தைத் தேயிலைத் தோட்ட நிருவாகம், ஆக்கிரமிப்புச் செய்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) வால்பாறையில் வனத் துறையினரின் 0.170 எக்டேர் இடத்தை, பெரிய கருமலை தேயிலைத் தோட்ட நிருவாகம் ஆக்கிரமிப்புச் செய்தது, சுமார் 50 ஆண்டுகளுக்குமுன் (1961) வருவாய்த் துறையினரால் நிலம் வனத் துறைக்கு ஒப்படைக்கும் முன்னரே ஏற்பட்டது ஆகும். மேற்படி தேயிலைத் தோட்ட நிறுவனத்தினருக்குச் சொந்தமாக உள்ள 1.00 எக்டேர் நிலத்தினை, ஈட்டு நிலமாக வனத் துறைக்குத் தருவதாக ஒத்துக் கொண்டு வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 பிரிவு 2ன்கீழ் அனுப்பிய பிரேரணை பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**62—**

## விலங்குகளால் அழிவு

**வினா எண் 4852—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கல்லாபுரம் ஊராட்சி, கோபாலபுரம், இந்திராநகர் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு யானை, குரங்கு, காட்டு எருமை போன்ற விலங்குகள் அழிவு ஏற்படுத்துவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஏப்ரல் 25

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, கல்லாபுரம் ஊராட்சி, கோபாலபுரம், இந்திராநகர் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு, யானை, குரங்கு, காட்டு எருமை போன்ற விலங்குகளால் ஏற்படும் அழிவைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். குடியிருப்புப் பகுதிகளுக்குள் விலங்குகள் வராமல் தடுக்க வனத் துறையினரால் ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காட்டு யானைகள், துறை வசமுள்ள கும்கி யானைகளைக் கொண்டு திரும்ப காட்டிற்குள் விரட்டியடிக்கப்படுகின்றன. யானை, குரங்குகள் விரும்பி உண்ணும் வாழை, மா, கொய்யா போன்ற பயிர் வகைகளைப் பயிரிட வேண்டாமென அப்பகுதி மக்களுக்கு வனத் துறையினர் மூலமாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதையும் மீறி காட்டு யானைகளால் அழிவு ஏற்பட்டால், இழப்பிற்கு ஏற்ப நஷ்ட ஈடு முன்னுரிமை அடிப்படையில் துறையால் வழங்கப்படுகிறது.

**63—**

## நீர்க் குட்டை

**வினா எண் 7401—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், வால்பாறை புல்மலைப் பகுதியில் நீர்க் குட்டை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை புல்மலைப் பகுதியில் உள்ள சிற்றோடையில், ஆண்டு முழுவதும் தண்ணீர் ஓடிக் கொண்டிருப்பதால், வன விலங்குகள் அந்த நீரை உபயோகித்துக் கொள்கின்றன. மேலும், செட்டில்மென்ட் குடில்கள் ஏதும் இல்லாததால், வால்பாறை புல்மலைப் பகுதியில் நீர்க் குட்டை கட்டுவதற்கு அவசியம் எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.



2007 ஏப்ரல் 25]

**64—**

## சுயநிதிக் குழுக்கள்

**வினா எண் 7416—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில், சுயநிதிக் குழுக்கள் செயல்பட, தனியாக ஓர் இடம் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை பகுதியில் உள்ள பகுதிகள் அனைத்தும் தனியார் காடுகள் பகுதி என்பதால், சுயநிதிக் குழுக்கள் செயல்பட, வனத் துறை மூலம் இடம் ஒதுக்க இயலாத நிலையில் உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

**65—**

## காடு வளர்ப்புத் திட்டம்

**வினா எண் 8712—திருமதி ஜி. லதா:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் துறையில், காடு வளர்ப்புத் திட்டம், அப்பகுதி மக்களாலேயே நிறைவேற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கிக் கடனுதவியுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் 1997-1998 ஆம் ஆண்டு முதல், வனத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது "கூட்டு வன நிர்வாகம்" என்ற கொள்கையின் அடிப்படையில் உள்ளூர் கிராம மக்களை, திட்டமிடுதல், பாதுகாத்தல் மற்றும் வனச் செல்வங்களை நிருவகித்தல் போன்றவற்றில் ஈடுபடுத்தும்பொருட்டு,

[2007 ஏப்ரல் 25

ஒவ்வொரு திட்ட கிராமத்திலும் ஒரு கிராம வனக் குழு ஏற்படுத்தப்பட்டு, வன மேம்பாட்டு நடவடிக்கைகளைத் திட்டமிடுதல், வனப் பாதுகாப்பு, மேலாண்மை மற்றும் பயன்கள் பங்கீடு போன்ற பல்வேறு பணிகளில் வனத் துறைக்கு உதவும் கரமாக இவ்வனக் குழு செயல்படுகிறது.

இத்திட்டத்தின் முதல் கட்டமானது, 1997-1998 முதல் 2004-2005 ஆம் ஆண்டு வரை ரூ.690.32 கோடி செலவில் 4.80 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டக் காலத்தில் 1,367 கிராம வனக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டம், 2005-2006 ஆம் ஆண்டு முதல் 2012-2013 ஆண்டு வரை, 8 ஆண்டுக் காலத்திற்கு ரூ.567.42 கோடி மதிப்பீட்டில் 1,77,500 ஹெக்டேர் பரப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**66—**

## சாலை வசதி

**வினா எண் 8729—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கடலாடி கிராமத்தில் பச்சையம்மன் ஆலயத்திற்குச் செல்லும் வழியில் வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் சரளைச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கடலாடி கிராமத்தில் உள்ள பச்சையம்மன் கோயிலுக்கு பர்வதமலை காப்புக் காட்டினுள் எல்லையோரம் 340 மீட்டர் தூரம் செல்ல வேண்டும். பர்வதமலை காப்புக் காடு அறிவிக்கையில், 3 அடி அகலத்திற்குப் பாதை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்ட வழிகாட்டுதலின்படி கலசப்பாக்கம் ஊரக வளர்ச்சித் துறையினரால் உரிய கருத்துரு அனுப்பப்பட்டு தேவையான



2007 ஏப்ரல் 25]

நிதியினை வனத் துறைக்கு வழங்கும் பட்சத்தில், மைய அரசின் அனுமதி பெற்று இப்பாதை கல் சாலையாக அமைக்க ஆவன செய்யப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

**67—**

## புதிய பேருந்து நிலையம்

**வினா எண் 11323—திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனியில் வனத் துறைக்குச் சொந்தமான வால்கரடு காப்புக் காட்டிலுள்ள 9 ஏக்கர் நிலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

தேனியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க, தேனி வனக் கோட்டம் வால்கரடு காப்புக் காட்டில் 9 ஏக்கர் நிலம் வழங்க வனப் (பாதுகாப்புச் சட்டம்) 1980-ன்கீழ் மத்திய அரசு அனுமதி வேண்டி அனுப்பப்பட்ட கருத்துரு, மூன்று முறை நிராகரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் தென்பிராந்திய அலுவலகத்தினரால் 1 ஹெக்டேர் பரப்பளவிலான வன நிலத் தேவைக்கான பிரேரணைகள் மட்டுமே பரிசீலித்து ஆணை வழங்க இயலும் எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து, 1 ஹெக்டேர் பரப்பில் தேனி பேருந்து நிலையம் அமைக்க பிரேரணை பயனீட்டாளரிடம் கோரப்பட்டுள்ளது. பிரேரணை பெறப்பட்டவுடன் மத்திய அரசின் ஆணை பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**68—**

## மாற்றுப் பாதை

**வினா எண் 11326—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை வில்லோனி அருகில் குதிரைப் பாதை வழியாக மாற்று வழிப்பாதை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2007 ஏப்ரல் 25

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், வால்பாறை, வில்லோனி அருகில் குதிரை வழிப்பாதையில் சாலை அமைக்க அரசிடம் கருத்துரு ஏதும் இல்லை. மாற்றுப் பாதை அமைப்பதனால், இந்திராகாந்தி வன உயிரினச் சரணாலயத்தில் உள்ள அரிய வகை வன உயிரினங்கள் அழிவதற்கு வழி வகுக்கும். எனவே வில்லோனி அருகில் குதிரைப் பாதை வழியாக மாற்றுப் பாதை அமைக்கும் உத்தேசம் ஏதுமில்லை.

**69—**

## சாலை செப்பனிடுதல்

**வினா எண் 11333—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், உடுமலையிலிருந்து மூணாறு செல்லும் இரண்டு இடங்களில் மலைப் பகுதி வளைவுகளில் பல விபத்துகள் நடைபெறுவதால், உடனடியாகச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், உடுமலையிலிருந்து மூணாறு செல்லும் சாலையானது, ஆனைமலை மற்றும் அமராவதி காப்புக் காட்டினுள் இந்திராகாந்தி வன உயிரின உய்விடப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பகுதியில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்கு நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து கருத்துரு அனுப்பிவைக்கும் பட்சத்தில் மத்திய அரசு வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படி, மத்திய அரசின் அனுமதி பெற முழு முயற்சி மேற்கொண்டு, பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**70—**

## சாலை வசதி

**வினா எண் 11447—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 25]

*(அ)* ஓமலூர் தொகுதி, செத்தப்பாளையத்தில் இருந்து கோவில்பாடி வரை வனத் துறை அனுமதி பெற்று 10 கி.மீ. சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

*(அ)* ஓமலூர் தொகுதி, செத்தப்பாளையம் முதல் கோவில்பாடி வரையிலான சாலை, சேர்வராயன் வடக்குச் சரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மல்லாபுரம் காட்டு காப்புக் காடு மற்றும் எரிமலை காப்புக் காட்டில் அமைகிறது. இதில் செத்தப்பாளையம் முதல் பூமாத்தூர் வரையிலான ஏற்கெனவே உள்ள 8 கி.மீ. மண் சாலையினை 3.60 கி.மீ. அகலத்திற்குக் கல் சாலையாக மாற்ற தோராயமாக ரூ. 40.00 இலட்சம் தேவைப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் இப்பணிக்காக நிதி கோரப்பட்டு பணி மேற்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்படும்.

*(ஆ)* வினா எழவில்லை.

**71—**

## சாலை வசதி

**வினா எண் 11448—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஓமலூர் தொகுதி, காடையம்பட்டி ஒன்றியம், மலைக் கிராமங்களான கண்ணம்பாடி, பூமரத்தூர், வீராச்சூர், கோவில்பாடி ஆகிய கிராமங்களுக்கு வனத் துறையின் அனுமதி பெற்று சாலை வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

*(அ)* ஓமலூர் தொகுதி, கனவாய்புதூர் ஒதுக்குக் காட்டின் வழியாக கனவாய்புதூர் முதல் கண்ணம்பாடி வரையிலுள்ள 7 கி.மீ. நீள சாலையில் 4 ½ கி.மீ. சாலை வனப் பொறியாளர், திருச்சி மூலம் மேம்பாட்டுப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 2 ½ கி.மீ.

[2007 ஏப்ரல் 25

நீள சாலை வருவாய்த் துறை அல்லது பஞ்சாயத்துமூலம் முடிக்கப்பட வேண்டும். மேலும் பூமரத்தூர், வீராச்சூர் மற்றும் கோவில்பாடி கிராமங்கள் வன நிலங்களுக்கு வெளியே அமைந்துள்ளதால் சாலைப் பணி தொடர இதர துறைகள்மூலம் நடவடிக்கை எடுக்கலாம்.

(ஆ) வினா எழவில்லை.

**72—**

**சாலை வசதி**

**வினா எண் 11449—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, லோக்கூர் இரயில்வே நிலையம் முதல் கரடிகுண்டு வரை வனத் துறை அனுமதி பெற்று 4 கி.மீ. சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) ஓமலூர் தொகுதி, லோக்கூர் இரயில் நிலையம் முதல் கரடிகுண்டு வரையிலான 4 கி.மீ. சாலை அமைக்கக் கோரப்பட்டுள்ள பகுதியானது, லோக்கூர் காப்புக் காட்டில் அமைந்துள்ளது. இக்காப்புக் காட்டில் வனச் சட்டப் பிரிவு 16 அறிவிக்கையின்கீழ் வழி உரிமம் ஏதும் வழங்கப்படவில்லை. மேலும், கரடிகுண்டு கிராமத்தைச் சென்று அடைய மோரூர் கிராமத்தின் வழியாக மாற்றுப் பாதை உள்ளதால் புதிதாகச் சாலை அமைக்க கருத்துரு ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**73—**

**சாலை வசதி**

**வினா எண் 11450—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, கூக்குட்டப்பட்டி ஊராட்சி, காஞ்சேரி முதல் திண்ணப்பட்டி வரை வனத் துறை அனுமதி பெற்று சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஏப்ரல் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதி, கூக்குட்டப்பட்டி ஊராட்சி, காஞ்சேரி முதல்.திண்ணப்பட்டி வரை சாலை அமைக்க, கோரப்பட்டுள்ள பகுதியானது காஞ்சேரி காப்புக் காட்டில் அமைந்துள்ளது. இச்சாலை அமைக்க ஊரக வளர்ச்சித் துறை/நெடுஞ்சாலைத் துறையினரால் வனப் பாதுகாப்புச் சட்ட விதிகளின்படி உரிய பிரேரணை அனுப்பப்பட்டு தேவையான நிதியினை வனத் துறைக்கு வழங்கும்பட்சத்தில், மத்திய அரசின் அனுமதி பெற்று வனத் துறைமூலம் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**74—**

**சாலை வசதி**

**வினா எண் 11451—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, வேப்பிலை ஊராட்சி, அம்மனேரி திட்டு முதல் கொல்லங்குட்டை வரை வனத் துறை அனுமதி பெற்று 5 கி.மீ. சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) ஓமலூர் தொகுதி, வேப்பிலை ஊராட்சி, அம்மனேரி திட்டு முதல் கொல்லங்குட்டை வரை சாலை அமைக்கக் கோரப்பட்டுள்ள பகுதி, வனப் பகுதிக்கு வெளியில் அமைந்துள்ளதால் சாலை அமைக்கும் திட்டம் வனத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**75—**

**சூரிய மின்வேலி**

**வினா எண் 11502—திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, களியல் வருவாய் கிராமம் மலையோரப் பகுதிகளில் வன விலங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த சூரிய மின்வேலி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2007 ஏப்ரல் 25

விடை—

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விளவங்கோடு தாலுகா, களியல் வருவாய் கிராமத்தில், மலையோரக் கிராமங்களை, வன உயிரினங்களின் தொல்லையிலிருந்து பாதுகாக்க 10 கி.மீ. தூரத்திற்கு ரூ. 16.00 இலட்சம் செலவில் மின்வேலி அமைக்க கன்னியாகுமரி வன உயிரின சரணாலயத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**76—**

## நிவாரணத் தொகை

**வினா எண் 11647—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியில் காட்டு யானைகளால் நாசமான விவசாயிகளின் பயிர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காட்டு யானை மிதித்து நாசமான பயிர்களுக்கு நிவாரணம் வழங்க சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமிருந்து நிவாரணம் கோரி மனுக்கள் வரப்பெற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து சேதாரத்திற்கு ஏற்றவாறு உயர்ந்தபட்சமாக ரூ. 15,000/- வரை முன்னுரிமையின் அடிப்படையில் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

**77—**

## சாலை வசதி

**வினா எண் 11726—திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, வனத் துறை அனுமதி பெற்று கீழ்கோத்தகிரி பகுதி, கூட்டடா எஸ்டேட்டில் இருந்து வாகப்பானைக்குச் சாலை வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஏப்ரல் 25]

விடை—

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, கீழ்கோத்தகிரி பகுதி கூட்டடா எஸ்டேட்டில் இருந்து வாகப்பானைக்குச் சாலை அமைக்க கோரப்பட்டுள்ள பகுதி வாகப்பானை காப்புக் காட்டில் அமைந்துள்ளது. வாகப்பானை காப்புக் காட்டில் கூட்டடா தேயிலைத் தோட்டத்தின் எல்லையிலிருந்து வாகப்பானை மலைவாழ் மக்கள் கிராமத்திற்கு, சுமார் 2 கி.மீ. நீளமுள்ள நடைபாதை உள்ளது. வாகப்பானை கிராமத்தில் சுமார் 150 பேர் மட்டும், மேற்கண்ட பாதையினை உபயோகப்படுத்தி வருகின்றனர். இந்தப் பகுதி 6 வளைவுகள் கொண்ட சரிவான மற்றும் பாறைப் பகுதிகள் அதிகமுள்ள பகுதியாக இருப்பதனால், சாலை அமைப்பது என்பது மிகவும் கடினமான காரியம். இச்சாலை அமைப்பதனால் வன வளம் அழியும் அபாயம் உள்ளதால், சாலை அமைக்க இயலாத நிலை உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

**78—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 11728—திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, கீழ்கோத்தகிரியில் வனத் துறைக்குச் சொந்தமான நடை பயணிகள் தங்கும் விடுதிக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, கீழ்கோத்தகிரியில் உள்ள நடை பயணக் குடிலில் கழிப்பறை, உணவுக் கூடம், சமையலறை, வாகன நிறுத்துமிடம் மற்றும் தண்ணீர், மின் வசதி போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. இந்தக் குடில், தணிக்கைக்குச் செல்லும் வனத் துறை அலுவலர்கள் மற்றும் பொது மக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நடை பயணக் குடிலில் போதுமான அடிப்படை வசதிகள் இருப்பதால், மேற்கொண்டு வசதிகள் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. பராமரிப்புப் பணிகள் தேவைப்படும்போது செய்யப்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2007 ஏப்ரல் 25

**79—**

**ஏல விற்பனை**

**வினா எண் 11767—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்ட வனப் பகுதிகளில் கீழே விழுந்து கிடக்கும் மரங்களை அரசு எடுத்து, வன மண்டிகளில் வைத்து ஏலமிட்டு விற்பனை செய்ய முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி வனக் கோட்டம், அரசு ஆணை எண் 152, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை (வனம் 5) நாள் 16-7-2002-ன்படி வன உயிரின சரணாலயமாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. எனவே, உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட மத்திய அதிகாரம் படைத்த குழுவின் (Central Empowered Committee) வழி நடத்துதல் அறிக்கை எண் 1-25 (EC/2003) மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவு எண் ஐ.ஏ.548, நாள் 14-2-2000/சிவில் ரிட் பெட்டிஷன் எண் 202/95-ன்படி, வன உயிரின சரணாலயமாக அறிவிக்கப்பட்ட வனப் பகுதிகளில் பட்டுப் போன நோய்வாய்ப்பட்ட மரங்கள் எடுத்தல், மூங்கில் வெட்டுதல் போன்ற வனம் சாராப் பணிகள், உச்ச நீதிமன்ற உத்தரவு பெற்ற பின்னரே செயல்படுத்தப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காண் உச்ச நீதிமன்ற ஆணைப்படி கன்னியாகுமரி மாவட்ட வனப் பகுதிகளில் கீழே விழுந்து கிடக்கும் மரங்களைச் சேகரம் செய்து வன மண்டிகளில் வைத்து ஏலமிட்டு விற்க தற்போது வாய்ப்பில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

**80—**

**சாலை வசதி**

**வினா எண் 11814—திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் தொகுதி, தாளவாடி ஒன்றியப் பகுதிக்கு வாகனங்கள் செல்வதற்கு ஆசனூரிலிருந்து இக்கலூர் வழியாகச் செல்லும் வனத் துறைச் சாலையைப் போக்குவரத்துக்குப் பயன்படும் வகையில் மாற்றித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?



2007 ஏப்ரல் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

சத்தியமங்கலம் வனக் கோட்டத்தில் அமைந்துள்ள அரசனூர்-இக்கலூர் வனச் சாலை 15 கி.மீ. நீளம் கொண்ட வனச் சாலையாகும். இச்சாலை தளமலை காப்புக் காட்டில் அமைந்துள்ளது. இச்சாலையை வாகனங்கள் செல்வதற்குப் பயன்படுத்தும் வகையில் மாற்றம் செய்தால், பல ஜாதி மரங்கள் மற்றும் அரிய வகை உயிரினங்கள் ஆகியவற்றிற்கு அழிவுகள் ஏற்பட வழி வகுக்கும். மேலும் ஆசனூரிலிருந்து தாளவாடி செல்ல நெடுஞ்சாலைத் துறை சாலை ஒன்று நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருவதால், வனச் சாலையினைப் போக்குவரத்திற்குப் பயன்படும் வகையில் மாற்றும் அவசியம் எழவில்லை.

**81—**

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 12952—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி சரகம் மலைப் பகுதியில் தளிஞ்சி, மஞ்சப்பட்டி செல்லும் சாலையின் வனப் பகுதியில் ஒரு பாலம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி சரகம் மலைப் பகுதியில் தளிஞ்சி, மஞ்சப்பட்டி செல்லும் சாலையில் வனப் பகுதியில் பாலம் கட்டுவதால் வனங்கள் அழிக்கப்படுவதுடன், அரிய வகை வன உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்படும். மேலும், இந்தப் பகுதிகளுக்குச் செல்லும் மலை மக்களுக்கு மாற்று வழியிருப்பதால் இந்த சாலையில், வனப் பகுதியில், பாலம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2007 ஏப்ரல் 25

**82—**

## பயிர்ப் பாதுகாப்பு

**வினா எண் 14147—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஊராட்சி ஒன்றியம், ஒதியத்தூர், தின்னலூர், கணக்கன்குப்பம், மழவந்தாங்கல் உள்ளிட்ட பகுதிகளில் காட்டுப் பன்றிகள் பயிர்களை நாசம் செய்வதைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஊராட்சி ஒன்றியம், ஒதியத்தூர், தின்னலூர், கணக்கன்குப்பம், மழவந்தாங்கல் உள்ளிட்ட பகுதிகளில் காட்டுப் பன்றிகள் பயிர்களை நாசம் செய்வதைக் கட்டுப்படுத்த அரசு முன்வரும். பயிர்களைக் காட்டுப் பன்றிகள் நாசம் செய்வதைத் தடுப்பதற்குக் கீழ்க்கண்டவாறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:—

*1.* விழுப்புரம் கோட்டத்தின் களப் பணியாளர்களால் காட்டு விலங்குகளை வெடிச்சத்தம் எழுப்பி, காட்டிற்குத் திரும்ப அனுப்புவது தொடர்பாகப் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*2.* பொது மக்களிடமிருந்து, காட்டு விலங்குகள் தொந்தரவு தொடர்பாகப் புகார் ஏதும் வரப்பெற்றால், களப் பணியாளர்கள், சம்பந்தப்பட்ட இடத்திற்கு உடனடியாகச் சென்று காட்டுப் பன்றிகள் போன்றவற்றைக் காட்டிற்குள் விரட்டியடிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

*3.* வன விலங்குகள் காட்டை விட்டு வெளியே வந்து தொந்தரவு கொடுத்தால், அவற்றைக் காட்டிற்குள் திரும்ப அனுப்பும் பணிகளுக்கு *2006-2007* ஆம் ஆண்டில் பகுதி *2* திட்டத்தின்கீழ் விழுப்புரம் மண்டலத்திற்கு ரூ.*40* ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*4.* காட்டுப் பன்றிகளால் பயிர்ச் சேதாரம் ஏற்பட்டால், இது தொடர்பாக விவசாயிகளிடமிருந்து நிவாரணம் கோரி விண்ணப்பம்



2007 ஏப்ரல் 25]

ஏதும் பெறப்படுமானால் விதிமுறைகளின்படி பரிசீலித்து நிவாரணத் தொகை முன்னுரிமையின் அடிப்படையில் வழங்குமாறு வனப் பாதுகாவலர்/மாவட்ட வன அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**83—**

## சூரிய மின்வேலி

**வினா எண் 14174—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை ஒட்டியிருக்கும் விவசாய நிலங்களில் காட்டு விலங்குகள் புகுந்து அழிப்பதைத் தடுக்க, சூரிய மின்வேலி அமைத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை ஒட்டியிருக்கும் விவசாய நிலங்களில் காட்டு விலங்குகள் புகுந்து அழிப்பதைத் தடுக்க சூரிய மின்வேலி அமைத்திட அரசு பரிசீலிக்கும்.

*2.* மேற்காண் பகுதி, கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலியை ஒட்டி வருவதால் கன்னியாகுமரி மாவட்டத்தின் வன விலங்குகள் ஊடுருவும் பகுதிகளில் (Vulnerable area) சூரிய மின்வேலி அமைத்திட *10* கி.மீ. தூரத்திற்கு ரூ.*16.40* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*3.* மேலும், இப்பகுதியில் சூரிய மின்வேலி அமைத்திட மேற்காண் பகுதியை ஆய்வு செய்து, அடுத்த நிதியாண்டில் சூரிய மின்வேலி அமைத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**84—**

## யானைகள் முகாம்

**வினா எண் 16084—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில், சோலையாறு பகுதியில் வளர்ப்பு யானைகள் நிரந்தர முகாம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில், சோலையாறு பகுதியில் வளர்ப்பு யானைகள் நிரந்தர முகாம் ஏற்படுத்துவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**85—**

## பள்ளிப் பாதுகாப்பு

**வினா எண் 17342—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, முடிஸ் மேல்நிலைப்பள்ளிக்கு யானைகள் வராமல் தடுக்க, பள்ளியைச் சுற்றிலும் தடுப்புச் சுவர் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பள்ளிக்கு யானைகள் வராமல் தடுக்க வனக் காவலர்களைக் கொண்டும், கும்கி யானைகளைக் கொண்டும், பட்டாசுகளை வெடித்தும், காட்டு யானைகள் காட்டுக்குள் விரட்டியடிக்கப்படுகின்றன. பள்ளிப் பாதுகாப்பிற்குப் பள்ளி நிருவாகமும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**86—**

## இழப்பீட்டுத் தொகை

**வினா எண் 17350—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, தோனிமுடியிலுள்ள கடையை யானைகள் சேதப்படுத்திவிட்டதால், கடைகளுக்கு இழப்பீடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம், அரசு ஆவன செய்யும்.

(ஆ) இழப்பீட்டுத் தொகை வழங்கக் கோரி மனு அளிக்கப்படுமாயின், மனுவில் குறிப்பிட்டுள்ள பகுதியை ஆய்வு செய்து சேதாரத்திற்கு ஏற்றவாறு தற்போது நடைமுறையில் உள்ள அரசாணையின் அடிப்படையில் இழப்பீட்டுத் தொகை முன்னுரிமையின் அடிப்படையில் வழங்கப்படும்.

**87—**

## பாலம் கட்டுதல்

**வினா எண் 13503—திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பொம்மிடியிலிருந்து கோட்டமேடு-செத்தப்பாளையம் வழியாக கே.என். புதூர் செல்லும் சாலையில் வேப்பாடி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

மொரப்பூர் தொகுதி, பொம்மிடியிலிருந்து கோட்டமேடு-செத்தப்பாளையம் வழியாக கே.என். புதூர் செல்லும் சாலையில் வேப்பாடி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**88—**

## அங்கன்வாடி மையம்

**வினா எண் 5454—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, பாம்பாடி ஊராட்சி, அண்ணாநகர் பகுதிக்கு ஊட்டச் சத்து மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஏப்ரல் 25

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, பாம்பாடி ஊராட்சியில், பாம்பாடி-1 மையம் 1982 முதல் மார்ச் 2004 வரை 2,465 மக்கள் தொகை எண்ணிக்கையுடன் செயல்பட்டு வந்தது. தற்பொழுது பாம்பாடி ஊராட்சி, அண்ணாநகர் பகுதியில் 1,367 மக்கள் தொகையுடன் பாம்பாடி-2 அங்கன்வாடி மையம் 18-3-2004 முதல் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

(ஆ) எழவில்லை.

**89—**

## அங்கன்வாடி மையம்

**வினா எண் 6860—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், எட்டிக்குட்டப்பட்டி ஊராட்சி, மாட்டுக்காரனூர் பகுதியில் பால்வாடி பள்ளி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், எட்டிக்குட்டப்பட்டி ஊராட்சி, மாட்டுக்காரனூரில் 18-3-2004 முதல் அங்கன்வாடி மையம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மையத்தின்கீழ் மக்கள் தொகை 647 கொண்ட மாட்டுக்காரனூர் மற்றும் மக்கள் தொகை 428 கொண்ட இந்திரா நகர் ஆகிய இரண்டு ஊர்களும் தற்போது பயனடைந்து வருகின்றன.

(ஆ) எழவில்லை.

**90—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 8595—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 25]

திருநெல்வேலி மாவட்ட சமூக நலத் துறை அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

ஆம். திருநெல்வேலி மாவட்ட சமூக நலத் துறை அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**91—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 11413—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, மானியதஅள்ளி ஊராட்சி, ஜருகு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஜருகு கிராமத்தில் புதியதாகக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதுமில்லை. நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று கால்நடை மருந்தகங்களும், மூன்று கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், ஜருகு கிராமத்திற்கு அருகில் பாளையம்புதூர் கால்நடை கிளை நிலையம் 7 கி.மீ. தொலைவில் செயல்பட்டு வருவதாலும், புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

[2007 ஏப்ரல் 25

92—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 11414—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கம்பம்பட்டி ஊராட்சி, சோளியானூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சோளியனூர் கிராமத்தில் புதியதாகக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதுமில்லை. நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று கால்நடை மருந்தகங்களும், மூன்று கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. வாரம் இருமுறை அங்கு சிகிச்சைப் பணிகள் பாளையம்புதூர் கிளை நிலையக் கால்நடை ஆய்வாளரால் மேற்கொள்ளப்படுகின்றன.

93—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 11611—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, ஆனேக்கொல்லு ஊராட்சி, தொட்டபேளூர் கிராமம், இரத்தினகிரி ஊராட்சி, தடிக்கல் கிராமம் மற்றும் அனுமந்தாபுரம் ஊராட்சி, உனிசெட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஏப்ரல் 25]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு கால்நடை மருந்தகங்களும், நான்கு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. அரசாணை எண் 172, கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 18-9-2006-ன்படி தொட்டபேளூர் கிராமத்தில் கால்நடைகளின் கிளை நிலையம் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தடிக்கல் மற்றும் உனிசெட்டி கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால், அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

94—

## கால்நடை மருந்தகம்

**வினா எண் 11669—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, ஓரத்தூரில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி கோட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், ஓரத்தூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க, தற்போது அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஓரத்தூர் கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு, பைங்காநாடு கால்நடை மருந்தகம் மற்றும் வட்டார், சோழபாண்டி மற்றும் துளசேந்திரபுரம் கால்நடை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுகின்றது.

[2007 ஏப்ரல் 25

**95—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 11746—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, தாமோதரஹள்ளி ஊராட்சி, சாதிநாயக்கன்பட்டி, டிட்பள்ளி ஊராட்சி, பாளையம் கிராமம், பண்ணந்தூர் ஊராட்சி, பண்ணந்தூர் கிராமம் ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாதிநாயக்கன்பட்டி கிராமத்திற்கு அருகில் அரசம்பட்டி கால்நடை மருந்தகம் 3 கி.மீ. தொலைவிலும், நாகரசம்பட்டி கால்நடை மருந்தகம் 5 கி.மீ. தொலைவிலும், காரிமங்கலம் கால்நடை மருந்தகம் 7 கி.மீ. தொலைவிலும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. பாளையம் கிராமத்திற்கு அருகில் காவேரிப்பட்டினம் கால்நடை மருத்துவமனை 0.1 கி.மீ. தொலைவில் செயல்பட்டு வருகிறது. மேற்படி கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. பண்ணந்தூர் கிராமத்திற்கு அருகில் அரசம்பட்டி கால்நடை மருந்தகம் 2 கி.மீ. தொலைவிலும் நாகரசம்பட்டி, காரிமங்கலம் ஆகிய கால்நடை மருந்தகங்கள் 8 கி.மீ. தொலைவிலும் செயல்பட்டு வருகின்றன. அங்கு கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. எனவே, மேற்படி கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சாதிநாயக்கன்பட்டி, பாளையம், பண்ணந்தூர் ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவனை அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.



2007 ஏப்ரல் 25]

**96—**

## காங்கேயம் காளை இன விருத்தி

**வினா எண் 16156—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் காங்கேயம் காளைகளை இன விருத்தி செய்து பாதுகாக்கவும், அவற்றை அதிகமாக வளர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் உள்ள காங்கேயம் இன கால்நடைகளிலிருந்து தரமான உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு, வால்பாறை உட்பட அனைத்து மாவட்டங்களிலும், காங்கேயம் இன உறைவிந்து குச்சிகள் விநியோகம் செய்யப்பட்டு, செயற்கை முறை கருவூட்டல்மூலம் காங்கேயம் இன கால்நடை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதன்மூலம் உள்நாட்டு இனங்களில் ஒன்றான காங்கேயம் இன கால்நடைகளின் உற்பத்தியைப் பெருக்கவும் அவற்றினை அதிகமாக வளர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

**97—**

## கால்நடை மருத்துவனை

**வினா எண் 16169—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரில் உள்ள கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகரில் செயல்பட்டு வரும் கால்நடை பெரு மருத்துவமனை ஏற்கெனவே 1994 ஆம் வருடம் முதல் கால்நடை பன்முக மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**98—**

## மாற்றுத் தொழில்

**வினா எண் 8599—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மனிதக் கழிவுகளை அகற்றும் ஆதி திராவிடர் தொழிலாளர்களுக்கு மாற்றுத் தொழில் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

மனிதக் கழிவுகளை அகற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் மறுவாழ்வளிக்கும் வகையில் நடப்பு நிதியாண்டில் (2006-2007) ரூ. 58.45 கோடி செலவினத்தில் திட்டங்களைச் செயல்படுத்த அரசாணை (நிலை) எண் 100, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 31-08-2006-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**99—**

## இறால் வளர்ப்பு

**வினா எண் 4598—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் மீன் வள இருப்பை அதிகப்படுத்துதல் (Sea Ranching) என்னும் திட்டத்தின்கீழ் இறால் குஞ்சுகள் வளர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கடற் பகுதியில் மீன் வளத்தினைப் பாதுகாப்பு செய்திடும் பொருட்டு, வணிக முக்கியத்துவம் வாய்ந்த இறால் குஞ்சுகளைக் கடலில் இருப்பு செய்திடும் திட்டம், தமிழ்நாடு அரசு ஆணை எண் 27, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் (மீன் 4) துறை, நாள் 17-3-2006-ன்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழகக் கடற்பகுதிகளில் இருப்பு செய்திடும் கடல் மீன் வளப் பெருக்கத்திற்குரிய திட்டமாகும். ஆனால், இத்திட்டத்தினை வால்பாறை போன்ற உள்நாட்டு மீன் வளப் பகுதிகளில் செயல்படுத்திட வாய்ப்பில்லை.

**100—**

## மீன் விற்பனை நிலையங்கள்

**வினா எண் 4848—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி அணை மற்றும் திருமூர்த்தி அணையில் மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் விற்பனை நிலையங்கள் அதிகரிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி அணை மற்றும் திருமூர்த்தி அணையில் உள்ளூர் மீன் விற்பனை நிலையங்கள் பொதுமக்களுக்கு மீன்கள் விநியோகம் செய்து வருகின்றன. பொது மக்களுக்குப் போதுமான விநியோகம் போக, மீதம் உள்ள மீன்கள் மட்டும் நகரங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. எனவே, அதிகப்படியான அங்காடிகள் அமைக்க வாய்ப்பில்லை.

[2007 ஏப்ரல் 25

## ஆறாவது பட்டியல்

**1—**

### தெருவிளக்கு வசதி

**வினா எண் 5663—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி நகர், கே.எஸ்.எம். காலனியில் மின் கம்பம் அமைத்து தெரு விளக்கு வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி நகர், கே.எஸ்.எம். காலனியில் ஏற்கெனவே 5 தெரு மின் விளக்குகள் அமைக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன. மேலும், கே.எஸ்.எம். காலனியில், தெரு மின் விளக்குகள் வேண்டி விண்ணப்பம் எதுவும் இதுவரை பெறப்படவில்லை. ஊராட்சியிடமிருந்து தெரு விளக்கு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால், வாரிய விதிமுறைகளின்படி தெரு விளக்கு அமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**2—**

### துணை மின் நிலையம் மாற்றியமைத்தல்

**வினா எண் 6326—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா, பள்ளங்கோயில் துணை மின் நிலையம் 66 KW-லிருந்து 110 KW ஆக மாற்றம் செய்யப்பட்டுவரும் வேலை எப்பொழுது முடிவடையும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா, பள்ளங்கோயில் துணை மின் நிலையம் 66 கிலோ வோல்ட்டிலிருந்து 110 கி.வோ.



2007 ஏப்ரல் 25]

துணை மின் நிலையமாக மாற்றியமைக்கும் பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன. மேற்கண்ட துணை மின் நிலையமானது விரைவில் இயக்கி வைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**3—**

### மின்மாற்றி

**வினா எண் 6879—திரு. செ. சின்னசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி தொகுதி, பன்னாங்கொம்பு பகுதியில் 110 கி.வோ. மின்மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

மருங்காபுரி தொகுதி, பன்னாங்கொம்பு பகுதிக்குத் தற்பொழுது 33/11 கி.வோ. பன்னாங்கொம்பு துணை மின் நிலையத்திலிருந்து, 11 கி.வோ. காவல்காரன்பட்டி மின்னூட்டிமூலமாகவும், 11 கி.வோ. அம்மைநாயக்கன்பட்டி மின்னூட்டிமூலமாகவும் மின்சாரம் வழங்கப்படுகிறது. தற்பொழுது புத்தாநத்தம் கிராமத்தில் ஒரு புதிய 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க வாரிய அனுமதி பெறப்பட்டுள்ளது. இம்மின் நிலையத்திற்கு பன்னாங்கொம்பு துணை மின் நிலையத்தின் 11 கி.வோ. காவல்காரன்பட்டி மின்னூட்டியில் உள்ள மொத்த மின் பளுவும் மாற்றப்படவுள்ளது. எனவே, பன்னாங்கொம்பு பகுதியில் புதிய 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

**4—**

### மின் கம்பம்

**வினா எண் 7468—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டபாளையம் கிராமம், சின்னதாண்டாம்பாளையத்தில் கிணற்றுக்கு அருகில் உள்ள மின் கம்பத்தை மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

227660

[2007 ஏப்ரல் 25

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி ஓட்டப்பாளையம் கிராமம், சின்னதாண்டாம்பாளையத்தில் கிணற்றுக்கு அருகில் உள்ள மின் கம்பத்தை மாற்றி அமைக்க கிராமப் பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து 12-12-2006 அன்று விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. இம்மாத இறுதிக்குள் மேற்கண்ட மின் கம்பம் மாற்றி அமைக்கப்படும்.

5—

## துணை மின் நிலையம்

**வினா எண் 11377—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, பூலாங்கிணர், அந்தியூர் மற்றும் உடுமலைப்பேட்டை வட்டாரத்தில் மின்சாரப் பாதைகள் மற்றும் மின்சார துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை தொகுதியில், உடுமலை பகுதியில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையமும், பூலாங்கிணர் பகுதியில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையமும், மற்றும் அந்தியூர் பகுதியில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையமும் ஏற்கெனவே நிறுவப்பட்டு, மேற்படி மூன்று துணை மின் நிலையங்களிலிருந்தும் உடுமலை தொகுதிக்குப் பற்றாக்குறை இல்லாத சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, உடுமலையிலிருந்து 3 கி.மீ. தொலைவில், ஏற்கெனவே உடுமலை தொகுதிக்குட்பட்ட பாலப்பம்பட்டியில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையமும் நிறுவப்பட்டு, சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோன்று உடுமலை தொகுதிக்குட்பட்ட எலையமுத்தூர் என்ற இடத்தில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அனுமதி பெறப்பட்டு, நில ஆர்ஜிதம் செய்ய



2007 ஏப்ரல் 25]

பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதேபோன்று உடுமலை தொகுதிக்குட்பட்ட தேவனூர்புதூர் பகுதியில் (உடுமலையிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில்) சுமார் ஆறு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, எலையமுத்தூர் மற்றும் தேவனூர்புதூர் ஆகிய இடங்களில் இரண்டு துணை மின் நிலையங்கள் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

6—

## மின்மாற்றி

**வினா எண் 12204—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழச்சொரிக்குளம் கிராமத்திற்கு மின்மாற்றி அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழச்சொரிக்குளம் கிராமத்தில் தற்போது சுமார் 63 வீடுகள் உள்ளன. மேற்படி கிராமத்திற்கு சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ள மேல்சொரிக்குளம் கிராமத்தில் உள்ள மின்மாற்றியில் இருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு அருகில் உள்ள கொத்தங்குளம் மின்மாற்றியில் இருந்து மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இந்த மின்சாரமே போதுமானதாகும். கீழச்சொரிக்குளம் கிராமத்தில் 10-1-2007 அன்று அளவீடு செய்ததில் போதுமான மின்னழுத்தம் உள்ளது. எனவே, கீழச்சொரிக்குளம் கிராமத்திற்கு தற்சமயம் மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

7—

## துணை மின் நிலையம்

**வினா எண் 12330—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 25

*(அ)* தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது இல்லை.

*(ஆ)* பெருகி வரும் மின்பளுவை கருத்திற்கொண்டு, 11-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சிட்லபாக்கம் பேரூராட்சியில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

**8—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 8786—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், பொம்மியம்பட்டி, கோம்பை பகுதி மற்றும் நைனாக்காடு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், பொம்மியம்பட்டி ஊராட்சி, பொம்மியம்பட்டி கோம்பை குடியிருப்பு மற்றும் தீவட்டிப்பட்டி ஊராட்சி, நைனாக்காடு குடியிருப்புகளில் முறையே 10,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு காடையாம்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 174 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஊரகக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி கூடுதலாக இக்குடியிருப்புகளுக்கு மேல்நிலைத் தொட்டிகள் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.



2007 ஏப்ரல் 25]

**9—**

## குடிநீர் வசதி

**வினா எண் 8788—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி ஊராட்சி, குப்பிநாயக்கனூர் காட்டுவளவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி ஊராட்சி, குப்பிநாயக்கனூர் பிரதான குடியிருப்பின் ஒரு பகுதியே குப்பிநாயக்கனூர் காட்டுவளவு ஆகும். குப்பிநாயக்கனூர் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து காடையாம்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 174 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், பகிர்மானக் குழாய் வழியாக குப்பிநாயக்கனூர் காட்டுவளவு பகுதிக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஊரகக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி இப்பகுதிக் குடியிருப்புக்குத் தனியாக ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**10—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 8791—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 25

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், தம்பிப்பாடி ஊராட்சி, குதிரைகுத்தி பள்ளம் தேசிய நெடுஞ்சாலை மேற்கு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், தம்பிப்பாடி ஊராட்சியிலுள்ள, குதிரை குத்தி பள்ளம் குடியிருப்பில், ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 1,50,000 மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுகள் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து தனி மின்விசைத் திட்டங்களின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஊரகக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி, தேசிய நெடுஞ்சாலை மேற்குப் பகுதியில் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**11—**

### தேங்காய் ஏற்றுமதி

**வினா எண் 5420—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் தேங்காயை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில், தேங்காய், வெளி மாநிலங்களில் விற்பனை செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



2007 ஏப்ரல் 25]

**12—**

### சிற்றுந்து வசதி

**வினா எண் 5567—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார் கோயில் முதல் திருநன்றியூர் வரை சிற்றுந்து மீண்டும் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பனார் கோயில் முதல் திருநன்றியூர் வழித்தடத்தில் ஏற்கெனவே இயக்கப்பட்ட சிற்றுந்து எண் (TN 51 Y 7989) 27-9-2006 முதல் இயந்திரப் பழுது காரணமாக நிறுத்தப்பட்டது. தற்போது 2-2-2007 முதல் இச்சிற்றுந்து இவ்வழித் தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது.

**13—**

### நிழற்குடை

**வினா எண் 6998—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, வானவராயநல்லூர் கிராமத்தில் பேருந்து நிழற்குடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்துக் கழகத்தால் நிழற்குடை அமைப்பதற்கான வழிவகை இல்லை.

**14—**

### பணிமனை

**வினா எண் 9755—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 25

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, போச்சம்பள்ளி பேருந்து நிலையத்தில் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போச்சம்பள்ளியிலிருந்து 30 கி.மீ. தூரமுள்ள ஊத்தங்கரை, 31 கி.மீ. தூரமுள்ள திருப்பத்தூர், 31 கி.மீ. தூரமுள்ள கிருஷ்ணகிரி மற்றும் 34 கி.மீ. தூரமுள்ள தருமபுரி ஆகிய நகரங்களில் பணிமனைகள் ஏற்கெனவே அருகருகே அமைக்கப்பட்டுள்ளன. அரசாணையின்படி இரு பணிமனைகளுக்கு இடையே உள்ள தூரம் 40 கி.மீ.-க்குக் குறையாமல் இருக்க வேண்டும். எனவே, போச்சம்பள்ளியில் அரசுப் பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**15—**

## இலவச பஸ் பாஸ்

**வினா எண் 9858—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் பேருந்து செல்லாத கிராமங்களில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு அங்கு செல்லும் தனியார் மற்றும் மினிப் பேருந்துகளில் இலவச பஸ் பாஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேருந்துகளில் மாணவர்களுக்கு இலவச அனுமதிச் சீட்டு வழங்கும் திட்டம் தமிழ்நாடு முழுவதும் தற்போது அரசுப் பேருந்துகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுபோன்று அரசுப் பேருந்துகள் செல்லாத கிராமங்களில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு, அங்கு செல்லும் தனியார் சிற்றுந்துகளில் இலவச பஸ் பாஸ் வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2007 ஏப்ரல் 25]

**16—**

## முன்பதிவு அலுவலகம்

**வினா எண் 10250—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, மறைமலை நகரில் நீண்ட தூரப் பேருந்துகளுக்கு முன்பதிவு அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட்-க்குச் சொந்தமான முன்பதிவு அலுவலகம் ஒன்று தாம்பரத்தில் செயல்பட்டு வருகின்றது. மேற்படி முன்பதிவு வசதியை அருகிலுள்ள மறைமலை நகர் உள்ளிட்ட பயணிகள் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. இந்நிலையில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக முன்பதிவு அலுவலகம் மறைமலைநகரில் அமைத்திட திட்டம் வகுக்கப்படவில்லை.

**17—**

## கான்கிரீட் தளம்

**வினா எண் 12577—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைக்குக் கான்கிரீட் தளம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைக்குக் கான்கிரீட் தளம் அமைக்க அடுத்த நிதி ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

[2007 ஏப்ரல் 25

**18—**

### பணிமனை

**வினா எண் 13069—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்திவேலூரில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை ஒன்று துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி வேலூரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை துவக்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

**19—**

### பேருந்து நிறுத்தம்

**வினா எண் 14014—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் பேரூராட்சி பகுதி, தருமபுரி பிரதான சாலை, எல்.ஐ.சி. அலுவலகம் அருகில் பேருந்து நிறுத்தம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஓமலூர்—தருமபுரி பிரதான சாலையில், தற்போதுள்ள பேருந்து நிறுத்தமான நாகராஜ் மருத்துவமனை பேருந்து நிறுத்தத்திலிருந்து 250 மீட்டர் தொலைவில் எல்.ஐ.சி. அலுவலகம் உள்ளது. இந்த நிறுத்தத்தில் அனைத்து நகரப் பேருந்துகளும் வேண்டுகோள் நிறுத்தமாக நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கின்றன.



2007 ஏப்ரல் 25]

**20—**

### மாணவர் விடுதி

**வினா எண் 3273—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, சோலையாறு அணைப் பகுதி மற்றும் ஆழியாறு நகரிலும் மாணவர் விடுதிகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**21—**

### மாணவ, மாணவியர் விடுதி

**வினா எண் 5640—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, வகுரணி, பூச்சிப்பட்டி பள்ளிகளுக்கு மாணவர் விடுதியும் வெள்ளமலைப்பட்டிக்கு மாணவியர் விடுதியும் அமைத்துத்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு முழுவதும் 50 புதிய விடுதிகள் துவக்க ஆணை வெளியிடப்பட்டுள்ள நிலையில், மேலும், புதிதாக வகுரணி, பூச்சிப்பட்டி வெள்ளமலைப்பட்டி ஆகிய இடங்களில் விடுதிகள் துவக்குவது தற்போது சாத்தியமில்லை.

[2007 ஏப்ரல் 25

**22—**

### மாணவர் விடுதி

**வினா எண் 7752—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒலகடம் கிராமம், ஒலகடம் மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்கள் தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* வினா எழாது.

**23—**

### மாணவியர் விடுதி

**வினா எண் 8541—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, மேலாரணி, நார்த்தாம்பூண்டி, மங்கலம், ஆதமங்கலம், மேல்சோழங்குப்பம், தேவனாம்பட்டு, கலசப்பாக்கம் ஆகிய பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலம் மாணவியர் விடுதிகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருவண்ணாமலை மாவட்டத்தில் மங்கலம் என்னுமிடத்தில் ஏற்கெனவே பள்ளி மாணவியர் விடுதி செயல்பட்டு



2007 ஏப்ரல் 25]

வருகிறது. தற்போது தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் புதிதாக 50 விடுதிகள் இத்துறையின்கீழ் துவக்க அரசாணை (நிலை) எண் 79, நாள்: 1-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதில் மேலாரணி, நார்த்தாம்பூண்டி, ஆதமங்கலம், மேல்சோழங்குப்பம், தேவனாம்பட்டு, கலசப்பாக்கம் ஆகிய ஊர்கள் இடம்பெறவில்லை எனினும், தற்போது புதிதாக விடுதிகள் திறக்கும் கருத்துரு ஏதும் ஆய்வில் இல்லை.

**24—**

### மாணவர் விடுதி

**வினா எண் 9679—திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி புதிதாக அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

நடப்பு ஆண்டில் 50 புதிய விடுதிகள் திறக்க ஆணை வெளியிடப்பட்டுள்ள நிலையில் கும்மிடிப்பூண்டியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி புதிதாகத் திறப்பது சாத்தியமில்லை.

**25—**

### மாணவியர் விடுதி

**வினா எண் 9736—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, தொட்டம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியிலும் மற்றும் மொரப்பூர் அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தற்போது தமிழகத்தில் பல இடங்களில் 50 புதிய விடுதிகள் திறக்க ஆணை வெளியிடப்பட்டுள்ள நிலையில், மொரப்பூர் தொகுதியில் மேலும் புதிதாக மாணவியர் விடுதிகள் திறப்பது தற்போது சாத்தியமில்லை.

**26—**

## புதிய கட்டடம்

**வினா எண் 10361—திரு. வை. காவேரி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி மார்ச் 2006-ல் புதிதாகத் திறக்கப்பட்டு, தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் அனைத்து விடுதிகளுக்கும் அரசுக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கப்படும்போது, இவ்விடுதிக்கும் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

**27—**

## மாணவர் விடுதி

**வினா எண் 10393—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், மணலூர்பேட்டை மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**28—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 13404—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, ராஜாஜி தெரு அரசுப் பள்ளி மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

கரூர் தொகுதி, ராஜாஜி தெரு, பள்ளி மாணவர் விடுதி 2006 பிப்ரவரியில் ஆணையிடப்பட்டு, பின்னர் துவக்கப்பட்ட புதிய விடுதியாகும். அது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் அனைத்து விடுதிகளுக்கும் அரசுக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கப்படும்போது, இவ்விடுதிக்கும் கட்டடம் கட்டுவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**29—**

## அரசுக் கட்டடம்

**வினா எண் 13430—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 25

கரூர் தொகுதி, கரூர், அரசுக் கலைக் கல்லூரி மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

கரூர் மாவட்டம், கரூர் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக்கு அரசுக் கட்டடம் கட்ட, ஏற்கெனவே அரசாணை (நிலை) எண் 49, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள்: 10-9-2004-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**30—**

## சென்ட் தொழிற்சாலை

**வினா எண் 5865—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் மல்லிகைப் பூ அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுவதால் சென்ட் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதியிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் விளையும் மல்லிகைப் பூக்கள் அதிக அளவில் பக்கத்து மாநிலங்களுக்கும், மாவட்டங்களுக்கும், விற்பனை செய்யப்படுவதால், சென்ட் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும், தொழில் முனைவோர் காவேரிப்பட்டினம் தொகுதியில் மல்லிகைப் பூ கொண்டு சென்ட் தொழிற்சாலை துவக்க முன்வரும் பட்சத்தில் மாவட்ட தொழில் மையம், கிருஷ்ணகிரி மூலம், பொருத்தமான திட்டத்தின்மூலம் தொழிற்சாலை துவக்க அனைத்து உதவிகளும், அதாவது திட்ட அறிக்கை வகுத்துத் தருதல், நிதி உதவி பெற வங்கிகளுக்குப் பரிந்துரை செய்தல், ஒருமுனைத்தீர்ப்புக்குழுமூலம் அனுமதி பெற்றுத் தருதல், தேசிய தோட்டக்கலை வாரிய மானியத்திற்காகப் பரிந்துரை செய்தல் போன்ற உதவிகள் செய்து தரப்படும்.



2007 ஏப்ரல் 25]

**31—**

## மாம்பழக் கூழ் தொழிற்சாலை

**வினா எண் 5866—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் மாங்கனி விளைச்சல் அதிகமுள்ளதால் மாம்பழக் கூழ் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் நிறுவனத்தினை அரசு அமைக்கும் உத்தேசம் இல்லை.

காவேரிப்பட்டினம் தொகுதியில் மாம்பழ விளைச்சல் அதிகமாகயிருப்பினும், பெரும்பாலான பழங்கள் அண்டை மாவட்டங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுவிடுகின்றன. இத்தொகுதிக்குட்பட்ட பகுதியில் இருபத்து ஐந்துக்கும் மேற்பட்ட மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகள் தனியார்மூலம் ஆரம்பிக்கப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. எனினும், மேலும் தனியார் முன்வந்தால் அவர்கள் மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்க தேவையான வசதிகளை மாவட்டத் தொழில் மையம் செய்து தரும்.

(ஆ) வினா எழவில்லை.

**32—**

## சிறு தொழில் பூங்கா

**வினா எண் 10536—திரு. கே.எஸ். இளவழகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 25

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியில் சிறு தொழில் பூங்கா அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியில் தற்போது புதியதாய் சிறு தொழிற் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழிற் திட்டங்களுடனும் தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் கணிசமான அளவில் முன்வந்தால், புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து, கருத்தாய்வு செய்து, மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

2. ஏற்கெனவே வேலூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்பேட்டைகளின் விவரம் பின்வருமாறு:—

| | தொழிற்கூடங்கள் | | மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள் | |
|---|---|---|---|---|
| | கட்டப்பட்டவை | ஒதுக்கீடு செய்யப் பட்டவை | அமைக்கப்பட்டவை | ஒதுக்கீடு செய்யப் பட்டவை |
| தொழிற்பேட்டை, காட்பாடி | 42 | 42 | 9 | 9 |
| தொழிற்பேட்டை, அரக்கோணம் | 13 | 11 | 11 | 3 |
| தொழிற்பேட்டை, ராணிப்பேட்டை | 162 | 162 | 71 | 71 |
| தொழிற்பேட்டை, முகுந்தராயபுரம் | 30 | 30 | 38 | 37 |
| தொழிற்பேட்டை, வன்னிவேடு | 10 | 10 | 12 | 12 |



2007 ஏப்ரல் 25]

**33—**

## சிட்கோ தொழிற்பேட்டை

**வினா எண் 12178—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், சங்கரமலைப்பட்டியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், சங்கரமலைப்பட்டியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2. ஏற்கெனவே கரூர் மாவட்டத்தில் கீழ்க்காணும் இடங்களில் சிட்கோ தொழிற்பேட்டைகள் அமைத்துள்ளன:—

| வ.எண் | தொழிற்பேட்டை அமைந்துள்ள இடம் | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) | உருவாக்கப்பட்ட/ கட்டப்பட்ட | | ஒதுக்கீடு செய்யப் பட்டவை | | காலியாக உள்ளவை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தொழில் மனைகள் | தொழிற் கூடங்கள் | தொழில் மனைகள் | தொழிற் கூடங்கள் | தொழில் மனைகள் | தொழிற் கூடங்கள் |
| 1. | எஸ். வெள்ளாளப் பட்டி | 26.630 | 25 | 16 | 25 | 16 | .. | .. |
| 2. | ஆத்தூர் | 36.292 | 95 | 5 | 93 | 5 | 2 | .. |

3. எனவே, போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும் தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் திருப்பித் தரப்படாத ஒப்புவிப்புத் தொகையுடன் (Commitment Charges) கணிசமான அளவில் முன்வந்தால் புதிதாக தொழிற்பேட்டை அமைப்பது குறித்து மாவட்ட ஆட்சியர், பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் மற்றும் தொழில் முதலீட்டுக் கழகம், கரூர் ஆகியோருடன் கலந்தாலோசித்துப் பரிசீலிக்கப்படும்.

[2007 ஏப்ரல் 25

34—

## மிட்டாய் தயாரிக்கும் தொழில்

**வினா எண் 15060—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் மிட்டாய் தயாரிக்கும் கிராமத் தொழில் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் அரசுமூலமாக மிட்டாய் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் கருத்துரு இல்லை. எனினும், இதனைக் கிராமத் தொழிலாக ஆரம்பிக்க முன்வருவோருக்கு மானியம், நிதி வசதி ஆகியவற்றினை, காதி கிராமத் தொழில் ஆணையம் அல்லது பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம்மூலமாகப் பெற்றுத்தர மாவட்ட தொழில் மையம் உதவும்.

35—

## கோராப்பட்டு

**வினா எண் 18419—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கோராப்பட்டு அதிகமாகத் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கோராப்பட்டு அதிகமாகத் தயாரிப்பதை நோக்கமாகக் கொண்டு புதிதாக 50 காட்டேஜ் பேசின்கள் மத்திய மாநில அரசு மானியத்துடன் துவக்குவதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிதாக ஈரோடு



2007 ஏப்ரல் 25]

மாவட்டத்தில் ஒரு தானியங்கி பட்டு நூற்பு இயந்திரம் மற்றும் புதிய பலமுனைப் பட்டு நூற்பாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 17 நலிவடைந்த பலமுனை நூற்பாலைகளுக்குப் புத்துயிரளித்து மீண்டும் உற்பத்தி துவங்கப்பட்டு உள்ளது.

மேற்காணும் அரசின் நடவடிக்கைகள் காரணமாகத் தமிழ்நாட்டில் கோராப்பட்டு அதிகமாகத் தயாரிக்கப்பட உள்ளது.

36—

## பட்டா

**வினா எண் 9855—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி, ஓமலூர் தொகுதி அரசுப் புறம்போக்கு நிலத்தில் வசிக்கும் குடும்பங்களுக்குத் தடையாணையை இரத்துசெய்து, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில், 2007, சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய, அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

37—

## பட்டா

**வினா எண் 10266—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 25

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஆப்பக்கூடல் கிராமம், சக்தி நகர் குளத்துக்கடை பகுதியில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில், 2007, சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழாது.

**38—**

## பட்டா

**வினா எண் 10229—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒலகடம் பேரூராட்சி, குட்டைமேடு மற்றும் தாண்டாம்பாளையம் பகுதிகளில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு



2007 ஏப்ரல் 25]

மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில், 2007, சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழாது.

**39—**

## பட்டா

**வினா எண் 10233—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஜம்பை கிராமம், அந்தியூர் ரோடு, தளவாய்பேட்டையில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில், 2007, சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழாது.

[2007 ஏப்ரல் 25

**40—**

### பட்டா

**வினா எண் 12336—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி நகராட்சி, எம்.ஜி.ஆர். நகர் பகுதியில், வீடுகட்டி வாழும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில், 2007, சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**41—**

### தரமான கோதுமை

**வினா எண் 16252—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதியிலுள்ள நியாயவிலைக் கடைகள்மூலம் தரமான கோதுமை வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில் எப்போது?



2007 ஏப்ரல் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதியில் உள்ள நியாயவிலைக் கடைகள்மூலம் தரமான கோதுமை பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**42—**

### வீடு விற்பனை

**வினா எண் 3183—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதி, ஆழியாறு நகர் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடு கட்டி விற்பனை செய்ய அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:**

*(அ)* வால்பாறை தொகுதி, ஆழியாறு நகர் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடு கட்டி விற்பனை செய்யும் திட்டம் எதுவும் வாரியத்திடம் தற்போது நிலுவையில் இல்லை.

*(ஆ)* இவ்வினாவிற்கு இடமில்லை.

**43—**

### அடுக்குமாடி வீடுகள்

**வினா எண் 11699—திரு. கோ. அரி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி நகரில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டி, தவணை முறையில் மக்களுக்கு வழங்க அரசு முன்வருமா?

[2007 ஏப்ரல் 25

**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் :**

திருத்தணி நகரில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டி, தவணை முறையில் அங்குள்ள மக்களுக்கு வழங்க போதிய கேட்பு இல்லாததால் இதுகுறித்து திட்டம் ஏதுமில்லை.

**44—**

## அடுக்குமாடிக் கட்டடங்கள்

**வினா எண் 15295—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதி, வால்பாறை மற்றும் ஆழியாறு நகரில் அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டி வாடகைக்கு விடப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் :**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை மற்றும் ஆழியாறு பகுதியில் வீட்டு வசதி வாரியம் சார்பாக அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**45—**

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 1629—திரு. கோ. எதிரொலி மணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, தெள்ளாறு, மழையூர், தேசூர், பொன்னூர், கொம்மனேந்தல், தச்சாம்பாடி, வடபாதிமங்கலம், சேத்துப்பட்டு ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2 மருத்துவர்கள் மட்டும் உள்ளனர். அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?



2007 ஏப்ரல் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

பெரணமல்லூர் தொகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொன்னூர், தச்சாம்பாடி ஆகிய இடங்களில் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், தெள்ளாறு, மழையூர், தேசூர், கொம்மனேந்தல், வடபாதிமங்கலம் மற்றும் சேத்துப்பட்டு ஆகிய இடங்களில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்ப பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**46—**

## மருத்துவர் மற்றும் செவிலியர்

**வினா எண் 4476—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில், அங்கலக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர் மற்றும் கூடுதலாக செவிலியரை நியமிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

வால்பாறை தொகுதியில் அங்கலக்குறிச்சியில் துணை சுகாதார நிலையம் மட்டும் செயல்படுகிறது. துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் அனுமதிக்கப்படுவதில்லை. இத்துணை சுகாதார நிலையத்தில் ஒரு கிராம சுகாதாரச் செவிலியர் பணிபுரிந்து வருகிறார்.

**47—**

## மருத்துவர் மற்றும் செவிலியர் நியமனம்

**வினா எண் 4483—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 25

வால்பாறை தொகுதி, ரொட்டிக்கடை ஆரம்ப சுகாதார துணை நிலையத்திற்கு மருத்துவர் மற்றும் செவிலியரை நியமிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

வால்பாறை தொகுதி, ரொட்டிக்கடை கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் அனுமதிக்கப்படவில்லை. கிராம சுகாதாரச் செவிலியர் பணியில் உள்ளார்.

**48—**

## கூடுதல் மருத்துவர் மற்றும் செவிலியர்

**வினா எண் 4492—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆழியாறு நகர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் மருத்துவர் மற்றும் செவிலியர்களை நியமிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

வால்பாறை தொகுதி, ஆழியாறு நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் மற்றும் செவிலியர் பணியிடங்களில் மருத்துவ அலுவலர்களும் செவிலியர்களும் முழு அளவில் பணியில் உள்ளனர். கூடுதலாக மருத்துவர் மற்றும் செவிலியர்களை நியமனம் செய்யும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**49—**

## செவிலியர் நியமனம்

**வினா எண் 4498–திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 25]

வால்பாறை அரசு மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகளுக்குப் போதுமான செவிலியர்களை நியமிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

வால்பாறை அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட ஐந்து நிரந்தரச் செவிலியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன. காலமுறை ஊதியத்தில் மேலும் ஒரு செவிலியர் நியமனம் செய்யப்பட்டு பணியேற்க உள்ளார். இம்மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட அனைத்துப் பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன.

**50—**

## கூடுதல் மருத்துவர்கள்

**வினா எண் 4526—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதி, டாப்சிலிப் பெத்தநாயக்கனூர் மற்றும் கோட்டூர் பகுதி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கூடுதல் மருத்துவர்கள் நியமிக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதி, டாப்சிலிப் மற்றும் பெத்தநாயக்கனூரில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. கோட்டூர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படவில்லை. டாப்சிலிப் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் எண்ணிக்கை ஒன்று ஆகும். பெத்தநாயக்கனூரில் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் எண்ணிக்கை இரண்டு ஆகும். தற்போது டாப்சிலிப் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் காலியாக உள்ள ஒரு பணியிடத்தை நிரப்ப, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரு மருத்துவ அலுவலர்கள் முழு அளவில் பணியில் உள்ளனர். இங்கு கூடுதலாக மருத்துவ அலுவலர் நியமிக்க தற்போது சாத்தியமில்லை.

[2007 ஏப்ரல் 25

51—

## நிரந்தரப் பணி

**வினா எண் 4811—திரு. ம. குணசேகரன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு சமூகநல மருத்துவமனையில் நிரந்தரப் பணியில் மருத்துவர்களை அரசு நியமனம் செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு சமூகநல மருத்துவமனை, கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு, அதற்கு 3 மருத்துவ அலுவலர்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளனர். அந்த 3 பணியிடங்களில் பணியமர்த்தப்பட்ட ஒப்பந்த மருத்துவ ஆலோசகர்களுக்கு 1-11-2006 ஆம் தேதி முதல் காலமுறை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் பணியினை வரன்முறை செய்ய சிறப்புத் தேர்வு நடத்தும்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

52—

## முழுநேரப் பணி

**வினா எண் 8291—திரு. விடியல் எஸ். சேகர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, வெங்கமேடு காசிபாளையம் மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் முழு நேரமும் பணியாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

காங்கேயம் தொகுதி, வெங்கமேடு காசிபாளையத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இதற்கு



2007 ஏப்ரல் 25]

ஒப்பளிக்கப்பட்ட இரண்டு மருத்துவ அலுவலர் பணியிடங்களில் இரண்டு மருத்துவர்களும் பணியில் உள்ளனர். காலியாகவுள்ள துணை செவிலியர் பணியிடத்தை நிரப்ப, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

53—

## மருத்துவ அலுவலர்

**வினா எண் 9327—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி ஊராட்சி, உதவி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் பெண் மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சியில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் அனுமதிக்கப்படவில்லை.

54—

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 10548—திரு. பெ. கண்ணன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், தெசவிளக்கு ஊராட்சி, இலட்சுமாயூர் டேனிடா மருத்துவமனைக்கு மருத்துவர்கள் நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், தெசவிளக்கு ஊராட்சி மற்றும் இலட்சுமாயூரில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிப்பு செய்வதில்லை. அங்கு கிராம சுகாதாரச் செவிலியர்கள் பணியில் உள்ளனர்.

**55—**

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 10549—திரு. பெ. கண்ணன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பாப்பம்பாடி ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைக்கு மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பாப்பம்பாடி ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிப்பு இல்லை. அங்கு கிராம சுகாதாரச் செவிலியர் பணியில் உள்ளார்.

**56—**

## எக்ஸ்-ரே ஃபிலிம்

**வினா எண் 10936—திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி, அரசு பொது மருத்துவமனையில் எக்ஸ்-ரே ஃபிலிம் தட்டுப்பாடின்றிக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

DGS&D (Rate Contract)-ன்படி, குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தநாரரிடம் இருந்து எக்ஸ்-ரே ஃபிலிம் வாங்கிக் கொள்ள, அரசு மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, குறைந்த விலைப்புள்ளிதாரர்களிடமிருந்து தங்கு தடையின்றி, எக்ஸ்-ரே ஃபிலிம் எல்லா மருத்துவமனைகளிலும் வாங்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி அரசுப் பொது மருத்துவமனையிலும் எக்ஸ்-ரே ஃபிலிம்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கின்றன.

**57—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 11909—திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, சிவகங்கை ஒன்றியம், சித்தனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 91,648. (2001 கணக்கெடுப்பு) இந்த ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில், சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குத் தற்போதுள்ள 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானவையாக உள்ளன. எனவே, சிவகங்கை ஊராட்சி ஒன்றியம், சித்தனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தேற்றுவிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2007 ஏப்ரல் 25

58—

## டெங்கு காய்ச்சல்

**வினா எண் 11945—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, மேட்டூரில் பரவியுள்ள டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கோவை தெற்கு தாலுகா, கண்டக்காமுத்தூர் வட்டாரம், போத்தனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த மேட்டூர் துணை சுகாதார நிலையத்திற்குட்பட்ட பகுதியில் காய்ச்சல் கண்டவர் குறித்து, 19-07-2006 ஆம் தேதியில் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் குறித்து மாவட்ட மலேரியா அலுவலர் தலைமையில், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் 5 பேர், சுகாதார ஆய்வாளர்கள், பகுதி சுகாதாரச் செவிலியர்கள், கிராம சுகாதாரச் செவிலியர்கள் அடங்கிய குழு ஒன்று தீவிர ஆய்வு செய்தது. அப்பகுதியில் கொசுக்கள் ஒழிப்பு நடவடிக்கையாக பைரத்தியம் கலந்த புகை மருந்து அடிக்கப்பட்டது. மேலும், தொடர் நடவடிக்கையாகக் கொசுப் புழுக்கள் ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தொடர் கண்காணிப்பில் இருந்து வருகிறது. மீண்டும், 14-11-2006ஆம் தேதியில் மாவட்ட மலேரியா அலுவலர் தலைமையில், போத்தனூர் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், பகுதி சுகாதாரச் செவிலியர்கள், கிராமச் சுகாதாரச் செவிலியர்கள் அடங்கிய குழுவினர், மேட்டூர் பகுதிக்குச் சென்று, வீடு வீடாக எவருக்கேனும் காய்ச்சல் உள்ளதா எனப் பரிசோதிக்கப்பட்டபொழுது, காய்ச்சல் கண்டுள்ள நபர்கள் எவரும் இல்லை என அறியப்பட்டது. மேலும், கொசுப் புழுக்கள் ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தொடர் கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2007 ஏப்ரல் 25]

59—

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 13212—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை ஊராட்சிக்குட்பட்ட பாலதொடுவு, காசிபாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மேலும் ஒரு மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை ஊராட்சிக்குட்பட்ட பாலதொடுவு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட இரண்டு மருத்துவ அலுவலர் பணியிடங்களில், இரண்டு மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சென்னிமலை வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுமதிக்கப்பட்ட நான்கு மருத்துவ அலுவலர் பணியிடங்களில் நான்கு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, கூடுதலாக மருத்துவ அலுவலர்கள் நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

60—

## எக்ஸ்-ரே படச் சுருள்

**வினா எண் 13466—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு மருத்துவமனைகளில் உதகை HPF தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் X-Ray படச் சுருள்களைப் பயன்படுத்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

தமிழக அரசு மருத்துவமனைகளுக்கான எக்ஸ்-ரே படச் சுருள் Director General of Supplies and Disposals (DGS&D) (Rate Contract)-ன் படி, குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரிடமிருந்து வாங்கப்பட்டு வருகிறது. இந்துஸ்தான் போட்டோ ஃபிலிம் நிறுவனமும் DGS&D (Rate Contract)-படி குறைந்த விலைப்புள்ளி கொடுத்தால் அந்நிறுவனத்திடமிருந்து எக்ஸ்-ரே படச் சுருள் வாங்கப்படும்.

61—

## தரம் உயர்த்துதல்

**வினா எண் 14550—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, பாகசாலை துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இரண்டு ஆரம்ப சுகாதார மையங்களுக்குக் குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டர் இருத்தல் வேண்டும். நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, பாகசாலை கிராமத்திற்கும், வைத்தீஸ்வரன் கோயில் அரசு மருத்துவமனைக்கும் இடைப்பட்ட தூரம் 6 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், பாகசாலை கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.



62—

## ஆரம்ப துணை சுகாதார மையங்கள்

**வினா எண் 14758—திரு. சி. சண்முகவேலு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில், நடப்பு ஆண்டில் நபார்டு திட்டத்தின்கீழ் ஆரம்ப துணை சுகாதார மையங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில்—(1) எரிசினாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த திருமூர்த்திநகர், ஜல்லிப்பட்டி (2) அமராவதி ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த மானுப்பட்டி (3) பெரியவாளவாடி ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த மலையாண்டிப்பட்டினம், போதிப்பட்டி, சின்னவீரணம்பட்டி மற்றும் (4) செல்லப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த உடுக்கம்பாளையம் ஆகிய துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட நபார்டு வங்கியிடம் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் நிதி உதவி கிடைக்கப் பெற்றவுடன், கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

63—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 14770—திரு. கோ. எதிரொலி மணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, உலகம்பட்டு கிராமத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

[2007 ஏப்ரல் 25

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி இரண்டு ஆரம்ப சுகாதார மையங்களுக்குக் குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும். ஆனால், திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, உலகம்பட்டு கிராமத்திற்கும் சேத்துப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 8 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், உலகம்பட்டு கிராமத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**64—**

## பெண் மருத்துவர்

**வினா எண் 16564—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி ஆரம்ப சுகாதார துணை நிலையத்திற்குப் பெண் மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

*(அ)* மற்றும் *(ஆ)* அங்கலக்குறிச்சி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையங்களுக்கு மருத்துவர் பணியிடம் அனுமதிக்கப்படுவதில்லை. அங்கு கிராமச் சுகாதாரச் செவிலியர் தங்கிப் பணிபுரிந்து வருகின்றார். மேலும், ஆழியாறு நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த பெண் மருத்துவ அலுவலர் அங்கலக்குறிச்சி துணை சுகாதார நிலையத்தின் தேவைகளைக் கவனித்து வருகிறார்.



2007 ஏப்ரல் 25]

**65—**

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 16566—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதி, ரொட்டிக்கடை ஆரம்ப சுகாதார துணை நிலையத்திற்கு மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

*(அ)* மற்றும் *(ஆ)* ரொட்டிக்கடை கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் அனுமதிக்கப்படுவதில்லை.

**66—**

## தனி அலுவலர்

**வினா எண் 13191—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்போரூர் தொகுதி, மறைமலைநகர், ஆலத்தூரில் உள்ள தொழிற்கூடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தனி அதிகாரிகளை நியமித்து, தகுதியான சம்பளம் கொடுக்க வழி செய்ய அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தொழிற் தகராறு சட்டப்படி தனி அலுவலர் நியமிக்க வழிவகை இல்லை. இருப்பினும் தொழிற்சங்கம்மூலம் உரிய முறையில் தொழிற் தாவா எழுப்பி நிவாரணம் காணலாம். குறைந்த பட்ச ஊதியம் வழங்கப்படாமல் இருந்தால், தொழிலாளர் துணை ஆணையர்-2, சென்னை அவர்கள்முன்பு மனுசெய்து நிவாரணம் காணலாம்.

[2007 ஏப்ரல் 25

67—

## பல்லக்குத் தேர்

**வினா எண் 8606—திரு. ம. குணசேகரன் :** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, மடப்புரம் கோவிலுக்குப் புதிதாக பல்லக்குத் தேர் செய்துதர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :**

மானாமதுரை தொகுதி, மடப்புரம் திருக்கோயிலில் உற்சவ விக்ரகங்கள் ஏதும் இல்லாத காரணத்தால், இத்திருக்கோயிலுக்குப் பல்லக்குத் தேர் செய்யும் திட்டம் ஏதும் இல்லை.

68—

## குடிநீர் வசதி

**வினா எண் 12229—திரு. விடியல் எஸ். சேகர் :** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம், எல்லப்பாளையம், நிழலி கிராமம், மதுரை வீரன் சுவாமி கோயிலுக்குக் குடிநீர் வசதி ஏற்படுத்தித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், எல்லப்பாளையம், நிழலி கிராமம் அருள்மிகு மதுரை வீரன் திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின் கீழ் இல்லை. எனவே சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவருக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 25]

69—

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 12298—திரு. இல. வேலுசாமி :** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி, கோட்டை பெருமாள் கோயிலுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி, கோட்டை பெருமாள் திருக்கோயிலில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு, போதுமான அளவிற்குக் குடிநீர் வசதி பக்தர்களுக்குச் செய்யப்பட்டு உள்ளது. பக்தர்கள் அமர்ந்து சாப்பிடுவதற்கு ரூ. 2.50 இலட்சம் செலவில் உபயதாரர்கள்மூலம் மண்டபம் கட்டப்பட்டு வருகிறது. கழிப்பிட வசதியும் விரைவில் செய்து முடிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

70—

## கோயில் நிலம் மீட்பு

**வினா எண் 13031—டாக்டர் க. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொத்தனூர் பேரூராட்சிக்குட்பட்ட 10-வது வார்டில் அமைந்திருக்கும் பொன்னாட்சியம்மன் ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தை மீட்டுத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) பொத்தனூர், அருள்மிகு பொன்னாட்சியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வே எண் 123/2, 1.32.0 ஹெக்டேர்

[2007 ஏப்ரல் 25

நிலத்தை துறை அலுவலகங்களுக்குத் தெரிவிக்காமலே தனி நபர் (திரு. மாரப்பன்) என்பவருக்குப் (22-9-2005-ல்) பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த விவரம், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டு, பட்டா மாற்றம் செய்ததை ரத்து செய்து, திருக்கோயில் பெயருக்குப் பட்டா வழங்குவது குறித்து இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் நடவடிக்கையில் இருந்து வருகிறது. பட்டா மாற்றம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்தான் ஆணையிட வேண்டும்.

**71—**

## கோயில் விரிவாக்கம்

**வினா எண் 13444—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நகரில் அமைந்துள்ள கோட்டை பெருமாள் கோயிலை விரிவாக்கம் செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், வட்டம் மற்றும் நகரம், அருள்மிகு மல்லிகார்ஜுனேஸ்வரர் மற்றும் பாவாசுதேவர் திருக்கோயில் (கோட்டை பெருமாள் கோயில்) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ள, நிலை IV-ன்கீழுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் தருமபுரி நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. அத்திருக்கோயிலைச் சுற்றி தனியார் குடியிருப்புகள் அமையப்பெற்றுள்ளன. திருக்கோயிலைச் சுற்றி வலம் வர திருக்கோயிலுக்குள்ளேயே போதிய இடம் உள்ளதாலும், திருக்கோயிலுக்கு வெளியே தனியார் குடியிருப்புகள் அமையப் பெற்றுள்ளதாலும், திருக்கோயிலை விரிவாக்கம் செய்ய இயலாது. அதற்கான அவசியமும் எழாது.



2007 ஏப்ரல் 25]

**72—**

## கோயில் நிலம் மீட்பு

**வினா எண் 14225—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லடம் வட்டம், அருள்மிகு வேணுகோபால் சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 15 ஏக்கர் நிலத்தைத் தனியாரிடமிருந்து மீட்டுத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், பல்லடம் வட்டம், கண்ணம்பாளையம், அருள்மிகு வேணுகோபாலசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள், தற்போது திருக்கோயில் பெயரிலேயே உள்ளன. பட்டா மாறுதல் ஏதும் செய்யப்படவில்லை. மேற்படி நிலத்தினை மீட்க முறைப்படி திருக்கோயில்மூலம் வழக்கு நடத்தப்பட்டு வருகிறது.

**73—**

## திருப்பணி நிதி உதவி

**வினா எண் 17418—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள ஆதி திராவிடர் மதுரை வீரன் கோயில்களுக்குத் தலா ரூ.50,000/- நிதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில், இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத

[2007 ஏப்ரல் 25

ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் வசிக்கும் பகுதியிலுள்ள 53 திருக்கோயில்களுக்குத் தலா ரூ.25,000/- வீதம் திருப்பணி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில், வால்பாறை, அருள்மிகு மதுரை வீரன் திருக்கோயில் என்ற பெயரிலேயே உள்ள பல்வேறு கிராமங்களிலுள்ள 40 திருக்கோயில்களும் அடங்கும். 2006-2007 ஆம் ஆண்டுவரை இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர் திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் திருப்பணிக்கு நிதி உதவி செய்ய அறிவிக்கப்பட்ட 14,000 திருக்கோயில்களுக்கு உபரி நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து பெறப்பட்ட தொகைகளிலிருந்து தலா ரூ.25,000/- வீதம் வழங்கப்படுகிறது. அரசு நிதியிலிருந்து வழங்கப்படுவதில்லை. அதிக அளவு திருக்கோயில்களுக்கு உபரி நிதிகளைப் பெற்று இத்திட்டத்திற்கு வழங்குவதால், அந்தந்தத் திருக்கோயில்களின் வளர்ச்சித் திட்டங்கள் பாதிக்கப்படுவதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இத்திட்டத்தில் வழங்கப்படும் நிதி உதவியான ரூ.25,000/-ஐ ரூ.50,000/- ஆக உயர்த்தி வழங்க இயலாது.

**74—**

## கடை வாடகை

**வினா எண் 17419—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர், தண்டுமாரியம்மன், கோனியம்மன் கோயிலுக்குச் சொந்தமான கடைகளின் வாடகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* (i) கோவை மாவட்டம், அருள்மிகு தண்டு மாரியம்மன் திருக்கோயில் கட்டடங்களுக்கு, அரசாணையின்படி நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகையினை நீண்டகாலமாகச் செலுத்தத் தவறியுள்ள வாடகைதாரர்களது உரிமம் ரத்து செய்யப்பட்டு, அவர்களை வெளியேற்றவும், திருக்கோயில் கட்டடங்களை சுவாதீனம் பெறவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது மேற்படி கடைகளுக்கு வாடகையை உயர்வு செய்ய வழிவகை இல்லை.



2007 ஏப்ரல் 25]

(ii) கோவை, அருள்மிகு கோனியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நுழைவு வாயிலின் இருபுறமும் உள்ள இடத்தில் ஏழு நிலை இராஜகோபுரம் கட்டுவதற்காக, அக்கட்டட வாடகைதாரர்களை நீதிமன்றம்மூலம் வழக்குத் தொடர்ந்து நீக்கி, சுவாதீனம் எடுக்கப்பட்டு, மேற்படி கடைகள் தற்போது திருக்கோயிலின் சுவாதீனத்தில் காலியாக இருந்து வருகின்றன. மேற்படி கடைகள் அமைந்துள்ள இடத்தைத் தவிர இத்திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கட்ட வேறு இடங்கள் எதுவும் இல்லாததாலும், இந்தக் கடைகளிலிருந்த வாடகைதாரர்கள் நீதிமன்ற நடவடிக்கைமூலம் வெளியேற்றப்பட்டு, திருக்கோயில் சுவாதீனத்தில் உள்ள கடைகளின் இடத்தில் இராஜகோபுரக் கட்டுமானப் பணி துவக்கப்பட உள்ளதாலும், மேற்படி கடைகளுக்கு வாடகை உயர்வு செய்ய வழிவகையேதுமில்லை.

**75—**

## விசைத் தறிகள்

**வினா எண் 18351—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதி, ரமணமுதலிபுதூர் நெசவாளர்களுக்கு விசைத்தறிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

*(அ)* நெசவாளர்களுக்கு, விசைத்தறி கொள்முதல் செய்வதற்கு அரசு நிறுவனங்களாகிய தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை ஆகிய நிறுவனங்கள்மூலம் கடன் உதவி ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது. எனவே, வால்பாறை பகுதியிலுள்ள நெசவாளர்கள் மேற்படி இரண்டு நிறுவனங்களை அணுகி, விண்ணப்பம் செய்து கடன் உதவி பெற்றுக் கொள்ளலாம்.

*(ஆ)* இக்கேள்வி எழவில்லை.

76—

### விசைத்தறி வணிக வளாகம்

**வினா எண் 18425—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் விசைத்தறி வணிக வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியில் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஏதும் செயல்படவில்லை. தனியாருக்குச் சொந்தமான விசைத்தறிகளும் அப்பகுதியில் இல்லை. மேலும் வால்பாறை பகுதியில் விசைத்தறி வணிக வளாகம் அமைப்பது குறித்து அரசால் இதுகாறும் பிரேரணை ஏதும் பெறப்படவில்லை. எனவே வால்பாறை பகுதியில், விசைத்தறி வணிக வளாகம் அமைப்பது குறித்துப் பிரேரணை ஏதும் பெறப்படின், அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.

77—

### தையல் மையம்

**வினா எண் 18452—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் நவீன துணி தையல் மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் நவீன துணி தையல் மையம் ஏற்படுத்துவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



78—

### உற்பத்தி மையம்

**வினா எண் 18455—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் துணிநூல் உற்பத்தி மையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் துணிநூல் உற்பத்தி மையம் நிறுவும் பிரேரணை ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

79—

### ஜரிகை விலை

**வினா எண் 18467—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கோரா ஜரிகை விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் கோரா ஜரிகை விலையைக் குறைப்பது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

80—

## விளையாட்டுத் திடல்

**வினா எண் 5360—திரு கே.எல். இளவழகன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், புங்கனூர் கிராமத்தில் விளையாட்டுத் திடல் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. பி. எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், புங்கனூர் கிராமத்தில் விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

81—

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 13012—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை ஒன்றியம், கேளூர் ஊராட்சிக்குட்பட்ட வெல்லப்பம் பாளையத்தில், விளையாட்டு மைதானம் அமைத்து, விளையாட்டுப் பொருட்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) கபிலர்மலை ஒன்றியம், கேளூர் ஊராட்சிக்குட்பட்ட, வெல்லப்பம் பாளையத்தில், விளையாட்டு மைதானம் அமைத்து, விளையாட்டுப் பொருட்கள் வழங்க, அரசு நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



82—

## மின் வசதி மற்றும் கூடுதல் அறைகள்

**வினா எண் 4871—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள புல்மலையில் தங்கும் விடுதிக்கு, மின் விளக்குடன் கூடிய கூடுதல் அறைகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் உள்ள புல்மலையில் தங்கும் விடுதி ஏதுமில்லை. அங்கு வன உயிரின சரணாலயத்தின் மையப் பகுதியில் நடைபயணக் குடில் (Trekking Shed) ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. வன உயிரினங்களின் பாதுகாப்புக் கருதியும் மரங்களின் பாதுகாப்புக் கருதியும், அந்த நடைபயணக் குடிலில் மின் வசதி செய்துதர மற்றும் கூடுதல் அறைகள் கட்டித்தர உத்தேசம் ஏதுமில்லை.

83—

## மின் விளக்கு

**வினா எண் 4874—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, மானம்பள்ளியிலுள்ள தங்கும் விடுதிக்கு மின் விளக்கு போட்டுத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, மானம்பள்ளியில் தங்கும் விடுதி ஏதுமில்லை. அங்கு வன உயிரின சரணாலயத்தின் மையப் பகுதியில் நடைபயணக் குடில் (Trekking Shed) ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. அங்கு வன உயிரினங்களின் பாதுகாப்புக் கருதியும்,

மரங்களின் பாதுகாப்புக் கருதியும், அந்த நடைபயணக் குடிலில் மின் வசதி செய்திட உத்தேசம் ஏதுமில்லை.

**84—**

## குடியிருப்பைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 10031—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையிலுள்ள பெரிய கல்லாறு குடியிருப்புப் பகுதியைப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

வால்பாறையிலுள்ள பெரிய கல்லாறு பகுதியில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள இரையான் தேயிலைத் தோட்டத்தின் குடியிருப்புகள் உள்ளன. இக்குடியிருப்புகளில் பழுதுப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வரவு-செலவுத் திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், அதன் அடிப்படையில் ஒவ்வொரு கட்டமாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**85—**

## மரம் வெட்டுதல்

**வினா எண் 11406—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் சொந்த நிலத்தில் வளர்த்துள்ள சுற்பூர மரங்களை வெட்டுவதற்கு விவசாயிகளுக்கு அனுமதி வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு தனியார் காடுகள் (மரங்கள் பாதுகாப்பு) சட்டம், 1949 மற்றும் தமிழ்நாடு மலைத்தள (மரங்கள் பாதுகாப்பு) சட்டம் 1955-ன் விதிகளுக்குட்பட்டும், உச்ச நீதிமன்ற ரிட் மனு (சிவில்) எண் 202/95, நாள் 12-12-96-ல் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலும், மரங்கள் வெட்ட அனுமதி கோரும் மனுக்களை, மாவட்ட ஆட்சியரின்



தலைமையிலான மாவட்ட வனக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

**86—**

## கால்நடை மருந்தகம்

**வினா எண் 11488—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதி, ராயப்பன்பட்டியில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தைக் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியத்தின் ஆளுகைக்குட்பட்ட ராயப்பன்பட்டி கால்நடை கிளை நிலையத்தைக் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசுத் தரப்பில் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**87—**

## கால்நடை மருந்துவமனை

**வினா எண் 12663—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் விட்டிலாபுரம், சோகண்டி மற்றும் குன்னவாக்கம் ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனைகள் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள விட்டிலாபுரம், சோகண்டி மற்றும் குன்னவாக்கம் ஆகிய கிராமங்களில் கால்நடைகளின்

செய்யப்படுகிறது. அரசால் முட்டைகளின் விலை நிர்ணயம் செய்யப்படாததால், முட்டைகளின் விலையைக் குறைக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

**92—**

## கட்டட வசதி

**வினா எண் 3403—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை வட்டம், மணலூர் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்ட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டம், மணலூர் மாணவர் விடுதி, அரசு ஆணை எண் 9, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதி ந.4) துறை, நாள் 13-1-2006-ன்படி புதியதாகத் துவக்கப்பட்டு, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. விடுதி கட்டத் தேவையான பணித் தளம் தேர்வு செய்யப்பட்ட பின்பு, விடுதி கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**93—**

## விடுதி பழுதுபார்ப்பு

**வினா எண் 14371—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் ஆதி திராவிடர் மாணவர்கள் தங்கும் விடுதியில், மழைக் காலத்தில் கட்டடங்களில் கசிவு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?





(ஆ) ஆம் எனில், அதைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை நிலை எண் 133, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 5-10-2006-ன்படி, மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் / பழங்குடியினர் நல விடுதிகளுக்குப் பராமரிப்புப் பணி, அடிப்படை வசதிகள் செய்ய ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.10.00 கோடியில் கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிக்குப் பழுதுபார்க்க, ரூ.57,000/-ம், மின்சாரப் பழுதுபார்ப்புக்கென ரூ.44,000/-ம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. இத்தொகைகளைக் கொண்டு இவ்விடுதிகளில் பழுதுபார்ப்புப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

**94—**

## கல்வி உதவித் தொகை

**வினா எண் 16441— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள ஆதி திராவிடர் மாணவர், மாணவிகள் விடுதிகளில் தங்கிப் படிப்பவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை. மத்திய அரசு கடிதம் எண் 11017/17/2002/SCD, நாள் 28-1-2004 மற்றும் அரசாணை எண் 78, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 16-7-2004-ன்படி கீழ்க்கண்டவாறு ஆதி திராவிடர் / பழங்குடியினர் மாணவ/மாணவிகளுக்குக் கல்வி உதவித் தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

[2007 ஏப்ரல் 25

விடுதி மாணவர்/மாணவியர்க்கான உதவித் தொகை, மாதம் ஒன்றுக்கு:—

| பிரிவு | வழங்கப்பட்ட தொகை | கூடுதலாக வழங்கப்படும் தொகை |
|---|---|---|
| 1 | 425 | 740 |
| 2 | 290 | 510 |
| 3 | 230 | 355 |
| 4 | 150 | 235 |

மேற்காணும் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான வருட வருமான உச்சவரம்பு ரூ. 1,00,000/- ஆகும். மத்திய அரசு கல்வி உதவித் தொகையின் ஒழுங்குமுறை விதிகளின்படி, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களில் உள்ள பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்க்குப் பராமரிப்புக் கட்டணம் ஒரே மாதிரியாக வழங்கப்படுகிறது.

(ஆ) கேள்வி எழாது.

**95—**

## மீன் வளர்த்தல்

**வினா எண் 11370—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள அமராவதி, திருமூர்த்தி அணைப் பகுதியில் நீர்த்தேக்கங்களில் மிதவைக் கூடுகளில் மீன் வளர்த்தல் திட்டத்தை, சுய உதவிக் குழுமூலம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை எண் 72, நாள் 17-05-2006-ன்படி கூண்டில் மீன் வளர்ப்புத் திட்டத்தினை ஆழியாறு நீர்த்தேக்கத்தில் செயலாக்கம் செய்ய



2007 ஏப்ரல் 25]

திட்டமிடப்பட்டதைத் தொடர்ந்து, 15-2-2006-ல் மீன் விரலிகள் இருப்பு செய்யப்பட்டு மீன் வளர்ப்புப் பணிகள் தொடரப்பட்டன. ஆரம்பத்தில் 2 கூண்டுகள் நிறுவப்பட்டு, மே மாதத்திற்குள் 6 தொகுதிகளில் 22 கூண்டுகள் நிறுவப்பட்டு, மொத்தம் 11,830 மீன் விரலிகள் இருப்புச் செய்யப்பட்டு வளர்க்கப்பட்டன. ஆழியாறில் பலத்த சூறாவளிக் காற்று வீசியதால் 4 கூண்டுகள் தவிர, அனைத்துக் கூண்டுகளும் காற்றில் கிழிந்து சேதம் அடைந்து 1,123 மீன்களைத் தவிர அனைத்து மீன் குஞ்சுகளும் நீரில் கலந்து விட்டன. 1,123 மீன்களை எடுத்து நீர்த்தேக்கத்தில் விடப்பட்டன. கழகம் ஏற்று நடத்திய மிதவைக் கூண்டில் மீன் வளர்ப்புத் திட்டம் முழு வெற்றியடையவில்லை.

2. நீர்த்தேக்கத்திலுள் பங்கு மீனவர்கள் தவிர, ஏனையோர் செயல்பாடுகள் அவர்களுக்கும், அணையின் பாதுகாப்புக்கும் உகந்ததாக இராது. அவ்வாறான செயல்பாடுகள் பொதுப் பணித் துறையினராலும் ஆட்சேபிக்க வாய்ப்புள்ளது. எனவே, தற்போது மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்ப்புத் திட்டத்தை, சுய உதவிக் குழுமூலம் செயல்படுத்த இயலாது.

**96—**

## கடன் உதவி

**வினா எண் 17490—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர் சமுதாய, படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு சிறு தொழில் செய்ய கடன் உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11395, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5254, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7907, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8611, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8731, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8972, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10193, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10415, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10995, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11128, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9792, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11190, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1186.5, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3331, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுவிலக்குத் துறையில் டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் தொழிலாளர்களைப் பணி நிரந்தமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4594, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாட்டில் கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழிக்க, அரசு மதுபானங்களை ஏழை, எளிய மக்கள் வாங்கும் அளவுக்குக் குறைத்து விற்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5207, திரு. சு. குணசேகரன்.



**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பனை மற்றும் தென்னையிலிருந்து கிடைக்கும் பதநீரை அரசே கொள்முதல் செய்து மதுபானமாக மாற்றி விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5322, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி நகரில், தேனி பேருந்து நிலையம் மற்றும் வாசவி திருமண மண்டபம் அருகே உள்ள மதுபானக் கடையினை வேறு இடத்தில் மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5502, செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5743, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக்கில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணிப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5953, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்தில் டாஸ்மாக் கடைகளில் போலி மதுபானங்கள் விற்பனை செய்வதைத் தடுக்க கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6025, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் பகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சி தற்போது அவர்கள் மனம் திருந்தி அத்தொழிலை விட்டுவிட்டதால், அவர்களுக்கு அரசு சுயதொழில் செய்ய உதவி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6300, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "TASMAC ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6439, திரு. ல. ராதாகிருஷ்ணன்.



**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முழுமையான மதுவிலக்கை அமல்படுத்துவது அல்லது இயற்கையாக உற்பத்தியாகும் (பனை-தென்னை) கள் இறக்க அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6525, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அரசு மதுபானக் கடைகளில் (TASMAC) பணிபுரியும் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6750, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அயல்நாட்டு மதுபான வகைகளின் விலையை இரு மடங்கு உயர்த்துவதன்மூலம் குடிப்போர் எண்ணிக்கையைக் குறைக்க வழியுள்ளதால், சமூக நலன் கருதி இதனைச் செயற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7152, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முழுமையான மதுவிலக்கு இல்லாதபோது குறைந்த போதை உடைய, இயற்கையாக விளைவிக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் மற்றும் பனையேறும் தொழிலாளர்களின் வாழ்க்கை வளம் பெற, கள்ளுக் கடை திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7343, திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7473, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டத்தில் பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் அருகில் உள்ள மதுபானக் கடைகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7504, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பூரண மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7650, திரு. அருள் அன்பரசு.



**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோளிங்கர் மற்றும் காவேரிப்பாக்கம், நெமிலி ஒன்றியங்களில் கள்ளச் சாராயம் தயாரித்து விற்பனை செய்வதை முற்றிலும் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7688, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு மதுக்கடைகள் இரவு 12 மணி வரையிலும், உணவு ஓட்டல்கள் இரவு 11 மணி வரையிலும் இருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7808, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுபானக் கடைகளில் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7837, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளச் சாராயத்தை ஒழிக்க, மதுவினால் ஏற்படும் தீமைகளை மக்களுக்குப் பிரசாரம் செய்யும் குழுக்களை, கிராமப்புறங்களில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7933, திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8161, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பல்லடம் தொகுதிக்குட்பட்ட திருச்சி சாலை, அவினாசி சாலை, கோவை. பைபாஸ் சாலை ஆகிய சாலை ஓரப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான கூரை வேய்ந்த உணவு அரங்குகளில் சட்டத்திற்குப் புறம்பாக கள்ள மதுபானங்கள் விற்பதால், மதுக்கடைகளில் விற்பனை குறையும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8237, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூரண மதுவிலக்கை அமல்படுத்துவதில் உள்ள பொருளாதார சமூக நடைமுறை பிரச்சினைகளைக் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8847, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக் மதுபானக் கடைகளை மூடி, பூரண மதுவிலக்குக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன்மூலம் குடும்பப் பெண்களின் மனம் குளிரச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8931, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பூரண மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9022, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுக்கடைகளை கோவில், பள்ளிக்கூடம் அருகில் அமைக்கக்கூடாது என்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9067, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் மருத்துவமனைகளின் அருகில் உள்ள மதுபானக் கடைகளை, அங்கிருந்து அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9329, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு மதுபானக் கடைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு விருப்பப் பணி இடமாறுதல் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9146, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு விடுப்புகள் முறையாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9659, திருமதி ஜி. லதா.



**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் தொகுதியில் பள்ளிகள், கோயில்கள் அருகில் உள்ள டாஸ்மாக் கடைகளை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10032, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக் கடைகளை பள்ளிகள், ஆலயங்கள் மற்றும் பொது இடங்களைத் தவிர்த்து, தனியாக ஒதுக்குப்புறமான இடத்தில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10033, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக்கில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10058, திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர் பஸ் நிலையம் அருகில் உள்ள N.S. தியேட்டர் மற்றும் V.C. லாட்ஜ் செல்லும் சந்தில் உள்ள டாஸ்மாக் கடையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10672, திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10807, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள டாஸ்மாக் தனியார் 'பார்'களை, அரசு எடுத்து நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11658, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விடுமுறை நாட்களில் அரசு மதுபானக் கடைகள் சட்டப்படி மூடப்பட்டிருந்தாலும், முன்கூட்டியே வாங்கி கள்ளத்தனமாக விற்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,46,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் என்னால் வைக்கப்பட்டுள்ள துறைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சேற்றப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு ஏற்ற வகையில் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை* நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். இன்று மூன்று மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று மானியக் கோரிக்கைகள் மீதும் சேர்த்தே பேசலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், 30 நிமிடம் உங்களுக்கு.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அறம் சார்ந்த அரசியலில் அதீதமான நம்பிக்கை கொண்டு, தூய்மையான துருவ நட்சத்திரமாய், இலைகளைப் போல மென்மையாகவும், இரும்பைப் போல உறுதியாகவும், விதியை நம்பி விழுந்து கிடக்காமல் கம்பீரமாக நின்று, அரசியல் வீதியில் அறிவுத் தேர் ஓட்டுகின்ற என் அரசியல் கீதை, உலகக் கலைஞர்களுக்கு உன்னத உண்ணா நோன்பு இருந்து, (மேசையைத் தட்டும் ஒலி) உரிய தீர்வைக் கண்ட உன்னதத் தலைவி, களத்தில் நிற்கும் எனக்கு, முகமும், முகவரியும் தந்த எதிர்காலத் தமிழகத்தின் முதல்வர், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி என் உரையைத் துவக்குகிறேன்.

* 323 முதல் 409 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III-ஆக அச்சிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, தீயணைப்புத் துறை சார்பாக சில கருத்துகளை இந்த மாமன்றத்தில் எடுத்துவைக்க நான் விழைகிறேன். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாமன்றத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள், 5-7-1967 அன்று காவல் துறை மானியத்தில் பேசுகிறபோது, "நாட்டினுடைய சமுதாய வாழ்விற்குப் போலீஸ் துறை திறமையாக இருக்க வேண்டும்; ஒரு திறமையுள்ள போலீஸ் துறை அமைய வேண்டுமானால், அவர்களுக்குப் போதுமான அளவிற்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டும்; காவல் துறையிலே யாரும் தலையிட்டு, தங்களுக்குச் சாதகமாக அந்தத் துறையைத் திருப்பிக்கொள்ளக் கூடாது; இந்த மூன்று கருத்துகளில் யாருக்கும் மாறுபட்ட எண்ணம் இருக்க முடியாது. அதிலும் அரசியல் கண்ணோட்டத்தோடு போலீஸ் துறையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வாதாட மாட்டார்கள்; அவர்களுக்கும் தெரியும், அது தவறு என்று" என இந்த மாமன்றத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-00

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, "காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக இந்த அரசு இப்போது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது" என்று காவல் துறை மானியக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு 2001-2002-ல், மத்திய அரசின் ஒதுக்கீடு 68.10 கோடி; மாநில அரசின் ஒதுக்கீடு 68.10 கோடி ரூபாய். ஏறத்தாழ 136.20 கோடி ரூபாய் மொத்தமாக 2001-லே செலவு செய்யப்பட்டிருக்கிறது. 2002-2003 ஆம் ஆண்டு மத்திய அரசின் ஒதுக்கீடு 68.10 கோடி ரூபாய்; மாநில அரசு 68.10 கோடி ரூபாய் என்று இரண்டாவது ஆண்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 2003-2004 ஆம் ஆண்டு மத்திய அரசினுடைய பங்கு 52.47 கோடி ரூபாய்; மாநில அரசினுடைய பங்கு 36.67 கோடி ரூபாய், ஆக 89.14 கோடி ரூபாய். அதேபோல 2004-ல், ரூ.56.76 கோடி, ரூ.37.84 கோடி; ஆக 94 கோடியே 60 இலட்சம் ரூபாய். 2005-2006-ஆம் ஆண்டு ரூ.59.99 கோடி, மாநிலச் சர்க்கார் ரூ.20.01 கோடியும், ஆக 80 கோடி ரூபாய் இதற்குச் செலவு செய்யப்பட்டுள்ளது. காவல் துறையை நவீனமயமாக்குவதற்கான திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி, 2006-2007-ல் மத்திய அரசின் ஒதுக்கீடு 75 சதவீதமாக உயர்த்தியதற்குப் பிறகு, 51 கோடி ரூபாய், மாநிலச் சர்க்கார் 17 கோடி ரூபாய் ஒதுக்கி, 68 கோடி ரூபாய் மட்டும்தான் இந்தக் காவல் துறையை



நவீனமயமாக்குவதற்காக இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், வளர்ந்து வருகிற தமிழகத்தில், விஞ்ஞான ரீதியாக இன்றைக்குப் பல்வேறு கொலைகள், கொள்ளைகள் நடைபெறுகிற இந்த இந்திய நாட்டில், தமிழகத்தில், குறிப்பாக இப்போது வளர்ந்து வருகிற இந்தச் சமுதாயத்தில் இவற்றைத் தடுப்பதற்கு இந்த அரசு ஒதுக்கியிருக்கிற நிதியைப் பார்க்கிறபோது, ரூ.68 கோடி என்பது குறைந்த அளவிலே இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதாவது, காவல் துறையை நவீனமயமாக்குவதற்கான திட்டத்தின்கீழ் பல்வேறு இனங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, ஆண்டுக் கணக்கில் பார்க்கிறபோது, 2004-2005 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதிகள், ஏறத்தாழ இலட்சத்தில், ரூ.9,450 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 2005-2006 ஆம் ஆண்டு, எட்டாயிரம் இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு, 2006-2007 ஆம் ஆண்டு, ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பார்க்கிறபோது, ரூ.6,800 இலட்சங்கள்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையிலும், விஞ்ஞான ரீதியாகப் பல்வேறு தவறு செய்கிறவர்களும், இந்திய நாட்டிலே, பல்வேறு தீவிரவாதங்களும் வளர்ந்து கொண்டிருக்கிறபோது, இதைத் தடுப்பதற்கு இந்த அரசு கூடுதலாக நிதி ஒதுக்கியிருக்கிறதா என்றால், இல்லை.

இப்போது பல்வேறு தீவிரவாதங்கள் தமிழகத்திலே இந்த அரசைப் பொறுத்தவரையிலும் மட்டுமல்ல; இந்திய நாட்டிலே பார்க்கிறபோது, பக்கத்திலே இருக்கிற கேரள மாநிலத்தில் அல்-உம்மா தீவிரவாதிகள், அதற்குப் பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலே நக்சலைட் தீவிரவாதிகள், அதற்குப் பகக்கத்திலே இருக்கிற பஞ்சாபிலே சீக்கியத் தீவிரவாதிகள், அதற்குப் பக்கத்திலே இருக்கிற அஸ்ஸாமிலே உல்ஃபா தீவிரவாதிகள், காஷ்மீரத்திலே பல்வேறு தீவிரவாதிகள்மூலமாக நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக குண்டுகள் வெடித்துக் கொண்டிருக்கின்றன. நாடாளுமன்றத்திலேகூட தீவிரவாதிகள் நுழைந்த நாட்களும் இருக்கின்றன. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றில் 2001-2006 ஆம் ஆண்டு வரையிலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்த ஆட்சிக் காலத்தில்தான், பொற்கால ஆட்சியாகத் தமிழகம் திகழ்ந்திருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் மட்டும் சொல்லவில்லை; உலக வங்கியே ஏற்றுக்கொண்டு, அதனுடைய கிளைகளை எங்கே துவக்க வேண்டும் என்பதை எண்ணிப்பார்த்து, அமைதிப் பூங்காவாகத் தமிழகம் இருக்கிறது என்பதால், தமிழகத்திலே துவக்கிய சரித்திர வரலாறு,

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இருந்தது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்களுக்காக, இந்த ஆட்சி, 33 சதவீதத்திற்காகப் பேரணியும் நடத்திக் காட்டியுள்ளது. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே இருந்தபோதுதான், பெண்களுக்காகக் காவல் நிலையத்தை முதன்முதலாக உருவாக்கிக் காட்டினார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், அம்மா அவர்கள் ஆட்சியிலே இருந்தபோதுதான், காவல் துறையில், பெண்களுக்காக, முதன்முதலிலே, 1993 ஆவது ஆண்டிலிருந்து 1996 ஆட்சிக் காலம் வரையிலும், 58 காவல் நிலையங்களை உருவாக்கிய பெருமை, (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும்.

அதேபோலத்தான், தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், 1996-லிருந்து 2001 வரையிலும் பெண் காவல் நிலையங்களே உருவாக்கப்படவில்லை. மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான், 2001-2006 வரையில் இந்தக் காவல் நிலையங்களைப் பொறுத்தவரையிலும், பெண்களுக்காகத் தனியாக, 186 பெண் காவல் நிலையங்களை உருவாக்கிய பெருமை, புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையிலும், தமிழகத்திலே ஒரு சரித்திர வரலாற்றைப் பெண்களுக்காக உருவாக்கி, பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில், 6 நீதிமன்றங்களை உருவாக்கி, அந்த நீதிமன்றங்கள்மூலமாக, பெண்களுடைய வழக்குகள் வருகிறபோது, அந்த வழக்குகளை நேரடியாக விசாரிப்பதற்கான அந்த நிலையை உருவாக்கிக் காட்டியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

(முற்பகல் 11-05)

அதுமட்டுமல்ல; தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், இப்போது நாம் எண்ணிப் பார்க்கிறோம்; தமிழகத்தின் வரலாற்றில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது, கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட்டது என்கிற சரித்திர வரலாற்றை, இந்திய நாடே ஏற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இப்போது நாம் பார்க்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறவர்கூட, இந்த ஆட்சியிலே கள்ளச் சாராயம் பெருகியிருக்கிறது என்று கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த



மாவட்டக் காவல் துறை அதிகாரியிடத்திலே மனுவைத் தந்திருக்கிற காட்சி, இப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, கள்ளச் சாராயம் பெருகியிருக்கிறது என்பதற்கு உதாரணம். அதுகுறித்து திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினரே கோரிக்கை வைத்திருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) ஆகவே, அவர் கள்ளச் சாராயம் பெருகியிருக்கிறது; திருட்டுகள் நடைபெறுகின்றன; அதேபோல, விபத்துகள் ஏற்படுகின்றன எனக் குறிப்பிட்டு, இவற்றைத் தடுக்கவேண்டுமென்று மூன்று கோரிக்கைகளை வைத்து மனுக்களைத் தந்திருக்கிறார் என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

அதுமட்டுமல்ல; இங்கே பார்க்கிறபோது, தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், இப்போது தமிழகத்திலே, (குறுக்கீடு) கடைசியிலே சொல்கிறீர்களா? (குறுக்கீடு)

**திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. ஐயப்பன், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் பொறுப்பேற்ற பிறகு, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே அவரை மரியாதை நிமித்தமாகச் சென்று பார்த்தேன். அவரிடத்திலே கொடுத்த மனுவிலே, போக்குவரத்தைத் தொடர்ந்து சீர் செய்யவேண்டும் என்றும், தற்போது கள்ளச் சாராயத்தைக் கண்காணிப்பதைப்போல், தொடர்ந்து கண்காணிக்கவேண்டும் என்றும்தான் மனுவில் கொடுத்திருக்கின்றேன். அதனுடைய நகல் என்னிடத்திலே இருக்கின்றது. தங்களிடத்திலே வேண்டுமானாலும், அதைச் சமர்ப்பிக்கின்றேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கொடுத்திருக்கிற கோரிக்கையிலே என்ன இருக்கிறது என்று சொன்னால், 'கள்ளச் சாராயம் இருக்கிறது; அது முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும்' என்று சொல்லியிருக்கிறாரே தவிர, (குறுக்கீடுகள்) எல்லாம் இருக்கிறது. இந்த ஆட்சியிலே இல்லையென்று

சொல்கிறீர்களா? இப்பொழுது அதை ஒழிப்பதற்கு வழி செய்யுங்கள். ஆகவே, கள்ளச் சாராயம் பெருகியிருக்கிறது என்பதை உங்களுடைய சட்டமன்ற உறுப்பினரே ஒத்துக்கொள்கிறார். நாங்கள் எங்கள் ஆட்சியிலே இருந்ததாக ஒத்துக்கொள்ளவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள். உறுப்பினர்மீது குற்றச்சாட்டு சொல்லாமல், உரையைத் தொடருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** குற்றச்சாட்டு இல்லை. *(குறுக்கீடு)* கொடுத்த மனு. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. ஐயப்பன், உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரிடத்திலே கொடுத்த மனு குறித்து, பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தியின் அடிப்படையிலே இங்கே சுட்டிக்காட்டினேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த *11* மாதக் காலத்தில், தமிழகத்திலே சட்டம்-ஒழுங்கு சீர்கேடு, உள்ளாட்சித் தேர்தலிலே வன்முறைகள், சாதிக் கலவரங்கள், பாதுகாப்பின்மை, தீய சக்திகள் நடமாட்டம், தீவிரவாதிகளின் பயங்கரச் செயல், ரௌடிகள் அட்டூழியம், அராஜகம், பயங்கரவாதம், ஆயுதக் கடத்தல் ஆகியவை மக்களுக்கு வேதனை தரும் காட்சிகளாக அன்றாடம் நடைபெற்று வருகின்றன. இன்றைக்குக்கூட பார்க்கிறபோது, திண்டிவனத்திற்கு அருகில், செண்டூர் என்ற கிராமத்தில், தேசிய நெடுஞ்சாலையில் *7-4-2007* அன்று நடைபெற்ற ஜீப் வெடிகுண்டு சம்பவம், தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு அடியோடு சீர்குலைந்திருக்கிற நிலையைச் சுட்டிக்காட்டியிருக்கிறது.

அதைப்போலத்தான், இப்போது சட்டமன்றத்தைப் பொறுத்தவரையிலும், சட்டமன்ற மாமன்ற உறுப்பினர்கள் இங்கே அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே சட்டமன்ற உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள், அன்றைக்குச் சட்டமன்றத்திலே நடந்துகொண்ட நிகழ்ச்சிக்குப் பிறகு, ஒரத்தநாட்டிலே அவருடைய வீடுகள் தாக்கப்பட்டதற்குப் பிறகு, யார் அதற்குரியவர்கள்? தாக்கியவர்கள் யார் என்பதைக்கூட இன்றுவரையிலும் இந்த அரசால் கண்டுபிடிக்க முடியவில்லை.



அதைப்போலத்தான், உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றபோது, சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபுமீது வழக்குகள் தொடரப்பட்டன. வெடிகுண்டுகள், பெட்ரோல் வெடிகுண்டுகள் அவர் அனுப்பினார் என்று ஒரு செய்தி வெளியிட்டு, அவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டதற்குப் பிறகு, நீதிமன்றத்திற்குச் சென்று, அதை யார் எடுத்துச் சென்றாரோ, அவரிடத்திலே, "இதோ சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற திரு. சேகர்பாபு அவர்களை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா? இவரா உங்களை அனுப்பினார்?" என்று கேட்டபோது, "இவர் இல்லை" என்று நீதிமன்றத்திலே அவர் வாக்குறுதியைத் தந்திருக்கிறார். ஆகவே, ஒரு சட்டமன்ற உறுப்பினர்மீதே பொய் வழக்குப் போடுவதும், முன்னாள் அமைச்சராக இருந்த திருமதி வளர்மதிக்கு அதைக் கொண்டு சென்றதாகச் சொல்லிப் பொய் வழக்குப் போடுவதும், இந்த அரசிலே வாடிக்கையாக இப்போது இருந்து கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல; திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு. கோ. அரி அவர்கள், ஏழையெளிய மக்கள்... *(குறுக்கீடு)*

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் சொல்கிறபோது, திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் திருமதி வளர்மதியைப்பற்றிச் சொன்னார்கள். அந்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. அவர்கள்மீது போட்டது பொய் வழக்கு என்கிறார். நான்கு முறை முதலமைச்சராக இருந்த எங்களுடைய தலைவர் கலைஞர்மீது உங்கள் ஆட்சியிலே பொய் வழக்குப் போட்டு, இதுவரையிலே charge sheet போடுவதற்குக்கூட யோக்கியதை இல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வழக்குகள் நீதிமன்றத்திலே, அதற்கான ஆதாரங்களே கொடுக்கப்படாமல், இதுவரையில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அதையும் எண்ணிப்பார்த்துப் பேசவேண்டும்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு சுட்டிக்காட்டுகிறபோது, வழக்குத் தொடரப்பட்டது குறித்து சொன்னார். அந்த வழக்குக்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. ஆனால், அந்த வழக்கிலே இருக்கிற நிலைகளைத்தான் நான் இங்கே

சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வழக்கிலே இருக்கிற நிலைகள் என்ன என்பதை நான் சுட்டிக்காட்டியிருக்கிறேனே தவிர, வேறல்ல. நீதிமன்றத்திலே விசாரணைக்கு அழைத்துச் செல்கிறபோது, அவர் ஜாமீன் கேட்கிறபோது அங்கே, "இவர் யார்? உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா? இவரா பெட்ரோல் வெடிகுண்டு அனுப்பினார்?" என்று கேட்கிறபோது, "இல்லை, இவர் யாரென்றே எனக்கு அடையாளம் தெரியாது" என்று சொல்லியிருக்கிறபோது, அதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறதா; அவர்மீது போட்டிருக்கிற வழக்கை நீங்கள் வாபஸ் பெறத் தயாராக இருக்கிறீர்களா என்பதை இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜாமீன் கேட்கும்போது யாரும் அடையாளம் காட்டவோ, இல்லையென்று சொல்லவோ, அப்படி எதுவும் கிடையவே கிடையாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டே நாட்களில் நான் குடியிருந்த வீட்டிலே காவல் துறையினர் வந்து கதவைத் தட்டினார்கள். கதவைத் திறந்தபோது வெளியிலே நின்றுகொண்டிருந்த இன்ஸ்பெக்டர், "இந்த ஆயுதங்களெல்லாம் உங்கள் வீட்டிலிருந்துதான் எடுத்தோம்" என்று சொல்லி, கத்தியைக் காட்டி -- அப்போதுதான் உள்ளே வருகிறார்கள்; வருகின்றபோது, அவர்கள் ஆயுதத்தைக் கொண்டுவந்து, "வீட்டிலிருந்து எடுத்தேன்" என்று சொல்லி -- என்னைக் கைதுசெய்து, நீதிமன்றத்திற்கும் சிறைச்சாலைக்கும் அலைக்கழித்து, பொய் வழக்குப் போட்டது யார் என்பது இந்த ஊருக்கும் தெரியும்; உலகத்திற்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** உங்களைச் சுட்டிக்காட்டி எங்கள்மீது வழக்குத் தொடரலாம் என்று நீங்கள் கருதுகிறீர்களா என்பதுதான் இந்தச் சபையின்மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் கட்டிலிலே இருந்தபோதுதான், கள்ள லாட்டரி டிக்கெட்டுகளை விற்கக்கூடாது என்ற அடிப்படையில், அவை ஒழிக்கப்பட வேண்டுமென்று ஒரு சட்டத்தையே கொண்டு வந்து, நலிந்து கிடக்கிற ஏழையெளிய மக்கள், லாட்டரி டிக்கெட்டுகளை வாங்கி, அந்தக் குடும்பங்கள் நலிந்து கொண்டிருக்கின்றன என்ற அடிப்படையில், சமுதாயத்திலே நலிந்து கிடக்கிற இந்த ஏழையெளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, அவற்றை ஒழித்தவர் புரட்சித் தலைவி அம்மா



அவர்கள். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இப்போது கள்ள லாட்டரி டிக்கெட்டுகள் விற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த அரசு அறியுமா? அதற்குப் பல்வேறு நிலைகளில் இன்று பல பேர் உறுதுணையாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு, அவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறதா என்பதையும் நான் இந்த மாமன்றத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நிதிநிலையைப் பொறுத்தவரையிலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2001-ல் ஆட்சிக் கட்டிலில் ஏறிய நேரத்தில் 8,600 கோடி ரூபாய் நிதிநிலை இருந்ததை மனதிலே கொண்டுதான், அவருடைய சீரிய தலைமையில், அவருடைய தொலைநோக்குச் சிந்தனையில், அவருடைய அறிவாற்றலால், அதனை 16,000 கோடி ரூபாய்க்கு உயர்த்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, 2001 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோதுதான், அன்றைய நிதிநிலையைப் பொறுத்தவரையிலும், வசூல் செய்ய முடியாத, ஏறத்தாழ 7,001 கோடி ரூபாய் இந்த அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய வரிகளைச் சிறப்பான முறையிலே, அம்மா அவர்களின் சீரிய முயற்சியின் அடிப்படையில், 5 ஆண்டுக் காலமாக தேங்கிக்கிடந்த, அந்த வரிகளை உடனடியாக வசூல் செய்ய, ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, இரண்டே ஆண்டுக் காலத்தில் 5,000 கோடி ரூபாய் அளவுக்கு வசூல் செய்த பெருமையும் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். அவ்வாறு அந்த நிதிநிலையைச் சரிசெய்ததன் அடிப்படையிலேதான் இப்போது இந்த ஆட்சி, ஆட்சிக் கட்டிலிலே ஏறியபோது, இலவச திட்டங்கள் என்ற அடிப்படையிலே பல்வேறு திட்டங்களை இங்கே அறிவிப்பதற்கு, இந்த ஆட்சிக்கு ஏதுவாக, அந்த நிதிநிலை இருந்திருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-15*

இந்த ஆட்சியைப் பொறுத்தவரையிலே, இங்கே இருக்கிற அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள்; 98 பேர்களை வைத்துக்கொண்டு ஓர் ஆட்சி நடைபெறுகிறது என்று நாங்கள் சுட்டிக்காட்டியபோது, அதற்குப் பொறுப்பேற்க முடியாமல், "நாங்களும் ஆதரித்துக் கொண்டிருக்கிறோம்" என்று காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நண்பர்களும் இங்கே பேசினார்கள். எங்களைப் பொறுத்தவரையிலும்,

98 பேர்களை வைத்துக்கொண்டு முக்கால் கிணற்றைத் தாண்டியிருக்கிற ஓர் ஆட்சி, இன்றைக்குத் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, இந்த ஆட்சியைப் பொறுத்தவரையிலும், எதிர்க்கட்சிகள்தான் வெட்டுத் தீர்மானங்களைச் சட்டமன்றத்திலே கொடுக்க முடியும்; ஆனால், ஆதரிக்கிற கட்சிகளாக இருக்கிற காங்கிரஸ் கட்சி மற்றும் அதனுடன் துணை கொண்டிருக்கிற இயக்கங்கள், வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டுவந்து கொடுக்கிறபோது, அவர்கள், தமிழகத்திலே எதிர்க்கட்சிகளாக இருக்கிறார்களா அல்லது ஆளுங்கட்சிக்கு ஆதரவு அளிக்கிறார்களா என்பதை நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்குத் தலைமையேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்து கொண்டு இருக்கிறது. தி.மு.க. ஆட்சிக்கு, காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, மார்க்சிய பொதுவுடைமைக் கட்சி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, ஏன் உங்களோடு இருந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகூட, இன்று ஒன்றுசேர்ந்து ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த ஆட்சிக்குத் தோழமையோடு இருக்கிறோம். அமர்ந்திருப்பது எதிர்க்கட்சி வரிசையிலே; இங்கே இருந்து வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதுதான் முறையானது; இது மரபு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடு) திரு. தி. வேல்முருகன், உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இந்த ஆட்சி இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சில தினங்களுக்கு முன்னாலே சட்டமன்றத்திற்கு வந்து இங்கே கையெழுத்துப் போட்டுவிட்டு, மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் வெளியே சென்று, உண்மையான எதிர்க்கட்சிகள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும்தான் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக



இருக்கின்றன. அவர்கள் எதிர்க்கட்சிகள் அல்ல என்று அவர்களுடைய கட்சியினுடைய தலைவரே சொல்லியிருக்கிறார். அதை நம்முடைய எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் மறந்துவிட்டு இங்கே பேசுவது வேடிக்கையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியான நாங்களும், மற்ற இயக்கங்களும் வெளியே இருந்து நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி வருகிறோமேயொழிய, இந்த ஆட்சியிலே நாங்கள் பங்கேற்கவில்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, ஒரு ஆட்சியை ஆதரிக்கிற காரணத்தினாலேயே அந்த இயக்கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுக்கக்கூடாது என்று இந்த அவையில் எந்த விதியும் இல்லை என்பதையும் நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா ஒன்றைக் கேட்டார். ஆனால், மத்தியிலே பி.ஜே.பி. ஆட்சி நடைபெற்றபோது, அதிலே அந்த அமைச்சரவையிலும் நீங்கள் இடம்பெற்று, அப்பொழுது மைனாரிட்டியாக இருந்த பி.ஜே.பி. ஆட்சியை ஆதரித்தீர்களே, அப்போது நீங்கள் என்ன முறையைக் கடைப்பிடித்தீர்கள்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டுத் தீர்மானம் கொடுப்பதுபற்றி எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் குறிப்பிடுகிறார். இப்போது தோழமைக் கட்சியாக இருக்கிறவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்ததை அவர் சட்ட ரீதியாக செல்லாது என்று சொல்கிறாரா; அவை விதியைத் தெரிந்துகொண்டு சொல்கிறாரா என்பதை நான் அறிய விரும்புவதோடு, 2001 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றபோது காங்கிரஸ் கட்சி, அதேபோல கம்யூனிஸ்ட் கட்சிகள் அ.தி.மு.க.வோடு கூட்டணி அமைத்துதான் போட்டியிட்டு வெற்றி பெற்றோம், அப்போது உங்களோடு

தோழமையாக இருந்தபோதும் -- (குறுக்கீடு) தெரியாமல் பேசிக்கொண்டிருக்க வேண்டாம்; உங்களோடு தோழமையாக இருந்தபோதும் -- இதுபோல் வெட்டுத் தீர்மானங்களை கொடுத்தவர்கள் நாங்கள். அப்போது அந்தக் கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்த நிலையிலே, வெட்டுத் தீர்மானம் கொடுத்தது என்பது தவறு என்று கருதுகிறீர்களா? இதனைச் சட்ட ரீதியாகவும், விதி ரீதியாகவும் விளக்குவதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, டெல்லியிலே நீங்கள் minority சர்க்காரை, B.J.P. அரசை ஆதரித்திருக்கிறீர்களே என்று கேட்டார்கள். இப்போது நீங்கள் minority சர்க்கார் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா என்பதை நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுப்பது என்பது, ஒரு பிரச்சினையில் தாங்கள் வலியுறுத்த விரும்புகிற ஒரு கருத்தை வலியுறுத்துவதற்காகத் தருவதே தவிர, வெட்டுத் தீர்மானம் என்பது, நம்பிக்கையில்லாத் தீர்மானமும் அல்ல; ஒத்திவைப்புத் தீர்மானமும் அல்ல. ஒத்திவைப்புத் தீர்மானம் தருவதாக இருந்தால்தான், எதிர்க்கட்சியினர்தான் தரலாமே தவிர, ஆளுங்கட்சியினர் தரக்கூடாது என்பது சட்டமன்ற மரபு. அதேபோல, நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்றால், எதிர்க்கட்சிதான் தர முடியும். ஆகவே, அந்த அடிப்படையில், தோழமைக் கட்சிகள் வெட்டுத் தீர்மானங்களைத் தருவது, சட்டமன்ற மரபில், உலகமெல்லாம் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு முறைதான். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் கொடுப்பதில்லை என்பது, தங்களுடைய கட்சியின் சார்பாகத் தாங்களே வெட்டுத் தீர்மானங்களைத் தரத் தேவையில்லை என்பதே தவிர, மற்றத் தோழமைக் கட்சிகளுக்கு அந்த உரிமை உண்டு.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். "2001 ஆம்



ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரையிலே, நீங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, நாங்கள் வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், நீங்கள் சப்ஜெக்டிலே பேசுங்கள். எல்லாவற்றையும் ஒரு யூகத்திலே பேசாதீர்கள். சப்ஜெக்டிலே பேசுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** சப்ஜெக்டுக்கு வந்துவிடுகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மிகப் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்று, தனித்து ஆட்சியிலே இருக்கிற தகுதியை அன்றைக்குப் பெற்றிருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் தேர்தலிலே தோழமை கொள்வது என்பது வேறு; தேர்தல் முடிந்ததற்குப் பிறகு, நீங்கள் எதிர்க்கட்சியாக அமர்ந்து கொண்டிருப்பது என்பது வேறு. ஆனால், இப்போது அப்படிப்பட்ட நிலை அல்ல. நீங்கள் ஆதரித்து, இந்த ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பிரதான எதிர்க்கட்சியினுடைய மாண்புமிகு கொறடா அவர்கள், சில தவறான தகவல்களை இந்த அவைக்கு அளிக்கிறார்கள் என்பதை நான் உங்கள் கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரை, சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்னாலே ஏற்படுத்தப்பட்ட கூட்டணி அல்ல எங்கள் கூட்டணி. நாங்கள் இந்தத் தேர்தலுக்கு முன்பு, வாக்காளர்களைச் சந்திக்கின்றபோது, டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே நல்லாட்சி அமைய வாக்குத் தாருங்கள் என்றுதான், இந்தப் பக்கம் இருக்கின்ற எல்லோரும் கேட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஏற்றுத்தான் திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையை நிறைவேற்றுவதற்கு, நாங்கள் உத்தரவாதம் தருகிறோம் என்று மக்களிடம் சொல்லி, அந்தத் தேர்தல் அறிக்கைக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை முதலமைச்சராக ஆக்குவதற்கும்தான் வாக்குக் கேட்டோமேயொழிய வேறல்ல. தேர்தலுக்கு முன்னாலேயே அரசியல் ரீதியாக அங்கீகாரம் பெற்று, ஜனநாயக ரீதியாக ஒப்புதல் பெற்று, மக்கள் தந்த ஏகோபித்த

வாக்குகளின்மூலமாகத்தான் இந்தக் கூட்டணி வெற்றிபெற்றிருக்கிறது. எனவே, மூன்றில் இரண்டு பங்கு இடங்களைப் பெற்று, அறுதிப் பெரும்பான்மை பெற்ற கூட்டணிதான் இந்தக் கூட்டணி. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இது ஏதோ அரசியல் சௌகரியத்திற்காகவோ, அரசியலினுடைய நிர்ப்பந்தத்திற்காகவோ, ஆட்சியிலும் அதிகாரத்திலும் எப்படியாவது அமர வேண்டுமென்பதற்காகவோ ஏற்படுத்தப்பட்ட கூட்டணி அல்ல. தமிழகத்திலே இருக்கின்ற மூன்றில் இரண்டு பங்கு majority வாக்காளர்களுடைய ஆதரவைப் பெற்று அமர்ந்திருக்கின்ற ஆட்சி, இந்த ஆட்சி என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் திருவாளர்கள் செ.ம. வேலுசாமி, எல். ரவிச்சந்திரன், இரண்டு பேரும் சத்தம் போட்டுக்கொண்டேயிருக்கிறீர்கள்!

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்ன கருத்திலே, இந்த ஆட்சியில் தலைமைப் பொறுப்பை யார் ஏற்கவேண்டும் என்ற முறையிலே நீங்கள் வாக்குச் சேகரித்ததாகச் சொன்னீர்கள். அதற்குள்ளே நான் நுழையவில்லை. ஆனால், இப்போது இருக்கிற நிலைகளே வேறு. அதைத்தான் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டினேனேதவிர, அதையே நான் மீண்டும் பேசுவதற்கு, இந்த மாமன்றத்தில் நேரம் இல்லாத காரணத்தினாலே, விரும்பவில்லை.

தந்தை பெரியார், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் வாழ்ந்த மண்ணிலேயிருந்து நான் வந்திருக்கிறேன். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள், ஆதி திராவிடர் சமுதாயம், அடித்தளத்திலேயிருக்கிற சமுதாயம் வாழ்வதற்காக, அன்றைக்குக் குரல் கொடுத்து, இந்தச் சமுதாயத்தில் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கி, ஆதி திராவிடர் சமுதாயத்தில், அடித்தளத்திலேயிருக்கிறவர்களுக்கு உயிரோட்டத்தைக் கொடுத்தவர். தந்தை பெரியார் அவர்களுடைய சிலை உடைக்கப்பட்டதற்குப் பிறகு, அதை உடைத்தவர்கள்மீது கடுமையான சட்டங்கள் பாயவேண்டும். அதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்துகள் எதுவுமில்லை. குண்டர் சட்டத்திலேகூட அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். கடந்த 22 ஆம் தேதியன்று, ஞாயிற்றுக்கிழமை பகல் 12-00 மணியளவில் கடலூர் மாவட்டத்திலே, நெய்வேலியில் உள்ள ஆலயத்திற்குள், 6 பேரைக் கொண்ட கும்பல் ஒன்று நுழைந்து, இரும்புத் தடியால் கோயிலைச் சேதப்படுத்தி,



கோயிலிலே அங்கிருந்த விநாயகர் சிலையையும் உடைத்துவிட்டு, கோயிலிலே அர்ச்சகராக இருக்கிற வயது முதிர்ந்த குருமூர்த்தி என்பவரின் பூணூலையும் குடுமியை அறுத்துவிட்டு, அவர் சாத்தியிருந்த பூணூலையும் அறுத்துவிட்டுச் செல்கிற ஓர் அவல நிலை தமிழகத்திலே உருவாகியிருக்கிறது. அர்ச்சகர்களாக இருந்து, அந்த ஆலயப் பணிகளை ஆற்றுகின்றவர்களுக்கு, ஒரு பாதுகாப்பற்ற நிலை தமிழகத்திலே உருவாவதற்கு என்ன காரணம்? இதற்கு முன்னாலே, ஈரோடு மாவட்டத் தலைநகரமாக இருக்கிற ஈரோட்டில்கூட, சிலைகள் உடைக்கப்பட்டபோது, அர்ச்சகர்களை வழியிலே நிறுத்தி, குடுமிகள் அறுக்கப்பட்டதும், பூணூல்கள் அறுக்கப்பட்டதும், வருந்தத்தக்கது மட்டுமல்ல; அடித்தளத்திலே இருக்கிற இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்குப் பாதுகாப்பில்லாத நிலை, இந்தத் தமிழகத்திலே உருவாகியிருக்கிறது. தமிழகத்திலே நாம் ஏன் பிறந்தோம் என்று நினைக்கின்ற நிலையை, இந்த ஆட்சி உருவாக்கியிருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்கின்றபோதுதான், அவர்களுக்கு முழுப் பாதுகாப்பை இந்த ஆட்சி தரப் போகிறதா அல்லது ஆட்சியாளர்கள் அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்போகிறார்களா என்பதை நான் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-25

அதேபோல, மத்தியிலே இருக்கின்ற நிதியமைச்சர் சிதம்பரம் அவர்கள் பேசுகிறபோது, அனைவருக்கும் கடன் வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைய நிலையைப் பார்க்கிறபோது, UCO, I.C.I.C.I. போன்ற பல்வேறு வங்கிகளிலே--காவல் துறை மானியம் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது--காவல் துறையைச் சார்ந்தவர்களுக்குக் கடன் அளிக்க முடியாது என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள், அனைவருக்கும் கடன் வழங்கப்படும் என்று உறுதி அளித்ததாக மாண்புமிகு எதிர்க்கட்சினுடைய கொறடா அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். படிக்கின்ற மாணவர்கள் அனைவருக்கும் நிச்சயமாகக் கடன் உதவி வழங்கப்படும் என்றுதான் அவர் சொல்லியிருக்கின்றாரே தவிர, விண்ணப்பம் போடுகின்றவர்களுக்கெல்லாம் கடன் கொடுக்கப்படும் என்று அவர் கூறவில்லை. தகுதியானவர்களுக்குக் கடன் வழங்கப்படும் என்றுதான்

கூறியிருக்கின்றார். மாண்புமிகு கொறடா அவர்கள் தவறாக எடுத்துக்கொண்டு, அதை நிதித் துறை மானியத்திலே பேச வேண்டும்; நாடாளுமன்றத்திலே பேச வேண்டிய விஷயத்தை, காவல் துறை மானியத்தின்மீது, இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்துவிட்டது. (கூச்சல்-குழப்பம்) முடியுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முடிப்பதற்குள்ளே, காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசி, நான் ஏதோ ஒரு தவறான கருத்தைச் சொன்னதைப்போல, இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார். நான் இங்கே சொல்வது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** For every action, there will be a reaction என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Reaction உங்களுக்குத்தான் தெரியுமா? எல்லோருக்கும் reaction; நீங்கள் பண்ணுவதைப் பொறுத்து, இங்கேயும் reaction இருக்கும். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுட்டிக்காட்டியது, காவல் துறையிலே. கேட்பது வேறு ஆட்களுக்கு அல்ல; எங்கேயோ தெருவிலே திரிகின்றவர்களுக்கு அல்ல; காவல் துறையிலே தங்களை அர்ப்பணித்துக்கொண்டு, ஒரு நாளைக்கு 20 மணி நேரம் உழைத்துக்கொண்டு, வீட்டிலே உணவு உண்ணச் செல்வதற்குக்கூட வாரத்தில் ஒரு நாள், இரண்டு நாட்கள் அல்லது காலையிலோ, மாலையிலோ சென்று, உணவு அருந்தக்கூடிய அந்தக் காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு. தங்களுக்காக, தங்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்காக, அந்த வங்கிகளிலே கடன் கேட்கிறபொழுது, அந்த வங்கிகளின்மூலமாக அவர்களுக்குக் கடன் தர இயலாது என்ற ஒரு சட்டமே போடப்பட்டிருக்கிறதென்று சொன்னால், அதை மாற்றுவதற்கு, மத்திய அரசை வலியுறுத்துவதற்கு, இந்த அரசு தயாராக இருக்கிறதா என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப்போல. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையிலே பணிபுரிபவர்களுக்குக் கடன் கொடுக்கப்பட



வேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், கடன் கொடுக்கின்றபோது, காவல் துறைக்குச் சில நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இன்றைக்குச் சென்னையிலே இருக்கின்ற ஒரு காவல் துறை அலுவலர் நாளைக்கு கன்னியாகுமரிக்கு மாற்றப்படலாம்; கன்னியாகுமரியிலே இருந்து ஒருவர் தூத்துக்குடிக்கு மாற்றப்படலாம். அவர்கள் ஓர் ஒப்பந்தம் கேட்கிறார்கள். என்ன ஒப்பந்தம் என்று சொன்னால், கடன் கொடுக்கின்றபோது, அந்தக் கடன் வாங்குகின்றவர்கள் எங்கே போய்ப் பணியாற்றினாலும், அந்தக் கடன் அந்த District Superintendent of Police மூலமாகத் திருப்பிச் செலுத்தப்படுமா என்று ஒரு வினாவைக் கேட்கிறார்கள். அந்த வினாவிற்குப் பதில் அளிக்க முடியாததால்தான், சிலருக்குக் கடன் கொடுக்க முடியவில்லை என்பதை நான் பணிவன்போடு இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், திரு. செங்கோட்டையன், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் ஒரு தவறான தகவலை இங்கே தந்து கொண்டிருக்கிறார். அவர்கள் எங்கு பணியாற்றினாலும் அரசுப் பணியை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எங்கு வேண்டுமானாலும், அவர்களுடைய சம்பளத்தைப் பிடிப்பதற்கு, அந்த வங்கிகளுக்கு அதிகாரம் இருக்கிறது. அவர்களுக்குக் கடன் தரமுடியாது என்று முழுமையாக அந்த வங்கிகளிலே சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல, அரசியல்வாதிக்கும் தர முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள், ஆகவேதான், அதைச் சொல்ல விரும்புகிறேன். உங்களுக்கும் கிடைக்காது; அப்படிப்பட்ட மூன்று, நான்கு விதிமுறைகள் அதிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-30*

அதேபோன்று, இதே மாமன்றத்திலே, காவல் துறை மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது, இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் பேசியதற்கு, மாமுல் வாங்குவதையே மாமுலாகக் கொண்டிருக்கின்றவர்கள் என்று அன்றைக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. அவையெல்லாம் குறைக்கப்பட வேண்டுமென்று சொன்னால்-- இன்றைக்குக்கூட செய்தித்தாளில் ஒரு செய்தி வந்திருக்கிறது: "போலீஸ் துறையில், இலஞ்ச இலாவண்யத்தை ஒழிக்க வேண்டும் என்று

சொன்னால், நாம் அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்க வேண்டும்; அவர்களுக்கு இருக்கிற குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு, அந்தக் குறைபாடுகளை நாம் என்றைக்குக் களைகிறோமோ, மற்றவர்களுக்கு இருக்கிற சலுகைகளைப்போல, இந்தக் காவல் துறையில் உள்ளவர்களுக்கும் சலுகைகளை அளிக்கிறோமா, அன்றைக்குத்தான் இலஞ்சம் வாங்குவதைத் தடுக்க முடியும்'' என்று ஒரு கட்டுரை எழுதப்பட்டு, தமிழக அரசுக்கு ஒரு யோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

அதைப்போல, சென்னையிலேகூட, இன்று காலை 'தினமலர்' பத்திரிகையைப் பார்க்கிறபோது, அந்தப் பத்திரிகையிலே, லாரியை மடக்கி எப்படிப் பிடிப்பது என்பதும், ஸ்கூட்டர்களில் வருகிறவர்களைப் பிடிக்கின்றபோது அவர்கள் என்ன அவலத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதும், பணம் கேட்கிறபோது, தர மறுக்கின்ற அந்தச் செய்திகூட வந்திருக்கிறது. ஆகையினாலே, எல்லாக் காவல் துறை அதிகாரிகளும் அப்படிப்பட்டவர்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால், ஒரு சிலர் செய்கின்ற தவறுகளின் அடிப்படையில், இதுபோன்ற நிலை ஏற்படுவதைத் தவிர்க்கின்றவகையிலும், அவர்களுக்கு இருக்கின்ற வறுமையைக் குறைக்கின்றவகையிலும், அவர்களுடைய குடும்பங்கள் இந்த அரசுக்காக, இந்தத் தமிழகத்திற்காக, தமிழகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்காக, அயராது உழைத்துக் கொண்டிருக்கின்ற அவர்களுக்கு உதவி செய்கின்றவகையிலேயும், அவர்களுடைய வாழ்க்கையிலே மறுமலர்ச்சியை உருவாக்குவதற்கு இந்த அரசு புதிய திட்டங்களைத் தீட்டவேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பாதுகாப்பு என்பது, குறைந்த நிலையிலே இருக்கிறது என்று நாங்கள் பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில், இங்கேயிருக்கின்ற டி.ஜி.பி. போன்றவர்கள், ஒரு அறிக்கையை விட்டிருக்கிறார்கள்; "அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு, எது தேவையோ அது அளிக்கப்பட்டிருக்கிறது" என்று ஒரு தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது. அவர்களுடைய இல்லத்திற்குக் காவலுக்குக் காவல் துறை அதிகாரிகள் யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அங்கு பக்கத்திலேயிருக்கின்ற, காவல் நிலையத்திலே இருக்கின்ற retire-ஆகிற வயதிலேயுள்ள ஒரு Head Constable, ஒரு Constable; அங்கே ஆயுதங்களைத் தாங்கி அவர்களால் நிற்க முடிகிறதா என்றால்,



முடியவில்லை. ஆயுதப் பயிற்சியினை மறந்த நிலையில் இருக்கின்றவர்களையெல்லாம், அவர்களுக்குப் பாதுகாப்பு என அளித்துள்ளது. இந்த நாட்டிலே ஏறத்தாழ ஒன்றரை கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர்மூச்சாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் (மேசையைத் தட்டும் ஒலி) பாதுகாப்புக் கொடுப்பதிலே, இந்த அரசு அக்கறை காட்டவில்லை. ஆனால்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பேச ஒதுக்கப்பட்ட நேரம் 30 நிமிடங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும், சும்மா சப்தம் போடக்கூடாது. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 30 நிமிடங்கள். நீங்கள் எடுத்திருப்பது 36 நிமிடங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார். (குறுக்கீடுகள்) சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ரவிச்சந்திரன், உட்காருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில், நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இந்த ஆட்சியைப் பொறுத்த வரையிலும், தமிழகம் ஆயுதக் கலாச்சாரமாக மாறிக் கொண்டிருக்கின்றது. மணல் கொள்ளையடிக்கப்படுகிறது. கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது. அதேபோல, பல்வேறு ஆயுதங்கள் இங்கிருந்து கடத்தப்படுகின்றன. தீவிரவாதம் தமிழ்நாட்டிலே தலைதூக்கியிருக்கிறது. ஆகவே, மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சி தமிழகத்தில் என்றைக்கு மலருகிறதோ, அன்றைக்குத்தான் தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக உருவாகும் என்று சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. விஜயகுமார், உங்களுக்கு 10 நிமிடங்கள்தான்.

***திரு. பெ.சு. விஜயகுமார்:** இன்றைக்கு, காவல் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு தந்த, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும், தளபதி அவர்களுக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும்,

எங்கள் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், காங்கிரசின் மாநிலத் தலைவர் எளிமைக்குச் சொந்தக்காரர், ஏற்றமிகு தலைவர் நடமாடும் காமராஜர், ஐயா கிருஷ்ணசாமி அவர்களுக்கும், தன்மானத் தலைவர், ஈ.வி.கே.எஸ். அவர்களுக்கும், இளைய ஐயா வாசன் அவர்களுக்கும், மத்திய நிதியமைச்சர் திரு. சிதம்பரம் அவர்களுக்கும், சட்டப் பேரவை காங்கிரஸ் தலைவர், அமைதியே உருவாக, ஆற்றலே செயலாக, எடுத்த பணியை முடித்திடும் எங்கள் சுதர்சனம் நைனா அவர்களுக்கும், துணைத் தலைவர் யசோதா அவர்களுக்கும், அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும், திரு. ஞானசேகரன் அவர்களுக்கும், காங்கிரஸ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், மின்சாரத் துறை அமைச்சர் ஆற்றல்மிகு ஆற்காட்டார் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர், சிரிக்க வைத்து சிந்திக்க வைக்கின்ற அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட அமைச்சர், ஏவாமலே பாயும் ஏவுகணையாம் கலைஞரின் கைவேலாம், தளபதியின் தங்க வாளாம், எங்கள் மாவட்டத்தின் வழிகாட்டியாம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை, திருவையாறு, நாங்குனேரி, செய்யாறு சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும், இம்மாமன்றம் இயங்கக் காரணமாக இருக்கின்ற அவை முன்னவர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், காவல் துறை, பத்திரிகைத் துறை மற்றும் தொலைக்காட்சித் துறை நண்பர்கள் அனைவருக்கும் என் சிரம்தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமன்றத்திற்கு அனுப்பிவைத்த என்னுடைய போளூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

சோனியா காந்தி, கண் கண்ட கடவுள்; காங்கிரசின் கலங்கரை விளக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)* 27 சதவிகித இட ஒதுக்கீட்டுத் தடையை எதிர்த்து, சுப்ரீம் கோர்ட்டிலே மே 8-லே வழக்கு நடத்த ஆவன செய்துள்ள தங்கத் தாய்; பிரதமர் பதவியைத் துச்சமெனத் தூக்கி எறிந்த, பதவி ஆசை இல்லாத இன்னொரு மகாத்மா காந்தி; இன்றைக்கு இந்தியாவை நல்வழிப் பாதையிலே அழைத்துச் செல்லும் இன்னும் ஓர் இரும்பு மங்கை இந்திரா காந்தி; வளர்ந்த நாடுகளுக்குச் சமமாகப் பொருளாதாரத்திலே, விஞ்ஞானத்திலே, கணினித் துறையிலே நாட்டை முன்னேற்றிய இன்னும் ஒரு ராஜீவ் காந்தி; P.S.L.V. 8 ராக்கெட்டை ஏவுகின்ற திறத்திலே, அணுவை ஆக்கப் பாதையிலே



பயன்படுத்துவதிலே இந்திய ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும் காப்பதிலே முன்னுதாரணமாகத் திகழும் அன்னை சோனியா காந்தி.

எந்த மாநிலத்திலே தன் கண்ணுக்கும் மேலான கணவனை இழந்தாரோ, தனக்குப் பூவும் இல்லை, பொட்டும் இல்லை என்றாலும்கூட, இந்திய மக்களை முன்னேற்றுவதிலே, தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ, தானைத் தலைவர் கலைஞர் போடுகின்ற எந்தத் திட்டமானாலும், அதற்கு ஒப்புதல் தந்து, சென்னைக் கடல்நீரைக் குடிநீராக்க 2 ஆயிரம் கோடி ரூபாய், சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்கு 5 ஆயிரம் கோடி ரூபாய், இந்த ஆண்டுத் திட்டப் பணிகளுக்காகக் கூடுதலாக 14 ஆயிரம் கோடி ரூபாய் தந்து மகிழும் தங்கத் தலைவி, எங்கள் அன்னையே, அனைவருக்கும் கல்வி, வேலை உத்தரவாதச் சட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டம், குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புச் சட்டம் தந்த அன்னை சோனியா காந்தி தாயே, நீ இருக்கின்ற திசை நோக்கி வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திருவண்ணாமலையிலே, அண்ணாமலையாரின் பஞ்ச முகத்தைப் பார்த்திருக்கிறேன். ஐந்தாம் முறை முதல்வராக ஆட்சிப் பொறுப்பேற்ற உங்கள் திருமுகத்தைப் பார்க்கிறேன். ஐந்து முறை முதல்வர், 50-வது ஆண்டு விழாக் காணும் முதல்வர் ஆட்சியில், பொருளாதார முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி, ஏழை எளிய பாமர மக்களுக்கு ஏற்றமிகு திட்டங்கள், நலிந்த குடும்பம், நடுத்தர மக்களுக்கும், ஏழை விவசாயிக்கும், கூலித் தொழிலாளிக்கும் எண்ணற்ற திட்டங்கள், மாணவர்கள் மதிய உணவிலே சமச்சீர் உணவாக 3 முட்டைகள் என இப்படிப்பட்ட திட்டங்கள் இந்தியாவிலே, பிற மாநிலங்களிலே இருக்கின்றனவா என எண்ணிப் பார்க்கிறேன். தொழிலாளர்கள் ஆட்சி நடத்துகின்ற மேற்கு வங்கத்திலேகூட இன்னும் கை ரிக்ஷா ஒழிக்கப்படவில்லை. இந்த பட்ஜெட்டிலே, கல்விப் பயிலும் மாணவர்களினுடைய எதிர்காலத்தைக் கணக்குப் போட்டுப் பார்த்து, தொலைநோக்குப் பார்வையோடு, 100 கோடி ரூபாயிலே உலகத் தரத்திற்கிணையாக நவீன நூலகம் ஒன்றை, சென்னையிலே அமைக்கவிருக்கின்ற பணியைப் பார்க்கும்போது,

***"அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டலும்–ஆயினும்***
***ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"***

என்கின்ற அந்தப் பொன்மொழிக்கு ஏற்றாற்போல, இன்றைக்குத் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையிலே கொண்டு சென்றுகொண்டிருக்கிற தலைவரை வணங்குகிறேன்.

அரசுப் பள்ளி மாணவர்கள், தாம் படிக்கின்ற காலங்களில், ஆங்கிலத்தில் பேசுகின்ற திறனை வளர்க்க மொழிப் பயிற்சிக் கூடங்கள் அமைக்க உத்தரவிட்டிருக்கும் தங்கள் சர்வதேசப் பார்வையைப் பாராட்டுவது எனது கடமையாகும். அனைத்து நூல்களும் ஓரே இடத்தில் கிடைக்க மாபெரும் புத்தகப் பூங்கா அமைத்திட, புத்தக வெளியீட்டாளர்களுக்கு அரசு நிலம் வழங்கி, தங்களுடைய சொந்தப் பணத்திலே ஒரு கோடி ரூபாய் வழங்கிய கருணை உள்ளத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைப் பொன்கொழிக்கும் பூமியாக மாற்றுகின்ற பல்வேறு திட்டங்களைத் தந்துகொண்டிருக்கின்ற தலைவரே, கலைஞரே, தினம் தினம் ஒரு தொழிற்சாலை திறக்கிறீர்கள்; மென்பொருள் பூங்கா அமைக்கிறீர்கள்; தமிழகம் பல்வேறு பரிணாம வளர்ச்சிகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறது.

தஞ்சைத் தரணியை ஆண்ட இராஜராஜ சோழன், தமிழ் வளர்த்தான்; தமிழுக்குப் புத்துயிர் தந்தான்; தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டினான். தனயன் இராஜேந்திர சோழனோ, கடல் கடந்தான்; கங்கை கொண்டான்; கடாரம் வென்றான்; ஜாவா, சுமத்ரா, பர்மா, இலங்கையை வென்றான்; கங்கைகொண்ட சோழபுரம் அமைத்தான். இப்போது தங்களது தனயன் தளபதியோ, சென்னையிலே பல வளர்ச்சிப் பணிகளோடு, மேம்பாலங்களைச் சர்வதேசத் தரத்திற்கு இணையாகக் கட்டி, சிங்காரச் சென்னையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். இந்தியாவிலே தமிழகத்தை முன்னோடி மாநிலமாக்க, உள்ளாட்சியிலே நல்லாட்சி நடத்துகின்றார். மாநிலம் முழுவதும், மாவட்டம்தோறும் ஆய்வுப் பணிகளை நடத்தி, மக்களின் தேவைகளையும், அதிகாரிகளுடைய சேவைகளையும் சீர்செய்து வருகின்றார். தளபதியை வணங்குவதிலே பெருமைப்படுகிறேன்.

உதயசூரியனை எந்தச் சக்தியாலும் தடுக்கவோ, மறைக்கவோ முடியாது. உதயசூரியன் எங்கள் கையிலே இருக்கிறது. காங்கிரஸ் பேரியக்கத்தின் கையில் இருக்கிறது. அன்னை சோனியா காந்தியின் கையில் இருக்கிறது. தமிழக காங்கிரஸ் தங்கள் பின்னால் இருக்கிறது. காங்கிரஸ் தோள்மீது கை போட்டு, அருகிலே அமர வைத்து, அழகு பாருங்கள். யாரும் அசைக்க முடியாது. தமிழக ஆட்சியை, அரசியலை மாற்ற நினைக்கும் அம்மாக்கள் அடிக்கடி சொல்லுகின்ற மைனாரிட்டி என்ற வார்த்தைக்கு அர்த்தமே இல்லாமல் போய்விடும்.



முற்பகல் 11-40

காவலர் பணி என்பது, இப்போது இந்த நாட்டிற்கு மிகத் தேவையான பணி. ஓர் அரசு சீராகச் செயல்படுகிறது என்று சொன்னால், அதற்குக் காவல் பணி முக்கியம். தமிழ்நாட்டிலே இருக்கின்ற காவலர்களுக்கு, 24 மணி நேரப் பணியாக இருக்கிறது; அதைச் சீர் செய்ய வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம், ஆசிரியர்களைக் கணக்குப் பார்க்கின்றபோது, மிகவும் குறைவாக இருக்கிறது; உயர்த்திக் கொடுக்க வேண்டும். காவலர்களுக்கு நவீன குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டும். காவலர்களுக்குப் பாதுகாப்புப் பணிக்கு புதிய வாகனங்களைக் கொடுக்க வேண்டும். Risk allowance என்று தினமும் காவலர்களுக்கு வெறும் நான்கு ரூபாய் கொடுக்கின்றீர்கள். இந்த நான்கு ரூபாய் என்பது ஆங்கிலேயர் காலத்திலே நிர்ணயிக்கப்பட்டது. அதைத் தயவுசெய்து 40 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கலைஞரைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை மக்கள் புகார் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுப்பதில்லை. அவர்களை மிரட்டுகின்றார்கள். அவர்கள் உட்காருவதற்குக்கூட, bench கிடையாது; நாற்காலி கிடையாது. எனவே, அந்த நிலையெல்லாம் மாற வேண்டும். கள்ளச் சாராயம், கந்து வட்டி, மீட்டர் வட்டி இவையெல்லாம் மாற வேண்டும். அதனால்தான் தற்கொலை, கொலைகள் எல்லாம் நடக்கின்றன. தவறு செய்யும் குற்றவாளிகள், கேடி, திருடன், தாதா கும்பல் ஆகியோருக்கு உதவும் போலீஸாரைக் கண்டுபிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, பதவி நீக்கம் செய்ய வேண்டும். தவறான வழியிலே சொத்து சேர்க்கின்ற அதிகாரிகள்மீது, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். காவலர்களுடைய பிள்ளைகளுக்குத் தனியாகக் கல்விக் கூடம், கல்லூரி, மருத்துவ வசதி செய்து தரப்பட வேண்டும்.

குடும்பப் பிரச்சினைகள் என்று வருகின்ற புகார்களை நிதானமாக விசாரிக்கின்ற அந்தத் தன்மை வர வேண்டும். பெண்கள் காவல் நிலையம் திறந்ததற்குப் பிறகு, குடும்பப் பிரச்சினைகள் பெருகிவிட்டன. இதிலே ஆண் காவலர்களையும் இணைக்க வேண்டும். வரதட்சணைப் புகார் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. கணவன், மனைவி பிரச்சினை என்று வரும்போது, இரண்டு குடும்பங்களையும் அழைத்து விசாரித்து, கால அவகாசம் தந்து முடிவு எடுக்க வேண்டும். காவல் துறையிலே Petition கொடுத்தாலே, 'cover கொடுத்தால்தான் நடவடிக்கை' என்ற நிலை மாற வேண்டும். சிவகாசி ஜெயலட்சுமி, மோப்ப நாய்போல யார் யாரையெல்லாம் காண்பித்தாரோ, அவர்கள்

எல்லாம் இன்றைக்குக் குற்றவாளிகள். முகமது அலி, முத்துக் கருப்பன் போன்றவர்கள் எல்லாம் எல்லைமீறி செயல்பட்டார்கள் என்பதற்கு முதல்வரே, நீங்களே சாட்சி. உங்கள் கழுத்திலே கைவைத்த அந்தக் காவல் துறை அதிகாரிகள்மீது, நீங்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு மணி நேரம் உங்கள் வீட்டிலே காத்திருந்ததாக நாங்கள் பத்திரிகையிலே பார்த்தோம். அதற்கெல்லாம் இடம் கொடுக்காதீர்கள் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பீரோ புல்லிங் என்பது, 7 ஆண்டுகளாக நடந்து வந்தது. இந்தப் பத்து மாதங்களிலே, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்போது 1,017 பவுன் நகைகளை, 69 பேருக்கு நீங்கள் திருப்பிக் கொடுத்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சுமதி என்ற எஸ்.ஐ. தவறான உறவின் காரணமாகத் தற்கொலை செய்துகொண்டார். எனவே, அவர்களுக்கெல்லாம் சரியான பாடம் புகட்ட வேண்டும். கள்ளச் சாராயம், திருட்டு, விபச்சாரம் போன்ற குற்றங்கள் வளர்வதற்குக் காவல் துறையிலே இருக்கும் சில புல்லுருவிகளே காரணம். அவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செய்யாறிலே, Traffic Police பிரிவை நீங்கள் அமைத்துத் தர வேண்டும். வெம்பாக்கத்திலே ஒரு காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும். சந்தவாசலிலே மிகவும் பழமையான கட்டடம் இருக்கிறது. அதைப் புதுப்பித்துத் தர வேண்டும்.

ஈரோட்டிலே இன்று பார்க்கிறோம்; 25 விபச்சாரிகளையும், 20 புரோக்கர்களையும் கைது செய்திருக்கிறார்கள். அந்தத் துறையிலே அவர்களுக்கு உதவியாக இருந்த 3 காவலர்களுக்கு மீண்டும் இரண்டே மாதங்களிலே பதவி கொடுக்கப்பட்டிருப்பதாக இன்றைக்கு நாளிதழிலே செய்தி வந்திருக்கிறது. அதையெல்லாம் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டும்.

முக்கியமான குற்றவாளிகள், தீவிரவாதிகளைப் பிடிக்கின்றபோது, நவீன ஆயுதங்களைக் காவலர்களுக்கு நீங்கள் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

'Orderly வேலை' என்று காவலர்களுக்குத் தரப்படுகிற அந்த வேலையில், பல வண்ணக் கனவுகளோடு காக்கி உடையிலே சாதனை புரிய வேண்டும் என்று வரும் காவலர்களை, புடலங்காய் வாங்குவதற்கும், புடவை சலவை செய்வதற்கும், கல்விக் கூடத்திற்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லவும் பயன்படுத்துகிற அந்த முறை ஒழிய வேண்டும்.



என்னுடைய தொகுதிக்கு வருகிறேன். 100 சதவிகிதம் விவசாயிகள் வாழ்கின்ற தொகுதி. தொழிற்பேட்டை, தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும். போளூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றித் தர வேண்டும். போளூர் தொகுதியிலே ஓர் அரசுப் பெண்கள் கலைக் கல்லூரி அல்லது விவசாயக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும். போளூர் நகரினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க செண்பகத்தோப்பு அணைக்கட்டைச் சீர்படுத்தி, தண்ணீர் கொடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு ஆயிரம் பஸ்கள் வந்து செல்கின்ற அந்த பஸ் நிலையத்திலே, 10 பஸ்கள் மட்டுமே நிற்க முடியும். எனவே, அந்த பஸ் நிலையத்தை நவீன பஸ் நிலையமாக மாற்றித் தர வேண்டும். நீண்ட நாட்களாகக் கட்டப்படாமல் இருக்கிற மேல்வல்லம் மற்றும் சேதாரம்பட்டு ஆற்றுப் பாலத்தைக் கட்டித் தர வேண்டும். என்னுடைய தொகுதியிலே நவோதயா பள்ளி ஒன்றைத் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். போளூரிலே பாதாளச் சாக்கடைத் திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும். ஜமுனாமருதூர் மலை அடிவாரப் பகுதியிலே, புதூரில் 600 மீட்டர் அளவிற்குத் தடுப்புச் சுவரைக் கட்டித் தர வேண்டும். போளூர் நகரிலே ஆங்கிலேயர் காலத்திலே கட்டப்பட்ட தாலுகா அலுவலகம், Court, காவல் நிலையம், Forest Office, Register Office இவற்றையெல்லாம் புதியதாகக் கட்டித் தர வேண்டும். போளூர் சுகாதாரத் துறையிலே, O.P. என்ற section இருக்கின்றது. அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்பட வேண்டும். திருவண்ணாமலை நகருக்குக் குடிநீர் கொடுத்துக் கொண்டிருக்கின்ற, ஆயிரக்கணக்கான விளைநிலங்கள் பயிரிடக் காரணமாக இருக்கின்ற, சாத்தனூர் அணையைக் கட்டிய பெருந்தலைவர். . .

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விஜயகுமார், சீக்கிரம் பேசி முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** பேசி முடித்துவிடுகிறேன் தலைவரே. கர்மவீரர், முன்னாள் முதலமைச்சர் காமராஜருக்கு அங்கே திருவுருவச் சிலை அமைத்துத் தரவேண்டும். விஸ்வகர்மா சாதி மக்கள், பெரும்பாலும் தினக் கூலிகளாக இருக்கின்றார்கள். அந்தச் சாதியை நீங்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்கவேண்டும்.

தமிழகத்திலே, பள்ளிக் கல்வித் துறையிலே, 'சர்வ சிக்ஷா அபியான்' என்ற திட்டம் இருக்கின்றது. கடந்த ஆண்டு 500 பட்டதாரி ஆசிரியர்களைப் பள்ளிக்கு அனுப்பினீர்கள். இன்னும் ஓர் ஆயிரம்

பேரை, இந்த ஆண்டு அனுப்பவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த தலைவர், இராமசாமி படையாச்சியார் அவர்களின் பிறந்த நாள், நினைவு நாளை அரசு சார்பாகக் கொண்டாட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற தரணி சர்க்கரை ஆலையில் பதிவு செய்கின்ற கரும்புக்கு 1,025 ரூபாய், பதிவு செய்யாத கரும்புக்கு 802 ரூபாய்; அதேபோன்று, புரோக்கர்மூலம் வாங்குகின்ற கரும்புக்கு 600 ரூபாய் எனக் கொடுத்து, அங்கிருக்கின்ற விவசாயிகளுடைய வயிற்றிலே அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எரிபொருளாக வாங்குகின்ற, மானாவரியாக விளைகின்ற முள் விறகுக்கு டன்னுக்கு 1,500 ரூபாய் கொடுக்கின்றார்கள். மேலும், பதிவு செய்யப்பட்டு 18 மாதங்களுக்கு மேல் ஆகியும், இன்னும் கரும்புக்கு cutting order கொடுக்கவில்லை. அதேபோன்று, களம்பூர் பகுதியிலே இருக்கின்ற கரும்புகளையெல்லாம், இப்போது அங்கிருக்கின்ற நவீன அரிசி ஆலைகளுக்கு விறகாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி நேற்றுகூட, 'நம் தினமதி' பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விஜயகுமார் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன். (குறுக்கீடு) சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மருத்துவச் செலவாக, இந்த அரசு 15 ரூபாயைத்தான் தருகின்றது. அவர்களுக்கு வீடோ, வீட்டுமனையோ இந்த அரசு ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இதுவரையிலே பேச வாய்ப்பு தந்த அவைக்கு நன்றி சொல்லி, அரியலூரில் காவல் நிலையத்திற்கும், தீயணைப்பு நிலையத்திற்கும் கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று போளூரிலும், செங்கத்திலும் D.S.P. இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு அலுவலகமோ, குடியிருப்போ இல்லாத நிலையில், அவற்றையும் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். ஜெய் ஹிந்த்!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்.



***திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சாமை, வினை முடித்திட வேண்டுமென்கின்ற விருப்பம்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கண்ணப்பன், உங்களுக்கு 20 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** ஆளும் கட்சிக்கு நிறைய கருத்துகள் இருக்கின்றன. ஒருவருக்குத்தான் வாய்ப்பு வழங்கப்படுகின்றது குறைந்தது, 40 நிமிடங்களாவது பேசுவதற்கு நீங்கள் வாய்ப்புத் தரவேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மிக மிக முக்கியமான துறை. தலைவருடைய நிருவாகத்திலே, மிகச் சிறப்பாக இயங்குகின்ற துறையிலே எங்களுடைய கருத்துகளைச் சொல்ல நீங்கள் வாய்ப்பினைத் தரவேண்டுமென்று உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் பேசி முடியுங்கள்.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** சரி, பேசி முடித்துக்கொள்கிறேன். விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாத வீரம் நிரம்பிய நெஞ்சம் ஆகிய இவற்றைத் தன்னகத்தே கொண்டு, விடுமுறை இல்லாது உழைத்து, தமிழ்நாட்டை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் முதல்வர், 'விழி! எழு! இல்லையேல், வீழ்ந்துவிடுவாய்!' என எதிர்காலத் தலைமுறையை எச்சரிக்கை செய்து, தம் வாழ்நாளைத் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; இந்தியத் தாய் நாடான இந்திய நாட்டிற்கே அர்ப்பணித்துக் கொண்டு, அரும்பணியாற்றும், திராவிட இயக்கத் தம்பிமார்களின் ஆருயிர் அண்ணன், அனைவராலும் தலைவர் கலைஞர் என்று அன்போடு அழைக்கப்படுகின்ற நம்முடைய தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இனத்தின் எதிர்காலம், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், தலைவர் வழியிலே அயராது உழைத்திடும் இளைய தலைவர், தன்மானம் மிக்க தளபதி அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தின் இனமானப் பேராசிரியர் அவர்கள் வழங்கியிருக்கின்ற நிதிநிலை அறிக்கையிலே, காவல் துறை மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பை நான் பெற்றிருப்பதைப் பேறாக, மகிழ்ச்சியாகக் கருதுகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த மன்றத்திலே நான் மூன்று முறை பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றேன். ஒருமுறை கடந்த நிதிநிலை அறிக்கையிலே விவாதிக்கின்ற வாய்ப்பு. அதற்குப் பின்னாலே உயர்தனிச் செம்மொழியாம், தமிழ் மொழிக்கு மதிப்பு தந்த, நம்முடைய தன்மானம் மிக்க தலைவர் கலைஞர் அவர்கள், உயர் நீதிமன்றத்திலே தமிழ், வழக்குமொழியாக வரவேண்டுமென்று கொண்டுவந்த தனித் தீர்மானத்திலே பேசுகின்ற மற்றொரு வாய்ப்பு. அதைப்போல, 'Tamil Nadu Police is today rated as the topmost ranking police in the country' என்று சொல்கின்ற அளவுக்கு இன்று தமிழ்நாட்டின் காவல் துறைதான், இந்த ஆட்சிக் காலத்திலே, இந்தியாவிலே இருக்கின்ற காவல் துறைகளிலேயே முதன்மை பெற்ற காவல் துறையாக இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஒரு நற்பெயரைப் பெற்றுத் தந்துகொண்டிருக்கின்ற அந்தத் துறையின் தலைவராக இருக்கின்ற, அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, ஐந்தாவது முறையாக முதலமைச்சராக இருந்து, இந்தத் துறையை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற தமிழினத் தலைவர், எங்கள் ஆருயிர் அண்ணன் தலைவர் கலைஞர் அவர்களுடைய துறையிலே பேசுகின்ற வாய்ப்பு பெற்றிருக்கிறேன்.

*முற்பகல் 11-50*

இன்றைக்கு, நம்முடைய எதிர்கட்சியின் சார்பிலே, கொறடா அவர்கள் இங்கே கருத்துகளை எடுத்து வைத்தார்கள். நான் அதற்குள்ளே அதிகமாகப் போக விரும்பவில்லை. ஏனென்று சொன்னால், போவதற்கு ஒன்றும் இல்லை. ஆகவே, நான் குறையாகச் சொல்லவில்லை. ஏனென்றால், இந்த ஆட்சியிலே குற்றங்களே கிடையாது; குறைகளே கிடையாது; அதனால் அவர் ஒன்றும் சொல்வதற்கில்லை. அதைத்தான் நான் சொல்கிறேனே தவிர, இந்த ஓராண்டுக் காலத்திலே காவல் துறை எப்படிச் செயல்படுகிறது என்றால், 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்றில்லாமல், தலைவர் நினைப்பதை முடிக்கின்ற துறையாக இன்றைக்குக் காவல் துறை இருக்கிறது. ஒரு காலத்திலே 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்றிருந்த காவல் துறை, இன்றைக்கு 'நினைத்தேன், முடித்தேன்' என்கிற அளவிற்குச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற காவல் துறையாக இருக்கிறது.

காவல் துறையைப் பற்றிச் சொல்கிறபோது, காவல் துறை நடைமுறைப்படுத்துகின்ற சட்டங்களைப் பற்றிச் சொல்கின்றபோது, இந்த நாட்டு மக்களுக்கு ஒவ்வாத சட்டங்களை யார் கொண்டு



வந்தாலும் சரி, அது எத்தகைய அரசாக இருந்தாலும் சரி, எவ்வளவு வலிமை மிக்க, வல்லமை மிக்க அரசாக இருந்தாலும், அந்த அரசு, அந்தச் சட்டத்தை மக்களுடைய ஆதரவு இல்லாமல் நிறைவேற்ற முடியாது என்ற வரலாற்றை, இந்த நாட்டிலே நாம் கண்டிருக்கிறோம்; உலக அளவிலே கண்டிருக்கிறோம்.

'Scotland Yard' என்ற புத்தகத்தை Fleming-ம், Hugh Miller-ம் எழுதினார்கள். அந்த Scotland Yard Police-க்கு இணையாகத்தான், இன்றைக்குத் தமிழகத்தினுடைய போலீஸ் இருக்கிறதென்று நாம் பெருமை பேசிக்கொண்டிருக்கிறோமே, அப்படிப் பெருமை பேசிக்கொண்டிருக்கின்ற காவல் துறையை வைத்துக்கூட, கடந்த ஆட்சிக் காலத்திலே பல சட்டங்களை நிறைவேற்றியபோது, அவற்றை நடைமுறைப்படுத்த முடியாமல் தவித்தார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அமெரிக்க நாட்டினுடைய துணை ஜனாதிபதி--U.S. Vice President, Hubert Humphrey--சொன்னார்: "There are not enough Jails, not enough Policemen, not enough Courts to enforce a law not supported by the people."—"எத்தனைச் சிறைச்சாலைகள் இருந்தாலும், எத்தனைக் காவலர்கள் இருந்தாலும், எத்தனை நீதிமன்றங்கள் இருந்தாலும், மக்களுடைய ஆதரவு இல்லாவிட்டால், எந்தவொரு சட்டத்தையும் ஓர் ஆட்சி நிறைவேற்ற முடியாது" என்பதுதான் அன்றைக்கு அவர் தெளிவாகச் சொன்னது. ஆகவேதான், ESMA சட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை; மத மாற்றத் தடைச் சட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை; TESMA சட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை; ஆடு, கோழி வெட்டுவதைத் தடைசெய்கின்ற சட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை; ஆள்தூக்கிச் சட்டமான 'POTA' சட்டத்தை நிறைவேற்றி, அதிலேயும் பின்னடைவு ஏற்பட்டு, கரி பூசிக்கொண்ட நிலைமை ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டம்-ஒழுங்கு என்பது, காவல் துறையின் கையிலே இருக்கிறது. அந்தக் காவல் துறைக்கு மூன்று அம்சங்கள் தேவை. நான் மிகத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். Authority--Authority என்று சொன்னால் அவர்களுக்கு நாம் அதிகாரம் வழங்கியிருக்கிறோம், குற்றவாளிகளை, குற்றங்களைத் தடுப்பதற்குக் குற்றவாளிகள் என்றால், நீதிமன்றம் தண்டித்தால்தான் அவர்கள் குற்றவாளிகள். ஒருவன், வழக்கில் குற்றம்சாட்டப்படுகிறபோது, அவன் குற்றவாளி அல்ல; குற்றம் சாட்டப்படுகிறவன்தான். அப்படிக் குற்றம் சாட்டப்படுபவர்களைக் கண்டுபிடிப்பது; அவர்கள் மீது வழக்கு போடுவது; நீதிமன்றத்தின்

முன்னாலே சாட்சியங்களை நிறுத்தி, அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பது.

ஒரு சாதாரண கடைசி மனிதனுக்கும் நீதி வேண்டுமென்று சொன்னால்--அவன் காவல் நிலையத்திற்குப் போகின்றபோது, அங்கே இருக்கின்ற காவல் அதிகாரிகளை நீதியின் வடிவமாகவே பார்க்கிறான். ஓர் ஏழைத் தொழிலாளி, ஒரு விவசாயி போகின்றபோது, 'சட்டத்தின் தன்மையை உணர்ந்து இருப்பவர்கள்; நமக்கு நியாயம் கிடைக்கும்; நீதி கிடைக்கும்' என்ற உணர்வோடுதான் அவன் அந்தக் காவல் துறையினுடைய அந்த அலுவலகத்திற்குப் போகிறான். அங்கே இருக்கின்ற சப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்தாலும் சரி, அல்லது உயர் அதிகாரிகளைப் பார்த்தாலும் சரி, தனக்கு நீதி கிடைக்க வேண்டுமென்ற நம்பிக்கையிலே அவன் போகிறான்.

காவல் துறைக்கு இரண்டு பக்கமும் இடி. எப்படி? குற்றச்சாட்டு கொடுக்கின்றபோது அதைத் தீர விசாரிக்க வேண்டிய பொறுப்பும் உண்டு. சில நேரங்களிலே தவறான தகவல்களைக் கொடுத்து, அந்தத் தவறான தகவல்களின்மேல், முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்கின்ற சூழ்நிலையும் ஏற்படுவது உண்டு. ஏனென்று சொன்னால், ஒரு F.I.R. போடுகின்றபோது, it is a First Information Report. அது முதலில் கொடுக்கிற முதல் தகவல் அறிக்கை. அதில் உண்மையும் இருக்கலாம்; தவறும் இருக்கலாம். அதை investigate செய்து, அதை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு, காவல் துறைக்கு இருக்கிறது. ஆகவே, காவல் துறை சில நேரங்களிலே வேகமாகவும் செயல்பட முடிகிறது சில வழக்குகளில், கொடுமையான வழக்குகளிலே, வன்கொடுமைச் சட்டங்கள், நேரடியாகத் தாக்கப்படுகின்றபோது கொலை வழக்குகள், இவை எல்லாம் நேரடியாகத் தெரிகின்ற குற்றங்கள். Cognizable offence, Non-cognizable offence என்றுச் சொல்வார்கள். ஆகவே, அப்படிப்பட்ட சட்டங்களில் சில நேரங்களிலே காவல் துறை நேரடியாக நடவடிக்கை எடுக்க முடிகிறது. சில நேரங்களிலே நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாமல் நுண்ணறிவுத் துறையோடு, புலனாய்வுத் துறையோடு ஆய்வு செய்து, தனிப் படைகளை அமைத்து, அதற்குப் பிறகு குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு Authority இருக்கிறது.

Responsibility என்று சொல்வார்கள், அடுத்து; அவர்களுக்குப் பொறுப்பும் இருக்கிறது. ஒரு குற்றத்தைச் செய்கின்றவர்களாக இருந்தாலும் சரி, அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்களை நடத்துகின்ற



முறையாக இருந்தாலும் சரி, பொறுப்போடு நடத்த வேண்டும்; மனித நேயத்தோடு நடத்த வேண்டுமென்ற அந்தப் பொறுப்பும் இருக்கிறது. அதே நேரத்திலே உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

ஆகவே, இந்த இரண்டும் இருக்கின்ற காவல் துறைக்கு, Accountability என்று சொல்வார்கள்; அதைத்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், சென்னை மாநகரக் காவல் துறை, 150-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்ற நேரத்தில், மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் வந்து, அந்த விழாவிலே பேசுகின்றபோது, குடியரசுத் தலைவர் வந்ததற்கு பின்னாலே, ஒரு சிறப்பான நிகழ்வை அவர்கள் உருவாக்கினார்கள். அதாவது காவல் துறைக்குப் பதில் சொல்கிற கடமை. நம்முடைய கூடுதல் கமிஷனர் திரு. ஜாங்கிட் அவர்களும் மற்ற அதிகாரிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து எடுத்த நடவடிக்கை; 'இந்து' பத்திரிகையில்கூட தெளிவாக அதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-55

நம்முடைய ஆட்சிக் காலத்திலே, சென்னை மாநகரத்திலே இருக்கின்ற காவல் நிலையங்களிலே, அந்த responsibility—அந்தப் பொறுப்பு—அவர்களுக்குச் சுமத்தப்பட்டிருக்கிறது. காவல் துறையிலே இருக்கின்ற ஒரு காவல் நிலையம் சரியாகச் செயல்படுகிறதா; அந்தக் காவல் நிலையத்திலே இருக்கின்ற குற்றங்கள் எப்படிக் கண்டுபிடிக்கப்படுகின்றன; அங்கே இருக்கின்ற அதிகாரிகள் முறையாகச் செயல்படுகிறார்களா என்பதை, அந்தக் காவல் துறையிலே பணியாற்றுகின்ற, அந்தந்த station-களிலே பணியாற்றுகின்ற ஆய்வாளர்கள், அங்கே இருக்கின்ற பொறுப்பாளர்களுக்கு அந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறபோது, பதில் சொல்கின்ற Accountability என்ற அந்தப் பொறுப்பு, அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தினாலே, 50 சதவிகிதம் காவல் துறையில் இருக்கின்ற நம்முடைய மாநகரத்திலே இருக்கின்ற காவல் நிலையங்கள், இப்போது சிறப்பாகச் செயல்படுகின்றன என்ற செய்தி, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 'இந்து' பத்திரிகையிலே வந்திருக்கிறது.

காவல் துறையை நவீனப்படுத்துவது மாத்திரம் அல்ல; காவல் துறையை modernise செய்வதென்று சொல்வார்கள்—போலீசைப் பற்றிச் சொல்கின்றபோது, modernise, humanise—நான் ஒன்றைச் சேர்த்து சொல்கிறேன்; ஏனென்றால் நாம் சொல்லிச் சொல்லிப்

பழகிவிடுகிறோம்—நவீனப்படுத்த வேண்டும். குற்றங்கள் பெருகிக் கொண்டிருக்கின்றன. கணினி ரீதியிலான குற்றங்கள், செல்லிடைத் தொலைபேசிக் குற்றங்கள், Cyber Crimes எனப் பல்வேறு விதங்களிலே குற்றவாளிகள் அல்லது குற்றஞ்சாட்டப்படுபவர்கள், பல்வேறுவிதமான நுண்ணறிவுத் திட்டங்களை வைத்துக்கொண்டு, காவல் துறைக்குச் சவாலாக INTERPOL அளவிலே சென்று பிடிக்கின்ற அளவுக்குக்கூட, பல்வேறு குற்றவாளிகள் எல்லாம் இப்போது நாட்டிலே நடமாடுகின்றார்கள். அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய, அவர்களை ஒழுங்குக்குக் கொண்டு வரக்கூடிய பொறுப்பு, இந்தக் காவல் துறைக்கு இருக்கிறது. ஆகவே, modernise பண்ணுவது அவசியம். நவீன ஆயுதங்கள், பல்வேறு சாதனங்கள் இவற்றையெல்லாம் நாம் கொடுக்க வேண்டியது அவசியம். அந்தச் சாதனங்களைக் கொடுக்கின்றபோது, அதேநேரத்திலே அவர்கள் நடந்துகொள்கின்ற முறை, பொதுமக்களோடு--இந்திரா காந்தி அவர்கள், அதைத்தான் சொன்னார்கள்; பொதுமக்களுக்கும், காவல் துறைக்கும் இடைவெளி இருக்கக் கூடாது என்று சொன்னார்கள்--அந்த இடைவெளி இல்லாமல் இருப்பதற்காக, humanise என்று சொல்வோம்; மனித நேயத்தோடு அந்தக் காவல் துறை செயல்பட வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம். அந்த அடிப்படையிலேதான், அந்தக் காவல் துறை humanise-ஆக இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். இப்போது நான் ஒன்றைச் சொல்கிறேன்; Professionalise--நம்முடைய ஆட்சிக் காலத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் காலத்திலேதான், அதைக் கொண்டு வரமுடியும். இப்போது காவல் துறைக்கு வருகின்றவர்களை நாம் நேரடியாகத் தேர்வு செய்கிறோம். Sub-Inspector-களாகவோ மற்ற பொறுப்புகளுக்கு அவர்கள் வருகின்றபோது, அந்தத் துறையினுடைய முழுத் தன்மையையும் அவர்கள் அறிந்து இருக்கிறார்களா, அந்தச் சட்ட திட்டங்களை அவர்கள் புரிந்திருக்கிறார்களா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதற்காக, நம்முடைய அழகப்பா பல்கலைக்கழகத்திலே, 'M.B.A. Police Management' என்ற ஒரு படிப்பைக் கொண்டு வருவதற்காக, ஒரு திட்டத்தை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்படி, அந்தப் படிப்பைப் படித்துவிட்டு வந்தால், காவல் துறையிலே பணியாற்றுகின்றவர்கள் சிறப்பாகப் பணியாற்ற முடியும்.

குற்றச்சாட்டுகளைப் பற்றிப் பேசுவதற்கு என்று கொஞ்சம் வைத்திருக்கிறேன், பின்னர் சொல்கிறேன். இப்பொழுது காவல் துறைக்குச் சொல்ல வேண்டியவற்றைச் சொல்கிறேன். தலைவர் கலைஞர் அவர்களுக்குத் தெரியாதது ஒன்றும் அல்ல; ஒரு கட்சியின்



சார்பிலே அதுவும் ஓர் ஆளுங்கட்சியின் சார்பிலே எனக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியான வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேதான்--சில கருத்துகளை நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அது உங்களுக்கும் பலனுள்ளதாக இருக்கும். 'M.B.A. Police Management' என்ற அந்தப் பட்டப் படிப்பிலே, என்னென்ன பாடத் திட்டங்களை வைத்தால், ஒரு காவல் துறை அதிகாரியாக வருகின்றவர், எப்படியெல்லாம் செயல்பட முடியும் என்று சொல்லி இருக்கிறார்கள். Principles of Police Administration, Organisational Behaviour, Police Administrative System in India, Human Rights, Constitutional Law, Police Personnel Administration, Criminology, Police Information System, Disaster Management, Office Automation, International Police Agencies, Stress Management, Jail Administration, Police Training and Development, Criminal Law, Law of Evidence, Cyber Crime Management, Police Ethics Management, Police Re-engineering Management, Public Police relationship Management, International Police Agencies என இதுபோன்ற சட்டங்களையும் படிப்பதற்கான வாய்ப்புகளை நாம் உருவாக்கினால், எல்லாவிதமான குற்றவாளிகளையும் கண்டுபிடிக்கின்ற ஆற்றலை அந்த அதிகாரிகள் பெற முடியும் என்ற நம்பிக்கை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

இங்கே பேசினார்கள், ஏதோ பெரிய தீவிரவாதம் எல்லாம் வந்துவிட்டதைப் போல. இந்த ஓராண்டிலே என்ன தீவிரவாதம் வந்திருக்கிறது? எந்தத் தீவிரவாதமும் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே கிடையாது. இப்போது மதவாதப் பிரச்சினைகள் ஏதாவது வந்திருக்கின்றனவா? அல்லது சாதிய மோதல்கள் ஏதாவது வந்திருக்கின்றனவா? புள்ளிவிவரத்திலே தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 25 சதவிகிதம், இந்த ஆட்சிக் காலத்திலே குறைக்கப்பட்டிருக்கின்றன என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நிதி ஒதுக்கீட்டைப்பற்றி இங்கே சொன்னார். நிதி ஒதுக்கீட்டிலே என்ன பிரச்சினை? 2005 ஆம் ஆண்டு உங்களுடைய குறிப்பிலே இருக்கிறது. நீங்கள் ஒதுக்கிய தொகை, 1,269 கோடி ரூபாய். இப்போது தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கி இருக்கின்ற தொகை, 1,927 கோடி ரூபாய்க்கு மேலே ஒதுக்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறையை நவீனப்படுத்துவதிலே கடந்தகால ஆட்சியைவிட, இப்போது தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்திருக்கிற முயற்சி என்பது மிகவும் பாராட்டுக்குரியது.

நண்பகல் 12-00

இப்போது, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைக்குப் பல்வேறு காரணங்கள் சவாலாக அமைந்திருக்கின்றன. அவற்றிலே ஒன்று சமூக நீதி. அந்தச் சமூக நீதியைப் பற்றிச் சொல்கின்றபோது, நான் ஒரு கருத்தை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், நேற்றையதினம், இந்தச் சட்டமன்றத்திலே, சமூக நீதிக்குப் பங்கம் வந்தால், என்ன நடக்கும் என்பதைப்பற்றி விளக்கினார்கள். இந்த ஒடுக்கப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்கள், சிறுபான்மை மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், அவர்களுடைய உரிமைகள் மறுக்கப்படுகின்றபோது, போராட்டங்கள் வரும்; அதனாலே, சட்டம்-ஒழுங்கு கெடக்கூடிய சூழ்நிலைகள் உருவாகும். ஆகவே, சமூக நீதி என்பது எளிதிலே நாம் கைவிடக்கூடிய ஒரு பிரச்சினையல்ல. எந்த ஆட்சியும் அதை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. ஆகவேதான், மத்திய அரசும், மாநில அரசும் இதிலே ஒரு பெரிய நிலைப்பாட்டை இப்போது எடுத்துக்கொண்டிருக்கின்றன. சமூக நீதியைப்பற்றி இப்போது பேசுகிறார்கள்; ஆனால், 1944 ஆம் ஆண்டு, ஏறத்தாழ 62 ஆண்டுகளுக்கு முன்னாலே தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்:

*"பரணி பலபாடிப் பாங்குடன்*
*வாழ்ந்த பைந்தமிழ் நாட்டில்*
*சொரணை சிறிதுமிலாச் சுயநலத்துச்*
*சோதாக்கள் சில கூடி*
*வருணத்தை நிலை நாட்ட*
*வகையின்றிக் கரணங்கள் போட்டாலும்*
*மரணத்தின் உச்சியிலே மானங் காக்க*
*மறத் தமிழா போராடு!"* (மேசையைத் தட்டும் ஒலி)

யார் சமூக நீதிக் காவலர்கள்? கலைஞருக்கு இல்லாத அக்கறை, சமூக நீதியிலே யாருக்கு இருக்க முடியும்? இன்று அல்ல; அவர் அன்றைக்குப் பதவியிலே இல்லை; பெரிய பொறுப்புகளிலும் இல்லை. அவருடைய இந்தச் சமூக நீதிச் சிந்தனை என்பது, பிறப்பிலேயே அவருக்கு உருவான அந்த மிகப் பெரிய கொள்கையே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) அவர், பதவிக்காகவோ, தாம் வகிக்கின்ற பதவிகளுக்காகவோ, எதற்காகவோ பேசுகின்ற தலைவர் அல்ல. அவர், 'என்றைக்குமே நிலையற்றது மகுடம்' என்று நினைப்பவர். 'நிலையானது கொள்கை; இதிலே உறுதியாக இருப்பதே தம்முடைய நிலைப்பாடு' என்று நினைப்பவர். (மேசையைத் தட்டும் ஒலி) அவர், நிழல்கூட கீழே



விழாத தஞ்சை இராஜகோபுரம். தஞ்சை இராஜகோபுரத்து நிழல், கீழே விழாது. அதுமாதிரி, தஞ்சை இராஜகோபுரம் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தன்மானத்தை இழந்து, ஒரு காலத்திலும் எதற்காகவும் அவர் பேசியது கிடையாது. ஆகவே பதவிகள் என்பது - பேசினார்கள், நாங்கள் ஆட்சிக்கு வருவோம்; கூக்குரல், உடனே ஆட்சியைக் கலைக்க வேண்டி. என்ன ஆட்சியைக் கலைப்பது?

எத்தனைக் குற்றச்சாட்டுகள்? எத்தனைப் போராட்டங்கள்? எத்தனைச் சிறைகள்? தலைவர் கலைஞருடைய கைதைப் பற்றி கிருஷ்ணய்யர் என்ன சொன்னார்? "தமிழ்நாட்டிலே, சிலுவையிலே அறையப்பட்டிருக்கிறது நீதி" என்று சொன்னாரா, இல்லையா? திருமாவளவன் கைது செய்யப்படவில்லையா அன்றைக்குப் போராட்டம் என்று? டாக்டர் அய்யா இராமதாஸ் அவர்கள், அன்றைக்கு சைதாப்பேட்டை தேர்தல் முறைகேட்டை எதிர்த்தபோது, கைது செய்யப்படவில்லையா? இலட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் கைது செய்யப்படவில்லையா? இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் போராட்டத்திலே கைது செய்யப்படவில்லையா? வழக்குப் போட்டார்களாம்! என்ன வழக்கு? எல்லோரும்தான் வழக்குப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்ன வழக்குப் போட்டார்கள்? நட்ட நடுநிசியிலே போய்க் கைது செய்தீர்களே! யார் வழக்குப் போட்டாலும், அஞ்சுகின்ற இயக்கம் அல்ல திராவிட முன்னேற்றக் கழகம். யார் வழக்குக்காகவும், அஞ்சுகின்றவர்கள் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) தளபதி அவர்களை நீங்கள் கடலூர் சிறையிலே அடைக்கவில்லையா? தளபதி அவர்களை நீங்கள் கடலூர் சிறையிலே அடைக்கவில்லையா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** ஆக, எல்லோரையும் நீங்கள் கைது செய்திருக்கிறீர்கள். யாரைச் சிறையிலே அடைக்கவில்லை? எல்லா ஆட்சிக் காலத்திலும் கைது என்பது, வழக்கு என்பது நடந்திருக்கிறது. அதை நீங்கள் பெரியதாக, ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பதைப்போலப் பேச வேண்டியதில்லை. ஆகவே, இந்தக் குற்றச்சாட்டை நீங்கள் விட்டுவிட்டு, உருப்படியான கருத்துகளைப் பேச வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, காவல் துறைக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள்பற்றி இங்கே பேசினார்கள். சென்னைக் காவல் துறைக்கு 100 ஹூண்டாய் கார்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டு, ஒரு வெளிநாட்டிலே இருக்கிற தோற்றம் இன்றைக்குச் சென்னையிலே

உருவாகியிருக்கிறது. போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக, மிகப் பெரிய சென்னை நகரிலே அந்தக் கார்களில் எல்லாம் போக்குவரத்து அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும் வலம் வருகின்றபோது, அதைக் கட்டுப்படுத்துகின்ற பாங்கினைப் பார்க்கிறபோது, என்னைப் பொறுத்தமட்டிலே, நாம் ஏதோ வெளிநாட்டிலே இருக்கின்றோமோ என்றெல்லாம் எண்ணத் தோன்றுகிறது.

இன்றைக்கு உலக வரிசையிலே முதலில் இருக்கிற நாடு, இங்கிலாந்து, காவல் துறை நிர்வாகத்திலே. அதற்கடுத்து அமெரிக்கா. அதற்கடுத்து பிரான்ஸ். அதற்கடுத்து இஸ்ரேல். அதற்கடுத்து சிங்கப்பூர். ஆகவே, ஒரு சிறிய நாடாக இருக்கிற சிங்கப்பூர்கூட, இன்றைக்கு ஐந்தாவது இடத்திற்கு வந்திருக்கிறது. ஆகவே, நம்முடைய தமிழ்நாட்டைப்போல, மற்ற மாநிலங்களும் ஆகிவிட்டால், தலைவர் கலைஞர் அவர்களைப்போல, மற்ற மாநிலங்களிலும் நடவடிக்கைகளை எடுக்கிற, ஒரு நிலை வந்துவிட்டால், இந்தியாவும் அந்தப் பட்டியலில் வருகின்ற காலம், வெகுதூரத்திலே இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இந்தியா என்று வருகின்றபோது, தமிழ்நாட்டிற்கு மட்டும் தனிக் கணக்கு உலகளவிலே எடுக்கமாட்டார்கள். ஆகவே, இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக, காவல் துறையை நவீனப்படுத்துவதிலும் சரி, கடற்கரைப் பாதுகாப்பிலும் நாம் முன்னிலையிலே இருக்கிறோம்.

*பிற்பகல் 12-05*

கடற்கரை ரோந்துபற்றிச் சொல்கிறபோது, தலைவர் கலைஞர் அவர்கள் தீர்க்கதரிசனமாக முதலிலே ஒன்றைச் சொன்னார். நீங்கள் இதிலே தெளிவாகக் கவனிக்க வேண்டும். நாங்கள்கூட யோசித்தோம்; கூட்டு ரோந்து தேவையில்லை; ஏன் தலைவர் இப்படிச் சொல்கிறார்?; இதிலே உள் அர்த்தம் என்ன என்று நாங்கள் எல்லாம் யோசித்துப் பார்த்தோம். இது பாதுகாப்புத் துறையினுடைய பிரச்சினையாயிற்றே! அவர் பல்வேறு விவரங்களை அறிந்தவர்தான்; இந்தத் துறையிலும் அவர் தெரியாமல் சொல்லமாட்டார் என்று நாங்கள் எல்லாம் நினைத்துப் பார்த்ததுண்டு.

ஆனால், அதைத்தான் நீண்ட நாட்களுக்குப் பிறகு, அனுபவ ரீதியாக நம்முடைய அல்ட்ரான் என்ற தென் மண்டலக் கடற்படைத் தளபதி அவர்கள் சொல்கிறபோது சொன்னார்: "கூட்டு ரோந்துப் படை நம்முடைய தமிழ்நாட்டு மீனவர்களுக்கு மாத்திரம் அல்ல; இந்தியாவிற்கே ஆபத்து" என்று பின்னர் சொல்கிறார். ஆக, பாதுகாப்புத் துறையிலேகூட தன்னுடைய மூளையைச் செலுத்தி இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தீர்க்கதரிசனத்தோடு அந்தத் துறையிலே சொல்லக் கூடியவர் அவர். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது "பாரா டாங்" கப்பல் வந்து நிற்கிறது. இலங்கை மீனவர்களைக் காப்பாற்றுவதற்காக தென் பகுதியிலே இந்தியாவின் பாதுகாப்புக்காக அந்தக் கப்பல் வந்து நிற்கிறது. அதோடு, T. 56 என்ற கப்பலும், Seaworld என்கின்ற கப்பலும் இப்போது வந்து நிற்கின்றன. டோனியர் விமானங்களும், நம்முடைய ஹெலிகாப்டர்களும் பறந்து கொண்டு இருக்கின்றன. தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்த இந்த நடவடிக்கைகளின் காரணமாகத்தான், இப்போது தமிழ்நாட்டினுடைய எல்லைப் பகுதியில் இருக்கிற பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்பட்டு இருக்கின்றன. அண்டை நாடுகளிலே பிரச்சினை வருகிறபோது, இலங்கையில் பிரச்சினை ஏற்படுகிறபோது, அகதிகள் வருகிறார்கள்; இலங்கைத் தமிழர்கள் வருகிறார்கள். விடுதலைப் புலிகள் நடமாட்டமே தமிழ்நாட்டிலே கிடையாது என்று அர்ச்சனா நாயக் என்கின்ற உள் துறை இணை அமைச்சர் தெளிவாக டெல்லி பாராளுமன்றத்திலே சொல்லி இருக்கிறார். விடுதலைப் புலிகளைப் பற்றியெல்லாம் பேசினார். அவையெல்லாம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.



எத்தனை வழக்குகள் சென்ற ஆட்சியில்? சென்ற ஆட்சி முடிந்தவுடனேயே, இந்த ஆட்சித் தொடங்கியவுடன், எத்தனைக் கண்டுபிடிப்புகள்? என்ன நடந்தது என்பதெல்லாம் தெரியும். இந்த ஆட்சி விழிப்போடு இருக்கிற காரணத்தினால்தான், அதுபோன்ற நடவடிக்கைகள் எல்லாம் இப்போது எடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது 100 சோதனைச் சாவடிகள் கடலோரப் பகுதிகளிலே நிறுவப்பட்டிருக்கின்றன. 300-க்கும் மேற்பட்டவர்கள், அதிரடிப் படை பாதுகாப்புப் பணியில் உள்ளனர். 11 ஆம் தேதி "தினமலர்" பத்திரிகை, ஒரு செய்தி சொல்லி இருக்கிறது. தமிழ்நாட்டிலே நக்சலைட்டுகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த, நக்சலைட்டுகள் பயம் போக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, தமிழகக் காவல் துறை எடுத்த நடவடிக்கையின் காரணமாக, தருமபுரி மாவட்டத்திலே சட்டம்-ஒழுங்கு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்ற ஓர் அருமையான செய்தியை இங்கே சொல்லி இருக்கிறார்கள். 1861-லே கொண்டுவரப்பட்ட போலீஸ் சட்டம், அன்றைக்கு அந்தப் போலீஸ் சட்டம் கொண்டு வந்தபோது, அதை அமல்படுத்த இந்தியாவை மூன்று பகுதிகளாகப் பிரித்து, சென்னை, பம்பாய், கல்கத்தா என்று உருவாக்கி,

அவற்றை to enforce a law, an agency to enforce a law என்று சொன்னார்கள். அந்தச் சட்டத்தை அமல்படுத்துகின்ற ஓர் அமைப்புதான், 3 பகுதிகளாகப் பிரித்தபோது உருவான பகுதிதான், நம்முடைய சென்னைப் பகுதி. அந்தப் பகுதிக்கே தலைமையேற்றவர் விஜயராகவன், I.C.S. என்ற ஒரு தமிழர்தான் அன்றைக்குப் பொறுப்பேற்றார். ஆகவே பாரம்பரியம் மிக்க இந்தக் காவல் துறை. . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 19 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** பெரிய குற்றச்சாட்டாக உங்களை ஒன்றும் பேசவில்லையே!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருந்தாலும் நன்றாகப் பேசுகிறீர்கள் இல்லையா?

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** ஆகவே நான் அதிகம் சொல்ல வேண்டிய கருத்துகளைச் சொல்லிவிட்டேன். தலைவர் கலைஞர் அவர்களுக்குத் தெரியாதது எதையும் நான் புதியதாக இந்தத் துறையில் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** ஒரே ஒரு வரி. அடிமைத் தளையை நீக்கிய ஆப்ரகாம் லிங்கன், சீனச் சிறுமதியைப் போக்கிய சென்யாட்சன், துருக்கியின் நோய் தீர்த்த கமால்பாட்சா, சிந்தனை உரிமைக்கு வித்திட்ட சாக்ரடீஸ், இறைவன் பெயரைச் சொல்லி ஏமாற்றியவர்களைச் சந்தி சிரிக்கச் செய்த இங்கர்சால், சமுதாயத்தின் கிளர்ச்சியை உருவாக்கிய பெர்னார்ட்ஷா, இளைய கவிஞர் ஷெல்லி, இவர்கள் எல்லாம் இளைய வயதிலேதான் மிகப் பெரிய சாதனைகளைப் படைத்தார்கள். ஆகவே தன்னுடைய இளம் வயதிலேயே, 43, 44 வயதிலேயே இந்த நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்று, இன்றைக்கும், இந்த 83 வயதிலேயும் நித்தம் நித்தம் சாதனை படைக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மாபெரும் தலைவராக இந்த நாட்டினுடைய முதலமைச்சராகப் பணியாற்றுகின்ற அவர் காலத்திலே காவல் துறை இந்தியாவிலே இன்றைக்கும் வெற்றி பெறும் முதல் துறையாக இருக்கின்றது. இப்போது பொன் விழா கொண்டாடுகிறோம். அவரது சட்டமன்றப் பணிகளுக்கு. பவள விழாவும் கொண்டாடுவோம்; நூற்றாண்டு விழாவும் கொண்டாடுவோம் என்று சொல்லி, அவர் உடல் நலத்தோடு வாழ வேண்டும் என்று வாழ்த்தி, இந்தத் துறை இன்னும் சிறப்பாக அவர் காலத்திலே மிளிரும், ஒளிரும் என்று சொல்லி எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



## 5. விதி 110-ன்கீழ் அறிக்கை

### நகர்ப்புற வளர்ச்சி, சாலைப் போக்குவரத்து மேம்படுத்துதல் குறித்த மாநில அளவிலான குழு அமைத்தல் - மாண்புமிகு செய்தித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110-ன்கீழ் நகர்ப்புற வளர்ச்சி, சாலைப் போக்குவரத்து மேம்படுத்துதல் குறித்த மாநில அளவிலான குழு அமைப்பது தொடர்பான அறிக்கையை, இந்த அவையிலே சமர்ப்பிக்கிறேன், தங்கள் அனுமதியோடு. குறுகியகால மற்றும் நீண்டகால நடவடிக்கைகள்மூலமாக, சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் சாலைப் போக்குவரத்தினை மேம்படுத்தவும், அதன் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அலுவலர்கள் மற்றும் நிபுணர்கள் அடங்கிய மாநில அளவிலான குழு அமைப்பதன் அவசியம் குறித்து, அரசு ஆய்வு செய்தது.

பிற்பகல் 12-10

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர் அவர்கள் அனுப்பிய கருத்துருவினை அரசு ஆய்வு செய்து, அரசாணை நிலை எண் 144, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 23-4-2007-ன்படி சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் சாலைப் போக்குவரத்தினை மேம்படுத்த, குறுகியகால மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் எடுப்பது குறித்து ஆலோசனைகளை வழங்கவும், அதன் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய சாலைப் போக்குவரத்தை மேம்படுத்துவது குறித்த மாநில அளவிலான குழுவினை அமைத்துள்ளது:

[திரு. பரிதி இளம்வழுதி] [2007 ஏப்ரல் 25

1. அரசுத் தலைமைச் செயலாளர் .... தலைவர்
2. துணைத் தலைவர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்
3. அரசுச் செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
4. அரசுச் செயலர், போக்குவரத்துத் துறை
5. அரசுச் செயலர், நெடுஞ்சாலைத் துறை ... அமைப்பாளர்
6. இணை ஆணையர், காவல் (போக்குவரத்து) துறை
7. ஆணையர், சென்னை மாநகராட்சி
8. ஆணையர், நகராட்சி நிருவாகம்
9. மேலாண்மை இயக்குநர், மாநகரப் போக்குவரத்துக் கழகம்
10. பேராசிரியர் (டாக்டர்) அனந்தராஜன், பி.எச்.டி., (ஓய்வு), நகர்ப்புறப் பொறியியல், அண்ணா பல்கலைக்கழகம்
11. டாக்டர் திருமூர்த்தி, பேராசிரியர், அண்ணா பல்கலைக்கழகம்
12. டாக்டர் தமிழரசன், பேராசிரியர், போக்குவரத்துத் துறை, இந்தியத் தொழில்நுட்பக் கழகம்

மேற்கண்ட நகரங்களில் போக்குவரத்து நெரிசலைப் போக்கவும், சாலை இணைப்பை மேம்படுத்தவும் குறுகியகால (1-லிருந்து 2 வருடங்கள்) மற்றும் நீண்டகால அடிப்படையில், திட்டங்களின் தொகுப்புடன், தேவையான வழிமுறைகளைக் கண்டறிய, மேற்கண்ட குழுவினை அரசு பணித்துள்ளது. மாநில அளவிலான குழு, தனது இறுதிப் பரிந்துரைகளை 6 மாதத்திற்குள் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## 4. மானியக் கோரிக்கைகள், 2007-2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 22 - காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 23 - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**(இ) கோரிக்கை எண் 37 - மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன், உங்களுக்கு 20 நிமிடங்கள் ஒதுக்கியிருக்கிறோம். அவ்வளவுதான்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தினைத் தெரிவித்து, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையின்கீழ் இயங்குகின்ற இந்தத் துறையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த, எம் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்தியாவினுடைய வரலாற்றில், 51 ஆண்டுக் கால வரலாற்றில் இந்தியாவில் இருக்கின்ற எந்த மாநில அரசுமே செய்யாத அளவுக்கு, 3 காவல் துறை கமிஷன்களை அமைத்து, காவல் துறையின் சாதாரண காவலர் நிலையிலிருந்து, காவல் துறையில் உயர்ந்த பொறுப்பு என்று சொல்லப்படுகிற இயக்குநர் பதவி வரை அனைத்து நிலைகளிலும் இருக்கின்ற காவலர்களுக்கான உரிமைகளையும், அவர்களுக்கான தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுத்த நம் தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நான் முதலில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தற்போது அமைக்கப்பட்டிருக்கிற இந்தக் குழுவில் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும், காவல் துறையினுடைய மூத்த கூடுதல் இயக்குநர்களையும், அரசியல் இயக்கத்தின் சார்பாக இருக்கின்ற நண்பர்களை எல்லாம், இடம்பெறச் செய்திருக்கின்ற இந்த

அரசு--நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள்--பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகவும், ஓர் உறுப்பினருக்கு அந்தக் குழுவில் இடம் தந்திருந்தால், நாங்கள் மகிழ்ச்சி அடைந்திருப்போம் என்கிற செய்தியையும் முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல், இந்திய அளவில், பல்வேறு போட்டிகளிலே தங்களுடைய தனித் திறமைகளைக் காட்டி, பல்வேறு பதக்கங்களை--உதாரணத்திற்கு, 14 தங்கப் பதக்கங்கள் இருக்கின்றன என்று சொன்னால், அவற்றிலே 6 தங்கப் பதக்கங்களையும்--தமிழகத்தினுடைய காவல் துறை பெற்றிருப்பது, பாராட்டப்பட வேண்டிய செய்தி. அதேபோல் இப்போது 14 கோப்பைகள் என்று சொல்லக்கூடியதிலே, 6 கோப்பைகளை நம்முடைய காவல் துறை திறமையாகப் பெற்று, நம்முடைய நாட்டுக்கு, நம்முடைய தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்த்திருப்பதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதேவேளையில், நம்முடைய மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு என்கின்ற காவல் துறையினுடைய பிரிவு, கடந்த 2006 மே 26 முதல் 2007 பிப்ரவரி வரையிலான காலங்களில், 1,209 இடங்களில் கள்ளச் சாராயம் காய்ச்சுவதைக் கண்டுபிடித்து 86,004 வழக்குகள் பதிவு செய்து, 82,942 பேர் அதன் காரணமாகக் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். கள்ளச் சாராயங்களும், லாட்டரிகளும் தமிழகத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இவற்றை அரசின் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், இதற்கு ஒரு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, கடந்தகால கூட்டத்தொடரிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எங்கள் அய்யா அவர்கள் சொன்ன ஆலோசனைகளை, நான் இந்த அரசுக்கு வைத்தபோது, ஒரு சிறுவன் ஏதோ சொல்கிறான் என்று புறந்தள்ளி விடாமல், அதற்கு அதிக கவனம் கொடுத்து, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற காவல் துறையின் கண்காணிப்பாளர்களை முடுக்கிவிட்டு, ஆணையர்களை முடுக்கிவிட்டு, அத்தனை பேர் கைது செய்யப்பட்டு, அத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, இப்போது அவற்றை முற்றிலுமாகக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுத்ததால், இந்த அரசை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், தமிழகத்தில் இருக்கின்ற லாட்டரிச் சீட்டு விற்பனைபற்றிகூட நான் அன்றைக்குப் பேசினேன். முதல்வரின் சார்பாகப் பதிலளித்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்: "தமிழ்நாட்டில் இனியும் இந்த அரசு,



திராவிட முன்னேற்றக் கழக அரசு, கலைஞர் தமிழ்நாட்டிலுள்ள தலைமையிலே இருக்கிற அரசு, லாட்டரிச் சீட்டுகளை ஒருபோதும் அனுமதிக்காது" என்று சொல்லியிருக்கின்றார்கள். நிச்சயமாக அதை அனுமதியாமல் இருப்பதற்கு, நான் இந்த நேரத்தில் முதல்வர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் நன்றி சொல்லிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதேவேளையில், தமிழகத்தில், இன்னும் பல இடங்களில் இந்த லாட்டரிச் சீட்டுகள் விற்பனை, ஆங்காங்கே நடைபெறுகின்றன. வெளிமாநில லாட்டரிச் சீட்டுகள், தமிழகம் முழுவதும் இப்போது விற்கப்படுகின்றன என்பதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். "சுப லட்சுமி" என்கிற அந்தப் பத்திரிகையில், அதற்கான ரிசல்ட் என்று போட்டு, யார் யாருக்கு லாட்டரிச் சீட்டில் பரிசு விழுந்திருக்கிறது; யார் யாருக்கு விழவில்லை என்கிற பட்டியலைப் போட்டிருக்கிறது. இதை எல்லாம் இன்னும் தமிழகத்திலே அனுமதித்துக் கொண்டிருக்கிறது காவல் துறை என்று சொன்னால், இதை முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டுவருவதோடு, இதுபோன்ற நடைமுறைகள் இனிமேல் தமிழ்நாட்டில் இருக்காத அளவுக்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல தாதாக்கள் என்று சொல்லக்கூடிய ரௌடிகள், வெளி மாநிலங்களில் இருந்து வந்து இந்த மண்ணிலே grill கொள்ளை அடிப்பது--முன்னாள் சட்டமன்ற உறுப்பினரே, அவர்களால் கடந்தகால ஆட்சியில் கொலை செய்யப்பட்டார்--இப்போது அதிகரித்துக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் இந்த வடமாநிலக் கொள்ளையர்களின் சமீபகால ஊடுருவல் என்பது, நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கு, நம்முடைய அரசும், நம்முடைய காவல் துறையும் மிக உன்னிப்பாக இருந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, மார்வாடி சேட்டுகள் என்று சொல்லக்கூடிய வட மாநிலத்திலிருந்து இந்த மண்ணிலே பிழைக்கவந்த ஒரு கூட்டம், தமிழகத்தின் மண்ணின் மைந்தர்களுடைய விளைநிலங்களையும், விவசாய நிலங்களையும், கொஞ்சநஞ்சம் குடிசைகளுக்கு என்று வைத்திருக்கிற நிலங்களை எல்லாம், 'ரியல் எஸ்டேட்' என்ற போர்வையிலே தங்கள் கையகத்துக்குக் கொண்டு வந்து, தங்கள்

ஆளுகைக்குக் கொண்டு வந்து, ஒரு கிரவுண்டு 6 கோடி ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்யக்கூடிய அளவுக்கு ஆதிக்கம் அவர்கள் கையிலே சென்று கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், இதுபோன்ற மார்வாடி சேட்டுகளின் வீடுகளிலேதான், இந்த வடமாநில grill கொள்ளையர்களும், துப்பாக்கிகளைக் கையிலே வைத்துக்கொண்டு நவீன வகையில் கொள்ளையடிக்கின்ற கும்பலும், பதுங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்; அரவணைக்கப்பட்டிருக்கிறார்கள்; பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற செய்திகள் எல்லாம் இந்த மண்ணிலே வந்து கொண்டிருக்கின்றன. இதை எல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு, இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சாலை விபத்துகள். இப்போது சாலை விபத்துகள், ஓர் ஆண்டுக்குச் சராசரியாக, 56 ஆயிரம் விபத்துகள் ஏற்படுகின்றன. அந்த 56 ஆயிரம் விபத்துகளிலே, 11 ஆயிரம் விபத்துகள், உயிரிழப்பு உள்ள விபத்துகளாக இருக்கின்றன. சாலை விபத்துகள் நாளுக்கு நாள் அதிகமாகி, மனித உயிர்கள் பலியாகிக் கொண்டிருப்பதைத் தடுப்பதற்கு நம்முடைய உள் துறைச் செயலாளரும், காவல் துறை D.G.P. அவர்களும், இன்னும் ஏனைய துறை அதிகாரிகள் எல்லாம் ஒரு கூட்டு முயற்சி எடுத்து, இவற்றைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று தங்கள் துறையின் கடந்தகால கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவித்திருந்தீர்கள். அப்படிக் குழு அமைக்கப்பட்டு, அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை நான் இந்த நேரத்தில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இப்போது மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருக்கிற, மாண்புமிகு மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் எங்கள் மருத்துவர் சின்ன அய்யா அவர்கள், நேற்றையதினம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சர் மாண்புமிகு அண்ணன் டி.ஆர். பாலு அவர்களையும், இன்னும் இருக்கிற துறைகளுடைய அமைச்சர்களையும் அழைத்து, கூட்டு முயற்சியாக இதுபோன்ற விபத்துகளைத் தடுக்க விவாதித்துள்ளார். மனித உயிர்கள் பலியாவது, இந்தியாவில் சராசரி ஆண்டுக்கு 94 ஆயிரம் பேர் என்கிற புள்ளிவிவரத்தைக் கையிலே வைத்துக்கொண்டு, அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கையில் இப்போது எங்களுடைய மத்திய அமைச்சர் ஈடுபட்டிருக்கிறார். அந்த முயற்சியின் அடிப்படையிலே, இங்கு நெடுஞ்சாலைகள் துறை, போக்குவரத்துத் துறை, உள்ளாட்சித் துறை, காவல் துறை என்ற அனைத்துத் துறை அமைச்சர்களோடும், அவற்றின் அதிகாரி



பெருமக்களோடும் கலந்து பேசி, இதுபோன்ற தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், தமிழகத்திற்கான ஒதுக்கீடு; I.A.S., I.P.S. நியமனங்களில் கடந்த ஆட்சிக் காலத்திலே, மத்திய அரசால் 33 சதவிகிதம், தமிழக அரசினுடைய cadre என்று சொல்லக்கூடிய அளவிலே, வழங்கப்பட்டன. ஆனால், தற்போது அது வெறும் 25 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வருகிறது. அதனால், நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞருடைய அரசு மத்திய அரசை வலியுறுத்தி, மீண்டும் அந்தப் பழைய நிலைக்கே நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் I.A.S., I.P.S. அதிகாரிகளாக வருவதற்கு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகமும் கடந்த பிரிட்டிஷ் காலத்திலே கட்டப்பட்டவை. இப்போது அதிகாரிகள் உட்கார்ந்து பணி செய்வதற்கு இடைஞ்சலாக இருந்து கொண்டிருக்கின்றன. இவற்றுக்கு நீங்கள் புதுக் கட்டடங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் நம்முடைய கொறடா அவர்கள் பேசும்போது, பொய் வழக்கு இந்தக் கால ஆட்சியில் போடப்படுகிறது என்று சொன்னார்கள். 'பொய் வழக்கு' என்று சொல்வதை அவையிலே அனுமதித்தாலும்கூட, 'உண்மைக்கு மாறான வழக்குகள்' என்றவகையில் கடந்தகால ஆட்சியால் போடப்பட்டிருக்கிறது என்பதற்குச் சாட்சிகளாக, இதே அவையில் வேல்முருகனாகிய நானும், அண்ணன் தோழர் செல்வப் பெருந்தகையும் இருந்து கொண்டிருக்கிறோம். பிரேம்குமார் என்ற காவல் துறை அதிகாரியைக் கொண்டு வந்து, உண்மைக்கு மாறான வழக்குப் போட்டு, என்னையும், எனது குடும்பத்தையும், எனது அண்ணன், தம்பி அத்தனை பேரையும் வழக்கிலே சிக்க வைத்து அலைக்கழித்தவர்களுக்கு இப்போது நீதிமன்றம் சரியான தண்டனை வழங்கியிருக்கிறது. நல்லகாமன் என்ற முன்னாள் இராணுவ அதிகாரியினுடைய வழக்கில் மதுரை உயர் நீதிமன்றம் ஒரு மாத கால தண்டனை வழங்கியிருக்கிறது. அந்தத்

தண்டனையை ஏற்று சிறை செல்லக்கூடாது என்பதற்காக, விதிவிலக்கு வாங்குவதற்காக அந்த பிரேம்குமார் என்ற காவல் துறைக் கண்காணிப்பாளர், அரசால் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிற ஒருவர், இந்திய நாட்டினுடைய உச்ச நீதிமன்றத்தில் ஒரு அபிடவிட் தாக்கல் செய்திருக்கிறார்.

அதில் என்ன சொல்கிறார் என்றால், "நான் தற்போது தஞ்சை மாவட்டத்தினுடைய காவல் துறைக் கண்காணிப்பாளராகப் பணிபுரிகிறேன்; ஆதலால், உடையிலே இருக்கின்ற நான், சிறைக்குச் சென்றால், எனக்கு அவமானம் ஏற்படும்; எங்கள் துறைக்கு அவமானம் ஏற்படும்; காவல் துறைக்கே இழுக்கு ஏற்படும்; ஆதலால், எனக்கு விதிவிலக்குத் தரவேண்டும்" என்ற ஓர் உண்மைக்கு மாறான தகவலைத் தந்து, உச்ச நீதிமன்றத்தையே ஏமாற்றியுள்ளார். அவ்வாறு ஏமாற்றுகின்ற, இதுபோன்று காவல் துறையிலே போலித்தனமாக இருக்கின்ற கறுப்பு ஆடுகளை, இந்த அரசு இன்னும் கைது செய்யாமல் இருப்பது ஏன் என்பதை இந்த அவையிலே நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-20*

அதேபோல, இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் இருக்கின்ற கலைஞர் அவர்களுடைய அரசில், இந்தக் குற்ற நிகழ்வுகள் கண்டுபிடிப்புக்களிலே, இந்தியாவிலேயே எந்தவொரு அரசும் செய்யாத சாதனையை நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார். கொலை, கொள்ளை அதேமாதிரி களவுபோன பொருட்கள் மீட்பு என்ற அந்த விகிதாச்சாரங்களையெல்லாம் பார்க்கப் போனால், ஒவ்வோராண்டின் புள்ளிவிவரத்தோடு இப்போது சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002-ல் பெண்களுக்கெதிரான குற்றங்கள் கடந்தகால ஆட்சியில் நடந்தவை 2001-லே 4,939; 2002-ல் 6,077, அதேபோல, 2002-2003-ல், 25,049 சம்பவங்கள். 2003-ல் 23,775 சம்பவங்கள். அதேபோல 2003-2004-ல், 23,725 சம்பவங்கள். 2004-ல், 22,286 சம்பவங்கள். தற்போது, இப்போது நடந்துகொண்டிருக்கிற நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு, இந்தக் குற்ற சம்பவங்கள் என்பது, 2006-ல், வெறும் 1,825 என்று சொன்னால், எது நேர்மையான அரசு, எது நியாயமான அரசு, எது ஊழலற்ற அரசு, எது உண்மைக்கு மாறாக அல்லாமல், மனச் சாட்சிக்குப் பயந்து, இந்த



நாட்டினுடைய மக்களுக்கு, அடித்தளத்திலே இருக்கிற ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரணாக இருக்கின்ற அரசு என்பதை இதன்மூலமாகவே, அவர்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்கப் புத்தகங்களின் குறிப்புகளின்மூலமாகவே நான் இந்த அவைக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணன் கொறடா திரு. செங்கோட்டையன் அவர்கள், சில ஒப்பீடுகளைச் சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, இப்பொழுது Accountant General--மத்திய தணிக்கைத் துறை அதிகாரி--ஒரு புள்ளிவிவரத்தைத் தந்திருக்கிறார். என்ன புள்ளிவிவரம் தந்திருக்கின்றார்? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும் ஒருசில மாதங்களில், இந்தச் சம்பவம் நடந்தது என்றாலும், கடந்தகால அண்ணா தி.மு.க. ஆட்சியிலே நடந்த சம்பவம். இந்த மாநகரத்தினுடைய மாநகர ஆணையராக இருக்கின்றவர் பல்வேறு காலக்கட்டங்களிலே, No parking-லே நிறுத்தியிருந்த வண்டி வாகனங்களைக் கொண்டுபோய், அவர்கள் ஓரிடத்திலே நிறுத்துவதற்குக் கட்டணம் வசூலித்திருக்கிறார்கள். அப்படி எவ்வளவு வசூலாகியிருக்கிறது என்றால், ஒரு கோடியே 73 இலட்சம் ரூபாய் வசூலாகியிருக்கிறது. அதைத் தனி நபர் கணக்கிலே, ஒரு காவல் துறை ஆணையாளர் வைத்துக்கொண்டு, அவர் அதைக் கையாண்டிருக்கிறார். தமிழகத்தினுடைய சட்டமன்ற வரலாற்றிலேயே இல்லாத வகையில், அது எந்தப் பதிவேட்டிலும் இடம் பெறவில்லை; எந்தக் கணக்கு வழக்குகளிலும் வரவில்லை. இதுவெல்லாம் நடந்தது எந்த ஆட்சியில் என்று சொன்னால், கடந்தகால ஆட்சியிலே என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இப்போது நேர்மையான ஆட்சியைப் பற்றியும் காவல் துறை அதிகாரிகளைப் பற்றியும் சொல்கிறார்களே, கடந்தகால ஆட்சியில் நடந்ததுபற்றி, ஒரு புள்ளிவிவரம் பேசுகிறார்களே, என்னிடத்தில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காத்திருப்போர் பட்டியலிலே இந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை, ஐ.பி.எஸ். அதிகாரிகளை, ஐ.எஃப்.எஸ். அதிகாரிகளை இவர்கள் வைத்திருந்தது எப்படித் தெரியுமா? அன்றைக்கு கிட்டத்தட்ட 29 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் பல மாதங்களாகக் காத்திருப்போர் பட்டியலிலே பணி கொடுக்காமல் வைத்திருந்தார்கள். 13 ஐ.பி.எஸ். அதிகாரிகளைக் கடந்தகால ஆட்சியில் நேர்மையாகப் பணியாற்றினார்கள்

என்பதற்காகக் காத்திருப்போர் பட்டியலிலே வைத்திருந்தார்கள். 9 ஐ.எஃப்.எஸ். அதிகாரிகளை Indian Forest Service என்று சொல்லக்கூடிய வனத் துறை அதிகாரிகளைக் காத்திருப்போர் பட்டியலிலே வைத்திருந்தார்கள். ஆனால், விதி 9/3 (ஏ) (பி) என்ன சொல்கிறது என்று சொன்னால், அப்படிக் காத்திருப்போர் பட்டியலிலே வைத்திருக்கின்ற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ். அதிகாரிகள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு முழுச் சம்பளமும், எல்லாப் பயணப் படிகளும் தர வேண்டுமென்பது விதி. அப்படிமட்டும், கடந்தகாலத்தில், மக்களுடைய வரிப் பணத்தை அந்த அரசு செலவு செய்தது எவ்வளவு தெரியுமா? வீணாக, அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளாமல் அவர்களுக்குச் சம்பளம் கொடுத்தது, 55,36,000 ரூபாய்.

ஆக, இப்போது நான் தேடித் தேடி எந்த விவரங்களைப் பார்த்தாலும், கடந்தகால ஆட்சியையும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியையும் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், இந்தியாவினுடைய வரலாற்றில், சரித்திரத்தில், இத்தனை வயதிலும், 83 வயதிலும், இவ்வளவு கட்டுக்கோப்பாக, ஒரு தலைமைப் பண்புடன், ஓர் ஆளுமைத் தன்மையோடு நடத்துகிற அரசாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கிறது என்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் அ.தி.மு.க. கொறடா அவர்கள் நிதியைப் பற்றிச் சொன்னார்கள். ஒரேயொரு செய்தியை இங்கே பதிவு செய்திட விரும்புகிறேன். எதிலே நிதி குறைக்கப்பட்டிருக்கிறது? நவீனமயமாக்கலிலே நிதி குறைக்கப்பட்டிருக்கிறது. நவீனமயமாக்கல் என்று சொன்னால் என்ன? ஓர் அரசு உருவாக்குகின்றபோது, ஒரு திட்டத்தை உருவாக்குகின்றபோது, நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், கணினி வாங்க முடியும்; துப்பாக்கிகள் வாங்க முடியும்; சிற்றுந்துகள் வாங்க முடியும்; மகிழுந்துகள் வாங்க முடியும். அப்படி இவை வாங்கப்படுகின்றபோது, யார் யாருக்கு அவற்றைக் கொடுக்க வேண்டுமோ, அவற்றைக் கொடுத்த பிறகு--ஒரு காவலர் இருக்கிறார் என்று சொன்னால், ஒரு துப்பாக்கியை வைத்துக்கொண்டுதான் அவர் எதிரிகளைச் சுட முடியும்; வன்முறையாளர்களைச் சுட முடியும்-- நவீனமயமாக்கல் திட்டத்தில், ஒவ்வோராண்டும் நிதியைக் கொடுத்துக் கொடுத்து, ஒவ்வொரு காவலருக்கும் கூடுதலாக, ஒரு துப்பாக்கிக்குப் பதிலாக 5 துப்பாக்கிகளும், ஒரு கணினிக்குப் பதிலாக இரண்டு கணினிகளும் அல்லது ஒரு மகிழுந்துக்குப் பதிலாக இரண்டு மகிழுந்துகளைக் கொடுத்தால், அது எப்படிச் சரியாக இருக்கும்?



நவீனமயமாக்கலிலே, நிதி, கடந்தகால ஆட்சியைவிட தற்போதைய ஆட்சியில் குறைந்து இருக்கிறது. நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இப்படி நிதி குறைந்ததற்கு என்ன காரணம்? எவையெவை இந்த நாட்டுக்குத் தேவையோ, காவல் துறைக்குத் தேவையோ, அவை ஏற்கெனவே கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் அல்லது உங்கள் ஆட்சிக் காலத்திலும், நிறைவு செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே அந்த நிதியை அவர்கள் குறைத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-25

இன்னுமொரு செய்தியை நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். நிதி என்கிற விஷயத்தில், இந்த நிதி என்ற பெயரையே தாங்கியிருக்கிற தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், இப்போது ஆரம்பக் கல்விக்கு, உயர் கல்விக்கு, உள்ளாட்சித் துறைக்கு, நெடுஞ்சாலைத் துறைக்கு, போக்குவரத்துத் துறைக்கு என்று மக்களைச் சென்றடைகின்ற வகையில், மக்களுக்குத் தேவையான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கித் தருவதற்கு, தன் துறையிலே நிதியில்லாவிட்டாலும் பரவாயில்லை; இந்தத் துறைகளுக்கு நிதி வேண்டுமென்று அள்ளிக் கொடுத்திருக்கிற ஒரே தலைவர்தான் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே, இன்றைக்குச் சலுகைகள் வழங்கப்படும்; பொன்னான அறிவிப்புகள் வரும் என்று தமிழகத்தில் இருக்கின்ற 89 ஆயிரத்திற்கும் மேற்பட்ட, கிட்டத்தட்ட ஒரு இலட்சத்திற்கு உள்ளடக்கி வருகின்ற ஆவலோடு காத்திருக்கின்ற காவல் துறை நண்பர்களுக்கு வழங்கப்படுகின்ற சீருடை allowance, ஏற்கெனவே 50 ரூபாயாகத் தந்து கொண்டிருக்கிறீர்கள்; அதை உயர்த்தித் தருவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல், shoes, அவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் திடமாக இல்லை என்கிறார்கள். சட்டை தரமானதாக இல்லை என்கிறார்கள். அதற்கான தையல் கூலி அவர்களுக்குக் கொடுப்பது போதவில்லை. இப்போது தையல் கூலி, துணி எடுத்துத் தைப்பது என்று சொன்னால், கிட்டத்தட்ட 400 ரூபாய் ஆகிறது என்கிறார்கள். அதற்கேற்றவாறு அவர்களுக்கு நிதி வழங்க வேண்டும். அதுபோல், D.S.P.-யாக இருப்பவர்களுக்கு, A.D.S.P. பதவிகளை உருவாக்கி, அவர்களுக்கு அந்தப் பணி வழங்குவதற்கு இந்த அரசு உதவி செய்யவேண்டும். கடந்த முறை, எங்கள் கட்சியினுடைய

தலைவர் அண்ணன் ஜி.கே. மணி அவர்களும் நானும் கோரிக்கை வைத்தோம். 138 காவல் உதவி ஆய்வாளர்கள் தொடர்ந்து ஏழு ஆண்டுகளாகச் சிறப்புக் காவல் துறையில் பணி செய்கிறார்கள். அவர்களோடு மற்ற துறையில் உள்ளவர்களெல்லாம் நல்ல பதவி உயர்வு பெற்று தாலுகா காவல் நிலையங்களில் அமர்த்தப்படுகிறார்கள். ஆனால், அந்த 138 உதவி ஆய்வாளர்களும் இதுநாள் வரையிலும் அவ்வாறு அமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். அதனால் முத்தமிழறிஞர் முதல்வர் அவர்களே, அந்த 138 உதவி ஆய்வாளர்களையும் தாலுகா காவல் நிலையங்களில் பணியமர்த்தி, சட்டம்-ஒழுங்கு பணி செய்வதற்கு, நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல், போக்குவரத்து நேரங்களில், காவலர்கள் நின்றுகொண்டு பணி செய்து கொண்டிருக்கிறார்கள். அதைக்கூட -- சில பத்திரிகை நண்பர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது -- அவர்கள் வண்டிக்காரனிடம், லாரிக்காரரிடம் பத்து ரூபாய், இருபது ரூபாய் வாங்குவதைப் புகைப்படம் எடுத்துப் போட்டு, அவர்கள் மிகப் பெரிய மன உளைச்சலுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மன உளைச்சலிலிருந்து அவர்களைத் தடுப்பதற்கு, அதுபோன்று அவர்கள் கையூட்டுப் பெறாமல் இருக்கவேண்டும் என்றால், அந்தக் காவல் துறை நண்பர்களுக்கு, எந்தக் காவல் துறை நண்பர்களாக இருந்தாலும், அரசு வழங்குகின்ற சம்பளத்தை, இரண்டு மடங்காக உயர்த்திக் கொடுத்து, அவர்களது வாழ்விலே ஒளியேற்ற வேண்டும். "இதுபோன்ற தவறுகளில் இனி நீங்கள் ஈடுபட்டால், நிச்சயம் dismiss செய்வோம்; dismiss செய்வதோடு விடமாட்டோம்; உங்கள்மீது கடுமையான வழக்குப் பதிவு செய்வோம்" என்கிற ஓர் அறிவிப்போடு அதை உயர்த்தித்தர வேண்டும்.

அதேபோல், காவல் துறையில் பணி செய்கின்ற பெண் காவலர்கள், பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள். நம்முடைய சபையில்கூட பார்த்தால், 9-00 மணிக்கு உள்ளே வருகிறார்கள்; இரண்டரை மணி, மூன்று மணி வரைக்கும் சபைக் காவலர்களிலிருந்து பெண் காவலர்கள் வரைக்கும், அவர்கள் attention-ல் நின்றுகொண்டிருக்கிறார்கள். இவர்களுக்காவது ஒரு special நிதியாக, கொஞ்சம் ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல். லாரிகளில் பொருள் ஏற்றிக்கொண்டு வரும்போது, காவல் துறை நண்பர்கள், ஓர் இடத்தில் அவர்களைப் பிடிக்கிறார்கள்.



அவர்களில் ஏதோ ஒருசில அதிகாரிகள், நூற்றில் ஒருசில அதிகாரிகள், கையூட்டுப் பெறுகிறார்கள். அது வேறு விஷயம். அது பத்திரிகையில் செய்தியாக வருகிறது. ஆனால், அடுத்தடுத்த இடங்களிலும், காவல் துறையினர் check post என்று நிறுத்தி, "இங்கே எடுத்துவா R.C. book-ஐ; இங்கே எடுத்துவா பேப்பரை" என்று சொல்லி, "check பண்ணவா?" என்கிறார்கள். அவ்வாறு கேட்காமல், ஓர் இடத்தில் மட்டும் அந்த ஆவணங்களையெல்லாம் சரிபார்த்த பிறகு, அங்கு ஓர் ஒப்பமிட வேண்டும். ஒரு seal வைத்து, "சரிபார்க்கப்பட்டது" என்று எழுதினால், தமிழகத்தில் வேறு எந்த மூலைமுடுக்குகளிலும் அந்த வண்டி, வாகனங்கள் செல்லும்போது, அதைக் காட்டுகின்றவகையில், அந்த ஓட்டுநர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தாத அளவிற்கு, இந்த அரசு புதிய திட்டங்களை வகுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல், சமீப காலங்களாக, காவல் நிலையத்தில் பணிபுரிகின்றவர்கள் அல்லது சில உயர் அதிகாரிகள் வீட்டில் பாதுகாப்பில் இருக்கின்றவர்கள், சில அரசு உயர் பெருமக்கள் வீட்டில் பாதுகாப்பில் இருக்கின்றவர்கள், தங்களுடைய துப்பாக்கிகளாலே தங்களைச் சுட்டுக்கொள்கின்ற அவலநிலை இருக்கின்றது. இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அவர்களுக்கு ஒரு மன அழுத்தம் இருக்கிறது. அதற்காக ஒரு உளவியல் பயிற்சியை நம்முடைய அரசு அவர்களுக்கு ஏற்பாடு செய்து, அந்தக் காவலர்கள் அதுபோன்ற சம்பவங்களில் ஈடுபடாத அளவிற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், காவல் துறையோடு நம்முடைய சிறைத் துறை; புழல் சிறை இருக்கிறது. மத்திய சிறையிலிருந்து கைதிகள் அங்கே மாற்றப்பட்டு இருக்கிறார்கள். அங்கே, இப்போது கஞ்சா விற்பதாகவும், ஒரு பெண்மணி, ஒரு கணவன் இருவரும் அங்கே இருந்துகொண்டு கஞ்சாவை தினமும் இரண்டு கிலோ கொண்டு செல்கிறார்கள் என்றும், "அங்கு இருக்கிற அதிகாரிகளுக்கு நாங்கள் 50 சதவிகிதம் commission கொடுக்கிறோம்; ஆகையால் அவர்கள் எங்களைக் கண்டுகொள்ளவில்லை" என்று சொல்கின்ற அளவிற்கும் அது நடந்து கொண்டிருக்கிறது. ஆகையால், இதையெல்லாம் நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). இன்னும் இரண்டு துறைகள் இருக்கின்றன. முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

*பிற்பகல் 12-30*

**திரு. தி. வேல்முருகன்:** அதேபோல, இந்த டாஸ்மாக்; மதுபான விற்பனையிலே, கிட்டத்தட்ட 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட 7 ஆயிரம் கடை ஊழியர்களும், அங்கே, bar-இல் தண்ணீர் ஊற்றி, சரக்கு ஊற்றித் தருகிறவர்கள் 6 ஆயிரத்துச் சொச்சம் பேர்களும் இருக்கிறார்கள். பூரண மதுவிலக்குக் கொள்கை, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கொள்கை. முதல்வரிடத்திலே வேண்டுகோள் வைத்திருக்கிறோம். இப்போது கிராமங்களில் படிப்படியாக அந்த மதுபானக் கடைகளை எல்லாம் அகற்றுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று சொன்னால், வரவேற்கிறோம். ஆனால், அதேநேரத்தில், அதில் பணிபுரிகின்றவர்கள் எல்லாம், அன்றைய ஆட்சிக் காலத்தில் சொற்ப சம்பளத்திற்கு வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். பல்வேறு மாவட்டங் களிலிருந்து, சென்னையிலும், கன்னியாகுமரியிலும், திருச்சியிலும் பணிபுரிகின்றார்கள். அவர்களை ஒரு கவுன்சிலிங் முறையிலே தகுந்த இடத்திற்கு மாறுதல் செய்வதற்கு, சொந்த மாவட்டத்திற்கு வருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நான் பாதிக்கப்பட்டதுபோல, கடந்தகால ஆட்சியிலே, தோழர் செல்வப் பெருந்தகை அவர்கள்மீது பொய் வழக்குப் போட்டு, வெடிகுண்டு வழக்குப் போட்டு, துப்பாக்கி வைத்திருந்தார் என்று பொய்யாக ஜோடித்த வழக்கு, உண்மையிலேயே C.B.I.-ஆல் இப்பொழுது நிரூபிக்கப்பட்டு, கடந்த வாரம் அறிக்கை தந்திருக்கிறார்கள். ஆக, அந்த உண்மைக்கு மாறான வழக்குகளைப் பதிவு செய்த எந்த அதிகாரியாக இருந்தாலும், காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பல்வேறு நிலைகளிலே இந்த நாட்டிற்காக உழைத்துக் கொண்டிருக்கிற காவல் துறை நண்பர்களுக்கான பல்வேறு சலுகைகளை வழங்க வேண்டுமென்று, எங்கள் கட்சியினுடைய தலைவரான திரு. கோ.க. மணி அவர்கள் இங்கே வற்புறுத்தியிருக்கிறார்கள். அவற்றையும் கனிவோடு பரிசீலித்து, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் நல்ல பல அறிவிப்புகளை இந்த நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, இந்த



வாய்ப்பைத் தந்த பேரவைத் துணைத் தலைவருக்கு மனமார்ந்த நன்றிகூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. Sir, நேரம் உங்களுக்குப் பத்து நிமிடங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** 10 நிமிடங்களில் எல்லாம் எப்படி சார் பேச முடியும்? இரண்டு நாட்களுக்கும் சேர்த்து, நான் ஓர் ஆள்தான் பேசுகிறேன் என்று ஏற்கெனவே சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** 10 நிமிடங்கள் என்றால், நான் பேசவில்லை. விட்டுவிடுங்கள். சபையிலே ஏற்கெனவே ஒருநாளைக்கு ஒருவர் பேசினால் 10 நிமிடங்கள் என்று. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடங்கள். இதற்கே Police Station-க்குப் போய் complaint கொடுத்துவிடாதீர்கள்!

**திரு. சி. கோவிந்தசாமி:** 10 நிமிடங்களில் முடியாது. நான் அமைச்சரிடமும் சொல்லியிருக்கிறேன். தயவுசெய்து எனக்கு 20 நிமிடங்கள் தேவை, இரண்டு நாட்களுக்கும் சேர்த்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், 15 நிமிடங்கள்.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை மற்றும் தமிழ்நாடு தீயணைப்புத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்த மூன்று கோரிக்கைகள் குறித்தும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துகளையும் கோரிக்கைகளையும் முன்வைக்க விரும்புகிறேன்.

காவல் துறையினுடைய பணி நியமன முறை என்பது, இன்றைய காலத்திற்கேற்ற முறையில் இருக்க வேண்டும். இன்றைய உலக மயமாக்கல் மற்றும் பொருளாதாரச் சூழ்நிலையில், நுகர்வோர் கலாச்சாரம், எல்லையில்லாமல் வளர்ந்து கொண்டிருக்கக்கூடிய நெருக்கடியான சூழ்நிலையின் காரணமாக, கொலை, கொள்ளை, பெண்களைப் பலவந்தமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது போன்றவை அதிகமாகி வரும் காலம் இது. இந்தக் காலத்திற்கு ஏற்றாற்போல்

காவல் துறை ஒழுக்க நெறியோடு பொது மக்களுக்குச் சமூகப் பாதுகாப்பு, சிறுபான்மையினர், நலிந்த பிரிவினருக்குப் பாதுகாப்பு, ஆதி திராவிட மக்களின் நலன், உரிமைகள் பாதுகாப்பு எல்லாவற்றுக்கும் மேலாக பெண்களின் உரிமைகள் பாதுகாப்பு, பெண்களுக்கு ஏற்படும் பாலியல் ரீதியான வன்முறையைத் தடுக்கக்கூடிய முறையில் காவல் துறைக்கு உரிய பயிற்சியும் கண்காணிப்பும் வழங்கப்பட வேண்டும் என்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அரசியலமைப்புச் சட்டம் மக்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளையும், சுதந்திரங்களையும் நிலைநிறுத்தி, பொதுமக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற வழிகாட்டுதல்களுடன் சட்டங்களைத் திறமையாகவும், எந்தப் பக்கமும் சாயாமல் அமல் நடத்தக்கூடிய ஓர் அமைப்பாக போலீசை எவ்வாறு இயக்குவது என்பதே இன்றைய முக்கியப் பிரச்சினை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

*1902* ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட போலீஸ் ஆணையத்தின் கருத்துப்படி, காவலரின் பணிகள், இயந்திரத் தன்மை கொண்டவையாக உள்ளதால் சிந்தித்துச் சீர்தூக்கி முடிவெடுக்க வேண்டிய பணிகளை அவர்களிடம் ஒப்படைக்கக் கூடாது என்று குறிப்பிடுகிறது. *1902* ஆம் ஆண்டு ஆணையத்தின் அன்றைய எதிர்நோக்கின்படி, இன்று இல்லை. ஆகவே, காவலர்களின் புதிய நிலைமைகளுக்கேற்ப உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

காவல் துறை எந்த ஒரு பிரிவு சார்பாகவும் செயல்படாமல், நடுநிலையாகச் செயல்படுகிறது என்ற நம்பிக்கையைப் பெற வேண்டும். புகார் கொடுக்க வரும் நலிந்த பிரிவினரைக் காவல் நிலையத்திலே, வெராந்தாவிலே நிற்க வைத்துவிட்டு, வசதியும், செல்வாக்கும் உள்ள புகாருக்குரியவர்களை, அதிகாரி தனக்கு அருகிலே, chair-இலே அமர வைத்து, அவரோடு உரையாடுவது என்பது, சாதாரண மக்கள் மத்தியிலே, காவல் துறையின்மீது ஒரு நல்ல நம்பிக்கையை உருவாக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அதேபோல, காவல் நிலையத்துக்கு வருகின்ற பொதுமக்களிடம், இன்றையதினம் தரமாகப் பேசுவதற்கே காவல் துறைக்கு ஒரு பயிற்சி அவசியமாக இருக்கிறது. அது ஆணாக இருந்தாலும், பெண் காவலர்களாக இருந்தாலும், காக்கி உடைக்குள்ளே புகுந்து கொண்டாலே, இன்றையதினம், அவர்களுக்கு எப்படி அப்படிப்பட்ட



வார்த்தைகள் வருகின்றன என்று சொல்ல இயலவில்லை. அந்த வார்த்தைகளை இங்கே பேச முடியாது. ஆகவே, அப்படிப்பட்ட தவறான வார்த்தைகளைப் பேசும் ஆண், பெண், இருபாலரும் காவல் துறையிலே நடந்துகொள்கிற முறை மாற்றப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-35*

அதேபோல, கடந்த சில நாட்களாக இந்த அவையிலும் பேசி இருக்கிறோம். நலிந்த பிரிவினர், தங்கள் சிறுநீரகத்தை விற்கக்கூடிய நிலைமையும், அதைச் சில புரோக்கர்கள் வாங்கி ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமையும் இன்றைக்குச் செய்திகளில் வந்து கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே, நாமக்கல் பகுதியிலே, விசைத்தறித் தொழிலாளர்கள் கிட்னியை விற்றார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களும், மற்றவர்களும் இப்போது அந்த நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள். சுனாமி பெயர் சூட்டப்பட்ட வட சென்னைப் பகுதியிலே, இந்தச் சிறுநீரகக் கொள்ளை, தொடர்ந்து நடைபெறுவதாகத் தகவல்கள் வருகின்றன. குறிப்பாக, ஏழை இளம் பெண்களிடமிருந்து, வசதிபடைத்த இவ்விற்பனையாளர்கள் பெற்றுக்கொண்டு--குறிப்பாக, ஏழைகளிடம் கந்து வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களே, இப்போது சிறுநீரக புரோக்கர்களாக மாறி இருக்கிறார்கள். அதிகாரிகள் சிலர், போலி ரேஷன் கார்டுகளைத் தயாரித்துக் கொடுத்து, அவர்கள் இல்லாத விலாசத்தைக் கொடுத்து. ஏழை மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். "சிறுநீரகக் கொள்ளைக்கு சென்னை நகரம், இப்போது சர்வதேச மையமாக மாறிவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது என்று பல மருத்துவ இதழ்கள் குறிப்பிடுகின்றன" என்று, கடந்த மார்ச் *29* ஆம் தேதி 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதுகுறித்து, மார்ச் *2* ஆம் தேதி சென்னையிலே நடந்த மருத்துவர்கள் பட்டறையில் பேசிய நம்முடைய சுகாதாரத் துறைச் செயலாளர், தமிழ்நாட்டிலே சிறுநீரகம், கொள்ளை போகிறது என்பதை ஏற்றுக் கொள்வதோடு, இந்த மோசடி வியாபாரத்தில் ஈடுபட்டு, ஏழை மக்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்; அறுவை சிகிச்சைக்குப் பிறகு மருந்து வாங்கக்கூட அவர்களாலே முடியவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நிலைமை தொடர்கிறது. *1994* ஆம் வருடம் இயற்றப்பட்ட சட்டம், இக்கொள்ளையைத் தடுத்து நிறுத்த உதவுகிறதா என்று நாம் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இந்தச் சிறுநீரகக்

கொள்ளை என்பது, இது ஏதோ மக்கள் நல்வாழ்வுத் துறை சம்பந்தப்பட்டது என்று மட்டும் பார்க்காமல், உள் துறை இதிலே தலையிட வேண்டும். இதை ஒரு criminal குற்றமாகக் கருதி, காவல் துறை இதன்மீது நடவடிக்கை எடுத்தால் இதைக் கட்டுப்படுத்த இயலுமேயொழிய, சுகாதாரத் துறையினால் மட்டும் இயலாது என்பதைக் கவனப்படுத்த விரும்புகிறோம்.

அதேபோல, ஜனநாயக உரிமை, தொழிலாளர் நலன், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவீதம் இட ஒதுக்கீடு போன்றவற்றில் இப்போது நீதிமன்றத் தலையீடு அதிகரித்து வருவதைப்போலவே, காவல் துறை சீர்திருத்தம் குறித்து, உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பும் கவலையளிப்பதோடு, மாநில அதிகார வரம்பிற்குள் அது ஊடுருவல் செய்யும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இதன்மீது மாநில அரசு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. சட்டம்-ஒழுங்கைப் பாதுகாத்து, தவறுகளைத் தடுக்க வேண்டிய காவல் துறை, சில தவறுகளுக்குக் காரணமாக மாறும் போக்கு கவலைக்குரியது.

கடந்த ஆட்சியிலே, சிவகாசி ஜெயலட்சுமி, செரினா போன்றவர்களுடைய வழக்குகள், பத்திரிகைகளுக்குத் தீனியாக இருந்தாலும், கடந்தகால ஆட்சி மற்றும் காவல் துறை எப்படிச் செயல்பட்டன என்பதற்குச் சாட்சியாக விளங்குகின்றன. 1992 ஆம் வருடம் அ.தி.மு.க. ஆட்சியிலே, தருமபுரி மாவட்டம், வாச்சாத்தி என்கிற கிராமத்தில், பழங்குடியின மக்கள்மீது போலீசார் மற்றும் வனத் துறையினர் கூட்டாக நடத்திய தாக்குதலில், 18 இளம் பெண்கள், கொடூரமான முறையில், கூட்டாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்கள். பலர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. ஆனால், அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்று அன்றைய முதல்வரும், காவல் துறையினரும் சாதித்தார்கள்.

இங்கே உரையாற்றிய எனது அருமை நண்பர், எதிர்க்கட்சியினுடைய கொறடா, உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள், அன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தார். அன்றைக்கு அவர் அறிவித்த செய்தியிலே என்ன சொன்னார் என்றால், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அன்றைய மாநிலச் செயலாளர், மறைந்த எங்கள் அன்புக்குரிய ஏ. நல்லசிவம் அவர்கள், இந்தப் பிரச்சினையைக் கிளப்பிய நேரத்தில், "அந்த வாச்சாத்தி கிராமம் என்பது மலை உச்சியிலே இருக்கிறது; அதற்குப் போக்குவரத்துப் பாதை வசதியே



இல்லை; ஆகவே, வயதான நல்லசிவம் அங்கே எப்படிப் போய் வந்தார்?" என்ற கேள்வி எல்லாம் கேட்டு, கேலியும், கிண்டலும் செய்தார்கள். ஆனால், வாச்சாத்தி கிராமம் என்பது, மலை உச்சியில் அல்ல; மலை அடிவாரத்திலே இருக்கிறது, அரசுப் பேருந்தும் அங்கே சென்று வருகிறது என்ற செய்திகள் எல்லாம் எடுத்துரைக்கப்பட்டன. மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும், மலைவாழ் மக்கள் சங்கமும் இடைவிடாமல் எடுத்த முயற்சியின் விளைவாக, அங்கே குற்றம் நடந்திருப்பது உண்மை என்று நீதிமன்றத்தாலே இப்போது உறுதி செய்யப்பட்டு, அவர்களுக்குரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும்; இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் அறிவித்திருக்கிறது. ஒருவார காலத்தில், எந்த நிருவாகம், எவ்வளவு தொகை வழங்க வேண்டும் என்று நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும்; 6 வாரத்தில், உரியவர்களுக்கு, அந்த இழப்பீட்டுத் தொகை போய்ச் சேர வேண்டும் என்று நீதிமன்றம் இப்போது ஆணையிட்டிருக்கிறது. நம்முடைய அரசு அதை நிறைவேற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சிவகங்கை மாவட்டத்திலே, சிவகங்கை அருகிலே இருக்கக்கூடிய காட்டாணிக்குளம் கிராமத்தில், ஒரு தலித் பெண் செல்லம்மாள் என்பவர், ஜனவரி 17 ஆம் தேதி ஆடு மேய்க்கச் சென்றபோது, பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்டார். சாதாரண ஒரு குக்கிராமத்திலே நடந்த நிகழ்ச்சி. 3 மாதங்கள் முடிந்தும், காவல் துறையால், உரியவர்கள் இதுவரையில் கைது செய்யப்படவில்லை; உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

சென்னை, தாம்பரத்தை அடுத்த சேலையூர் போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் செல்வகுமார் என்பவர், அதே காவல் நிலையத்திலே கம்ப்யூட்டர் ஆபரேட்டராக வேலை செய்த ஒரு பெண்ணை, பாலியல் தொல்லைக்கு உள்ளாக்கிச் செயல்பட்டதாலே, இப்போது வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மதுரை, தல்லாகுளம் காவல் நிலையத்தில் குற்றப் பிரிவு இன்ஸ்பெக்டராக இருந்த ஜஸ்டின் பிரபாகரன், ஒரு ரியல் எஸ்டேட் தொழில் நடத்தக்கூடிய மதுரை வீரன் என்பவருடைய வீட்டிலே நுழைந்து, 3 இலட்சம் ரூபாய் பணத்தையும், 25 பவுன் தங்க நகையையும் எடுத்துச் சென்றார். ஆனால், கோர்ட்டிலே வெறும் ஒருசில பவுன் நகைகளை மட்டும் அங்கேயிருந்து எடுத்ததாகச் சொல்லி, ரெக்கார்டிலே காட்டியிருக்கக்கூடிய நிலைமை என்பது இப்போது ஏற்பட்டிருக்கிறது.

விழுப்புரம் மாவட்டம், விருத்தாசலம் போலீஸ் பயிற்சி இன்ஸ்பெக்டராகப் பணியாற்றிய சுமதி என்பவர், அங்கே தனியாக வசித்து வருகிறார். D.S.P. ஜெயபால் அவர்களுடைய தலைமையிலே நடந்த ஓர் ஆய்வுக் கூட்டத்திலே கலந்துகொண்டு, அவர் வீடு திரும்புகிறார். காலையிலே பார்த்தால், மின் விசிறியிலே தூக்குப் போட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டதாகச் செய்திகள் வருகின்றன. இதனை அரசு கவலையோடு பரிசீலிக்க வேண்டும். ஒரு பெண் காவலருக்கே உரிய பாதுகாப்பற்ற ஒரு நிலைமை, இன்றைக்கு ஏற்பட்டு வருவதைக் கவலையோடு பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தொழிலாளர்கள் நடத்துகின்ற போராட்டங்களிலே காவல் துறை என்பது ஒருதலைப்பட்சமாக சில இடங்களிலே நடந்துகொள்கிற போக்கு, இன்றைக்கும் தொடர்கிறது என்பதை நான் கவலையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கிற திருப்போரூர் என்று சொல்லக்கூடிய பகுதியிலே, 'ஆர்கிட் கெமிக்கல்ஸ்' என்கிற ஒரு கம்பெனி செயல்பட்டு வருகிறது. அந்தக் கம்பெனியினுடைய தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளுக்காக, வேலைநிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், அங்கேயிருக்கிற காவல் துறை, திருப்போரூரினுடைய துணை Police Superintendent-ம் அங்கேயிருக்கிற இன்ஸ்பெக்டரும்--நம்முடைய தமிழ்நாடு அரசினுடைய காவல் துறை, தமிழ் நாடு அரசினுடைய ஊதியத்தைப் பெற்றுச் செயல்படுகிற காவல் துறை--நான் வருத்தத்தோடு சொல்கிறேன்—அந்த ஆலையினுடைய, செக்யூரிட்டிகளாகச் செயல்படுகிற மிக மோசமான ஒரு நிலைமை இருக்கிறது. அந்த இரண்டு நபர்களின்மீது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் காவல் நிலையத்தில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அருண் பரத் என்கிற ஒரு வாலிபன், கடந்த ஆண்டு ஜூன் மாதம் காவல் நிலையத்திலே அடித்துக் கொல்லப்பட்ட செய்தி வந்தது. நான் கடந்த முறையும் வலியுறுத்தினேன். அதற்குக் காரணமாக இருந்த ஓர் ஆய்வாளர், இளநிலை ஆய்வாளர், 4 காவலர்கள் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள்மீது புகார் கொடுக்கப்பட்டும்—கிட்டத்தட்ட ஓராண்டுக் காலம் நெருங்குகிறது--இன்றுவரையில், அது பதிவு செய்யப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர்



அவர்கள் இதில் உரியவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, காவல் துறையிலே பணியாற்றக்கூடிய காவலர்களுடைய பல்வேறு கோரிக்கைகள் குறித்து, இங்கே எனக்கு முன்னாலே உரையாற்றிய உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, காவல் துறையில், அமைச்சுப் பணியாளர்கள் பணியாற்றுகிற அலுவலகங்களிலே, நிறைய காலியிடங்கள் இருக்கின்றன. அவற்றை நிரப்ப வேண்டும்; புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அங்கே அந்த அலுவலகங்களிலே தொகுப்பூதியத்திலே பணியாற்றக்கூடிய கணினி விவரப் பதிவாளர்கள், காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்பட வேண்டும். அவர்கள் குறைந்த ஊதியத்திலேதான், 2,500 ரூபாய் என்கிற ஊதியத்தைப் பெற்று, நீண்டகாலமாகப் பணியாற்றி வருகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல, 2,000 ரூபாய் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் இல்லப் பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் என்ற பட்டியலிலே இருக்கக்கூடியவர்களும் காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்பட வேண்டுமென்று கோருகிறார்கள். அதேபோல, பெண்கள் காவல் நிலையத்திற்கு அவசியமான சில வசதிகள் தேவைப்படுகின்றன; குறிப்பாக, வாகன வசதி இல்லாத நிலைமை என்பது இருக்கிறது. அதை அரசு கவனிக்க வேண்டும்.

'உதவும் கரங்கள்' என்கின்ற அமைப்பு, இப்போது செயல்பட்டு வருகிறது. அந்த அமைப்பினுடைய உடனடிச் செயல்பாட்டுக்கான எந்தவிதமான வசதிகளும் இல்லாத நிலை இருக்கிறது. அதற்கான உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஆம் ஆண்டு, பெண் S.I. தேர்வு நடந்தது. அந்தத் தேர்வுமூலமாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள் பணியில் அமர்த்தப்பட்டார்கள். 1981 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரையில் அவர்களுக்கு ஓரேயொரு பதவி உயர்வு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்குப் பிறகு, 1987 ஆம் ஆண்டிலே இதே இளநிலை ஆய்வாளர்களாகப் பணிக்குச் சேர்க்கப்பட்ட அந்த பெண் ஊழியர்கள் இதுவரை 3 பதவி உயர்வுகளைப் பெற்றிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், 1981 ஆம் ஆண்டிலே பெண் S.I.-ஆகத் தேர்வு செய்யப்பட்ட அவர்களுக்கும்

உரிய பதவி உயர்வு கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சென்னையில் கடந்த 1970 ஆம் ஆண்டு காவலர்களாக வேலைக்குச் சேர்ந்து, பின் 1987-இலே உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற்றார்கள். ஆனால், நீதிமன்றம், "1987 ஆம் ஆண்டிலே அவர்களுக்கு அந்தத் தகுதியில்லை; 1992-இலேதான் அதற்குத் தகுதி பெற்றவர்களாக அவர்கள் மாறுகிறார்கள்" என்று தெரிவித்தது. அவர்கள் தற்போது ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற்று பணியாற்றி வருகிறார்கள். ஆகவே, 1987-க்கும் 1992-க்கும் இடைப்பட்ட 5 ஆண்டுக் காலம் அவர்கள், S.I.-ஆகப் பதவி உயர்வு செய்யப்பட்டது பொருந்தாது என்ற காரணத்தினால், அவர்களுக்குக் கொடுத்த ஊதிய உயர்வை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு அறிவித்தது. அவர்கள் பணியில் இருந்த காலம் முழுவதும் அந்த ஊதியம் திரும்பப் பெறப்படவில்லை. ஆய்வாளர்களாகப் பல ஆண்டுகளாகப் பணியாற்றி, இப்போது ஓய்வுபெறும் வயதை எட்டி, ஓய்வு பெற இருக்கிறார்கள். இப்போது அதிகாரிகள், அவர்களுக்கு நான்கு இலட்சம் ரூபாய் ஓய்வூதியம் வழங்க உதவி செய்து, ஆனால் அந்த வேலையிலிருந்து வெளியே செல்கிறபோது கிடைக்கிற தொகையில், இரண்டு இலட்சம் ரூபாயை, ஏற்கெனவே கூடுதலாகப் பெற்றதற்குப் பிடித்தம் செய்துகொள்ளுமாறு தெரிவிப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இவ்வளவு ஆண்டுக் காலம், காவல் துறையில் பணியாற்றி, ஓய்வு பெறுகிற அவர்கள், மன உளைச்சலில் இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு அவற்றைத் தள்ளுபடி செய்து, அவர்கள் ஓய்வுக் காலத்திலே மன நிம்மதியோடு வாழ வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

நம்முடைய சட்டமன்றக் காவலர்களுக்கு வழங்கப்படுகிற அந்த தினப் படியையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும். அநேகமாக, ஓராண்டுக் காலமாக, அது சரியாகக் கிடைப்பதில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அதை வழங்குவதோடு, இன்றைய தேவைக்கேற்ப அதைக் கூடுதலாக்கி வழங்க வேண்டும். அவர்களுக்குரிய சலவைப் படி--ஏனென்றால் வரக்கூடிய உறுப்பினர்களைவிட அவர்கள்தான் கொஞ்சம் வெள்ளையும் சொள்ளையுமாக இங்கே சட்டமன்றத்திலே இருக்கிறார்கள்; ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு--சலவைப் படி என்பது, மிக மிக அவசியம். அதை உயர்த்தித் தர வேண்டும். அதேபோல, சீருடைகளையும்



வழங்குவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சென்னை, கோவை, மதுரை போன்ற பெருநகரங்களிலே ஜனநாயக உரிமைகள்; இப்போது பொதுக் கூட்டங்களின்மூலமாகச் செய்திகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்குப் பொருத்தமான இடங்கள் மிக மிகக் குறைவாக இருக்கின்றன. ஆகவே அந்தப் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்குப் பொருத்தமான இடங்களைத் தேர்வு செய்து, அறிவிக்க வேண்டும். நான் கடந்த ஆண்டும் சொன்னேன், சீரணி அரங்கத்திலே, குறிப்பாகப் பொதுக் கூட்டங்கள், பெரிய நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு, அரசு வாய்ப்பளிக்க வேண்டும் என்று. ஆகவே, அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பொன் விழா நிகழ்ச்சியோடு, அங்கே கடற்கரையிலே மீண்டும் கூட்டங்கள் நடத்துவதற்கு ஓர் அனுமதியைத் துவக்கி வைக்கிற வகையிலே இந்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள், சீக்கிரம்.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஒரே ஒரு நிமிடம். வழிப்பறி, திருட்டு வழக்குகள் பதிவு செய்வது இப்போது மறுக்கப்படுகிறது. குறிப்பிட்ட எண்ணிக்கையிலே பெட்டிச் செய்திகள் போட வேண்டும் என்று சொல்கிறார்கள். அவை எல்லாம் தவிர்க்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மதுவிலக்கு, ஆயத்தீர்வை சம்பந்தப்பட்டவற்றில் ஒன்றிரண்டு கருத்துகளைச் சொல்லி முடிக்கின்றேன். இப்போது டாஸ்மாக் நிறுவனம் தொடர்ந்து செயல்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவித்திருக்கிற நிலையில், அதிலே சுமார் ஏழாயிரம் கடைகள் இருக்கின்றன. ஏழாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் அரசுக்கு வருவாயை ஈட்டித் தருகிற ஒரு முக்கிய துறையாக இருக்கிறது. அந்தத் துறையிலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள், இப்போது எந்த விதமான அடிப்படை வசதிகளும் இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு 8 மணி நேர வேலை, வேலை நிரந்தரம், அரசு ஊழியர்களுக்கான சலுகைகள், ஊதிய உயர்வு போன்றவற்றை வழங்குவதோடு, கடந்த ஆட்சியிலே போடப்பட்ட பொய் வழக்குகளை வாபஸ் பெற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைப்புத் துறைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** முடித்தாயிற்று. தீயணைப்புத் துறை இன்றைய வளர்ச்சிக்கேற்ப நவீனப்படுத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பெருநகரங்களிலே, பெரும் உயரமான கட்டடங்கள் வருகின்றன. அங்கே பற்றுகிற தீயை அணைப்பதற்குரிய நவீன வசதிகள், Sky-lift என்று சொல்லக்கூடிய அந்த உயரமான கருவிகள் பொருத்துவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டு, திருப்பூரிலே கூடுதலாக மூன்று காவல் நிலையங்கள் தேவைப்படுகின்றன. அங்கே எல்லா வளர்ச்சியும் இருக்கிறது; அதோடு கெடுதலும் சேர்ந்து வளர்கிறது. ஆகவே, அதைக் கட்டுப்படுத்துவதற்குக் கூடுதலான காவல் நிலையங்களையும் காவலர்கள் எண்ணிக்கையையும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**திரு. சி. கோவிந்தசாமி:** அதிகப்படுத்தித் தா. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். உங்களுக்கு 10 நிமிடங்கள். (குறுக்கீடு) 10 நிமிடங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** எங்கள் கட்சியில், நான் ஒருவர்தான் பேசுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவலர்களுக்கான பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றுகிற பொறுப்பிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும், அந்தக் கோரிக்கைகளையெல்லாம் இங்கே பதிவு செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே சில கோரிக்கைகளை நான் முன்னதாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெண் காவலர்களுக்கான சீருடையில் ஒரு மாற்றம் செய்ய வேண்டுமென்று நான் கருதுகிறேன். அதிலும் குறிப்பாக, அவர்களுக்கு இப்போது பேன்ட், ஷர்ட் என்ற முறையிலே அவர்கள், 'in' பண்ண வேண்டிய அவசியத்திலே இருக்கிறார்கள். இது ஒரு சங்கடத்தை ஏற்படுத்துகிறது, பெண் காவலர்களுக்கு. ஆகவே, இங்கே நமது அவைக் காவலர்களுக்கு உள்ள அந்தச் சீருடை போன்று, பெண் காவலர்களுக்கு



அறிவித்தால், மற்றவர்களின் கேலி, கிண்டலுக்கு ஆளாகாமல் அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள். ஆகவே, பெண் காவலர்களுக்கான பாதுகாப்பு சீருடையிலே மாற்றம் செய்வதற்கான முயற்சியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அடுத்து, பல்வேறு கொலை, கொள்ளைச் சம்பவங்களைப் பற்றியெல்லாம் இதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன. புதிய கொள்ளை முயற்சி என்ற முறையிலே bureau pulling என்ற கொள்ளை முயற்சி, குறிப்பாக, நமது சென்னை மாநகரத்திலே பிரபலமாக நடந்தது. அது கண்டுபிடிக்க முடியாமலே இருந்தது. அது இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டு, அதற்குத் தீர்வு காணுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த bureau pulling என்ற அந்தப் பயங்கரமான கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட நாகமணி என்கிற நபர், செஞ்சியைச் சேர்ந்தவர். அவர் மிகவும் நவீனமான முறையிலே, கண்டுபிடிக்கமுடியாத வகையில், அந்தத் திருட்டுக்களைச் செய்து கொண்டேயிருந்தார். அதைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியிலே, மடிப்பாக்கம் பகுதி காவல் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள். மடிப்பாக்கம், ஆதம்பாக்கம், பழவந்தாங்கல், தாம்பரம், சிட்லபாக்கம், மதுரவாயல், அம்பத்தூர், விருகம்பாக்கம் போன்ற காவல் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளிலே இந்தத் திருட்டுகள் நடந்திருக்கின்றன. ஆகவே, இவர்களுக்கு எல்லாவகையிலும் பதவி உயர்வு வழங்குவதையும், அவர்களுக்குச் சன்மானம் வழங்குவதையும் மிக முக்கியமான பொறுப்பாகக் கருதவேண்டும் என்று நான் பணிவோடு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வேண்டுகோளாக வைக்கிறேன். குறிப்பாக, வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் ஈடுபட்ட அதிரடிப் படையில் எத்தனை பேர் இருந்தார்களோ, அத்தனை பேருக்கும் வெகுமதி; அவர்களுக்கெல்லாம் வீட்டுமனைப் பட்டா, வீட்டுமனை, 3 இலட்சம் ரூபாய் பணம். இது தேவையா, இல்லையா என்ற கருத்து, காவல் துறையிலே இருக்கிறவர்களுக்கே இருக்கிறது. அவர்களுக்கு மன வருத்தமும் இருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்து, அந்தக் கொள்ளையைத் தடுத்தவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கவேண்டும். அதிலே, A.C. இருக்கிறார்; Inspector, S.I., ஏட்டுகள் என்று 7 பேர்கள் அந்தப் பணியைச் செவ்வனே நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆகவே, அந்த bureau Pulling திருட்டுச் சம்பவத்தைக் கண்டுபிடித்த அந்த team-ஐச் சார்ந்த ஏழு

பேர்களுக்கும் பதவி உயர்வும், விருதுகளையும் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இங்கே அறிவிக்க வேண்டுமென்று நான் அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் நிலையங்களில் காவலர் பற்றாக்குறை உள்ளது. குறைந்தபட்சம் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும், 5 பேர் வீதமாவது காவலர் பணியிடங்களை நிரப்பவேண்டும். காவலர்களுக்கான உணவுப் படி 80 ரூபாய் என்றிருப்பதை, ஒரு மடங்கு கூடுதலாக்கி, 160 ரூபாயாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Risk Allowance; இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய துறை என்ற காரணத்தினாலே, விருப்பப்படி என்று அல்ல; கருணை அடிப்படையிலே, எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், இப்பொழுது அது குறைவாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட, 300 ரூபாய் என்ற அளவிற்கு அந்த risk allowance-ஐ வழங்குவதற்கான முயற்சியை முதல்வர் அவர்கள் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு விடுப்பு, 12 நாட்களிலிருந்து 15 நாட்களாக அளிக்கலாம்.

காவல் துறையினருக்கு மருத்துவப் படிக்குப் பதிலாக, ஒரு புதிய திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குடும்பமே பயன்படும் வகையில், அரசே பணம் செலுத்தி, மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலமாக, அந்தக் காவலர் குடும்பங்கள் பயன்பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

காவலர், தலைமைக் காவலர், S.I., Inspector, D.S.P. வரை, வாரம் ஒருநாள் அவர்களுக்கு ஓய்வுக்கான ஒரு தொகையாக ரூ.150 கொடுக்கப்படுகிறது. இதுவும் போதுமானதாக இல்லை. அவர்கள் பணியிலே ஈடுபடுகிற காரணத்தினாலே, அதை மேலும் ஒரு மடங்கு உயர்த்தி, ரூ.300/- ஆக உயர்த்தி வழங்கவேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இலஞ்ச ஒழிப்புப் பிரிவிலே உள்ளவர்களுக்கு 15 சதவிகிதம் அடிப்படைச் சம்பளத்திலே அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, மற்றப் பிரிவுகளும் அதுபோன்ற பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணிச் சுமையைக் குறைப்பதற்கான வகையிலே, அவர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தை அதிகரிக்கலாம். அவர்களுக்கு பெட்ரோல் மற்றும் இதர செலவுகள் எல்லாம்



கூடுதலாகிக் கொண்டேயிருக்கின்றன. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, S.I.-யிலிருந்து, D.S.P. வரையிலும் Cell-phone வழங்கலாம். இப்பொழுது Revenue Department-ல், R.I.-க்கெல்லாம் Cell-phone வழங்கியிருக்கிறோம். காவல் துறையின் பணி மிகவும் முக்கியமான பணியாக இருக்கிற காரணத்தினாலே, தகவல் தொடர்புச் சாதனங்கள் இப்பொழுது வளர்ந்து வந்திருக்கிற இந்த நிலையில், Sub-Inspector முதல் D.S.P. வரையிலும்--மேலதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது-- இவர்களுக்கும் Cell-phone வழங்குவதற்கான முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, Jeep-க்கான எரிபொருள், 75 லிட்டர்தான் வழங்கப்படுகிறது. அது மிகவும் குறைவாக இருக்கிறது. அது குறைவாக இருக்கிற காரணத்தினாலே, வேறுவிதமான தவறுகள் செய்து, அதைச் சரிகட்டுவதற்குரிய முயற்சிகளை எடுக்கிறார்கள். ஆகவே, அதை மாதத்திற்கு 200 லிட்டர் என்ற அளவிலே வழங்குவதற்கான முயற்சியை எடுக்கவேண்டும்.

ரேஷன் பொருட்கள் அவர்களுக்குச் சரியாகக் கிடைப்பதில்லை. ரேஷன் பொருட்கள் அவர்கள் பெறுவதற்கு செய்யவேண்டிய செலவைப் பார்த்தால், அதை அவர்கள் பெறுவதற்கு செய்யவேண்டிய செலவைப் பார்த்தால், அதை அவர்கள் மலிவு விலையைவிடக் கூடுதல் விலையில் வாங்க ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்த ரேஷன் பொருட்களைக் காவலர்களுக்கு முறையாக வழங்குவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

எங்களது மாவட்டம்; அதை நமது மாவட்டம் என்று சொல்லவேண்டும். திருவாரூர் மாவட்டத்தில், மாவட்டக் கண்காணிப்பாளர் அலுவலகம் இல்லை; வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. அதற்காகக் கிட்டத்தட்ட ரூ.65,000/- மாத வாடகை செலுத்துகிறார்கள். அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து--புதிய இடங்கள் எல்லாம் இருக்கின்றன--அதைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திருவாரூரிலே Police Control Room இல்லை. அந்த மாவட்டத்திற்கு மட்டும் இல்லை. அதை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது மன்னார்குடி தொகுதியிலே, மன்னார்குடி-பாமணி, காவல் நிலையம் அமைந்திருக்கிற பகுதி. போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள பகுதியாக அது இருக்கிற

காரணத்தினாலே, மன்னார்குடி நகரத்தினுடைய வடக்குப் பகுதியிலே காவல் நிலையத்தைக் கொண்டுவந்து, மன்னார்குடி வடக்கு, தெற்கு என்று இரண்டு காவல் நிலையங்களாக மாற்றவேண்டும். திருமக்கோட்டை, தலையாமங்கலம், கோட்டூர் காவல் நிலையங்களுக்குக் கட்டடம் வழங்கவேண்டும். கூத்தாநல்லூர், கோட்டூர் தீயணைப்பு நிலையங்களுக்குக் கட்டடம் வழங்கவேண்டும். பெருகவாழ்ந்தானிலே புதிதாக ஒரு தீயணைப்பு நிலையம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

சந்தனக் கடத்தல் வீரப்பனைச் சுட்டுக் கொன்றதற்கான தனிப் படையிலே இருந்தவர்களுக்கெல்லாம் பல விருதுகளை வழங்கியிருக்கிறோம். ஆனால், அதேபொழுது, இந்தப் பதவி உயர்வு என்ற முறையிலே, ஏற்கெனவே அந்த சீனியாரிட்டியில் இருக்கிறவர்கள் இப்பொழுது பாதிக்கப்படுகிறார்கள். D.S.P. seniority பட்டியல் வெளியிட்டதிலே--இப்போது காவல் துறை வெளியிட்டிருக்கிறது-- அதில், 1979 batch-இல் உள்ளவர்களுக்குரிய வரிசைக்கு முன்னால், சந்தன வீரப்பனைப் பிடித்துச் சுட்டுக் கொன்ற அந்தப் படையில் இருந்து பதவி உயர்வு கிடைத்தவர்கள், சீனியாரிட்டியில் முன்னால் வந்துவிடுகிறார்கள். ஆகவே, அந்த 1979 batch-ல் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு அளித்துவிட்டு, அடுத்ததாக இவர்களை seniority-யில் வைக்கவேண்டும். இது அவர்களுக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதைப் பரிசீலித்து அந்த சீனியாரிட்டி விதிப்படி, அந்தப் பதவி உயர்வுகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சென்னையிலே இரண்டாம் நிலைக் காவலர்களாகப் பணியில் சேர்ந்தவர்கள் குறித்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கியதை, இப்பொழுது பணி ஓய்வு பெறுகிறபொழுது திரும்பக் கேட்டதால், மிகப் பெரிய மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்கள் குறைந்தபட்சம் 130 பேருக்குள்ளாகத்தான் இருப்பார்கள், சென்னை நகரத்தில். அவர்களுக்கு அதை விதிவிலக்காகத் தள்ளுபடி செய்து, அவர்களின் அந்த மனக் குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் உதவி ஆய்வாளர்கள் தேர்வு நடந்ததில், 98 பேர்கள்மட்டும், அந்தச் சிறப்புக்



காவல் படையிலேயே இருக்கிறார்கள். மீதமுள்ளவர்களெல்லாம் காவல் நிலையப் பணிக்குச் சென்றுவிட்டார்கள். இவர்கள் மட்டும் செல்லமுடியாத நிலையில், 7 ஆண்டுகளாக இருக்கிறார்கள். இவர்களைக் காவல் நிலையப் பணிக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகத்திற்குத் தனியாக மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி இருக்கிறது. அதேபோல, காவல் துறைக்கும் தனியாக ஒரு மருத்துவக் கல்லூரியும், ஒரு பொறியியல் கல்லூரியும் ஏற்படுத்தி, அவர்களுடைய குழந்தைகள் கல்வி பெறுவதற்குரிய அந்த வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஈரோடு, வெள்ளித்திருப்பூர் காவல் நிலைய ஆயுதக் கொள்ளையில், அதைக் கண்டுபிடித்து, திரும்பவும் கொண்டு வந்து சேர்த்திருக்கிற இன்ஸ்பெக்டர், S.I., ஏட்டு இவர்களுக்கெல்லாம் வெகுமதி வழங்கவேண்டும்; பதவி உயர்வு வழங்க வேண்டும்.

இந்தத் துறையிலே கணினி விவரப் பதிவுப் பணியாளர்கள் என்ற முறையில் தொகுப்பூதியத்திலே இருக்கிறார்கள். இவர்கள் கிட்டத்தட்ட 715 பேர் இருக்கிறார்கள். இவர்கள் காவல் துறையினுடைய கருணை அடிப்படையிலே பணி பெற்றவர்கள்; மரணமுற்ற அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களை எப்படியாவது பணி நிரந்தரம் செய்தால்தான் இவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் கிடைக்கும். மாவட்டம் விட்டு மாவட்டம் செல்லுகிற காரணத்தினாலே இவர்களுக்கு ரூ.2,500 வழங்குவது என்பது போதுமானதாக இல்லை. அதை உயர்த்துவதற்கோ, இவர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கோ உரிய முயற்சிகளை எடுக்க வேண்டும்.

காவல் துறை அமைச்சுப் பணியாளர்களுடைய கோரிக்கை என்ற முறையிலே, நிறைய காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. அவை நிரப்பப்பட வேண்டும். துப்புரவுப் பணியாளர்கள்; அவர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். டாஸ்மாக் ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்யவேண்டும். பணி நேரத்தையும் வரையறுக்க வேண்டும். அவர்களுக்கு வார விடுப்பு வழங்க வேண்டும். அதேபோல, அவர்களுக்கு மேலதிகாரிகளால் கடுமையான தொல்லையும், நடவடிக்கையும் தொடர்ந்து இருக்கிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதைப் போக்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) கோரிக்கையையே இப்போதுதான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆகவே, இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விருதுநகர் மாவட்டத்திலே, 1972-லே, காவலர்களாகப் பதவியில் சேர்ந்தவர்களுக்கு இதுவரைக்கும் பதவி உயர்வு கிடைக்கவில்லை. பாக்கி எல்லா மாவட்டங்களிலேயும் கிடைத்திருக்கிறது. இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, நமது தமிழகத்திலே, கடந்த இரண்டு ஆண்டுகளில் encounter-கள் அதிகமாக நடந்திருக்கின்றன. அவற்றைத் தொடர்ந்து நடைபெறவிடாமல், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவற்றைத் தடுப்பதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இது மனித உரிமைகளைப் பாதுகாக்க முடியாத ஒரு சூழலுக்கு ஆட்பட்டுவிடும்.

அதைப்போல, அரசியல் கட்சிகளுடைய ஊர்வலம், பொதுக் கூட்டங்களுக்குத் தடை என்று சொல்லப்படுகிறது. இது மாநில அளவிலே, ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இதுவும்கூட, சுப்ரீம் கோர்ட்டினுடைய தடையின் காரணமாக, இப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டு எது எதற்கெல்லாம் தடை விதிக்கவேண்டுமோ, எல்லாவற்றையும் செய்து, மனித உரிமைகளை நசுக்குவதற்குரிய முயற்சி என்று ஆட்பட்டுவிட்டால், ஜனநாயகம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இன்னும் 3 பேர் பேச வேண்டியிருக்கிறது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** 5 நிமிடங்கள் கொஞ்சம் கூடுதலாகக் கொடுங்கள். கட்சி சார்பில், நான் ஒருவர்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள். வேறொரு நாளில், இன்னும் நிறைய நேரம் பேசலாம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை. இதிலே பேச வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் விட்டுவிடுங்கள். கொஞ்சம் சொல்லிவிடுகிறேன். ஒருத்தருக்குத்தான் வாய்ப்புக் கொடுக்கிறீர்கள். இதற்கான அனுமதியைக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, தமிழகத்திலே மதவாதமும், சாதி வெறியும் வேகமாகப் பரவுவதற்கான வாய்ப்புகள் வந்துகொண்டிருக்கின்றன. இங்கே பல்வேறு செய்திகள் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டன. இதை மோசமான முன்னுதாரணமாகக் கருதி,



இதைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். இன்றைக்குக்கூட, பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது, மதுரை மீனாட்சி அம்மன் கோயிலிலே, காவலர்கள் சோதனை செய்துதான் பக்தர்களை உள்ளே விடுகிறார்கள் என்று. சோதனை செய்து அனுப்புகிறபோது என்ன விஷயம் என்றால், பக்தர்களாகப் போகிறவர்களே, வாழ்க்கையில் சோதனை ஏற்பட்டுத்தான், தங்கள் சோதனையைப் போக்கிக்கொள்வதற்கு மீனாட்சி அம்மனிடம் போகிறார்கள். அங்கேயும் ஒரு சோதனை செய்துதான் உள்ளே போகவேண்டும் என்ற நிலைமை வருகிறது. இது யாரால் வருகிறது என்று சொன்னால், மத அடிப்படைவாதக் கருத்துகளை உடையவர்களால் இது ஏற்படுத்தப்படுகிறது. ஆகவே, இதிலே தீவிரவாதமாக மதவாதம் வந்துகொண்டிருக்கிறது. அந்தச் சக்திகளை வளரவிடாமல் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

ஏதோ இராமேஸ்வரத்திலேயும், வேதாந்தம் போய் சில கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார். வேதாந்தம் போய் நடத்தினால், அது எதில் ஏறும், எங்கு இறங்கும் என்று தெரியாத நிலையில் இருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் இதையெல்லாம் அனுமதிக்கக்கூடாது என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன். (குறுக்கீடு) உரையைச் சீக்கிரம் முடியுங்கள்; முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள். இன்னும் 3 பேர் பேச வேண்டியிருக்கிறது, திரு. சிவபுண்ணியம்.

பிற்பகல் 1-00

**திரு. வை. சிவபுண்ணியம்:** இங்கே பொய் வழக்குகள்பற்றிச் சொல்லப்பட்டன. குறிப்பாக, நிறைய பொய் வழக்குகள் கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே போடப்பட்டன. அதற்குச் சான்றாக. . . (குறுக்கீடுகள்) பொறுத்துக்கொள்ளவே முடியாதே? (குறுக்கீடுகள்) இங்கே செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. சாட்சியாகவே இருக்கிறார். சொன்னார்கள் இங்கே, அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன். (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். இன்னொரு நாளைக்குப் பேசலாம், உட்காருங்கள். திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்பு, மதுவிலக்குக் குறித்த மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன், உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டுச் சொல்வது என்பது, அந்த மாதிரி பொய் வழக்குகள் போடுவது என்பதைத் தடுக்க வேண்டும். ஏனென்றால், பொய் வழக்குகளைப் போட்டவர்களே பேசுகிறார்கள் என்பதுதான் வருத்தமே தவிர வேறல்ல. அதற்குச் சாட்சி இங்கே செல்வப் பெருந்தகையே இருக்கிறார். சிவகங்கை மாவட்டத்திலே காட்டாப்பட்டிக்குளம் என்ற ஊரில் ஆதி திராவிடப் பெண் செல்லம்மாள் என்பவர், கொலை செய்யப்பட்டிருக்கிறார். மூன்று மாதங்கள் ஆகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே, சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குணசேகரன் அவர்கள், ஒரு கோரிக்கை மனு அளித்திருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அந்தச் செல்லம்மாள் அவர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உதவித் தொகை வழங்கி அந்தக் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் பேச்சினை நிறைவு செய்யுங்கள். திரு. வீர. இளவரசன். (குறுக்கீடு) Time ஆகிவிட்டது. திரு. வீர. இளவரசன், உங்களுக்குப் பத்து நிமிடங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை, வணக்கத்தை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். "What Grammar is to language, Police is to Society" என்று ஓர் அறிஞர் சொல்லியிருக்கிறார். காவல் துறை என்பது, எந்த அளவிற்கு இந்த நாட்டில் முக்கியத்துவம்வாய்ந்த இலாகா என்பதை அவர் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். ஒரு நாட்டின் அரசியல் முன்னேற்றத்திற்கு, பொருளாதார முன்னேற்றத்திற்கு, சமுதாய முன்னேற்றத்திற்கு அடித்தளமாக இருப்பது, அவசியமாக இருப்பது காவல் துறை என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஒரு மாநிலத்தில் அமைதி நிலவினால்தான், சட்டம்-ஒழுங்கு காப்பாற்றப்பட்டால்தான், அந்த நாட்டிலே எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை உண்டாகும். அதனால்தான்,



காவல் துறைக்கும் பொதுமக்களுக்கும் இடையிலே இருக்கின்ற அந்த இடைவெளி குறைக்கப்பட்டு, காவல் துறை என்பது பொதுமக்களுடைய நண்பன் என்ற நிலைமை, பொதுமக்களுடைய பாதுகாவலன் என்ற நிலைமை, இந்த நாட்டில் உருவாகக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய கடமை, அரசாங்கத்திற்கு இருக்கிறது. சுதந்திரத்திற்கு முன்னால் 1945-1946 ஆம் ஆண்டு, காவல் துறைக்கு ஒதுக்கியிருக்கின்ற அந்தத் தொகை 2.98 கோடி ரூபாய், 3 கோடி ரூபாய்க்கும் குறைவான தொகை என்று நாம் பார்க்கிறோம். ஆனால், 2007-2008 ஆம் ஆண்டு நம்முடைய நிதிநிலை அறிக்கையில், நம்முடைய காவல் துறைக்கு இப்போது ஒதுக்கியிருக்கிற தொகை, 2,136 கோடி ரூபாய் என்பதைப் பார்க்கிறோம். ஏறத்தாழ, ஓர் ஆயிரம் மடங்கு, கிட்டத்தட்ட ஆயிரம் மடங்கு, இப்போது அந்த அளவிற்கு இந்தத் தொகை அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், சட்டம்-ஒழுங்கு நம்முடைய நாட்டில் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

போலீஸ் அமைப்பு என்பது, பிரிட்டிஷ்காரர்கள், தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக அடக்குமுறையை உறுதிப்படுத்துவதற்காக, மக்களை அச்சப்படுத்துவதற்காக இங்கே இந்த நாட்டிலே கொண்டுவந்ததுதான் போலீஸ் துறை என்பது. ஆனால், அப்படிக் கொண்டுவரப்பட்ட போலீஸ் இலாகாவை, அன்றைக்கு இருந்த பேச்சாளர்கள் எல்லாம் மேடைகளிலே--இங்கே இருக்கின்ற மூத்தவர்களுக்கெல்லாம் தெரியும்--செந்தலைப் பூச்சிகள் என்று அவர்களைக் கிண்டல் அடித்தார்கள்; தாக்கிப் பேசினார்கள். "செந்தலைப் பூச்சிகளை, எங்களுக்கு சுயராஜ்யம் கிடைத்ததும், எங்கள் காலடியில் போட்டு மிதிப்போம்" என்று ஒரு காலத்தில் பேசப்பட்டது, இந்தக் காவல் துறை. அதற்குப் பிறகு சுதந்திரம் கிடைத்தது. 20 ஆண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியில், போலீஸ்காரர்களைப்பற்றி எந்தவிதமான விமர்சனமும் இல்லை. அந்த ஆட்சிக்கு ஆதரவாக இருந்தார்கள் என்ற காரணத்தினால், அன்றைக்கு விமர்சனம் இல்லை.

பிற்பகல் 1-05

அதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடந்தது. அப்பொழுதும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாக போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள் என்று பிரச்சாரம் நடத்தப்பட்டதே தவிர, குற்றங்குறைகளை வேறு எந்தவிதத்திலும் சொல்ல முடியவில்லை. என்ன காரணம்? ஆட்சியில் இருப்பவர்கள் பக்கம், அவர்கள் சாயக்கூடிய ஒரு மனோபாவம் இந்த

நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; அதிகாரத்தில் இருப்பவர்கள், தங்களுடைய கண் ஜாடையைக் காட்டுகின்ற திசையில், காவல் துறை இயங்க வேண்டும் என்ற மனோபாவமும் இருப்பதை நம்மால் மறுக்க முடியாது. எனவே, காவல் துறை தடம் புரளாமல், ஆதிக்கத்திற்கு அடிபணிந்துவிடாமல், சிபாரிசுகளுக்கு இடங்கொடுத்துவிடாமல், எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கும் போக்கோடு, பொய் வழக்குகளைப் போட்டுவிடாமல், இந்த நாட்டில் நிதானமாக, நியாயமாக நடந்துகொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நீதியையும், நேர்மையையும், சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய காவல் துறை, இப்போது அந்தக் கடமைகளை முற்றிலும் செய்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு அல்ல; இதற்கு முன்னால், பல ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து, இந்தக் குறைகள் காவல் துறையிலே இருக்கின்றன. இதே மன்றத்திலே, 1989 ஆம் ஆண்டு ஓர் உறுப்பினர், இந்தக் காவல் துறையைப் பற்றிச் சொல்கின்றபோது குறிப்பிட்டார்; "கீழேயிருந்து மேலேவரையிலும் ஊழலின் ஊற்றுக்கண் இருக்கிறது என்று சொல்வதானால், காவல் துறையைச் சொல்லாமல் இருக்கமுடியாது" என்று அன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறார் என்று சொன்னால், காவல் துறையைப்பற்றி அப்படிப்பட்ட ஒரு மனோபாவம் இந்த நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கிறது எனத் தெரிகிறது.

அதுமட்டுமல்ல; சில வேளைகளில் குற்றம் செய்பவர்களை விட்டுவிட்டு, குற்றம் செய்யாதவர்களைப் பிடித்து, அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்து, சிறைக்கு அனுப்புகின்ற நிலைமையும் இருந்து வந்திருக்கிறது என்பதைக் கடந்த காலத்திலும் நாம் உணர முடியும். "குற்றம் செய்பவர்களை விட்டுவிட்டு, குற்றம் செய்யாதவர்களைப் பிடித்துத் துன்புறுத்துகிற காவல் துறையை, உங்கள் கிளைச் சங்கமாக வைத்துக் கொள்ளுங்கள்; மாற்றிக் கொள்ளுங்கள்" என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர், ஒருகாலத்தில் இதே அவையிலே முழங்கியிருக்கிறார் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்த அவையிலே முதலமைச்சராக இருந்தபோது, காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் விநாயகம் அவர்கள், இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆட்சிக்கு வந்த பத்தாம் நாள்— நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்--"Your days are numbered"



என்று சொன்னார்; "உங்கள் நாட்கள் எண்ணப்படுகின்றன" என்று சொன்னார். அதற்கு அண்ணா அவர்கள், அமைதியாகச் சொன்னார்கள், "My steps are measured" என்று. "ஒவ்வொரு அடியும் அளந்து எடுத்து வைக்கப்படுகிறது" என்று சொல்லிவிட்டு, அமைதியாகச் சொன்னார்: "சர்க்கார் நிர்வாகம் என்பது, நிரந்தரமானது; இன்று நான் அந்த நிர்வாகத்தில் இருப்பேன்; நாளை இன்னொருவர் அந்த நிர்வாகத்திற்கு வரலாம். நியாயமான பண்பை எந்தச் சூழ்நிலையிலும் விட்டுவிடக் கூடாது. என்னைப் பொறுத்தவரையில், பகை உணர்ச்சியற்று, கட்சி மாச்சர்யமற்று, கட்சி உணர்ச்சி இல்லாமல், நியாயப் பண்போடு நடந்துகொள்ளவே நான் விரும்புகிறேன்; இந்தப் பண்பு, இந்த நாட்டிற்கு எதுவரையிலும் தேவை என்று நீங்கள் கருதுகிறீர்களோ, அதுவரையிலும் என்னை வைத்திருங்கள். அந்தப் பண்பு தேவையில்லை என்று நீங்கள் விரும்பினால், தேவையில்லை என்று நீங்கள் கருதினால், அதற்குப் பிறகு என்னை இந்தப் பதவியிலிருந்து எடுத்துவிட்டு, வேறொருவரை, அதற்குத் தகுந்தவரை நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள்" என்று பெருந்தன்மையோடு சொன்னவர், பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அதுமட்டுமல்ல; "நான் இங்கே ஆட்சிப் பொறுப்பிலேயிருந்து சாதிக்கக்கூடியதைவிட, அங்கே எதிரணியிலேயிருந்து அதிகமாகச் சாதிப்பேன் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்; எனவே, என்னால் நடக்க முடியவில்லையென்றால், என்னால் அடியெடுத்து வைக்க முடியவில்லை என்று சொன்னால், 'என்னால் முடியவில்லை, வலிவு உள்ளவர்கள், இங்கே வந்து அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுங்கள்; கடமையைச் செய்யுங்கள், கணக்கைப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று அவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு நான் சென்று விடுவேன்" என்று ஜனநாயகத்திற்கு இலக்கணமாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கு அந்தக் கருத்தை இங்கே பதிவு செய்தார்கள். ஆனால், அண்ணா அவர்கள் உலவிய இந்த மண்ணில், இந்தத் தமிழகத்தில், பண்பிற்கும், அன்பிற்கும், எதிர்க்கட்சியினரிடத்திலும் அன்பு காட்டிய பேரறிஞர் அண்ணா அவர்கள் உலவிய இந்தத் தமிழகத்தில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஒரு சின்னஞ்சிறிய இயக்கம், எங்கள் இயக்கம். வளர்ந்துகொண்டிருக்கின்ற இயக்கம். எங்கள் இயக்கத்தின் **என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கு நிலுவையில் இருக்கிறது. அதுபற்றிப் பேசக் கூடாது. அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. ** சம்பந்தமாகச் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

*பிற்பகல் 1-10*

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்தை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அன்றைக்கு, கடந்த 29 ஆம் தேதி பொது விவாதத்தில் நான் பேசுகின்றபொழுது, எங்கள் அமைப்புச் செயலாளர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒன்றிரண்டு நிமிடங்கள்தான் இருக்கின்றன. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். இதே கருத்தை மாற்றுக் கட்சிக்காரர்கள், ** என்று சொன்ன கருத்து இங்கே பதிவாகியிருக்கிறது. அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். அதைமட்டும் எப்படி நீங்கள் இங்கே பதிவு செய்ய முடியும் என்பதை அடக்கத்தோடு நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவரைக் கைது செய்திருக்கிறார்கள் என்ற செய்தியைச் சொல்லலாமே தவிர, செய்யப்பட்ட கைதுக்கு ஒரு motive கற்பித்து ** என்று நீங்கள் motive-ஐ அரசுக்குக் கற்பிக்கிற காரணத்தால்தான், இந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்ற காரணத்தால், அத்தகைய குறிப்பு சட்டமன்றத்திலே பதிவாகக்கூடாது என்பதற்காகத்தான் சபாநாயகர் அவர்கள் அதை எடுக்கச் சொன்னார்கள்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று நான் சொல்லக்கூடாது என்றால், ** என்று இங்கே பேசியிருக்கிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன், நீங்கள் சப்ஜெக்டுக்குள்ளே போங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள். (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் குரலெழுப்பினர்.)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நீங்கள் ஏன் சத்தம் போடுகிறீர்கள்? அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வீர. இளவரசன், ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியானால், உங்கள் தலைவர்-தலைவர்தானே? அவரைக் கைது செய்தார்களே, கொண்டுபோய் பொடாவிலே போட்டார்களே, அத்தனை மாதங்கள் வைத்தார்களே, எதன் அடிப்படையில்? ** உண்மையான வழக்கா அது?

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்விக்கு இன்னும் அமைச்சர் பதில் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம். (குறுக்கீடுகள்) திரு. செல்வம், உங்களுக்கு 10 நிமிடங்கள்தான்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியங்களிலே பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காவல் துறையிலே எவ்வளவோ கறைகள் படிந்திருந்த அந்தக் கறைகளை எல்லாம் அகற்றி, இன்று நல்லாட்சி செய்து கொண்டிருக்கிற இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க உள் துறை, இந்தவேளையிலே, நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களைப் பாராட்டி என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சட்டம் எளியவனைக் கண்டால் எட்டி உதைக்கும்; வலியவனைக் கண்டால் வளைந்து கொடுக்கும்' என்று சொல்வார்கள். அதற்கேற்றாற்போல் பத்திரிகையிலே சில செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. என்ன செய்திகள் என்றால், பத்து நாட்களிலே ஒருவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதும், ஐந்து நாட்களிலே மற்றொரு காவல் நிலையம் தண்டனை வாங்கிக் கொடுப்பதும், இன்னொரு காவல் நிலையம், மூன்றே நாட்களிலே தண்டனை வாங்கிக் கொடுப்பதும் பத்திரிகையிலே வருகின்ற செய்திகள். இந்த ஏழையெளிய மக்கள், ஒடுக்கப்பட்ட

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மக்களுக்கெல்லாம் கொலை வழக்கிலே மூன்று நாட்கள், ஐந்து நாட்களிலே தண்டனை வாங்கிக் கொடுக்கின்ற நம்முடைய காவல் துறை, கடந்த 10 ஆண்டுகளாக, 12 ஆண்டுகளாகக் கோடிக் கணக்கில் தமிழகத்தைக் கொள்ளையடித்த ஊழல்வாதிகளுக்கு ஏன் இந்தத் தீவிர விசாரணையை மேற்கொள்ளவில்லை என்று நான் பதிய வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், ஆதி திராவிட மக்கள்மீது எப்போதும் பரிவோடு இருப்பவர். ஆயிரமாயிரம் ஆண்டுக் காலமாக அடிமைப்பட்ட இந்தச் சமூகத்திற்கு ஒரு நல்வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்தவர். ஆனால், கடந்தகால ஆட்சியிலே ஆதி திராவிட மக்களுக்கு என்னென்ன அநீதிகள் ஏற்படுத்தப்பட்டன என்பதை நான் சில வரிகளிலேயே இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, சேரிகளைக் கொளுத்துபவர்கள், படுகொலை செய்வோர், பாலியல் வன்கொடுமை புரிவோர் போன்ற ஆதிக்க வெறியர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல், சட்டத்தை அவமதிக்கிற, ஜனநாயகத்தை அவமதிக்கிற செயல்களில் காவல் துறையின் பங்கு, மிகவும் வேதனைக்குரியது ஆகும். எத்தனையோ சான்றுகள் என்னால் அடுக்க முடியும். உழைக்கும் மனிதர்களையும், மனித உரிமைகளையும் நசுக்குவதில், கடந்த தமிழக அரசு செய்துள்ள கொடுமைகளை இங்கே சொல்ல முடியாது. பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை உலக சாதனைப் பட்டியலில் இடம்பெறும் என்றால், அது மிகையாகாது. ஆதி திராவிடர்களுக்கும், பெண்களுக்கும் எதிரான வன்கொடுமைகளை எதிர்த்துப் போராடும் மக்கள் பிரதிநிதிகளைக் குறிவைத்துத் தாக்குவது, சிறைப்படுத்திப் பழிவாங்குவது போன்ற மனித உரிமை மீறல்களை வெளிப்படையாகவே செய்து வந்திருக்கிறது. ஆதி திராவிடர்களைப் படுகொலை செய்தால், அந்தக் குற்றவாளிகளைத் தப்ப விடுவதில், தமிழகக் காவல் துறைக்குச் சாதனைகளையும், விருதுகளையும் வாரி வழங்கலாம். சான்றுக்கு, விழுப்புரம் மாவட்டத்திலே, கடந்த ஐந்து ஆண்டுகளில், பல கொலை வழக்குகளில் குற்றவாளிகள் அடையாளம் காணப்படாமல் இருக்கின்றனர். குறிப்பாகச் சொல்லப்போனால், வழுதாவூர் ஆறுமுகம், குன்னூர் கண்ணன், ஆழியூர் ரவி, வானூர் அசோக், திண்டிவனம் சூரியா எனவும், 2004-லே, நான்கு படுகொலைகள்: ஒன்று, செங்குறிச்சி ஏழுமலை, சம்பத்குமார், அருணகிரி, கணபதிபட்டு சிவராமன், மானூர் ராஜா எனவும் இப்படிப்பட்ட படுகொலைகளிலே, இதுவரைக்கும் எந்தவொரு



முன்னேற்றமும் இல்லை. காவல் துறையைக் கேட்டால், கழுத்தை அறுத்துக் கொலை செய்கிறார்கள்; அதற்குச் சாட்சி இல்லை என்று சொல்கிறார்கள். 302-வது பிரிவின்படிகூட, அந்த வழக்குப் பதிவு செய்ய மறுக்கப்படுகிறது.

பிற்பகல் 1-15

இவ்வாறு கடலூர் மாவட்டத்திலே, செல்லஞ்சேரி சிவகாமி, என்னுடைய தொகுதியிலே கோழியூர் விஜய், சிவகங்கை மாவட்டத்திலே கூடானிகுளம் செல்லம்மாள், இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதி திராவிட மக்களைக் கழுத்து அறுத்துக் கொல்வதும், விபத்து என்று கணக்குக் காட்டுவதுமான நிலை இருந்து வருகின்றது. எவ்வளவோ படுகொலைகளைச் செய்கின்ற இந்தக் கயவாளிகளை, ஏன் காவல் துறையால் இதுவரை அடையாளம் காண முடியவில்லை? குறிப்பாக, ஆதி திராவிடர்கள் குற்றம் செய்யாமல், எந்தத் தவறும் இழைக்காமல் இருக்கும்போது, பொய் வழக்குகளைப் புனைந்து, அவர்களைச் சிறைப்படுத்துவது, அவர்களை எப்படியெல்லாம் நசுக்க முடியுமோ, ஒடுக்க முடியுமோ, அந்த நிலையிலே, காவல் துறை கடந்த காலங்களிலே இறங்கியிருக்கிறது. குறிப்பாக, ஒன்றைமட்டும் நான் இங்கே கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல தலைவர்கள் இந்த வழக்குகளைப்பற்றிப் பேசினார்கள். இப்போதுகூட நம்முடைய கொறடா அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய ஆட்சியிலே அமைதிப் பூங்காவாகத் தமிழகம் இருந்தது என்று சொன்னார்கள். "பக்கத்து அண்டை மாநிலமான ஆந்திராவிலே நக்சலைட்டுகள் இருக்கிறார்கள்; அசாமிலே உல்ஃபா இருக்கிறார்கள்" என்று இப்படி அடுக்கிக்கொண்டே போனார். நான் கேட்கிறேன், தமிழகத்திலே இப்படிப்பட்ட ஒரு அவலநிலை ** கடந்தகால ஆட்சி என்பதை இந்த அவையிலே நான் பதிய வைக்க விரும்புகிறேன். குறிப்பாக, நான் அதை. . (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று குரலெழுப்பினர்.)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ** என்பது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**திரு. கு. செல்வம்:** ஏன் சொல்கிறேன் என்றால், கடந்தகால ஆட்சியிலே இவையெல்லாம் நடந்தன என்பதை நான் ஆதாரப்பூர்வமாகக் கூறுகிறேன். நான் ஆதாரத்தை நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு அளிக்கிறேன். அந்த ஆதாரம் உண்மையாக இருந்தால், நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். இல்லையென்றால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுவதற்கு அனுமதியுங்கள். நான் ஆதாரத்தோடு சொல்லுகிறேன், கடந்த ஆட்சியிலே--ஆதி திராவிட மக்களுக்காக, நான் கால் நூற்றாண்டுக் காலமாகப் பணியாற்றி வருகிறேன்--என்மீது எதற்காக ** போட்டீர்கள்? கடந்த கூட்டத்தொடரிலே பேசும்போது சொன்னார்கள். அது நீதிமன்றத்திலே இருக்கிறது; அதைச் சொல்ல வேண்டாம்; பேசவேண்டாம் என்றார்கள். நான் சொல்லுகிறேன் . . . (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து நின்றுகொண்டேயிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது ஒருவர் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "என்மீது ஏன் வழக்குப் போட்டீர்கள்?" என்று இருக்கலாமேதவிர, ** என்று இருக்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வம் அவர்கள், ஏற்கெனவே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே இதைப்பற்றிப் பேசி முடித்துவிட்டார். திரும்பவும் இதைப் பேசிக்கொண்டிருப்பது,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சபையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பதாகும். வேண்டுமென்றே திட்டமிட்டு அவர் உண்மைக்கு மாறான தகவலை இங்கே பதிவு செய்து கொண்டிருக்கின்றார். ஆகவே, அத்தனைக் குறிப்புகளையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிறது. அவர் சொல்லிவிட்டார் அல்லவா? (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

பிற்பகல் 1-20

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன ஆட்சியிலே நடைபெற்றதையெல்லாம் தெரிந்துதான் எங்களோடு தோழமை வைத்து, இப்பொழுது வெற்றிபெற்று, இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார் என்பதை மறந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களோடு, தோழமையோடு இருந்து வெற்றி பெற்றதெல்லாம் உண்மைதான். எங்கள் வாக்குகள் உங்களுக்கு, உங்கள் வாக்குகள் எங்களுக்கு. (குறுக்கீடுகள்) ஆனால், இப்படி அநாகரிகமாக இதைச் சொல்லிக்காட்டுகிறீர்கள் என்றால், எங்கள் வாக்கைப் பெற்ற நீங்கள் இராஜினாமா செய்யத் தயாரா? உங்கள் வாக்கைப் பெற்ற நாங்கள், இராஜினாமா செய்கிறோம். (குறுக்கீடுகள்) நீங்கள் இராஜினாமா செய்யத் தயாரா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) நான் கேட்கிறேன், இப்படி இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பேரவையிலே, "எங்களால் நீங்கள் சட்டமன்ற உறுப்பினரானீர்கள்" என்று சொல்கிறீர்களே, இது எவ்வளவு பெரிய அநாகரிகமான வார்த்தை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? அவர் சொல்கிற சவாலை ஏற்றுக்கொள்கிறீர்களா நீங்கள்? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். என்ன? சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அவர் வாக்குகளைப் பெற்று நாங்கள் வெற்றிபெற்றிருக்கிறோம். "நீங்கள் இராஜினாமா செய்யத் தயாரா?" என்று கேட்டார்கள். அவர் அதற்குத் தயாராக இருந்தால், நான் என்னுடைய தொகுதியிலே தயாராக இருக்கிறேன். அவர் தயாராக இருக்கிறாரா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரைட், பேசுங்கள் திரு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கூட்டத்தொடரிலே பேசினேன்; அதையே திரும்பத் திரும்பப் பேசுகிறேன் என்று நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னார். நான் சொல்கிறேன், கிராமத்திலே மிட்டா மிராசுகள், பண்ணையார்களெல்லாம் எங்களை எப்படி நடத்துவார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். பேசினால் குறுக்கே பேசக்கூடாது; சாலைகளில் நடக்கக்கூடாது;

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், உரையை முடியுங்கள் நீங்கள்.

**திரு. கு. செல்வம்:** துண்டு போடக்கூடாது; செருப்பு அணிந்து செல்லக்கூடாது; இப்படிப்பட்ட நிலை. சட்டப் பேரவையிலும், பேசும்போது குறுக்கிட்டுக் குறுக்கிட்டுப் பேசுவது, அதைத்தான் இது காட்டுகிறது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த பேரவையிலே பேசும்பொழுது, மத்திய சிறப்புக் குற்றப் புலனாய்வுத் துறையில் அந்த வழக்கு விசாரணையில் இருந்தது. கடந்த 4 ஆம் தேதி இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார்கள். அந்த இறுதி அறிக்கையிலே என்ன சொல்கிறார்கள் என்றால், "செல்வப் பெருந்தகை வெடிகுண்டு வீசவில்லை; அவருக்கு எதிரான சாட்சியங்கள் இல்லை" என்று மூன்று வழக்குகளிலேயும் இறுதி அறிக்கை அளித்திருக்கிறார்கள். நான் என்ன கேட்கிறேன் என்றால், அ.தி.மு.க.-வைச் சார்ந்த காவல் துறை அதிகாரிகளுக்கு அந்த வெடிகுண்டு எங்கிருந்து வந்தது? அந்த வெடிகுண்டைத் தயாரித்தவர்



யார்? காவல் துறைக்கு வெடிகுண்டை supply செய்தவர் யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், என் மீது போடப்பட்ட வழக்குகளிலே, நானே அதை ஒப்புக் கொண்டதாகவும். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சத்தம் போடக்கூடாது, உட்காருங்கள்.

**திரு. கு. செல்வம்:** முதல் தகவல் அறிக்கையில் இருக்கிறது. நானே ஒப்புக்கொண்டு விட்டேனாம்! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு உறுப்பினர் பேசுங்கள், (குறுக்கீடு) அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசுகிறபோது, எதிர்க்கட்சியினுடைய ஆட்சியையோ, எதிர்க்கட்சியினுடைய அமைச்சர்களையோ, அந்தக் காலத்திலே ஆட்சியில் இருந்தவர்களையோ குற்றஞ்சாட்டிப் பேசவில்லை. இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டு, அந்தக் குற்றச்சாட்டு உண்மை இல்லை என்று காவல் துறையே சொல்கிறபோது, அந்தக் குற்றச்சாட்டைக் கூறியவர்கள் யார் என்ற கேள்வியைத்தான் அவர் எழுப்புகிறார். காவல் துறையைத்தான் அவர் குறிப்பிட்டுப் பேசி இருக்கிறார். கடந்தகால ஆட்சியை நேரடியாக இந்தக் குற்றச்சாட்டில் அவர் சம்பந்தப்படுத்தவில்லை. (குறுக்கீடுகள்)

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்பொழுது காவல் துறை ** போட்டிருக்கிறது. அந்த . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். சொல்லுங்கள், என்ன? சொல்லுங்கள் சார்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவரைப் பற்றிய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கை refer பண்ணிவிட்டார்கள் என்றுதானே அவர் சொல்கிறார். (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சொல்கிறேன். நான் பேசிமுடித்த பிறகு ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கு முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஏன் பேசி முடிக்கவே விடமாட்டேன் என்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள். வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று உண்மைக்கு மாறாகச் சொன்னீர்கள் என்றால் என்ன அர்த்தம்? இல்லை, உண்மைக்கு மாறாகச் சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதைக் கேட்டுவிட்டு அப்புறம் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தீர்ப்பு வழங்கினார்களா? தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறதா? ஏன் அதற்குள்ளே குறுக்கிடுகிறீர்கள் நீங்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) அது தெரியும் இல்லையா? கேஸ் referred.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, தீர்ப்பு வழங்கப்படவில்லை. கேளுங்கள் அவரை, தீர்ப்பு வழங்கப்பட்டதா என்று. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Case referred. அங்கே பாருங்கள். தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. Case referred.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குக் கூறிக்கொள்வது என்னவென்றால், மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறை, இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் அளித்துவிட்டது. (குறுக்கீடுகள்) அது என்ன அறிக்கை என்று சொல்கிறேன், இருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்வம் அவர்கள் குறிப்பிடுகிற, ஆய்வு நடத்தியவர்கள் அளித்த அறிக்கை, நீதிமன்றத்திலே வழங்கப்பட்டு விட்டது. (குறுக்கீடுகள்) அவர் குற்றம் சாட்டப்பட்டவர்; குற்றம் சாட்டப்பட்டவர், தன்மீது குற்றம் இல்லை என்றும், காவல் துறை அறிக்கையை நீதிமன்றத்திலே வழங்கிவிட்டது என்றும் சொன்னால், பெரும்பாலும் தன்மீது குற்றம் இல்லை என்பதற்காகத்தான் சொல்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள். . .(குறுக்கீடுகள்) பொறுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தாராளமாகச் சொல்லலாம். சொல்வது தவறு அல்ல. அதைச் சொல்லலாம். சொல்வதினாலே, அவர் யாரையும் குற்றஞ்சாட்டி, கடந்தகால ஆட்சி இந்தத் தவறு செய்தது என்று குற்றஞ்சாட்டினால்தான் தவறு. (குறுக்கீடுகள்) அவர் தன்மீது குற்றம் இல்லை என்பதைச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோ பாருங்கள். Action dropped என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? Action dropped என்றால், நீதிமன்றம் ஒரு முடிவிற்கு வந்தாகிவிட்டது; Police Report submitted; Action dropped, அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) பிரிவு 173-ல் அவர்கள் charge sheet-ல் refer பண்ணி உள்ளே கொடுத்துவிட்டார்கள். அந்த refer notice lodged in the court. அதனாலே, அதன்மேலே இனிமேல் further நடவடிக்கை கிடையாது. அதனால்தான் அவர் சொல்கிறார். தெரிகிறதா? உட்காருங்கள். உறுப்பினர், பேசுங்கள் நீங்கள், (குறுக்கீடுகள்)

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.. (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இறுதி அறிக்கை என்று கூறப்பட்டிருக்கிறது. இறுதி அறிக்கை என்பதற்கும், தீர்ப்பிற்கும் வித்தியாசம் தெரியவில்லை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு. நான் சொல்கிறேன் ...

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றியது நான்தான். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். வேறென்ன சொல்லப் போகிறீர்கள்? சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 1-25*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றப் புலனாய்வுத் துறையினுடைய இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆனால், அந்தக் குற்ற அறிக்கையை ஆராய்ந்து, தீர்ப்பு சொல்ல வேண்டியது நீதிபதி அவர்கள். அதற்குப் பின்னாலேதான் அவர் முடிவுக்கு வர வேண்டும். அதற்கு முன்னால் நீங்களே ஒரு முடிவைச் சொன்னால்--வழக்கு இன்னும் நீதிமன்றத்திலே இருக்கிறது. அதற்கு முன்னால், இந்தச் சட்டமன்றத்தில் இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றை எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குச் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* கொஞ்சம் உட்காருங்கள், சொல்கிறேன். எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குச் சொல்கிறேன், குற்றச்சாட்டே இல்லை என்று ஆனதற்குப் பிறகு, நீதிபதி எப்படித் தீர்ப்புச் சொல்ல முடியும் அதிலே? *(குறுக்கீடுகள்)* உங்களாலே case போட்டு *(குறுக்கீடுகள்)* குற்றச்சாட்டே எங்களிடம் இல்லை என்று சொல்லி refer பண்ணிவிட்டார்கள். Action dropped. *(குறுக்கீடுகள்)* அவர்கள் எழுதிவிடுவார்கள். 173-லே *(குறுக்கீடுகள்)* ஒன்றைச் சொல்கிறேன், கேளுங்கள். 173-லே *(குறுக்கீடுகள்)* முதலிலே அதைக் கேட்டுக்கொள்ளுங்கள். செங்கோட்டையன் முதலிலே உட்காருங்கள், நான் சொல்கிறேன். 173-லே. . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் காலையிலே பேசுகிறபோது, சேகர்பாபு case கோர்ட்டில் இருக்கிறபோது, அதைச் சுட்டிக்காட்டினார்கள். உங்களுக்கு இருக்கிற உரிமை, அவருக்குக் கிடையாதா? நீங்கள் பேசும்போது சொன்னீர்கள், சேகர்பாபுவைப்பற்றி.



இந்தமாதிரி வழக்கில் இருந்தது, வாதாடியதைப் பற்றியெல்லாம் சொல்கிற உங்களுக்கு இருக்கிற உரிமை, அவருக்கும் இருக்கிறது. அதையும் கேட்டீர்கள் என்றால், தீர்ப்பையும் அதில் சொல்லியிருக்கிறார்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)* சரி, உரையை முடியுங்கள். *(குறுக்கீடு)* சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் உள்ள ஆவணங்களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்கிறேன். இன்று படித்துவிட்டு, நாளை வந்து பேசட்டும். ஏனென்றால், இந்த வழக்குகள் எல்லாம் நானே ஒப்புக்கொண்டதாக அன்றைய காவல் துறை, வழக்குப் பதிவு செய்தது. நானே வெடிகுண்டு வீசினேன் என்று. நான் அனைத்து ஆவணங்களையும் அவர்களுக்கு அளிக்கிறேன். வேண்டுமானால், அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்கூட, ஒரு நகலைக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். படித்துவிட்டு, நாளை பேசட்டும்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் விடுக்கிற பணிவான வேண்டுகோள் என்னவென்றால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார். இனி வருங்காலங்களில், காவல் துறை இப்படிப்பட்ட பொய்யான வழக்குகளை யார்மீதும் புனையக் கூடாது; ஏழையெளிய மக்களைப் பொருளாதார ரீதியாக வஞ்சிக்கக் கூடாது; இந்த நடவடிக்கைமீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்து, எதற்காக இந்தச் சம்பவங்கள் நடந்தன, ஏன் நடந்தன என்பதை விசாரித்து எங்களுக்கு நியாயம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், 15 நிமிடங்கள், quick-ஆக உரையை முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் காவல் துறை Scotland Yard Police-க்கு இணையான ஒன்று

என்று பெயர் பெற்ற ஒரு துறை. ஒரு ஆட்சிக்கு நல்ல பெயர் கிட்டுவதும், சிறந்த அந்தக் காவல் துறை மூலம்தான். காவல் துறை திறமையாகச் செயல்படாமல் தடம் புரளுமேயானால், அரசுக்குக் கெட்ட பெயர். அரசைத் தூக்கி நிறுத்தக்கூடிய ஆற்றல் பெற்றிருக்கக்கூடிய துறை, இந்தக் காவல் துறை. பொதுமக்கள் நிம்மதியாக வீட்டில் தூங்க வேண்டுமேயானால், வெளியில் நாம் பயமில்லாமல் பயணம் செய்ய வேண்டுமானால், காவல் துறை கண் விழித்து எச்சரிக்கையோடு பணியாற்றியாக வேண்டும். அதனால்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தத் துறையை எச்சரிக்கையோடு தன்னுடைய பொறுப்பில் வைத்துக்கொண்டுள்ளார்கள். இந்தக் காவல் துறை, தீயணைப்புத் துறை என்று இந்த முக்கியமான துறைகளைக் கையகத்தே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கிற மாண்புமிகு கலைஞர் அவர்கள், 18-3-1964-ல், எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து, காவல் துறை மானியத்திலே, முன்னர் பக்தவத்சலம் அவர்கள் முதல்வராக இருந்தபோது, அதேபோல கக்கன்ஜி அவர்கள் உள் துறை அமைச்சராக இருந்தபோது, இந்த அவையிலே பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசுகிறபோது, காவல் துறையைப் பாராட்டி, அவர்களுடைய குறைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு இன்னும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று இந்த அவையிலே அவர்கள் பேசியதை நான் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். கலைஞர் அவர்கள் 1964-லே பேசுகிறபோது, "காவலர்கள் மற்ற தொழிலாளர்களைப்போல 8 மணி நேரம் வேலை செய்பவர்கள் அல்ல. காவலர்கள் அதிக நேரம் வேலை செய்பவர்கள். அவர்களின் அதிக நேர வேலைக்கு 'Overtime allowance'-ஐ அமைச்சரவை அளிக்க வேண்டும். போலீஸ்காரர் வீட்டுப் பிள்ளைகளுக்குப் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகளில் இடம்தந்து, சலுகை அளித்து அவர்கள் பயில வசதிகளை அமைச்சரவை செய்து தர வேண்டும்."

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** "போலீஸ்காரர்களுக்குத் தரப்படும் மாதச் சம்பளம், Uniform Allowance, வைத்திய வசதி, கல்வி வசதி உட்பட 102 ரூபாய்; அவர்களுக்கு இருப்பது வீடல்ல, அது ஒரு கூடு" என்று சொல்லி, "சட்டமன்றத்திற்கு வரக்கூடிய காவலர்களுக்கு,' ஒரு



நாளைக்குப் பத்தணா படி; அதுவும் 4 மாதங்கள் கழித்துத் தரப்படுகின்றது; விலைவாசி ஏற்றத்தால் போலீஸ்காரர்கள் திண்டாடுகின்றார்கள்; அந்தச் சம்பளத்தில் அவர்கள் எப்படித் திடகாத்திரமாக இருக்கமுடியும்? ஆகவே, அவர்களுக்கு உடனடியாக 1963-ல் வெளியிடப்பட்ட Britain Official Hand Book-ல் போலீஸ்காரர்கள் தங்கள் குறைகளைச் சொல்ல, Police Council for Great Britain என்ற ஒரு குழு, அரசியலுக்கு அப்பாற்பட்டு இருக்கிறது; அதைப்போல ஒரு குழுவை நியமிக்கவேண்டும்" என்று இந்தச் சட்டமன்றத்தில் காவலர்களின் உரிமைக்கும், நலனுக்கும் குரல் கொடுத்திருக்கின்றார்கள். இன்று அவரே 5 முறை முதல்வராக இந்தத் துறைக்குப் பொறுப்பேற்று, இந்தச் சட்டமன்றத்தில் அவர் பொன்விழா காண்கின்ற இந்த நேரத்தில், காவல் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அத்துணைக் காவலர்களுக்கும் 8 மணி நேர வேலை அல்லது overtime allowance வழங்கவேண்டும்.

அதேபோல, என்ஜினியரிங் கல்லூரி, Medical College போன்றவற்றில் போலீஸ்காரர்களின் குழந்தைகளுக்குச் சலுகை தரப்பட வேண்டும். ஏறியிருக்கின்ற விலைவாசிக்கேற்ப அவர்களுடைய சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். சட்டமன்றக் காவலர்களுக்கான படி உயர்த்தப்பட வேண்டும் என்ற குறைகளையெல்லாம் அவர்கள் எடுத்துச் சொல்ல, அதை நிலைநாட்ட, ஏற்கெனவே அவர் சொன்னதைப்போல, Police Council for Great Britain என்று இருப்பதைப்போலவே, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நியமிக்க வேண்டுமென்று நான் பொதுவாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, விடுதலைப் புலிகள் தமிழகத்திலே இப்போது அதிகமாக நடமாடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதற்குப் பல சான்றுகள், பல பத்திரிகைகளில் இன்று வந்துகொண்டேயிருக்கின்றன. நம்முடைய இணையில்லாத் தலைவன் ராஜீவ் காந்தி அவர்களை, நம்முடைய தமிழ் மண்ணில் வெடிகுண்டு வைத்துப் படுகொலை செய்தார்கள் அந்த விடுதலைப் புலிகள். ஆண்டுகள் 16 உருண்டோடிவிட்டன. அந்த வழக்கிலே A1-முதல் குற்றவாளி, விடுதலைப் புலிகளுடைய தலைவனாக இருக்கின்ற பிரபாகரன். 16 ஆண்டுகள் ஆகியும் வழக்கு split up செய்யப்பட்டு, கோர்ட்டில் pending-ல் இருக்கின்றபோது, நீதிமன்றத்தின்முன் பிரபாகரனைக் கொண்டுவருவதற்கு, இதுவரை காவல் துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதை நான் இந்த அவையின்மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்

பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற குற்றவாளிகளையெல்லாம் நாம் எப்படித் தேடிக் கண்டுபிடித்து, உடனடியாக கோர்ட்டின்முன் நிறுத்தி, அவர்கள்மீது விசாரணை நடத்தி தண்டனை வழங்குகின்றோமோ, அதுபோல, 16 ஆண்டுக் காலமாக NBW-ஆக இருக்கக்கூடிய ஒரு குற்றவாளியை நீங்கள் உடனடியாக மத்திய அரசிடம் வலியுறுத்தி, சர்வதேச Interpol-ன் மூலமாகக் கொண்டு வந்து, உடனடியாகக் கோர்ட்டின்முன் நிறுத்தினால்தான், சட்டம் செயல்படுகின்றது என்று பொருள். ஆகவே, அந்த வகையில், உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

CBI-கூட இந்த வழக்கில், they have actually slept over the matter. Actually I suspect whether the CBI has become impotent because they have not taken action so far-என்ற அந்தக் கேள்வி இப்போது எழுகின்றது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், உடனடியாக இப்படிப்பட்ட நிலைகளைத் தடுக்கவேண்டுமென்று சொன்னால், சட்டம் செயல்படுகின்றது என்பதை நிலைநாட்டுவதற்கு, NBW-ஐ execute செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த மூன்று மாதங்களாக விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தமிழகத்திலே அதிகரித்து இருப்பது நமக்கெல்லாம் அதிர்ச்சியைத் தந்துகொண்டிருக்கிறது. தமிழகம் விடுதலைப் புலிகளுடைய கேந்திரமாக விளங்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான், நீங்களும் ஓர் அறிக்கையை ஏற்கெனவே கொடுத்திருக்கிறீர்கள். *23-2-2007* அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். "இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டுமென்ற நோக்குடன், மத்திய அரசுக்குத் தமிழக அரசு விடுக்கும் வேண்டுகோள்களை, ஆயுத விநியோகம் உள்ளிட்ட, தடை செய்யப்பட்ட காரியங்களுக்கு அளிக்கப்பட்ட அனுமதி என்று யாரும் தவறாகக் கருதிச் செயல்படக் கூடாது. இந்திய நலனையும், மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளையும் புறந்தள்ளிவிட்டு, இலங்கைப் பிரச்சினையில் தமிழகம் தலையிடும் என்று யாரும் கனவு காணவேண்டாம்" என்று ஆழ்ந்து சிந்தித்து, விடுதலைப் புலிகளுக்கு, தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்குத் துணைபோகும் அமைப்புகளுக்கு இதை ஓர் எச்சரிக்கை மணியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



இப்போது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பல இயக்கங்கள் கிளம்பிவிட்டன. குறிப்பாக, ஊர்வலம் நடத்துகின்றார்கள். அதைப்போல அந்த இயக்கங்களைச் சார்ந்தவர்கள் ஆங்காங்கே வெளிப்படையாகவே கூட்டம் போடுகின்றார்கள். சில அரசியல் கட்சிகள்கூட விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகத் துணைபோய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இயக்கங்களை நம்முடைய உளவுத் துறை அடையாளம் கண்டு, அவர்களுடைய பட்டியலை ஏற்கெனவே வைத்திருக்கின்றார்கள்; அந்தப் பட்டியலை அவர்கள் மீண்டும் சரிபார்த்து, யாரெல்லாம் விடுதலைப் புலிகளுக்கு இன்று ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்களோ அல்லது வெளிப்படையாகக் கூட்டம் நடத்துகின்றார்களோ அப்படிப்பட்ட இயக்கங்களை உடனடியாகத் தடை செய்வதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், இன்று வெளிப்படையாக இதுபோன்ற கூட்டங்களிலே தீவிரவாதத்தைத் தூண்டி, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிக் கொண்டிருப்பவர்களை நீங்கள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பிரயோகம் செய்து, அவர்களையும் கைது செய்தால்தான், இந்த விடுதலைப் புலிகளுடைய நடமாட்டம் தமிழ்நாட்டிலே குறையும் என்பதை, நான் இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-35*

*22-2-2007* ஆம் தேதி "இந்து" பத்திரிகை, ஒரு தலையங்கம் எழுதியது. "Tamil Nadu and LTTE menace" என்ற அந்தத் தலையங்கத்தில், "The Liberation Tigers of Tamil Eelam, a designated terrorist organisation, is banned in India. Nevertheless, a deeply worrying mix of political collusion, official complacency, mercenary considerations, and corruption has enabled it to exploit Tamil Nadu both as a source of supply and a base of operations. The chain of seizures by the Indian Navy, Coast Guard, and the State police over the past three months points strongly to the LTTE's use of Tamil Nadu coastal locations, especially landing points in the Rameswaram-Tuticorin-Cuddalore stretch, for a two-way terrorist traffic across the Palk Strait. The Coast Guard's February 13 seizure in Indian waters, off Point Calimere, of a boat bearing an AK 56, five grenades, chemicals, and most sensationally a suicide jacket with belt, sent shock waves through India's security establishment. ...instead of facing realities, the State's Director General of Police sought to downplay the significance of the Coast Guard's major catch by asserting (even before the

investigation got under way) that the vessel was not heading for the Tamil Nadu coast and pleaded virtual helplessness in dealing with a porous coast. The Central and Tamil Nadu Governments need to shake themselves out of their complacency and respond urgently to the extremist menace"

என்று "இந்து" பத்திரிகை தலையங்கம் எழுதியிருக்கிறது.

ஆகவே, நான் பணிவன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக்கேட்டுக்கொள்வதெல்லாம், கடந்த மூன்று மாதங்களிலே, கிட்டத்தட்ட 17 நிகழ்வுகள்; விடுதலைப் புலிகளை, நம்முடைய Coastal Guard-ஓ, Indian Navy-யோ அல்லது நம்முடைய காவல் துறையோ பிடித்திருக்கிறார்கள். 23-1-2007-ல், 'Q' Branch சென்னையிலே, ஐந்து இலங்கைத் தமிழர்கள் உட்பட எட்டுப் பேரைக் கைது செய்து, வாகனங்களைக் கைப்பற்றியிருக்கிறது. 2000 கிலோ--40 மூட்டை இரும்பு பால்ரஸ், ரூபாய் ஐந்து இலட்சம் போன்றவற்றையெல்லாம் கைப்பற்றியிருக்கிறார்கள். அதேபோல, 24-1-2007-ல் மும்பையிலிருந்து இலங்கைக்கு மூவாயிரம் கிலோ--60 மூட்டை இரும்பு பால்ரஸ் கடத்தும்போது, தூத்துக்குடி அருகே பறிமுதல் செய்திருக்கிறார்கள். இதில் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதேபோல, 26-1-2007-ல் இலங்கைக் கடற்படையினர், தமிழக மீனவர்கள் ஐந்து பேரைக் கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறார்கள். அதேபோல, 26-1-2007-ல் தங்கச்சிமடத்திலிருந்து இலங்கைக்குச் சென்ற விசைப்படகில், 61,056 கிலோ எலக்ட்ரிக் டெட்டனேட்டர்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள். அதிலே, தினகரன் என்ற ஒருவரைக் கைது செய்திருக்கிறார்கள். மானாமதுரை காவல் நிலையத்திலே, வழக்கு எண் 657/2006-லே வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல 29-1-2007-ல் மும்பையிலிருந்து இலங்கைக்குச் சென்றபோது, இரண்டு பேர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். 31-1-2007-லே சென்னைப் பெரியமேட்டிலே, 2,500 கிலோ அளவுக்கு இருக்கக்கூடிய வெடிபொருட்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள். அதேபோல, 1-2-2007-ல் இராமநாதபுரம் அங்கே சென்றபோது, படகு ஒன்று கைப்பற்றப்பட்டு, அதிலேயிருந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அடுத்து 11 பேர் கைது செய்யப்பட்டு, அதிலே மொத்தம் 16 பேர்; அதிலே ஐந்து இலங்கைத் தமிழர்கள் உட்பட 7 பேர் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல 12-2-2007-லே, இலங்கைக் கடற்படை, தனுஷ்கோடி அருகே, நாட்டுப் படகு ஒன்றைக் கைப்பற்றி, 2 பேரைக் கைது



செய்திருக்கிறது. 107 மூட்டைகளைக் கைப்பற்றியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) முக்கியமான சப்ஜெக்ட். அதேபோல, 11-2-2007-ல் இந்தியக் கடற்படை நாட்டுப் படகு ஒன்றைக் கைப்பற்றி இருக்கிறது. மூன்று இலங்கைத் தமிழர்கள், அதிலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 2,500 கிலோ-126 மூட்டை அலுமினியக் கட்டிகளையும் கைப்பற்றியிருக்கிறார்கள். 'Q' Branch, மதுரையிலே 2 பேரைக் கைது செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதேபோல, 13-2-2007-லே ரோந்து போகிறபோது, பாக் ஜலசந்தியிலே இந்தியக் கடலோர ரோந்துப் படை கைப்பற்றி ஐந்து பேரைக் கைது செய்திருக்கிறார்கள். அதிலேதான், இங்கே மனித வெடிகுண்டு, ஜாக்கெட் போன்றவையெல்லாம் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. அதேபோல, 18-2-2007-லே கண்ணன் என்பவரைக் கைது செய்து, பிறகு 7 கமுதி இளைஞர்களைத் திண்டுக்கல்லிலே கைது செய்திருக்கிறார்கள். 19-2-2007, அதேபோல 6-3-2007, 7-3-2007, 10-3-20007, 11-4-2007. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிட்டேன். ஆக 17 நிகழ்வுகள்; விடுதலைப் புலிகளுடைய வெடிபொருட்கள், அதேபோல மருந்துகள், டீசல் போன்றவற்றையெல்லாம் அவர்கள் கடத்துகிறபோது, கைப்பற்றியிருக்கிறார்கள். அதற்குச் சில பேர் கடலோரப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள், விடுதலைப் புலிகளுக்கு agent-ஆக இருந்து, அவர்களுக்குத் துணைபோய்க் கொண்டிருக்கிற காரணத்தினால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சற்றுப் பொறுங்கள்.

பிற்பகல் 1-40

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 26-4-2007 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 26-4-2007, வியாழக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 26-4-2007 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

இன்று, பேரவை எடுத்துக்கொண்ட மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம், நாளையும் தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

54. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)



2007 ஏப்ரல் 25]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

125. மானியக் கோரிக்கை எண் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

126. மானியக் கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

127. மானியக் கோரிக்கை எண் 37-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

128. நெடுஞ்சாலைகள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

129. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. (2006-2007)

130. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை. (2006-2007)

131. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து இரண்டாவது அறிக்கை. (2006-2007)

132. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. (2006-2007)

133. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து மூன்றாவது அறிக்கை. (2006-2007)

134. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து நான்காவது அறிக்கை. (2006-2007)

135. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து ஐந்தாவது அறிக்கை. (2006-2007)

136. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து ஆறாவது அறிக்கை. (2006-2007)

[2007 ஏப்ரல் 25

137. அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது அறிக்கை. (2006-2007)

138. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

139. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)



## இணைப்பு-I

*(229 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 22 — காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

### முகவுரை

1. காவல்துறை, அனைத்துப் பிரிவு மக்களுக்கும் நண்பனாகவும், பாதுகாப்புக் கவசமாகவும் செயல்பட்டு வருகிறது. பெண்கள் மற்றும் சமூகத்தின் நலிந்த பிரிவுகளைச் சார்ந்தவர்கள் எந்த ஒரு காவல் நிலையத்திற்கும் அச்சமேதுமின்றி சென்று நம்பிக்கையுடன் புகார் அளிக்கக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

2. சட்டம்-ஒழுங்கைப் பொறுத்தவரையில், திருச்சி மாநகர், திருவரங்கத்தில் பெரியார் சிலை சேதப்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட சூழ்நிலை, தென்காசியில் நடைபெற்ற ஒரு கொலை ஆகியவை தொடர்பாக எழுந்த பிரச்சினைகள் சிறந்த முறையில் கையாளப்பட்டு, மாநிலம் முழுவதும் வன்முறை பரவாமல் தடுக்கப்பட்டது. இரும்பு உருளைகள் கடத்தியதில் தொடர்புடைய ஐந்து இலங்கைத் தமிழர்கள் மற்றும் நான்கு உள்ளூர்வாசிகளை உடனடியாகக் கைது செய்ததன் மூலம், தீவிரவாதத்தை ஒடுக்குவதில் காவல் துறை தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளது. இலங்கையில் ஏற்பட்டுவரும் அண்மைக் கால நிகழ்வுகளைத் தமிழ்நாடு காவல் துறை உன்னிப்பாகக் கவனித்து வருவதுடன், அதனால் தமிழகத்திற்கு எவ்விதப் பாதிப்பும் நேரிடாதவாறு மாநிலத்தைப் பாதுகாக்க, கடுமையான நடவடிக்கையும் எடுத்து வருகிறது.

3. குற்ற நிகழ்வுகளுக்கு எதிராகவும், குற்ற விகிதாச்சாரத்தைக் குறைப்பதிலும் தமிழ்நாடு காவல் துறை பல ஆண்டுகளாக மேற்கொண்ட முயற்சிகள் குறிப்பிடத்தக்கவையாகும். "கிரில் கொள்ளையர்கள்" என்று அழைக்கப்படும் மிக பயங்கரமான கொள்ளைக் கும்பலை, சென்னை மாநகரக் காவல் துறை அண்மையில் கைது செய்துள்ளது. மாநிலத்தில் குற்ற நிகழ்வு குறைந்து, களவுபோன சொத்துகள் மீட்பு அதிகரித்துள்ளது. 2005 ஆம் ஆண்டில், முறையே 86 சதவிகிதம் மற்றும் 78 சதவிகிதமாக இருந்த களவுபோன சொத்துக்கள் கண்டுபிடிப்பு மற்றும் மீட்பு விகிதாச்சாரம், 2006 ஆம் ஆண்டில், முறையே 89 சதவிகிதம் மற்றும் 81 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. 2005 ஆம் ஆண்டில், 1,365 ஆக இருந்த

கொலை குற்றங்களின் எண்ணிக்கை, 2006 ஆம் ஆண்டில் 1,274 ஆகக் குறைந்துள்ளது. அதே காலக் கட்டத்தில், பெண்களுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கையும் 2.5 சதவிகிதத்திற்கு மேலாகக் குறைந்துள்ளது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு எதிராகவும் அதன் விற்பனைக்கு எதிராகவும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4. பயங்கரவாதம், கணினிசார் குற்றங்கள், வீடியோ திருட்டு, திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் பொருளாதாரக் குற்றங்கள் ஆகியவற்றுக்கு எதிராக தமிழ்நாடு காவல் துறை, நவீன நடவடிக்கைகளின்மூலம் திறம்படப் பணியாற்றியுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில், இதற்காக ரூ.68 கோடி ஒதுக்கப்பட்டதில், சென்னை மாநகரின் உள்கட்டமைப்பு மற்றும் வாகன வசதிகளை வலுப்படுத்துவதற்காக, ரூபாய் 18 கோடி தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. 04-01-2007 அன்று ரூ.20.65 கோடி செலவில் சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர் அலுவலகம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது. ரூபாய் 20.31 கோடி செலவில் தமிழ்நாடு காவல் துறை இயக்குநர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் புதியதாகக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

5. சமீபத்தில் சென்னையில் நடந்து முடிந்த அகில இந்தியக் காவல் பணித் திறன் போட்டியில், எட்டு தங்கப் பதக்கங்கள், ஏழு வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் மூன்று வெண்கலப் பதக்கங்களுடன் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்று, தமிழ்நாடு காவல் துறை தனது திறனை வெளிப்படுத்திக் காட்டியுள்ளது.

6. பொது மக்களுக்குப் பணியாற்றுவதில் 150 ஆண்டுக் காலப் பயணத்தை இனிதே நிறைவு செய்த பெருமையைத் தன்னகத்தே கொண்ட சென்னை மாநகரக் காவல் துறை, 2007 ஆம் ஆண்டு சனவரி 4 ஆம் தேதியன்று, தனது 150-வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. அவ்விழாவையொட்டி "காவலர் உங்கள் சேவகர்" என்ற குறும்படம் வெளியிடப்பட்டது. கருத்தரங்கு ஒன்றில் தலைசிறந்த காவல் அதிகாரிகளும், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த சான்றோர்களும், அறிஞர்களும் கலந்து கொண்டனர். மேதகு குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள், 06-01-2007 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் கலந்து கொண்டார்.

## I. காவல் துறையின் நிருவாக அமைப்பு

7. மாநிலக் காவல் துறைக்குத் தலைமை வகிக்கும் காவல் துறைத் தலைமை இயக்குநர் அவர்கள், துறையின் பல்வேறு பிரிவுகளின்



செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு நடுநிலை தவறாமல் வழிநடத்தி வருகிறார். துறையின் பல்வேறு பிரிவுகளில், காவல் துறை இயக்குநர்கள், கூடுதல் காவல் துறை இயக்குநர்கள், காவல் துறைத் தலைவர்கள் போன்ற பதவி நிலைகளில் உள்ள அதிகாரிகள் தலைமைப் பொறுப்பேற்றுள்ளமையால், சிறப்பான செயல்பாடுகளை நிருவகிக்க காவல் துறை தலைமை இயக்குநருக்கு உதவிபுரிந்து வருகின்றனர்.

8. இக்கொள்கைக் குறிப்பின் இணைப்பு-1-ல் தமிழ்நாடு காவல் துறையின் நிருவாகப் பணியமைப்பு குறித்த விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

9. நிருவாக வசதிக்காக, சென்னை மாநகர் ஆணையரகம் நீங்கலாக, மாநிலம், நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கோவை, மதுரை, திருச்சி மற்றும் சென்னை ஆகிய இடங்களைத் தலைமையகங்களாகக் கொண்டுள்ள ஒவ்வொரு மண்டலும், ஒரு காவல் துறைத் தலைவர் பதவியில் உள்ள ஓர் அதிகாரியின்கீழ் இயங்கி வருகிறது. அந்நான்கு மண்டலங்களும், கூடுதல் காவல் துறை இயக்குநரின் (சட்டம்-ஒழுங்கு) நேரடிக் கண்காணிப்பில் இயங்கி வருகின்றன. பல்வேறு காவல் பணிகளுக்காக, சிறப்பு/தனிப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு காவல் துறை இயக்குநர் பதவியில் உள்ள ஒருவரது தலைமையில் இயங்கிவரும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், காவல் துறையின் கட்டடங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகள் ஆகியவற்றைக் கட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளைக் கவனித்து வருகிறது. சிறைக் காவலர், தீயணைப்புப் படை வீரர், காவலர் மற்றும் உதவி ஆய்வாளர் நிலை பணியாளர்களைத் தேர்வு செய்யும், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், காவல் துறை இயக்குநர் பதவியில் உள்ள ஒருவரது தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநரும், ஒரு காவல் துறைத் தலைவரும் பணியாற்றி வருகின்றனர்.

10. மத அடிப்படைவாதிகள் மீதான அனைத்து வழக்குகளையும் புலன் விசாரணை செய்து, வழக்குத் தொடர அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, வீடியோ-சிடி மற்றும் டி.வி.டி. திருட்டை ஒடுக்க வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவு, கூட்டுக் கொள்ளைத் தடுப்புப் பிரிவு ஆகியன குற்றப் பிரிவு கூடுதல் காவல் துறை இயக்குநரின்கீழ் இயங்கி வருகின்றன.

11. காவல் துறை தலைவர் பதவியில் உள்ள ஓர் அதிகாரியின் தலைமையில் இயங்கும் சமூகநீதிக்கெதிரான குற்றங்கள் பற்றிய புலனாய்வு

செய்யும் பிரிவானது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள்மீது விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுத்து வருகிறது.

12. காவல் துறைப் பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சி அளிப்பது மிக முக்கியமானதாகும். அப்பணியைக் காவல் துறை இயக்குநர் பதவியில் உள்ள ஒருவரது தலைமையில் இயங்கும் காவல் துறை பயிற்சிப் பிரிவு கவனித்து வருகிறது.

13. தமிழ்நாடு அதிரடிப் படை, தமிழ்நாடு அதிரடிப் படைப் பள்ளி உள்ளிட்ட சிறப்புச் செயலாக்கப் பிரிவு, சிறப்பு இலக்குப் படை ஆகியவற்றின் செயல்பாடுகளைக் கூடுதல் காவல் துறை இயக்குநர் பதவியில் உள்ள ஓர் அதிகாரி கவனித்து வருகிறார்.

14. தமிழகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட இந்தியக் காவல் பணி அதிகாரிகளின் எண்ணிக்கை 214. 28-02-2007 அன்றைய நிலவரப்படி உள்ள மொத்த அதிகாரிகளின் எண்ணிக்கை 188. 31-12-2006 அன்றைய நிலவரப்படி, ஒப்பளிக்கப்பட்ட மொத்த காவல் பணியாளர்களின் எண்ணிக்கை 98,897. அமைச்சுப் பணியாளர்களின் எண்ணிக்கை 5,389.

## II. சட்டம் - ஒழுங்கு

15. இவ்வாண்டில், காவல் துறையினர் சட்டம்-ஒழுங்கைத் திறம்படக் கையாண்டதன் விளைவாக, மாநிலத்தில் பெரிய அளவில் எவ்விதச் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையும் எழவில்லை. மாநிலம் முழுவதும் உள்ள சமூக விரோத மற்றும் அமைதியைச் சீர்குலைக்கும் சக்திகளுக்கு எதிராகப் பன்முனை நடவடிக்கைகளை எடுத்ததன் விளைவாக சட்டம்-ஒழுங்கு நன்கு பேணப்பட்டு வருகிறது. முன்கூட்டியே நுண்ணறிவுத் தகவல்கள் அளிக்கப்பட்டதன் விளைவாக, சீரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மாநிலத்தில் எவ்விதச் சாதி மத மோதல்களும் நிகழாமல் தடுக்கப்பட்டுள்ளது.

16. சிவகங்கை மாவட்ட கண்டதேவி கோவில் திருவிழா, 09-07-2006 அன்று அமைதியாக நடந்து முடிந்தது. அனைத்து வகுப்பினரும் பெருமளவில் கலந்துகொண்டு, தேரை இழுத்தனர். இவ்விழா அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற, மாவட்ட நிருவாகம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைவராலும் பாராட்டப்பட்டன.

17. தொழிலாளர் பிரச்சினை ஏதுமின்றி மாநிலத்தில் பொது அமைதி நிலவியது. மத்திய அரசின் பங்குகளை விற்கும் கொள்கைக்கு எதிர்ப்புத்



தெரிவித்து, 4-07-2006 முதல் 06-07-2006 வரை நடைபெற்ற நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தின்போது எவ்வித அசம்பாவித சம்பவமும் நிகழாமல் அமைதி பராமரிக்கப்பட்டது.

18. முல்லைப் பெரியாறு மற்றும் பாலாறு அணை பிரச்சினைகள், இட ஒதுக்கீடு பிரச்சினை மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுப் பிரச்சினை ஆகியவற்றை முன்னிறுத்தி பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் நடத்திய போராட்டங்கள், சிறந்த முறையில் கையாளப்பட்டதன் விளைவாக அமைதிக்கும், நல்லிணக்கத்திற்கும் எவ்விதப் பாதிப்பும் நேராமல் நடைபெற்றன.

19. இந்து அமைப்பினர் நடத்திய விநாயகர் சதுர்த்தி விழா, முஸ்லீம்கள் நடத்திய விழாக்கள், பாபர் மசூதி இடிப்பு நினைவு தினம், சதாம் உசேன் தூக்கிலிடப்பட்ட பின்னர் நிலவிய சூழல் ஆகியவற்றின்போது அமைதிக்குக் குந்தகம் நிகழாவண்ணம் காவல் துறையினர் நிலைமையைத் திறம்படக் கையாண்டனர். 11-07-2006 அன்று மும்பையில் நிகழ்ந்த தொடர் குண்டுவெடிப்பு, சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகியவற்றின்போது பெறப்பட்ட வெடிகுண்டு மிரட்டல்கள் போன்ற சம்பவங்களின்போது மாநிலக் காவல் துறையினர் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு செயல்பட்டதால், மத நல்லிணக்கமும், அமைதியும் மாநிலம் முழுவதும் நிலவியது.

20. 17-12-2006 அன்று தென்காசி நகரத்தில் இந்து முன்னணி நகரத் தலைவர் குமாரபாண்டியனை அடையாளம் தெரியாத சிலர் கொலை செய்த வழக்கில், மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, உடனடியாகப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களில் இருவர், தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

21. இவ்வாண்டில், தீவிரவாத மற்றும் நக்சலைட்டு வன்முறைகள் ஏதுமின்றி மாநிலத்தில் அமைதி நிலவியது. நுண்ணறிவுத் தகவல் சேகரிப்பு முறை செறிவூட்டப்பட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் மேம்படுத்தப்பட்டதன் விளைவாக, மாநிலத்தின் எல்லையோர வட மாவட்டங்களின் வழியாக ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் யுத்தக் குழுவினர் ஊடுருவக்கூடிய நிலைமை தடுக்கப்பட்டது. இருப்பினும், ராக்கெட் லாஞ்சர்களைத் தயாரிப்பதற்காக, உருளைகளை வடிவமைத்து ஆந்திராவில் அதனைப் பயன்படுத்த, தொழில்நுட்பம் தெரிந்த நபர் ஒருவரை மக்கள் யுத்தக் குழு, 2005 ஆம் ஆண்டில் சென்னையில்

வைத்திருந்தது தெரிய வந்தது. அந்த நபரை அடையாளம் கண்டறிந்ததோடு, அதனைத் தயாரித்த அம்பத்தூர் பகுதியில் உள்ள ஐந்து சிறுதொழில் நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான மூல வழக்கு, ஆந்திர மாநிலம் அச்சம்பேட் காவல் நிலைய குற்ற எண் 65/2006-இல் நிலுவையில் உள்ளதால், ஆந்திர மாநிலக் காவல் துறை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) கேட்டுக் கொண்டதற்கிணங்க, 12-03-2007 அன்று அம்மாநிலத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. அரசின் பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்தும், போதிய அடிப்படை வசதிகளைச் செய்துதரக் கோரியும், மக்கள் கலை இலக்கியக் கழகம், தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர இளைஞர் கழகம் போன்ற இடதுசாரி தீவிரவாத அமைப்புகள் மாநிலத்தில் போராட்டங்களை நடத்தி வருகின்றன. அவர்களின் செயல்பாடுகள் மற்றும் நோக்கங்கள் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன.

22. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்குமிடையே மோதல் வெடித்துள்ளதையொட்டி, இவ்வாண்டில் இலங்கை தமிழ் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த ஓர் ஆண்டில், 1-4-2007 வரையிலான காலக்கட்டத்தில், 18,496 அகதிகள் இலங்கையிலிருந்து வந்துள்ளனர். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள 130 அகதி முகாம்களில் சுமார் 55,000 அகதிகள் ஏற்கெனவே தங்கியுள்ளனர். அகதிகள் என்ற போர்வையில் பேராளிகள் யாரும் தமிழ்நாட்டிற்குள் நுழைந்து விடக்கூடாது என்பதற்காக, மண்டபம் அகதிகள் முகாமிற்கு வரும் ஒவ்வொருவரும் பரிசோதிக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர். இலங்கையில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையின் தாக்கம், மாநிலத்தைப் பாதிக்காத வகையில் கடலோர மாவட்டங்களில் ரோந்துப் பணிகள் அதிகரிக்கப்பட்டு, பாதுகாப்புப் பணியும், வாகனத் தணிக்கையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

23. மாநிலக் காவல் துறை, கடலோரப் பாதுகாப்புப் படை மற்றும் சுப்பற் படை ஆகியவற்றின் தீவிரக் கண்காணிப்புப் பணியின் காரணமாக, அண்மையில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் குறித்த விவரம் பின்வருமாறு:--

(i) 26-01-2006 அன்று இலங்கைக் கடற்படையினர், தமிழகத்தைச் சேர்ந்த (1) ரீகன்ராஜ், (2) சுரேஷ், (3) யாகூப், (4) நிஷாந்தன், (5) ராமகிருஷ்ணன் ஆகிய 5 மீனவர்களைக் கைது செய்து, தங்கச்சிமடத்திலிருந்து இலங்கைக்கு விசைப்படகில் கடத்திய



61,056 எலெக்ட்ரிக் டெட்டனேட்டர்களைக் கைப்பற்றினர். இலங்கை, மன்னார் மாவட்டத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, இலங்கை, அனுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். விபத்துக்குள்ளான ஒரு டாடா சுமோ ஜீப்பிலிருந்து 750 கிலோ எடையுள்ள வெடிபொருள் பூஸ்டர்கள் கைப்பற்றப்பட்டன. மானாமதுரை காவல் நிலையக் குற்ற எண் 657/2006 என்ற வழக்கின் விசாரணையின்போது இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி தினகரன் என்பவர், மேற்கண்ட டெட்டனேட்டர்களை 26-01-2006 அன்று இலங்கைக்கு அனுப்புவதில் பின்னணியில் இருந்து செயல்பட்டது தெரியவந்தது. இந்த வழக்கின் விசாரணையில் கிடைத்த தகவலின்பேரில், தமிழகக் காவல் துறையினர், 26-09-2005, 13-02-2006 மற்றும் 19-02-2006 ஆம் தேதியிட்ட பழைய செய்தித்தாள்களில் சுற்றி, பழைய பிளாஸ்டிக் கோணிப் பையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 1,950 டெட்டனேட்டர்களை, 28-03-2007 அன்று உச்சிப்புளி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இருமேனியில் கண்டுபிடித்தனர். இவை 26-01-2006 அன்று தினகரனால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட டெட்டனேட்டர்களின் ஒரு பகுதி என்று விசாரணையில் தெரிய வருகிறது.

(ii) 23-01-2007 அன்று 'கியூ' பிரிவு காவல் துறை சேகரித்த தகவலின் அடிப்படையில், சென்னையில் பெருமளவில் சோதனை மேற்கொண்ட காவல் துறையினர், 5 இலங்கைத் தமிழர்கள் உட்பட 8 நபர்களைக் கைது செய்ததுடன், இரண்டு வாகனங்கள், 2,000 கிலோ எடையுள்ள 40 மூட்டை இரும்பு பால்ரஸ்கள் மற்றும் ரூ.5 இலட்சம் ரொக்கம் ஆகியவற்றைப் பறிமுதல் செய்தனர். 24-01-2007 அன்று மும்பையிலிருந்து இலங்கைக்குக் கடத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டிருந்த 3,000 கிலோ எடையுள்ள 60 முட்டை இரும்பு பால்ரஸ்களை, தூத்துக்குடியில் பறிமுதல் செய்து, இது தொடர்பாக ஒருவரைக் கைது செய்தனர். 29-01-2007 அன்று மும்பையில் 2 நபர்கள் கைது செய்யப்பட்டனர். 30-01-2007 அன்று 2,500 கிலோ எடையுள்ள 50 மூட்டை இரும்பு பால்ரஸ்கள் சென்னை பெரியமேட்டில் பறிமுதல் செய்யப்பட்டன. 01-02-2007 அன்று, மேலும் ஒருவர் இராமநாதபுரத்தில் கைது செய்யப்பட்டு, படகு ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் மேலும் 4 நபர்கள் கைது செய்யப்பட்டனர். இதுவரை, இவ்வழக்கில் மொத்தம் 16 எதிரிகள்

கைது செய்யப்பட்டனர். இவர்களில் 5 இலங்கை தமிழர்கள் உள்பட 7 நபர்கள், தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(iii) 12-02-2007 அன்று, இலங்கைக் கடற்படையினர் தனுஷ்கோடி அருகே, ஒரு நாட்டுப் படகில் சென்ற இரு நபர்களைக் கைது செய்து, படகையும் 107 சாக்குப் பைகளில் வைக்கப்பட்டிருந்த 2,800 கிலோ எடை கொண்ட அலுமினியக் கட்டிகள், உலோக வளையங்கள், ஊசிகள் ஆகியவற்றையும் பறிமுதல் செய்தனர். அதைப்போல, 14-02-2007 அன்று இந்தியக் கடற்படையினர், மேலும் நாட்டுப் படகு ஒன்றினைக் கைப்பற்றி, அதில் இருந்த 3 இலங்கைத் தமிழர்களைக் கைது செய்து 2,700 கிலோ எடையுள்ள 126 மூட்டை அலுமினியக் கட்டிகளைக் கைப்பற்றினர். 'க்யூ' பிரிவினர் உதவியுடன் நடந்த மேல் விசாரணையில், போலீசார் மதுரையைச் சேர்ந்த மேலும் இரண்டு நபர்களைக் கைது செய்து, அவர்களிடமிருந்து 1,500 கிலோ எடையுள்ள அலுமினியக் கட்டிகள் மற்றும் ஒரு மினி வேன் ஆகியவற்றைக் கைப்பற்றினர். இவ்வழக்கில் 'க்யூ' பிரிவு போலீசார் மேலும் 13 நபர்களைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபர்களில் முக்கிய பங்காற்றிய இரண்டு நபர்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(iv) 13-02-2007 அன்று ரோந்துப் பணியின்போது, பாக் ஜலசந்தி அருகில் இயந்திரப் படகு ஒன்றினை வழிமறித்து இந்தியக் கடலோரக் காவற்படையினர் 4 இலங்கைத் தமிழர்கள் உட்பட 5 நபர்களைக் கைது செய்து, ஒரு ஏ.கே.56 ரக துப்பாக்கி, 124 தோட்டாக்கள், 5 கையெறி குண்டுகள், வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட ஒரு ஜாக்கெட், 8 பாரல் இரசாயனப் பொருட்கள், ஒரு சாட்டிலைட் தொலைபேசி மற்றும் ரேஷன் பொருட்கள் அடங்கிய பைகள் ஆகியவற்றைப் பறிமுதல் செய்தனர். இவ்வழக்குத் தொடர்பாக 'க்யூ' பிரிவு காவல் துறையினர் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டதன் விளைவாக, இவ்வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட படகின் நூலிழைத் தகடின் உள்ளே சக்தி வாய்ந்த வெடிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. நீதிமன்ற அனுமதி பெற்று, 20-2-2007 அன்று அந்தப் படகு நடுக்கடலுக்குள் கொண்டு செல்லப்பட்டு, வெடிபொருட்கள் செயலிழக்கப்பட்டு அழிக்கப்பட்டன. இந்த நடவடிக்கையின்போது, அந்தப் படகு வெடித்து கடலில் மூழ்கியது.



(v) 06-03-2007 அன்று, 'கியூ' பிரிவு காவல் துறையினர், சந்தேகத்தின் பேரில் அருள்சீலன் என்ற இலங்கைத் தமிழரை, திருச்சியில் கைது செய்து, அவரிடமிருந்து 10 இலட்ச ரூபாய் ரொக்கத்தையும் இருசக்கர வாகனம் ஒன்றினையும் பறிமுதல் செய்தனர். மேலும் விசாரணையில் ராகுலன் என்ற மற்றொரு இலங்கைத் தமிழரை 07-03-2007 அன்று கைது செய்ததுடன், அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் 4,500 கிலோ எடையுள்ள 150 மூட்டை இரும்பு குண்டுகளை, பெரம்பலூரில் பறிமுதல் செய்தனர். பின்னர், இலங்கைத் தமிழர்களான பிரதீபன் மற்றும் பகீரதன் ஆகிய இருவரையும், சென்னையைச் சேர்ந்த பர்கத் (எ) இதயதுல்லா என்ற நபரையும் சீபா பஷீர் என்ற நபரையும் கைது செய்தனர். இவ்வழக்கு சம்பந்தமாக, இதுவரை 14 நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் ஒரு படகு மற்றும் ஒரு எய்ச்சர் லாரியையும் கைப்பற்றியுள்ளனர். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 5 இலங்கைத் தமிழர்கள் உள்பட 9 நபர்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

24. அரசியல் பின்னணியை மையமாகக் கொண்ட தருமபுரி பேருந்து எரிப்பு வழக்கு விசாரணையானது, பல தடைகளுக்குப் பின்னர் முடிவுற்றது. வழக்கை விசாரித்த நீதிமன்ற நடுவர் அவர்கள், முக்கியக் குற்றாவாளிகள் மூன்று பேருக்குத் தூக்குத் தண்டனையும், இதர குற்றவாளிகள் 25 பேருக்கு ஏழு ஆண்டுக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார். கோவை தொடர் குண்டுவெடிப்பு வழக்குகளின் விசாரணையும் வாதங்களும் முடிவுற்றுள்ளன.

### காவல் நிலைய மரணங்கள்

25. சந்தேகத்திற்குரிய நபர்கள் அல்லது குற்றவாளிகளைக் காவல் நிலையங்களில் வைத்திருக்கும்போது அவர்களை உன்னிப்பாகக் கவனிப்பதற்கும், அக்கறையுடன் கையாளுவதற்குமான அவசியம் குறித்து அவ்வப்போது கடுமையாக அறிவுறுத்தப்பட்டு வந்த போதிலும், 2006 ஆம் ஆண்டில் காவல் துறையின் பாதுகாவலில் இருந்தபோது, 6 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. நடப்பாண்டில், இதுபோன்ற ஒரு வழக்கு பதிவாகியுள்ளது. இதுபோன்ற மரணங்களைத் தவிர்ப்பதற்கு மிக அக்கறையுடன் செயல்பட வேண்டுமென அனைத்துக் காவல் துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக, ஏதேனும் தவறு நேர்ந்தால் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர். காவல் நிலையங்களில் அவசியமில்லாமல்

சந்தேகத்திற்குரிய நபர்கள் அல்லது குற்றாவாளிகள் யாரேனும் காவல்படுத்தப்பட்டு உள்ளனரா என்பதைக் கண்டறிய, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களும், காவல் ஆணையர்களும் முன் தகவலின்றி காவல் நிலையங்களில் சோதனை நடத்துமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

## காவல் துறை துப்பாக்கிச் சூடு

*26.* அவசியமின்றித் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டாமென்றும், முன்கூட்டியே நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்தும், பீதி ஏற்படுத்தும் எதிர் விளைவுகளைத் தவிர்க்கும் வகையில் சட்டம்-ஒழுங்கை நிலை நாட்டிட போதிய அளவில் திட்டமிட்டுத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அனைத்துக் காவல் துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டில் நிகழ்ந்த 17 சம்பவங்களில் 7 நபர்கள் கொல்லப்பட்டதுடன், 29 காவல் துறையினர் உட்பட 32 நபர்கள் காயமடைந்துள்ளனர். நடப்பாண்டில் 3 காவல் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றில், இரண்டு சம்பவங்களில் இரு கொடுங்குற்றவாளிகள் கொல்லப்பட்டுள்ளனர். 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த காவல் துறை துப்பாக்கிச் சூடு குறித்த விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் இணைப்பு-2 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## III. குற்ற நிகழ்வு நிலவரம்

*27.* குற்ற நிகழ்வுகளைக் குறைப்பதற்காகத் தமிழ்நாடு காவல் துறை உறுதியாகவும், முறையாகவும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. கடந்த 2005 ஆம் ஆண்டு பதிவான 1,365 கொலைகள் மற்றும் 20,173 சொத்து சம்பந்தமான குற்றங்களோடு ஒப்பிடுகையில், 2006 ஆம் ஆண்டு, 1,274 கொலைகள் மற்றும் 17,585 சொத்து சம்பந்தமான குற்றங்கள் பதிவாகியிருப்பதன்மூலம் 12 சதவீதம் குற்ற நிகழ்வுகள் குறைந்திருப்பது தெரிகிறது. 2005 ஆம் ஆண்டு 86 ஆக இருந்த கண்டுபிடிப்பு சதவீதம், 2006 ஆம் ஆண்டு 89 ஆக உயர்ந்துள்ளது. 2005 ஆம் ஆண்டு களவுபோன சொத்துக்களின் மதிப்பு ரூ. 39.56 கோடி; ஆனால் 2006 ஆம் ஆண்டு அவற்றின் மதிப்பு ரூ.43.07 கோடியாகும். அதேபோன்று, 2005 ஆம் ஆண்டு ரூ. 30.89 கோடியாக இருந்த மீட்கப்பட்ட சொத்துக்கள், 2006 ஆம் ஆண்டு ரூ.34.81 கோடியாக உயர்ந்துள்ளது. 2003 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ஒவ்வோர் ஆண்டிலும் சொத்து சம்பந்தப்பட்ட குற்ற நிகழ்வுகள், களவுபோன மற்றும் கைப்பற்றப்பட்ட



சொத்துக்களின் சதவீதம் மற்றும் 2005, 2006 ஆம் ஆண்டுகளுக்கான குற்ற நிகழ்வு புள்ளி விவரங்களின் ஒட்டுமொத்த ஒப்பீடு ஆகியவற்றின் நிலவரம் இணைப்பு-3, 4 மற்றும் 5-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பெண்களுக்கு எதிரான குற்றங்கள்

*28.* கடந்த சில ஆண்டுகளாக நமது சமுதாயத்தில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், தமிழ்நாடு காவல் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆபத்து காலத்தில் உதவும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொலைபேசி வசதிகள் மற்றும் ஆலோசனை மையங்கள் இதில் அடங்கும். பெண்களிடையே அவர்களது சட்டப்பூர்வமான உரிமைகள் குறித்த விழிப்புணர்வைப் பெருமளவில் ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த புள்ளிவிவரங்களின் வரைபட விளக்கம் இணைப்பு-6-ல் உள்ளது. 2003 ஆம் ஆண்டு பதிவான 4,952 வழக்குகள்; 2004 ஆம் ஆண்டு பதிவான 4,833 வழக்குகள்; 2005 ஆம் ஆண்டு பதிவான 4,983 வழக்குகள்; ஆகியவற்றோடு, 2006 ஆம் ஆண்டு பதிவான 3,789 வழக்குகளை ஒப்பிடுகையில், 2006 ஆம் ஆண்டு பெண்களுக்கு எதிரான குற்றங்கள் வெகுவாகக் குறைந்துள்ளது தெரிகிறது. இது தொடர்பான விவரங்கள் இணைப்பு-7-ல் உள்ளது.

## IV. போக்குவரத்து விபத்துகள்

*29.* 2005 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நிகழந்த போக்குவரத்து விபத்துகள் 53,866 ஆகும். இவற்றுள் 10,003 மரணங்கள் மற்றும் 8,843 மரண விபத்துகளும் அடங்கும். 2006 ஆம் ஆண்டில் நிகழ்ந்த போக்குவரத்து விபத்துகள் 55,145 ஆகும். இவற்றுள் 11,009 மரணங்கள் மற்றும் 10,055 மரண விபத்துகளும் அடங்கும். தமிழ்நாட்டில் நிகழும் போக்குவரத்து விபத்துகள், அவற்றின் விளைவாக ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை ஆகியவை அதிகரித்து வருவது, மிகுந்த கவலையளிப்பதாக உள்ளது. போக்குவரத்து விபத்துகளைக் குறைக்க சிறப்பான போக்குவரத்து மேலாண்மை முறைகள் தேவைப்படுகின்றன. நெடுஞ்சாலை, போக்குவரத்து, நல்வாழ்வு மற்றும் காவல் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின்மூலம், அம்முறைகளுக்கான வெளிப்படையான திட்டம் ஒன்றும் வகுக்கப்படும்.

[2007 ஏப்ரல் 25

## V. காவல் ஆணையம் (போலீஸ் கமிஷன்)

30. இதுவரையில் மூன்று காவல் ஆணையங்களை அமைத்ததன் மூலம், திறமையான, கடமையுணர்வுடன்கூடிய ஒரு படையை உருவாக்க வேண்டுமென்ற தனது ஆர்வத்தையும், உறுதிப்பாட்டையும் தமிழக அரசு வெளிப்படுத்தியுள்ளது. தமிழ்நாடு மாநிலம் 1956 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பிறகு, கடந்த 51 ஆண்டுகளில் நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு 3 காவல் ஆணையங்களை தி.மு.க. ஆட்சிக் காலங்களிலேயே இந்த அரசு அமைத்துள்ளது.

31. முதலாவது காவல் ஆணையம், 1969 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டது. காவல் துறையினர் பணிகள், கடமைகள், பொறுப்புகள் போன்றவற்றைக் கூராய்வு செய்த பிறகு, அரசுக்கு இவ்வாணையம் தாக்கல் செய்த 133 பரிந்துரைகளில், 115 பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1971 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது.

32. 1989-ஆம் ஆண்டில் இரண்டாவது காவல் ஆணையம் அமைக்கப்பட்டது. காவல் துறையின் பணிகள், கடமைகள், பொறுப்புகள் ஆகியவற்றை ஆராய்ந்த பிறகு, இவ்வாணையம் அளித்த 112 பரிந்துரைகளில் 87 பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

33. ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. ஆர். பூர்ணலிங்கம் அவர்களைத் தலைவராகவும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன் அவர்களைத் துணைத் தலைவராகவும், காவல் கூடுதல் இயக்குநர் திரு. கே. இராமானுஜம், இ.கா.ப. அவர்களை உறுப்பினர் செயலாளராகவும், ஓய்வு பெற்ற காவல் துறை இயக்குநர் திரு. பெ. காளிமுத்து இ.கா.ப., ஓய்வு பெற்ற சிறைத் துறைத் துணைத் தலைவர் திரு. ஜி. ராமச்சந்திரன் மற்றும் திருமதி ஜோன் ரூசோ ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட மூன்றாவது காவல் ஆணையத்தைத் தமிழக அரசு 2006 ஆம் ஆண்டில் அமைத்துள்ளது.

34. இவ்வாணையம் பின்வருவனவற்றை ஆராய உள்ளது:—

| | |
|---|---|
| 01 | காவல் துறையினரின் பணி, குடியிருப்பு மற்றும் நலன் பற்றிய பொதுவான நிலைமை |
| 02 | சட்டம்-ஒழுங்கைப் பராமரித்தல், குற்ற நிகழ்வுகளைக் கண்டுபிடித்தல் மற்றும் போக்குவரத்தைச் சீர்செய்தல் ஆகியவற்றில் காவல் துறையின் செயல்பாடுகள் |



2007 ஏப்ரல் 25]

| | |
|---|---|
| 03 | அமைப்பு மற்றும் முறைகளை நவீனமயமாக்கல், புலன் விசாரணைக்கான வசதிகள், புள்ளிவிவரங்கள் மற்றும் ஆவணங்கள், ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல். |
| 04 | காவல் பணியாளர்களின் எண்ணிக்கை குறித்த திட்டம், நிருவாக அமைப்பை நெறிமுறைப்படுத்துதல், தெரிவு, பயிற்சி மற்றும் பணி நியமனம் |
| 0.5 | பொதுமக்கள், அரசியல் மற்றும் அரசியல் சாரா அமைப்புகளுடனான காவல் துறையினரின் உறவு |
| 06 | நீதிமன்றங்கள், நீதிமன்ற நடுவர்கள் மற்றும் பிற அரசுத் துறைகளுடனான ஒருங்கிணைப்பு |

## VI. காவல் துறையை நவீனமயமாக்கல்

35. காவல் துறையை நவீன, திறமையான, தொழில்நுட்பம் சார்ந்த படையாகவும், நேர்மையான மற்றும் மக்களின் உண்மையான நண்பனாக விளங்கும் படையாகவும், உருவாக்கும் ஓரே நோக்கத்தோடு தமிழக அரசு, காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. பயங்கரவாதம், கணினிசார் குற்றங்கள், வீடியோ திருட்டு, திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் பொருளாதாரக் குற்றங்கள் ஆகியவற்றை எதிர்கொள்வதற்குத் தேவையான ஆற்றலைப் பெறுவதற்கு நவீனமயமாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய குறிக்கோள்களை எய்துவதற்கு வசதியாக, தொலைத் தொடர்பு, கணினி, வாகனப் போக்குவரத்து, ஆயுதப் பிரிவு போன்றவற்றிற்குத் தேவையான புதிய தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட அதி நவீன கருவிகளைக் கொள்முதல் செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

36. ஒவ்வோர் ஆண்டும் காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் மத்திய, மாநில அரசுகள் நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றன. மத்திய மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு மற்றும் நிதிப் பயன்பாடு குறித்த விவரங்கள் இணைப்பு-8 மற்றும் 9-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

37. தொடக்கத்தில், காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்காக மத்திய அரசு அளித்துவந்த 50 விழுக்காடு நிதிக்கு இணையாக மாநில அரசும் நிதி ஒதுக்கீடு செய்து வந்தது. எனினும், அதன் பிறகு, 2005-2006 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு 75 விழுக்காடாகவும், மாநில அரசின் நிதி ஒதுக்கீடு 25 விழுக்காடாகவும் உள்ளது.

[2007 ஏப்ரல் 25

38. 2006-2007ஆம் ஆண்டு காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்கென ரூபாய் 68 கோடி (மத்திய அரசின் பங்கு ரூ. 51 கோடி, மாநில அரசின் பங்கு ரூ. 17 கோடி) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை நகரக் காவல் எல்லையுடன் புதிதாக சில பகுதிகள் இணைக்கப்பட்டதையடுத்து, பெருநகரக் காவல் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, அதற்கு அடிப்படை கட்டமைப்பு, தொலைத் தொடர்பு, வாகனப் போக்குவரத்து ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் ரூ.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதானது காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் ஒரு சிறப்பம்சமாகும். மத்திய அரசுக்கு அனுப்புவதற்காக 2007-2008 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

39. தமிழ்நாடு காவல் துறை, புதிய அச்சுறுத்தல்களையும், சவால்களையும் சந்திக்க வேண்டியுள்ள இக்காலக்கட்டத்தில், நவீன மயமாக்கல் திட்டத்தின்கீழ் மத்திய அரசு அளித்து வந்த தொகையின் அளவு குறைந்து வருவது கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும். தமிழ்நாடு காவல் துறை தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்து முழு திறமையுடன் செயல்பட்டு, நாட்டிலேயே மிகச் சிறந்த காவல் துறை என்ற நற்பெயர் மட்டுமின்றி உலக அளவிலும் சிறந்து விளங்குவதற்கு அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு முன் வரவேண்டும் என இந்த அரசு வலியுறுத்தி வருகிறது.

## VII. நலத் திட்டங்கள்

40. தமிழ்நாடு அரசு காவல் துறையினரின் நலத்தைப் பேணுவதில் உயர் முன்னுரிமை அளித்திடும் வகையிலும், பணியின் போதும், பணியில் இல்லாத போதும் அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கவும், பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அத்தகைய நலத் திட்டங்கள் பின்வருமாறு:—

### i) குறைகளைக் களைதல்

பின்வரும் நாட்களில் காவல் துறையினருக்கென "குறைகேட்பு நாள்" நடத்துமாறு அனைத்துப் பிரிவு அதிகாரிகளும் பணிக்கப்பட்டுள்ளனர்:

| | |
|---|---|
| அனைத்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களும் ஆயுதப் படை அணிவகுப்பில் கலந்து கொண்டு, ஆயுதப் படைப் பிரிவுப் பணியாளர்களின் குறைகளைக் கேட்டறிந்து, அவற்றைக் களைய வேண்டும். | வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் |



2007 ஏப்ரல் 25]

| | |
|---|---|
| பல்வேறு பிரிவுகளில் உள்ள உள்ளூர்க் காவல் துறை பணியாளர்களுக்கென குறைகேட்பு நாளை அனைத்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களும் நடத்த வேண்டும். | வாரந்தோறும் செவ்வாய்க் கிழமைகளில் |
| சரகத் தலைமையிடங்களில், காவல் துறைத் துணைத் தலைவர் குறைகேட்பு நாளை நடத்த வேண்டும். | மாதம் ஒரு முறை |
| கூடுதல் காவல் துறை இயக்குநர்கள்/மண்டலக் காவல் துறைத் தலைவர்கள்/சிறப்புப் பிரிவுக் காவல் துறைத் தலைவர்கள் ஆகியோர் குறைகேட்பு நாளை நடத்த வேண்டும். | இரு மாதத்திற்கு ஒரு முறை |

ஒவ்வொரு மண்டலத் தலைமையிடங்களிலும், மூன்று மாதத்திற்கு ஒரு முறை காவல் துறை தலைமை இயக்குநர் அவர்கள் குறைகேட்பு நாளை நடத்தி வருகிறார்.

### ii) மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம்

41. 1980 ஆம் ஆண்டில், நலத் திட்டத்தின் ஒரு பகுதியாக மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், ஆய்வாளர் பதவி வரை உள்ள காவல் பணியாளர்கள் பயனடைந்து வருகின்றனர்—

(அ) அரிசி, சர்க்கரை, கோதுமை, மற்றும் பாமாயில் ஆகியவற்றுக்கு 50 விழுக்காடு மானியம் அரசு வழங்கியது. பின்னர், உளுத்தம் பருப்பு கிலோ ஒன்றுக்கு 3 ரூபாயிலிருந்து 10 ரூபாயாகவும், துவரம் பருப்பு 4 ரூபாயிலிருந்து 10 ரூபாயாகவும், ரவை ரூ. 1.50 லிருந்து 3 ரூபாயாகவும், மைதா ரூ. 1.50 லிருந்து 3 ரூபாயாகவும் மானியத் தொகை உயர்த்தப்பட்டது.

(ஆ) அரசு விநியோகித்து வந்த அரிசி 12 கிலோவிலிருந்து 20 கிலோவாக உயர்த்தப்பட்டது.

(இ) 2006-2007 ஆம் ஆண்டில், ரூ. 1.13 கோடி, இத்திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டு, 27,470 காவல் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர். தற்போது, காவல் துறையினருக்கு ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கப்படுகிறது.

### iii) தமிழ்நாடு காவல் துறை கருணைக் கொடைத் திட்டம்

*42.* அரசிதழ் பதிவு பெறாத காவல் பணியாளர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் நிதி உதவியும், இதர நிவாரண உதவிகளையும் வழங்கும் நோக்கத்தோடு, *1957* ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு உறுப்பினர்களிடமிருந்து சந்தாவும், கொடையாளிகளிடமிருந்து நன்கொடையும், மாநில அரசிடமிருந்து ஒவ்வோர் ஆண்டும், மானியமும் பெறப்படுகிறது. *2006* ஆம் ஆண்டில் *4,802* பயனீட்டாளர்களுக்கு உதவித் தொகையாக மொத்தம் ரூபாய் *2.25* கோடி வழங்கப்பட்டது.

### iv) தமிழ்நாடு காவல் பணியாளர் உடல்நலப் பாதுகாப்பு நிதியம்

*43.* தமிழ்நாடு காவல் துறை பணியாளர்கள், பெரிய நோய்களுக்கு சிகிச்சை பெறவும், சிறப்பு அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளவும், நிதிப் பற்றாக்குறை ஏற்படுவதை அரசு கவனத்தில் கொண்டுள்ளது. அத்தகைய இக்கட்டான நிலையிலிருந்து அவர்களை விடுவிக்கும்பொருட்டு, தமிழ்நாடு காவல் பணியாளர்கள் உடல்நலப் பாதுகாப்பு நிதியத்தை மாநில அரசு ஏற்படுத்தியது. அரசு அளித்து வந்த ஆண்டு மானியத்தை, *1999* ஆம் ஆண்டு ரூபாய் *50,00,000*-லிருந்து ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தி வழங்கியது. *2002* ஆம் ஆண்டில், இந்தியாவில் சிகிச்சை பெற வழங்கப்பட்டு வந்த நிதியுதவியை, ரூபாய் *1,00,000*-லிருந்து ரூபாய் *1,50,000/-* ஆக உயர்த்தியதோடு, சந்தா தொகையை ரூபாய் *10*-லிருந்து *15* ஆக உயர்த்தப்பட்டது. *2006-2007* ஆம் ஆண்டில், *259* பயனீட்டாளர்களுக்கு, இத்திட்டத்தின்கீழ் ரூ. *1.58* கோடி வழங்கப்பட்டது.

### v) தமிழ்நாடு காவல் துறைப் பணியாளர் காப்பீட்டுத் திட்டம்

*44.* காவல் துறையில் பணியாற்றும் இரண்டாம் நிலைக் காவலர் முதல் காவல் துறை இயக்குநர் வரை அனைத்துப் பணியாளர்களும் இத்திட்டத்தின் பயனாளிகளாக உள்ளனர். இத்திட்டத்தின்கீழ், பணியாளர்கள் கடமையாற்றும்போது, விபத்து உட்பட இதர காரணங்களுக்காக இறக்க நேரிட்டாலோ, நிரந்தர முடக்கம் அல்லது பகுதி ஊனம் ஏற்பட்டாலோ, அவர்களின் நியமனதாரர்களுக்கோ, சட்டப்படியான வாரிசுக்கோ பின்வருமாறு நிதி உதவி வழங்கப்படுகிறது:





| பதவி | இறப்பு | நிரந்தர ஊனம் | நிரந்தர/ பகுதி ஊனம் |
|---|---|---|---|
| 1. பொது காவல் பிரிவு | | | |
| காவலர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் வரை | ரூ.1,00,000/- | ரூ.1,00,000/- | சென்னை அரசு மருத்துவ-மனைத் தலைவரால் நிர்ணயிக்கப்படும் ஊனத்தின் விகிதாசாரத்தின்படி |
| காவல் கண்காணிப்பாளர்கள் முதல் காவல் துறை தலைவர்கள் வரை | ரூ.5,00,000/- | ரூ.5,00,000/- | |
| காவல் துறை கூடுதல் இயக்குநர் | ரூ.7,50,000/- | ரூ.7,50,000/- | |
| காவல் துறை இயக்குநர் | ரூ.10,00,000/- | ரூ.10,00,000/- | |
| 2. சிறப்பு அதிரடிப் படை, அதிரடிப் படை, அதிரடிப் படை பயிற்சிப் பள்ளி, துரித நடவடிக்கைப் படை மற்றும் முக்கிய நபர்களின் பாதுகாப்புப் படை ஆகியவற்றைச் சேர்ந்த அனைத்துக் காவல் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் | ரூ.10,00,000/- | ரூ.10,00,000/- | தொகையில் 50 சதவிகிதம் |

### vi) கருணைத் தொகை

*45.* பயங்கர மற்றும் அபாயகரமான சூழ்நிலையில், கூட்டத்தினரைச் சமாளிக்க காவல் துறையினர் பலப் பிரயோகத்தின் போதும், புலன் விசாரணையின்போதும், மிகுந்த கட்டுப்பாட்டையும், பொறுமையையும் கையாள வேண்டியுள்ளது. எனவே, இத்தகைய சூழ்நிலைகளைக் கையாளும்போது. அவர்களுக்குக் காயங்களும் மரணங்களும் நேரிடுகின்றன.

அரசு, பின்வருமாறு கருணைத் தொகை வழங்கி வருகிறது:

| | |
|---|---|
| இறப்பு | ரூ. 2 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை |
| நிரந்தர ஊனம் | ரூ.50,000/- முதல் ரூ. 1 லட்சம் வரை |
| கொடுங்காயம் | ரூ.10,000/- முதல் ரூ.20,000/- வரை |
| சிறுகாயம் | ரூ.5,000/- முதல் ரூ.10,000/- வரை |

வீரதீரச் செயல் புரிந்து, மரணமடையும் காவல் பணியாளரின் சட்டப்படியான வாரிசுக்கு அவர் கடைசியாகப் பெற்ற சம்பளத்தையே அவரது பணிக் காலம் முடியும் வரையில் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

வெடிகுண்டைக் கண்டுபிடித்துச் செயல் இழக்கச் செய்யும் பிரிவு, அதிரடிப் படைப் பிரிவு மற்றும் அதிரடிப் படைப் பயிற்சிப் பள்ளி பணியாளர்கள் ஆகியோருக்குப் பின்வருமாறு கருணைத் தொகை வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| அ) | காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் இறப்பின்போது | ரூ.10 லட்சம் |
| | காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை | ரூ.6 லட்சம் |
| ஆ) | கை, கால், பார்வை, மனநிலை ஆகியவற்றில் நிரந்தர ஊனம் ஏற்படும்போது (அனைத்துப் பதவியினருக்கும்) | ரூ.4 லட்சம் |
| இ) | உருக்குலைவு ஏற்படும்போது (அனைத்துப் பதவியினருக்கும்) | ரூ.2 லட்சம் |

46. வீரதீரச் செயல் புரியும்போது கொல்லப்பட்ட அல்லது நிரந்தர முடக்கமான சிறப்பு அதிரடிப் படைப் பணியாளர்களுக்கு, அவர்களின் பதவியின் தரம் பாராமல் அனைவருக்கும் ரூ.10 லட்சம் வழங்க அரசு ஆணையிட்டது.

## vii) பரிசுத் திட்டங்கள்

47. பள்ளி இறுதித் தேர்வு மற்றும் 12-ம் வகுப்புத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டம் மற்றும் நகரங்களில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் காவல் ஆய்வாளர் வரையிலான பதவியில் இருப்பவர்களின் பிள்ளைகளுக்கு முறையே ரூ.6000/-, ரூ.4000/-. ரூ.2000/- மற்றும் ரூ.7000/-, ரூ.5000/-, ரூ.3000/- என ஒவ்வோர் ஆண்டும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.



மாநில அரசின் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யும் பணத்திலிருந்து இந்த பரிசுகள் வழங்கப்படுகின்றன. 2006 ஆம் ஆண்டு, காவல் துறைப் பணியாளர்களின் 211 பிள்ளைகளுக்கு 2005-06 ஆம் கல்வி ஆண்டுக்கான பரிசாக ரூ.9,54,000/- வழங்கப்பட்டது.

## viii) தமிழ்நாடு காவல் நூற்றாண்டு கல்வி உதவித் தொகை நிதியம்

48. தமிழ்நாடு காவல் நூற்றாண்டு கல்வி உதவித் தொகை நிதியம் 1959 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அரசிதழ் பதிவு பெறாத காவல் துறை பணியாளர்களின் பிள்ளைகளுக்கு உதவித் தொகை வழங்கி, உயர் கல்விக்கு அவர்களை ஊக்கப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆண்டுதோறும் நன்கொடை மற்றும் ஒரே தவணை பங்களிப்பு ஆகியவற்றின்மூலம் இத்திட்டத்திற்கு நிதி திரட்டப்படுகிறது.

## ix) தமிழ்நாடு அரசு சிறப்புக் கல்வி உதவித் தொகை நிதியம்

49. அரசிதழ் பதிவு பெறாத காவல் துறைப் பணியாளர்களின் பிள்ளைகளில், கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களை உயர் கல்விக்கு ஊக்கப்படுத்துவதற்காக அரசால் இந்நிதியம் உருவாக்கப்பட்டது. இந்த நிதியிலிருந்து ரூ.2 லட்சத்தை, முதல் இடத்தைப் பிடிக்கும் மாணவருக்கு ரூ.40,000/-உம், இரண்டாவது முதல் ஒன்பதாவது வரையிலான இடங்களைப் பிடிப்பவர்களுக்குத் தலா ரூ.20,000/- வீதமும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் பயன்பெறும் மாணவர்கள், தரத்தில் முன்னணியில் இருப்பதோடு, தங்களைத் தொழில் கல்விக்குத் தகுதி படைத்துக் கொண்டு, தொழில் கல்வியில் சேர்தல் வேண்டும்.

## x) கருணை அடிப்படையில் பணி நியமனம்

50. பணியிலிருக்கும்போது மரணமடையும் அரசுப் பணியாளர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனங்கள் வழங்கப்படுகின்றன. 2006 ஆம் ஆண்டு 94 தட்டச்சர்கள், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டார்கள்.

## xi) காவல் மருத்துவமனைகள்

51. சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், பரங்கிமலை, வேலூர், கடலூர், விருதுநகர், திருநெல்வேலி (புறநோயாளி பிரிவு மட்டும்), ஆவடியிலுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை இரண்டாம் அணி, மணிமுத்தாறில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை ஒன்பதாம் அணி ஆகிய இடங்களில் 12 காவல் மருத்துவமனைகள் தற்போது இயங்கி வருகின்றன.

[2007 ஏப்ரல் 25

## xii) தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி

*52.* 2006 ஆம் ஆண்டு மரணமுற்ற 49 காவல் பணியாளர்களின் குடும்பங்களுக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து குடும்பநல உதவித் தொகையாக தலா ரூ.1,00,000/- வழங்கப்பட்டுள்ளது.

## VIII. பெண் காவலர்கள்

*53.* சமுதாயத்தில் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகளைக் கையாளும்போது ஆண் காவலர்களுக்கு உதவும் வகையில் 1973 ஆம் ஆண்டு மகளிர் காவல் பிரிவு உருவாக்கப்பட்டது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக எண்ணிக்கையிலான மகளிர் காவல் பிரிவு உள்ளது. இந்தியாவில் இருக்கின்ற மொத்த மகளிர் காவலர்களில், தமிழ்நாட்டில் 25 விழுக்காடு, உள்ளூர் காவல் பணியிலும், 50 விழுக்காடு ஆயுதப் படைப் பணியிலும் உள்ளனர். கடந்த 30 ஆண்டுகளில் இதில் அதிகப்படியான மாற்றங்கள் ஏற்பட்டு, சட்டம்-ஒழுங்கைப் பராமரித்தல், குற்றங்களைத் தடுத்தல் மற்றும் கண்டுபிடித்தல், பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான கடமைகள் மற்றும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் ஆகிய முக்கியமான காவல் பிரிவுகளிலும் பங்கு கொண்டு மகளிர் கடமையாற்றி வருகின்றனர்.

*54.* திருமணத்திற்குப் பிறகு கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், ஆண்களால் ஏற்படும் இன்னல்கள் மற்றும் பணிபுரியும் இடங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் போன்ற பெண்கள் சந்திக்கும் பல வகையான பிரச்சினைகளைக் கையாளுவதற்கேற்ப, மகளிர் காவலர்களைத் தயார் செய்யும் வகையில் ஆலோசனை தொடர்பான நுணுக்கங்கள் குறித்த சிறப்புப் பயிற்சிகள் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. மாநிலத்தில் தற்போது 196 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. பாதிக்கப்பட்ட பெண்கள் தங்கள் பிரச்சினைகளையும், குறைகளையும் வெளிப்படையாக எடுத்துக் கூறுவதற்கு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்மூலம் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

*55.* பெண்களிடையே சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்களது குறைகளை அவர்களது இருப்பிடத்திற்கே சென்று தீர்த்து வைக்கவும், ஒவ்வொரு மாவட்டம் மற்றும் நகரத்திலும் நடமாடும் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த மையங்கள் ஒவ்வொன்றிற்கும், ஒலிபெருக்கி வசதிகள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, காணொளி பதிவுக் கருவி (VCR), மிக உயர் அலை சாதனம் மற்றும் ஏ.சி. மின்



2007 ஏப்ரல் 25]

உற்பத்திக் கருவி ஆகியவை பொருத்தப்பட்ட வேன் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

## IX. தமிழகக் காவல் துறையில் உள்ள சிறப்புப் பிரிவுகள்

### குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

*56.* கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரின் தலைமையில் இயங்கி வரும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் 7 தனிப் பிரிவுகளும், 34 உட்பிரிவுகளும் உள்ளன. திட்டமிட்டு நிகழ்த்தப்படும் குற்றங்களை விசாரிக்கவென தனிப் பிரிவுகள் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் நெல்லை மாநகரங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவுகள், குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை தலைமையகத்திலும், சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்திலும் உள்ளன. கள்ளநோட்டுத் தடுப்புப் பிரிவும், விபச்சாரத் தடுப்புப் பிரிவும், குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் உள்ளன. இவை தவிர, போலி மற்றும் கள்ளநோட்டுக்களைக் கண்டுபிடிப்பதற்கும், போலி சான்றாணைகள், முத்திரைத்தாள், பாஸ்போர்ட், கிரெடிட் கார்டு மோசடி வழக்குகள் போன்ற பல்வேறு குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை ஈடுபட்டுள்ளது. சமூகப் பணியாற்றிடுமுகத்தான் பெண்களையும், குழந்தைகளையும் விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதை ஒழிப்பதன் அவசியத்தைக் கருதி, குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் விபச்சாரத் தடுப்புப் பிரிவு அமைக்க அரசு ஒப்பளித்தது. 2006 ஆம் ஆண்டில் மட்டும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையால் 67 வழக்குகள் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. பெரும்பாலான வழக்குகள் உள்ளூர்க் காவல் துறையிடமிருந்து மாற்றம் செய்யப்பட்டவையாகும். 31 வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, 17 வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளன.

### மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம்

*57.* 1995 ஆம் ஆண்டில் மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம் ஏற்படுத்தப்பட்டது. காவல் துறைத் தலைவர் ஒருவரின் கட்டுப்பாட்டில் மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம் உள்ளது. குற்றம் சம்பந்தமான அனைத்துத் தகவல்களையும் ஒருங்கிணைக்கும் மையமாகச் செயல்படும் மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம், குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தரவுகளைச் சேகரித்து, ஒருங்கிணைத்து, பகுப்பாய்வு செய்து வருகிறது.

[2007 ஏப்ரல் 25

காவல் கணினிப் பிரிவு, விரல் ரேகை பதிவுக் கூடம், புள்ளிவிவரப் பிரிவு மற்றும் குற்றவாளிகள் குற்றம் செய்ய கையாளும் முறையைக் கண்காணிக்கும் பிரிவு ஆகியன மாநிலக் குற்ற ஆவணக் காப்பகத்தில் உள்ள பிரிவுகளாகும்.

58. மாநிலத்திலுள்ள குற்ற நிகழ்வுகள் குறித்த தகவல்களைத் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்திற்கு, மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம் அளிப்பதுடன், தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் சார்பில் குற்றம் மற்றும் குற்றத் தகவல் முறையை நடைமுறைப்படுத்துகிறது.

### குற்றப் பிரிவு

59. கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் இயங்கும் குற்றப் பிரிவில் பின்வரும் பிரிவுகள் அடங்கியுள்ளன:—

(i) சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, மத அடிப்படைவாதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் புலன் விசாரணை செய்வதற்கும், வழக்குகள் நடத்துவதற்கும் எனத் தனியாக சிறப்புப் புலனாய்வுப் பிரிவு உருவாக்கப்பட்டது. இப்பிரிவிற்குக் காவல் துறை தலைவர் தலைமை வகிக்கிறார். 2006 ஆம் ஆண்டில், மூன்று வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளன. இரு தலைமறைவு குற்றவாளிகள் இப்பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

(ii) போதைப் பொருள் கடத்தல் நுண்ணறிவுப் பிரிவு, காவல் துறை கண்காணிப்பாளர் ஒருவரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவிற்கு மாநிலத்தில் 15 அலகுகள் உள்ளன. போதைப் பொருள் கடத்தல் பற்றிய நுண்ணறிவுத் தகவல்களை இப்பிரிவு சேகரிப்பதுடன், போதை மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தை, மாநிலத்தில் செயல்படுத்தி வருகிறது. 2006 ஆம் ஆண்டில், 1,139 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 1,154 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். அதில், போதைப் பொருள் கடத்திய 16 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர். ரூ.29.54 கோடி மதிப்பிலான கடத்தல் பொருட்கள் கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்டன.

(iii) வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவு, காவல் கண்காணிப்பாளர் ஒருவரது தலைமையில் இயங்கி வருகிறது. மாநிலத்தில் இப்பிரிவிற்கு 12 அலகுகள் உள்ளன. பதிப்புரிமைச் சட்டம், தமிழ்நாடு காணொளி பேழை பதிவு கருவிகள் மற்றும் கம்பி வட



2007 ஏப்ரல் 25]

இணைப்புத் தொலைக்காட்சி மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் காட்டுதல் சட்டம் ஆகியவற்றின் விதிகளை மீறுவோர்மீது நடவடிக்கை எடுத்து, தண்டனை பெற்றுத் தரும் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. 2006 ஆண்டில், 1,153 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 1,193 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். ரூ.19 கோடி மதிப்பிலான பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

(iv) கூட்டுக் கொள்ளை தடுப்புப் பிரிவு, காவல் கண்காணிப்பாளர் ஒருவரது தலைமையில் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு 1995 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. மாநிலத்தின் உள்ளேயும், மாநிலங்களுக்கிடையேயும் செயல்படும் குற்றவாளிகளையும், அவர்களது நடவடிக்கைகளையும் பற்றிய தகவல்களை இப்பிரிவு சேகரித்து வருகிறது. உயர் நீதிமன்றம் மற்றும் அரசின் உத்தரவின் பேரிலும், காவல் துறை தலைமை இயக்குநரின் ஆணையின் பேரிலும் ஒப்படைக்கப்படும் முக்கிய வழக்குகளை இப்பிரிவு புலன் விசாரணை செய்து வருகிறது.

### i) பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு

60. 1997 ஆம் ஆண்டில், தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு வைப்புதாரர்கள் நலன் பாதுகாப்பு (நிதி நிறுவனங்களின்) சட்டத்திற்குச் செயல்வடிவம் அளிக்குமுகத்தான், பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு அமைக்கப்பட்டது. இச்சட்டம் பொதுவாக "தான்பிட்" சட்டம் எனப்படும். கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் செயல்படும் இப்பிரிவில் பின்வரும் அலகுகள் உள்ளன:

### பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு - II (நிதி நிறுவனங்கள்)

61. முதலீட்டாளர்களின் நலனைப் பாதுகாத்திட, இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதன்முதலில் 1997-ல் சட்டமியற்றியது. 1997 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டமானது, செல்லாதது என அறிவிக்கக் கோரி ஏராளமான வங்கிசாரா நிதி நிறுவனங்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்தன. மேலும் இச்சட்டத்திற்கு வெளியிடப்பட்ட பல்வேறு திருத்தங்களுக்கு எதிராகவும் வழக்குகள் தொடரப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு மோசடி நிறுவனங்களிடமிருந்து பணத்தைத் திருப்பிப் பெற்றுத் தரமுடியாத சூழ்நிலை நிலவி வந்தது. இச்சட்டம் செல்லுபடியானதே ஆகும் என்ற ஆணையை 2-03-2007 இல் சென்னை உயர் நீதிமன்றம்

[2007 ஏப்ரல் 25

பிறப்பித்துள்ளது. வங்கிசாரா நிதி நிறுவனங்கள் பொதுமக்களிடம் வைப்புத் தொகையாக வசூலிக்கப்பட்ட பணத்தைக் காலமுதிர்வு அடைந்த பின்பும், அவர்களுக்குத் திரும்பச் செலுத்தாமல் தவறிழைக்கின்ற நேர்வுகள் குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில், அரசு, காவல் துறையில் பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு-II என அமைத்தது. இப்பிரிவானது மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட 400 பணியாளர்களுடன் செயல்படுகிறது. இப்பிரிவு 2006 ஆம் ஆண்டில் 3.52 கோடி ரூபாயை இந்நிறுவனங்களிலிருந்து பெற்று முதலீட்டாளர்களுக்குத் திரும்ப வழங்கியுள்ளது. இப்பிரிவு அமைந்ததிலிருந்து இதுவரை 95.74 கோடி ரூபாய் வைப்புதாரர்களுக்குத் திரும்பப் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

62. இப்பிரிவின் முறையான நடவடிக்கையினால், 2006 ஆம் ஆண்டில் 70 வழக்குகள் பதிவாகியுள்ளன. இப்பிரிவு தொடங்கப்பட்ட நாள் முதல் இதுவே குறைவானதாகும். அதற்கான காரணங்கள் என்னவெனில்,

(i) வங்கிசாரா நிதி நிறுவனங்களுக்கான பாரத ரிசர்வ் வங்கியின் முறையான ஆய்வு மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட விதிமுறைகள், மாற்றியமைக்கப்பட்ட வரைமுறைகளின்படி, சொந்த முதலீட்டுத் தொகை ரூபாய் 2 கோடியாக உயர்த்தப்பட்டது.

(ii) தமிழ்நாடு முழுவதும், உரிய நேரத்தில் பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(iii) நிதி நிறுவன மோசடி தொடர்பான தற்போதைய நிலை குறித்துப் பொதுமக்கள் நன்கு புரிந்து கொண்டனர்.

(iv) நிதி நிறுவன மோசடி தொடர்பாக ஊடகங்கள் பொதுமக்களிடம் ஏற்படுத்திய விழிப்புணர்வு.

வரும் ஆண்டுகளில் மோசடி செய்த நிதி நிறுவனங்களின் சொத்துகளை எடுப்பதற்காக, மாவட்ட வருவாய் அலுவலர்களுடன் கலந்து, இப்பிரிவு மிகவும் துரித நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது. மேலும், ரிசர்வ் வங்கியின் உதவியுடன் இப்பிரிவிலுள்ள பணியாளர்களின் புலனாய்வுத் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சியும் வழங்கப்பட உள்ளது.

### ii) வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு

63. நிதி மோசடிக் குற்றங்களை விசாரணை செய்வதற்காக, 1971 ஆம் ஆண்டில் வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு அமைக்கப்பட்டது. கூட்டுறவு சங்கங்களில் நடக்கும் ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட நிதி



2007 ஏப்ரல் 25]

கையாடல் வழக்குகளை, இப்பிரிவு புலன் விசாரணை செய்கிறது. காவல் கண்காணிப்பாளர் தலைமையில் செயல்படும் இப்பிரிவில் 7 உட்கோட்டங்கள் உள்ளன. தற்போது, அனைத்து மாவட்டங்களிலும் இப்பிரிவின் அலகுகள் உள்ளன.

2006 ஆம் ஆண்டில், வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவால் 116 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன; 150 வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டன; 96 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன.

### iii) சிலை திருட்டு தடுப்புப் பிரிவு

64. ரூபாய் 5 லட்சத்திற்கு மேல் மதிப்புள்ள, தொன்மை வாய்ந்த சிலை திருட்டு வழக்குகளையும், காவல் துறை தலைமை இயக்குநரால் ஒப்படைக்கப்படும் சிலை திருட்டு வழக்குகளையும் இப்பிரிவு புலனாய்வு செய்கிறது. மாவட்டம் மற்றும் மாநிலக் காவல் துறையால் கையாளப்படும் முக்கியமான சிலை திருட்டு வழக்குகளின் புலன் விசாரணைப் பணிகளை ஒருங்கிணைத்து மேற்பார்வையிடுவதுடன், தொன்மைவாய்ந்த கலைப் பொருள் வணிகர்களின் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள் பற்றிய உளவுத் தகவல்களைச் சேகரிப்பதும் இப்பிரிவின் முக்கிய பணியாகும்.

### சிறப்புச் செயல்பாடுகள் பிரிவு

65. கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் இப்பிரிவு செயல்படுகிறது. இப்பிரிவில், தமிழ்நாடு அதிரடிப் படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப் படைப் பயிற்சிப் பள்ளி ஆகியன உள்ளன. தமிழ்நாடு அதிரடிப் பாதுகாப்புப் படை, 24-01-1997 அன்று சிறப்புச் முன்பிருந்த சிறப்புப் பாதுகாப்புப் படை, 24-01-1997 அன்று சிறப்புச் செயல்பாடு பிரிவு என மாற்றி அமைக்கப்பட்டது.

### i) தமிழ்நாடு அதிரடிப் படை

66. தடா, பொடா மற்றும் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் குற்றவாளிகளின் வழித்துணைப் பாதுகாப்புப் பணி, மிக முக்கியமானவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணி, முக்கிய நிகழ்ச்சிகளின்போது இதர பாதுகாப்புப் பணி ஆகியவற்றை மேற்கொள்வதற்காகத் தமிழ்நாடு அதிரடிப் படை உருவாக்கப்பட்டது. சட்டம்-ஒழுங்கு, மீட்புப் பணி, வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்தல், தேர்தல் பாதுகாப்பு போன்ற பல்வேறு பணிகளையும் இப்படையினர் செய்து வருகின்றனர்.

[2007 ஏப்ரல் 25

### ii) தமிழ்நாடு அதிரடிப் படைப் பயிற்சிப் பள்ளி

67. அதிரடிப் படை வீரராகச் செயல்படத் தேவைப்படும் பயிற்சிகளை இப்பள்ளி அளிக்கிறது. நவீன ஆயுதங்களைக் கையாள்வதற்கும், வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்யும் நுணுக்கத்திற்குத் தேவையான பயிற்சிகளையும் இப்பள்ளி அளிக்கிறது. 'ஸ்னைபர்' வகை துப்பாக்கிச் சுடுதல், வனப் பகுதியில் தங்கியிருத்தல் ஆகியவற்றுக்கும், நவீன ஆயுதங்கள் மற்றும் சதிச் செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகள் போன்றவற்றைத் திறமையாகக் கையாள்வதற்கும் தேவைப்படும் சிறப்புப் பயிற்சிகளை இப்பள்ளி அளிக்கிறது. 2006 ஆம் ஆண்டில் நடந்து முடிந்த சட்டமன்ற, உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களின்போது, தமிழ்நாடு அதிரடிப் படை மற்றும் பயிற்சிப் பள்ளி வீரர்கள், பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### iii) வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்யும் படை

68. வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்யும் படை, 1991 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. திறமைவாய்ந்த நிபுணர்களைக் கொண்ட தமிழ்நாடு அதிரடிப் படைப் பள்ளியின் சிறப்பு அங்கமான இப்பிரிவு, சாதுரியமான தொழில்நுட்பத்துடன் வெடிகுண்டுகளை விரைந்து கண்டுபிடித்து, அவற்றைச் செயலிழக்கச் செய்யும் பணியை மேற்கொண்டு வருகிறது.

## நுண்ணறிவுப் பிரிவு

69. கூடுதல் காவல் துறை இயக்குநரின் தலைமையின்கீழ் இயங்கி வரும் நுண்ணறிவுப் பிரிவானது, முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்புத் தொடர்பான தகவல்களை அளிப்பதுடன், நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து, ஒப்பாய்வு செய்து, உரியவர்களுக்கு அனுப்பும் பணியை ஆற்றி வருகிறது. இப்பிரிவில், தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் சிறப்புப் பிரிவு ஆகியன உள்ளன.

### i) தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

70. இத்துறையானது, மாநிலத்தில் மத வேறுபாடுகள் மற்றும் சாதிப் பிரச்சினைகளால் ஏற்படும் பதற்ற நிலை மற்றும் பிற சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து, ஒப்பாய்வு



2007 ஏப்ரல் 25]

செய்து, உரியவர்களுக்கு அனுப்பும் பணியை ஆற்றி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும்/ஆணையரகத்திலும் ஆய்வாளர் ஒருவரின் தலைமையின்கீழ் இத்துறையின் ஒரு பிரிவு இயங்கி வருகிறது.

### ii) 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

71. 1967-1970 ஆம் ஆண்டுகளில், தமிழ்நாட்டில் நக்சலைட்டுகளின் நடவடிக்கைகள் முதலில் தலைதூக்கியபோது, காவல் கண்காணிப்பாளர் உட்பட கூடுதல் பணியாளர்கள் கொண்ட தனி அலகு ஒன்று, தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில், 1971 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டு, ஜூலை மாதத்தில் இவ்வலகின் பெயர் "க்யூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை" என மாற்றப்பட்டு, தற்போது, நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளை இப்பிரிவு கவனித்து வருகிறது. மாவோயிஸ்ட், இடதுசாரி தீவிரவாத மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளில் இப்பிரிவு கவனம் செலுத்தி வருகிறது. 'க்யூ' பிரிவின் அலகுகள் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

### iii) பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

72. அயல்நாட்டுத் தலைவர்கள் உட்பட, முக்கியப் பிரமுகர்கள்/மிக முக்கியப் பிரமுகர்கள் ஆகியோரது பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், வெளிநாட்டவரின் நடவடிக்கைகள், முக்கியக் கேந்திர அமைப்புகள் மற்றும் பாஸ்போர்ட் தொடர்பான நடவடிக்கைகளையும் இப்பிரிவு கையாண்டு வருகிறது.

73. பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையிலுள்ள மிக முக்கியமானோரின் பாதுகாப்புப் பிரிவில், அருகிலிருந்து பாதுகாக்கும் குழு, வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து, செயலிழக்கச்செய்யும் படை, மோட்டார் வாகனப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு, மோப்பநாய் படை மற்றும் பெண்கள் அணி ஆகியன அடங்கியுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் கலந்துகொள்ளும் விழாக்கள், கூட்டங்கள் மற்றும் மாவட்டப் பயணங்கள் ஆகியவற்றின்போது, உச்சகட்டப் பாதுகாப்பினை இப்பிரிவு வழங்கி வருகிறது.

### iv) சிறப்புப் பிரிவு

74. 1998 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது. கோவை தொடர் குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து, மத

அடிப்படைவாதிகள் தொடர்பான நடவடிக்கைகளைக் கையாள்வதற்காக, சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது. சென்னை, வேலூர், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இந்தச் சிறப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. காவல் துணைக் கண்காணிப்பாளர் ஒருவர் தலைமையில் அவருக்கு உதவியாக மூன்று காவல் ஆய்வாளர்களுடன் ஒவ்வொரு அலகும் செயல்படுகிறது.

## v) காவல் சுருக்கெழுத்துத் துறை

75. காவல் சுருக்கெழுத்துத் துறைக்கு அனைத்து மாவட்டங்களிலும், மாநகரங்களிலும் கிளைகள் உள்ளன. பொதுக்கூட்டப் பேச்சுக்களை முழுமையாகக் குறிப்பெடுப்பதும், அவதூறான பேச்சுக்களைக் கண்காணிப்பதும் இத்துறையின் பணியாகும். இது தவிர, குற்றப் புலனாய்வுத் துறையின் மாநிலக் குற்றப் பிரிவு, 'க்யூ' பிரிவு, சிறப்புப் பிரிவு, தமிழ்நாடு சட்டமன்றம் மற்றும் பொதுத் துறை (அதிமந்தணம்) தொடர்பான முக்கிய ஆவணங்களை மொழியாக்கம் செய்யும் பணி இப்பிரிவிடம் ஒப்படைக்கப்படுகிறது. இப்பிரிவில், தலைமை அறிக்கையாளர், முதுநிலை அறிக்கையாளர்கள், இளநிலை அறிக்கையாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் உள்ளனர்.

## தொழில்நுட்பப் பிரிவு

76. தமிழ்நாடு காவல் துறைக்குத் தொலைத் தொடர்பு கட்டமைப்பு வசதிகளைத் தொழில்நுட்பப் பிரிவு அமைத்துக் கொடுக்கிறது. இப்பிரிவு, காவல் துறை தலைவர் ஒருவரது தலைமையில் இயங்கி வருகிறது. தற்போது, அனைத்து மாவட்டங்களிலும், ஆணையரகங்களிலும், காவல் நிலையங்களுக்கிடையே தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளும் வகையில், மிக உயரலை உயர்வேகத் தொலைத் தொடர்புச் சாதன வசதிகள் உள்ளன. சிறப்பான தகவல் பரிமாற்றத்திற்கென 41 மறு அஞ்சல் அமைப்பு இடங்களில், 117 மிக உயரலை உயர்வேகத் தொலைத் தொடர்புச் சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் நுண்ணலைத் தொலைபேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது. மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் உட்பட பல அதிகாரிகளுக்கு வீடியோ மூலம் கலந்துரையாடும் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மாநிலத்தில் விரிபரப்பு இணையத் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு, மாநிலத்திலுள்ள பல்வேறு அலகுகளுக்குள் தரவுகள் பரிமாற்றம் செய்து கொள்ளப்படுகின்றன. சென்னை மாநகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள காவல் நிலையங்களிடையே ஒலி மற்றும் தரவுகளை இணைப்பதற்காக வலைதளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரம் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் உள்ள காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவல் நிலையங்களுக்கு, உரையாடல் மற்றும் தரவு பரிமாற்றத்திற்கென, 'கோர்-டெக்ட் வில்' தொலைபேசி வழங்கப்படவுள்ளது. தற்பொழுது இத்திட்டம் பரிசோதனை நிலையில் உள்ளது.



## சிறப்பு இலக்குப் படை

77. இப்பிரிவு, காவல் துறை கூடுதல் இயக்குநர் ஒருவரது தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. ஆட்கடத்தல், ஆயுதமேந்திய போராட்டம், உள்நாட்டுக் கலகம், பயங்கரவாத நடவடிக்கைகள், பணத்திற்காக அதிமுக்கிய நபர்களைக் கடத்துதல் போன்றவற்றைத் தடுப்பதற்கான பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு, சிறப்பு இலக்குப் படை உருவாக்கப்பட்டுள்ளது. மிகப் பெரிய இயற்கைச் சீற்றங்கள், இரயில் விபத்துக்கள் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் போன்றவற்றின்போது, உள்ளூர்க் காவல் துறையினருக்குச் சிறப்பு இலக்குப் படையினர் உதவி செய்து வருகின்றனர். தற்பொழுது இப்படையானது, தமிழ்நாட்டின் வடக்கு மாவட்டங்களில் நக்சலைட்டுகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## சமூக நீதி

78. சமூக நீதிப் பிரிவை, காவல் துறை தலைவர் ஒருவர் தலைமையேற்று நடத்தி வருகிறார். இப்பிரிவிற்கு மாநிலம் முழுவதும் 35 அலகுகள் உள்ளன. 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்ட விதிகளையும், 1989 ஆம் ஆண்டு பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டத்தின் பிரிவுகளையும் நடைமுறைப்படுத்துவதை, இப்பிரிவு கண்காணித்து வருகிறது. பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, அத்தகைய வன்கொடுமைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை இப்பிரிவு செய்து வருகிறது. பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் ஆகியோரைப் பாதிக்கும் மோதல்களில் தீர்வு காண்பதில், இப்பிரிவு முக்கியப் பங்காற்றி வருகிறது. 2006 ஆம் ஆண்டு 642 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, பாதிக்கப்பட்ட 1,034 நபர்களுக்கு ரூ.1.52 கோடி மதிப்பிலான நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## காவல் பயிற்சிக் கல்லூரி

79. காவல் அமைப்பில் பயிற்சி என்பது ஒரு முக்கிய அம்சமாகும். காவல் துறையினர் சீரிய முறையில் செயல்படுவதற்குத் தேவையான திறமை, பயிற்சியின் மூலமாகவே அளிக்கப்படுகிறது. தமிழக காவல் துறையிலுள்ள பயிற்சிப் பிரிவிற்குக் காவல் துறை இயக்குநர் ஒருவர் தலைமை வகிக்கிறார். இரு கூடுதல் காவல் துறை இயக்குநர்கள், ஒரு காவல் துறைத் தலைவர், இரு காவல் துறைத் துணைத் தலைவர்கள், இரு காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் இதர பயிற்றுநர்கள், திட்டமிடுதலிலும், பல்வேறு வகையான பயிற்சிகளை அளிப்பதிலும் காவல் துறை இயக்குநருக்கு உதவி புரிகின்றனர். காவல் பயிற்சிக் கல்லூரி, காவல் துறையின் முக்கியப் பயிற்சி மையமாக விளங்குவதோடு, அங்கு காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் அதற்குக் கீழ் பதவியிலுள்ள அதிகாரிகளுக்கு அடிப்படைப் பயிற்சியும், பணியிடைப் பயிற்சியும் வழங்கப்படுகின்றன. பயிற்சியாளர்களுக்குச் சிறப்புப் பாடத் திட்டங்களுக்கான வகுப்புகளையும், பயிலரங்குகளையும், பயிற்சிகளையும் நடத்துவதோடு, மூத்த காவல் துறை அதிகாரிகளுக்கென பல்வேறு கருத்தரங்குகளையும் காவல் பயிற்சிக் கல்லூரி நடத்துகிறது. காவல் பயிற்சிக் கல்லூரி தவிர, வேலூர், கோயம்புத்தூர் மற்றும் பேரூரணி ஆகிய இட்ங்களில் காவலர் பயிற்சிப் பள்ளிகளும், கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் தற்காலிக பயிற்சிப் பள்ளிகளும், சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி தஞ்சாவூர், சேலம், மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய சரக தலைநகரங்களில் பணியிடைப் பயற்சி மையங்களும் காவல் துறையால் நடத்தப்படுகின்றன.

## தமிழ்நாடு காவல் பயிற்சிக் கழகம்

80. அனைத்து நவீன கட்டமைப்பு வசதிகளோடுகூடிய காவல் பயிற்சிக் கழகம், வண்டலூர் அருகே உள்ள ஊனமாஞ்சேரி கிராமத்தில் ரூபாய் 48 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. காவல் பயிற்சிக் கழகம் அமைக்கப்படுவதற்கான பணிகளைக் கூடுதல் காவல் துறை இயக்குநர் பதவியில் உள்ள ஒரு திட்ட அலுவலர் கவனித்து வருகிறார்.

## தமிழ்நாடு சிறப்புக் காவல் படை

81. காவல் துறை தலைவர் ஒருவரது கட்டுப்பாட்டில், ரெஜிமெண்டல் மையம் மற்றும் ஒரு சிறப்புப் படை அணி உள்ளிட்ட 15 சிறப்புக் காவல் அணிகள் இயங்கி வருகின்றன. ஆவடி மற்றும் திருச்சியில் தமிழ்நாடு



சிறப்புக் காவல்படை கட்டுப்பாட்டின்கீழ், இரண்டு காவல் போக்குவரத்துப் பணிமனைகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் எட்டாம் அணி, புது தில்லியிலுள்ள திகார் சிறைச்சாலையில் அயற்பணியில் உள்ளது. தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகள், மாவட்ட/மாநகரக் காவல் துறையினரால் சமாளிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும்போது பயன்படுத்தப்படுகின்றன. முக்கிய சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள், முக்கிய கோவில் திருவிழாக்கள் மற்றும் அரசியல் பேரணிகளின்போது, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். அதுமட்டுமல்லாமல், சிறப்பு இலக்குப் படை, கடலோரப் பாதுகாப்புப் படை, சிறைச்சாலைப் பணிகள், சிறப்பு அகதிகள் முகாம்கள் மற்றும் காவல் துறை தலைமை அலுவலகப் பாதுகாப்புப் பணி போன்றவற்றிலும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் பணி பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. மாநிலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளின்போது அணிவகுப்புகள் நடத்தவும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் பணி பயன்படுத்தப்படுகிறது. 2006 ஆம் ஆண்டு, இரண்டாயிரத்து முந்நூற்று அறுபத்தைந்து ஆண் மற்றும் பெண் காவலர்கள் தமிழ்நாடு சிறப்புப் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 2006 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் மற்றும் அதே ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற உள்ளாட்சிமன்றத் தேர்தல்களின்போது தமிழ்நாடு சிறப்புக் காவல் படை பாராட்டத் தகுந்த பணியாற்றியுள்ளது.

## கடலோரக் காவல் படை

82. கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் கடலோரக் காவல் படை இயங்கி வருகிறது. தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு எரிபொருட்கள், மருந்து மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்கள் கடல்மூலமாகக் கடத்தப்படுவதைத் தடுக்கவும், தமிழ்நாட்டிற்குள் போராளிகள் ஊடுருவுவதைத் தடுக்கவும், மீனவர்கள் மற்றும் போராளிகளுக்கிடையே தொடர்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை முன்கூட்டியே கண்டறியவும், 1994 ஆம் ஆண்டில் இப்படை உருவாக்கப்பட்டது. கடற்கரையோரம் ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவைப் பாதுகாக்க, 60 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. கடலோரப் பாதுகாப்பு குறித்த நுண்ணறிவுத் தகவல்களைப் பெறும்வகையில் கடலோரக் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள 441 கிராமக் கண்காணிப்புக் குழுக்கள், கடற்படை, கடலோரப் பாதுகாப்புப் படை, உள்ளூர் காவல் துறை, மீன்வளத் துறை, சுங்கத் துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளோடு கடலோர காவல் படையினர் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றன.

[2007 ஏப்ரல் 25

2006 ஆம் ஆண்டு, 700 லிட்டர் பெட்ரோல், 3,500 லிட்டர் டீசல், 3,942 கிலோ அரிசி, 2 சிறிய லாரிகள், 2 சிறிய சரக்கு ஆட்டோ ரிக்ஷாக்கள், ஒரு 'மினிடோர்' ஆட்டோ ரிக்ஷா, ஒரு டிப்பர் லாரி மற்றும் 33 எரிவாயு உருளைகள் ஆகியவற்றைக் கடலோரக் காவல் படை பறிமுதல் செய்துள்ளது. தமிழகத்தில் 12 கடல்சார் காவல் நிலையங்கள், 12 கடல்சார் புறக்காவல் நிலையங்கள், 40 கூடுதல் சோதனைச் சாவடிகள் ஆகியவற்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்கான புதிய முயற்சிகள் 2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

83. கடல்சார் காவல் நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்குத் தேவையான நிலங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதுடன், கட்டுமானப் பணியைத் தமிழ்நாடு காவல் வீட்டு வசதிக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

84. 40 சோதனைச் சாவடிகள் அமைப்பதற்காக நிலம் தேர்ந்தெடுக்கும் பணி முடிவுற்றுள்ளது. 27 சோதனைச் சாவடிகள் அமைப்பதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது; எஞ்சிய 13 சோதனைச் சாவடிகளுக்கு அனுமதி பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு, சென்னைக் கடலோரக் காவல் படையின் சார்பில் 60 காவல் பணியாளர்களுக்கு, இரண்டு கட்டங்களாக, அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

85. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிற்குக் கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவர் தலைவராக இருக்கிறார். இப்பிரிவிற்கு 94 அலகுகள் உள்ளன. ஆய்வாளர்கள் தலைமையில் ஒவ்வொரு அலகும் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும் விற்பனை செய்வதையும் ஒழிக்கும் பணியில் இப்பிரிவு ஈடுபட்டுள்ளது. குடிப்பதற்காக எரிசாராயத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் பணியிலும், இப்பிரிவு கவனம் செலுத்தி வருகிறது. கள்ளச் சாராயம்/ மெத்தனால் ஆகியவற்றின் அபாயத்தை மக்களிடையே உணர்த்துவதற்காக, மாநிலம் தழுவிய விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்வேறு அரசுசாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இப்பிரச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இப்பிரிவில், மே 2006 முதல் பிப்ரவரி 2007 வரையிலான காலத்தில் 1,209 இடங்களில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது கண்டுபிடிக்கப்பட்டு, 86,004 வழக்குகள் பதிவு



2007 ஏப்ரல் 25]

செய்யப்பட்டுள்ளன. 82,942 நபர்கள் கைது செய்யப்பட்டனர். போதைப் பொருள் கடத்தல் நுண்ணறிவுப் பிரிவில், 1-4-2006 முதல் 31-3-2007 வரையிலான காலத்தில் 1,148 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இவற்றில் 1,170 நபர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட போதை மற்றும் மனமயக்கப் பொருட்களின் மதிப்பு ரூ. 31.69 கோடி ஆகும். இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் 19 நபர்கள் குண்டர் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## இரயில்வே காவல் படை

86. 1932 ஆம் ஆண்டில், திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு இரயில்வே காவல் படை அமைக்கப்பட்டது. பின்னர், 1981 ஆம் ஆண்டு, ஏற்கெனவே இருந்த இரயில்வே காவல் படையை இரண்டாகப் பிரித்து, சென்னை இரயில்வே காவல் படை அமைக்கப்பட்டது. இப்படை, காவல் துறை தலைவர் ஒருவரது தலைமையின்கீழ், 32 இரயில்வே காவல் நிலையங்கள், 25 புறக்காவல் நிலையங்கள் மற்றும் 3 நடமாடும் காவல் நிலையங்களுடன் இயங்கி வருகிறது. இரயில்களிலும், இருப்புப் பாதை நடைமேடைகளிலும் நிகழும் குற்றங்களைத் தடுப்பது, விசாரிப்பது, இரயில்வே சொத்துக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது போன்ற பணிகளை இரயில்வே காவல் படை கவனித்து வருகிறது. அதற்காக, இப்படையானது இரயில்வே பாதுகாப்புப் படை மற்றும் உள்ளூர் காவல் துறையினரோடு ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. 5,525 கிலோ மீட்டர் நீளம் கொண்ட மிகப் பெரிய இரயில்வே காவல் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில் இப்படை பணிகளை மேற்கொண்டு வருகிறது. 2006 ஆம் ஆண்டு 104 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அனைத்து வழக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டு, கண்டுபிடிப்பு விகிதம் 100 விழுக்காடு ஆனது.

## மோப்ப நாய் படைப் பிரிவு

87. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், ஆணையரகங்களிலும் மோப்பநாய் படைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், சிறப்பு இலக்குப் படை, இரயில்வே காவல் படை, அதிரடிப் படை ஆகிய சிறப்புப் பிரிவுகளிலும், மோப்ப நாய் படைகள் உள்ளன. மாநிலத்தில் தடத்தைப் பின்பற்றிச் செல்லும் 82 மோப்ப நாய்களும், வெடிமருந்துப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் 91 மோப்ப நாய்களும், நான்கு மீட்பு நாய்களும், போதைப் பொருள் கண்டறியும் 8 மோப்ப நாய்களும் உள்ளன. குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், புலனாய்வு செய்வதிலும் மோப்ப நாய்கள் சிறப்பாக உதவி புரிந்து வருகின்றன.

### குதிரைப் படைப் பிரிவு

88. தமிழகக் குதிரைப் படைப் பிரிவில் 37 குதிரைகள் உள்ளன. சென்னை மற்றும் மதுரையில் உள்ள குதிரைப் படைப் பிரிவுகளில், முறையே 32 மற்றும் 5 குதிரைகள் உள்ளன. கோவை குதிரைப் படைப் பிரிவிற்கு, புதிதாக 6 குதிரைகள் வாங்க, ரூபாய் 7.53 லட்சம் அரசு அனுமதி வழங்கி உள்ளது. நெரிசலைக் கட்டுப்படுத்த குதிரைப் படை பயன்படுத்தப்படுவதுடன், குடியரசு தினம், சுதந்திர தினம், பதக்கம் வழங்கும் விழா போன்ற சிறப்புக் கால அணிவகுப்புகளிலும் குதிரைப் படை பங்கேற்கிறது.

### தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்

89. காவல் துறை இயக்குநர் ஒருவரைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தில், கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவர் உறுப்பினராகவும், காவல் துறைத் தலைவர் ஒருவர் உறுப்பினர் செயலாளராகவும் உள்ளனர். 1991 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் தமிழக அரசால் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், தீயணைப்பு வீரர்கள் மற்றும் சிறைத் துறைக் காவலர்களைத் தேர்வு செய்கிறது. நேர்மையான, ஒளிவுமறைவற்ற, வெளிப்படையான முறையில் பணி நியமனத்தை இவ்வாரியம் மேற்கொள்கிறது.

### ஊர்க் காவல் படை

90. ஊர்க் காவல் படையானது, அடிப்படையில் ஒரு தன்னார்வ சேவை அமைப்பாகும். சட்டம்-ஒழுங்கு, குற்றத் தடுப்பு, போக்குவரத்தை முறைப்படுத்துதல், இரவு ரோந்துப் பணி, முக்கிய நபர்களின் பாதுகாப்பு, பெரிய பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களின்போது, மாவட்ட/மாநகரக் காவல் துறை நிர்வாகத்திற்கு உதவுவதில், ஊர்க் காவல் படை பெரும் பங்காற்றி வருவதுடன், வெள்ளம் ஏற்படும் சமயங்களிலும் உதவி புரிந்து வருகிறது. காவல் துறைத் தலைவர் ஒருவரின் கட்டுப்பாட்டில் ஊர்க்காவல் படை செயல்பட்டு வருகிறது. மாநில அளவில் காவல் துறை இயக்குநர் அவர்கள், பதவி வழியால் இப்படையில் தலைமைத் தளவாயாகவும், மாவட்ட அளவில் அந்தந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களும் மற்றும் மாநகர அளவில் காவல் ஆணையாளர்களும் அந்தந்த அலகுகளுக்குத் தளவாய்களாகவும் செயல்படுகிறார்கள். தமிழ்நாடு ஊர்க் காவல் படையில் உள்ளவர்களின் தற்போதைய எண்ணிக்கை 2,750; பெண்கள் உட்பட, மொத்தம் 11,605



ஆகும். அனைத்து மாவட்டம் மற்றும் ஆணையரகங்களிலும், மகளிர் ஊர்க் காவல் படைப் பிரிவு உட்பட ஊர்க் காவல் படை அலகுகள் உள்ளன.

### குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவு

91. குடிமைப் பொருள் புலனாய்வுப் பிரிவானது, கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் செயல்படுகிறது. காவல் துறையின் இப்பிரிவு, அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தையும், மத்திய, மாநில அரசுகளால் பிறப்பிக்கப்படும் பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளையும் அமல்படுத்தி வருகிறது. மாநிலம் முழுவதிலும் 15 அலகுகள் இப்பிரிவில் உள்ளன. 2006 ஆம் ஆண்டில், குடிமைப் பொருள் புலனாய்வுப் பிரிவினால் 12,370 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ரூபாய் 10.95 கோடி மதிப்பிலான 60,204 குவிண்டால் பொது விநியோக திட்ட அரிசி, 1,74,602 லிட்டர் மண்ணெண்ணெய், 10,398 சமையல் எரிவாயு உருளைகள் மற்றும் இதர பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இப்பிரிவினர், இவ்வாண்டு, ரூபாய் 28.92 கோடி மதிப்பிலான வாகனங்களைப் பறிமுதல் செய்துள்ளதுடன், 1,349 எதிரிகளையும் கைது செய்துள்ளனர். சிறையில் அடைக்கப்பட்ட 68 நபர்களில், 5 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழும், 83 பேர் கள்ளச் சந்தை மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் பராமரிப்புச் சட்டம், 1980-ன் கீழும் அடைக்கப்பட்டுள்ளனர்.

### மாநிலப் போக்குவரத்துத் திட்டமிடல் பிரிவு

92. மாநிலப் போக்குவரத்துத் திட்டமிடல் பிரிவானது, 15-2-2005 முதல் கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரின் தலைமையில் செயல்படுகிறது. காவல் துறை இயக்குநர் அவர்களது நேரடிக் கட்டுப்பாட்டில் இப்பிரிவு உள்ளது. சாலை விபத்துகள் குறித்த புள்ளிவிவரங்களைச் சேகரித்தல், ஒருங்கிணைத்தல், ஆய்வு செய்தல் மற்றும் பல்வேறு அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, சாலைப் பாதுகாப்பைத் திட்டமிடல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது. தேசிய நெடுஞ்சாலையில் 80 சாலைப் பிரிவுகளில், ரோந்துப் பணிகளை மேற்கொள்ளும் 160 நெடுஞ்சாலை ரோந்துப் பணிக் குழுக்களின் செயல்பாடுகளை இப்பிரிவு கண்காணித்து வருகிறது. சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்துத் தடுப்பு ஆகியவற்றிற்கு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து, இப்பிரிவைப் பலப்படுத்தும் வகையில், ரூபாய் 8.27 கோடி மதிப்பில் 10 மாவட்டங்களில் 20 போக்குவரத்து காவல் நிலையங்கள் அமைக்கப்படும் என்றும், ரூபாய் 1.54 கோடி மதிப்பில் 10 மாவட்டத் தலைமையகங்களில் 10 நடமாடும் நீதிமன்றங்கள்

[2007 ஏப்ரல் 25

அமைக்கப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ளார். இத்திட்டம் விரைவில் நடைமுறைக்கு வர உள்ளது.

## X. காவல் துறை வாகன வசதி

93. சட்டம்-ஒழுங்கு சீர்கேட்டை விளைவிக்கக்கூடிய குற்றச் சம்பவங்கள் நிகழும் சமயத்தில், காவல் துறை விரைவாகவும், உறுதியாகவும் மேற்கொள்ளும் நடவடிக்கையைப் பொறுத்தே அதன் திறன் தீர்மானிக்கப்படுகிறது. பிரச்சினைகள் ஏற்படும்போது, காவல் துறையினர் விரைவாகச் செயல்பட்டு அவற்றை முளையிலேயே கிள்ளி எறிவதற்கும், பிரச்சினை பெரிய அளவில் பரவாமல் தடுப்பதற்கும், போதுமான அளவு வாகனங்கள் இருப்பது அவசியமாகும். சிறந்த போக்குவரத்து மற்றும் ரோந்து வாகனங்களை வழங்கி காவல் துறையை மேம்படுத்த வேண்டுமென மாநில அரசு மேற்கொண்டுள்ள முயற்சியின் காரணமாக, இன்று நாட்டிலேயே அதிநவீன வாகனங்களைக் கொண்டதாகத் தமிழ்நாடு காவல் துறை விளங்குகிறது.

94. 31-12-2006 அன்றைய நிலவரப்படி, தமிழ்நாடு காவல் துறையில் 10,906 வாகனங்கள் உள்ளன. தமிழ்நாடு காவல் துறையில் உள்ள வாகனங்கள் வாரியான விவரங்கள் இணைப்பு-10-ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

## XI. காவலர் வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள்

95. காவல் துறையின் அனைத்துக் கட்டுமானங்களும், கட்டடங்களைப் பழுதுபார்க்கும் சிறப்பு வேலைகளும், தமிழ்நாடு காவல் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### வீட்டு வசதி

i) காவலர் வீட்டு வசதியின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில், 1992 ஆம் ஆண்டு, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் மூலமாக ஒவ்வோர் ஆண்டும் ஆயிரம் குடியிருப்புகளைக் கட்ட அரசு உத்தரவிட்டது. 1998 ஆம் ஆண்டு, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் கட்டப்பட்டு வரும் குடியிருப்புக்களின் எண்ணிக்கை ஓர் ஆண்டிற்கு 2,500 ஆக உயர்ந்துள்ளது. 2000 ஆம் ஆண்டில், இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு 3,000 ஆக உயர்ந்தது. 2006 ஆம் ஆண்டில், இதுவரை, தமிழ்நாடு காவல் வீட்டு வசதிக் கழகத்தால் 20,947 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதன்மூலம், குடியிருப்புத் தேவை



2007 ஏப்ரல் 25]

நிறைவு செய்யப்பட்டுள்ள சதவிகிதம் 42.48-லிருந்து 43.03-ஆக உயர்ந்துள்ளது. இந்த சதவிகிதம் பெருமளவில் உயராததற்கு முக்கியக் காரணம் என்னவென்றால், பெருமளவிலான பழைய குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, அதே இடத்தில் புதிய குடியிருப்புகள் கட்டப்படுவதேயாகும்.

### காவலர் குடியிருப்புகள்

31-12-2006 அன்றைய நிலவரப்படி, குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டுள்ள காவலர்களின் எண்ணிக்கை:

| | | |
|---|---|---|
| ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை | - | 98,897 |
| குடியிருப்பு ஒதுக்கீடு | - | 42,556 |




ii) பதினோராவது கட்டத்தில், ரூபாய் 4,312.70 லட்சம் மதிப்பில் 907 குடியிருப்புகளும், 2005-2006 ஆம் ஆண்டில் ரூபாய் 172.24 கோடி மதிப்பில் 3,939 காவலர் குடியிருப்புகளும் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

[2007 ஏப்ரல் 25

iii) 98,897 காவல் பணியாளர்களுக்காக இதுவரை 42,556 குடியிருப்புகளைக் கட்டி முடித்துள்ள தமிழ்நாடு காவல் துறை, 4,846 காவலர் குடியிருப்புகள் கட்டும் பணியை மேற்கொண்டுள்ளது. இந்த 4,846 காவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒதுக்கப்பட்ட பிறகு, ஒட்டுமொத்தமாகக் காவல் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட குடியிருப்புகள் 47,402 ஆக இருக்கும், பின்னர், குடியிருப்பு வசதி நிறைவு செய்யப்பட்டுள்ள சதவிகிதம் 43.03-லிருந்து, 47.93-ஆக உயரும். ரூபாய் 188.75 லட்சம் மதிப்பில், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் 10 பேருக்கான குடியிருப்புடன் இணைந்த முகாம் அலுவலகங்கள் மற்றும் கோயம்புத்தூரில் மேற்கு மண்டலக் காவல் துறைத் தலைவர் குடியிருப்பு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**காவல் துறை கட்டடங்கள்**

i) காவல் நிலையங்கள் மற்றும் இதர கட்டடங்களைக் கட்டும் பணியையும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் ஏற்றுள்ளது. இக்கழகம், இதுவரை, 78 காவல் நிலையங்கள், 6 மாவட்டக் காவல் அலுவலகங்கள், ஓர் ஆயுதப் படைப் பிரிவு வளாகம், 2 நவீன காவல் கட்டுப்பாட்டு அறைகள், 9 பணியிடைப் பயிற்சி மையங்கள், ஓய்வு அறைகள் மற்றும் மோப்ப நாய் பராமரிப்புக் கட்டடம் ஆகியவை ரூபாய் 3,473.04 லட்சம் செலவில் கட்டி முடித்துள்ளது. ரூபாய் 699.88 லட்சம் செலவில், 32 காவல் நிலையங்கள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் கட்டுமானத்தில் உள்ளன. அதேபோன்று, ரூபாய் 250.82 லட்சம் மதிப்பில் போச்சம்பள்ளியில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 7-வது அணி நிருவாகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 25]

**காவல் நிலையங்கள்**

**23-2-2007 நிலவரம்**

மொத்த காவல் நிலையங்கள் - 1,432 (196 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உட்பட)




ii) ஏற்கெனவே அரசால், ரூபாய் 5,776.50 லட்சத்தில் ஒப்பளிக்கப்பட்டுள்ள 25 திட்டங்களுக்கான பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

## XII. அகில இந்தியக் காவல் பணித் திறன் போட்டிகள்

96. ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் அகில இந்தியக் காவல் பணித் திறன் போட்டியின் முக்கிய நோக்கமே, காவல் துறையினரின் பணித் தகுதியை மேம்படுத்த வேண்டும் என்பதேயாகும். 1954, 1974, 1991 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு, 50-வது அகில இந்திய காவல் பணித் திறன் போட்டிகளை நடத்துவதற்கு சென்னை மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது. 13-1-2007 முதல் 18-1-2007 வரை நடைபெற்ற போட்டிகளில், 22 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசம் மற்றும் 8 மத்திய காவல் அமைப்புகளிலிருந்து, இதுவரை இல்லாத அளவிற்கு 947 போட்டியாளர்கள், தாங்கள் சார்ந்துள்ள அமைப்புகளுக்குப் பின்வரும் ஆறு பிரிவுகளில் வெற்றி வாகை தேடித் தருவதற்காகக் கலந்து கொண்டனர்:

(அ) புலனாய்விற்கான விஞ்ஞான உதவிகள்

(ஆ) கணினி விழிப்புணர்வு

[2007 ஏப்ரல் 25

(இ) காவல் நிழற்படக் கலை

(ஈ) காவல் காணொளிக் கலை

(உ) நாசவேலை தடுப்புச் சோதனை

(ஊ) காவல் மோப்ப நாய் போட்டி

மொத்தமுள்ள 51 பதக்கங்களில், தமிழ்நாடு இதுவரை இல்லாத அளவில் 8 தங்கம், 7 வெள்ளி மற்றும் 3 வெண்கலம் என மொத்தம் 18 பதக்கங்களைப் பெற்று வெற்றி பெற்றது. மேலும், போட்டிகளின்போது, மொத்தமுள்ள 14 கோப்பைகளில் 6 கோப்பைகளைப் பெற்று தமிழ்நாடு வெற்றி வாகை சூடியது.

97. சட்டம் சார்ந்த மருத்துவ வாய்மொழித் தேர்வில் அனைத்து மூன்று பதக்கங்களையும் தமிழ்நாடு அணி வென்றதன்மூலம், அதன் பணித் திறன் மற்றும் ஆதிக்கம் வெளிப்பட்டது. 'புலனாய்விற்கான விஞ்ஞான உதவிகள்' போட்டியில், மொத்தமுள்ள 24 பதக்கங்களில் 13 பதக்கங்களைப் பெற்று, தொடர்ந்து தனித்துவத்தோடு விளங்கியதுடன், அனைத்து மூன்று தங்கப் பதக்கங்கள், சிறந்த மோப்ப நாய்க்கான கோப்பை, மோப்ப நாய் போட்டியில் முதலிடத்திற்கான கோப்பை ஆகியவற்றையும் தமிழ்நாடு வென்றது.

98. தமிழகக் காவல் அணியின் திறமையால் கவரப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர், தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றவர்களுக்கு, முறையே ரூ.50,000/- ரூ.30,000/-, ரூ.20,000/- ரொக்கப் பரிசு வழங்குவதாக அறிவித்தார். மேலும், சென்னையில் 50-வது அகில இந்தியக் காவல் பணித் திறன் போட்டியை வெற்றிகரமாக நடத்தி முடித்ததற்கு, தமிழ்நாடு காவல் துறைத் தலைமை இயக்குநர் மற்றும் அவரது குழுவில் இடம் பெற்றிருந்த அதிகாரிகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பாராட்டு தெரிவித்தார்.

## XIII. தடய அறிவியல் துறை

99. தடய அறிவியல் துறையானது, இயக்குநர் ஒருவரது தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. 1849 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இப்பிரிவில், 230 தடய அறிவியல் பணியாளர்களும் 266 இதர பணியாளர்களும் உள்ளனர். வழக்குப் புலன் விசாரணையில், அறிவியல் சார்ந்த யுக்திகளை வழங்கி இத்துறை அத்தியாவசிய சேவை புரிந்து வருகிறது. சென்னையில் உள்ள பிரதான ஆய்வகத்தில் 15 பிரிவுகள் உள்ளன. இத்துறையின்கீழ் 9 வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்கள்



2007 ஏப்ரல் 25]

இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும்/ஆணையரகத்திலும் ஒரு நடமாடும் தடய அறிவியல் ஆய்வகம் உள்ளது. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவுகளில், மரபணு ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய மரபணு ஆய்வுப் பிரிவு நிறுவப்பட்டுள்ளதாலும், மரபணுப் பகுப்பாய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டு வருவதாலும், நாட்டிலேயே தமிழ்நாடு தடய அறிவியல் துறையானது, முதன்மையான துறையாகத் திகழ்ந்து வருகிறது. விஷ பாதிப்புக்குள்ளான நோயாளிகளுக்கு, தடய அறிவியல் துறையானது மருத்துவம் சார்ந்த நச்சியல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

100. தடய அறிவியல் துறையானது, பகுப்பாய்வுகளில் வளர்ச்சியடைந்த நாடுகளில் கிடைக்கப்பெறும் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அதற்கென, 2006-2007 ஆம் ஆண்டில், காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் ரூபாய் 223.27 இலட்சம் பெறுமானமுள்ள நவீன கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இணையதளக் குற்றங்கள், கணினிசார் குற்றங்கள் போன்றவற்றைக் கண்டுபிடிக்க, புதிய கணினி தடய அறிவியல் பிரிவு ஒன்றும், காணொளி பதிவு மற்றும் ஒலிப் பதிவின் நம்பகத்தன்மையைக் கண்டு பிடிப்பதற்காக "செவிப்புலன் தடய அறிவியல் பிரிவு" ஒன்றும், அறிவியல்சார் விசாரணையில், காவல் துறையினருக்கு உதவிடும் வகையில் "தடய அறிவியல் உளவியல் பிரிவு" ஒன்றும், நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## XIV. புதிய முயற்சிகள்

101. குற்ற நிகழ்வால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு உதவிடும் வகையில், அனைத்துக் காவல் நிலையங்களிலும் குற்ற வழக்குகளை ஒளிவு மறைவு இல்லாமல் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. உள்ளூர்க் காவல் நிலையத்தைப் பொதுமக்கள் அணுகும் போக்கை மேம்படுத்த இது உதவும்.

### காவல் துறையின் நற்பெயர் திட்டம்

102. சாதாரண, அடித்தட்டு மக்கள் மற்றும் நலிந்த பிரிவினர் ஆகியோரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, உள்ளூர்க் காவல் துறையினர் கடமை உணர்வுடன் செயலாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் "காவல் துறை நற்பெயர் திட்டம்" ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சாதாரண மக்களுக்கு எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் உதவிட முன்வந்து, அவர்களிடம் மரியாதையுடனும், பொறுப்புணர்வுடனும் நடந்து கொள்ள

[2007 ஏப்ரல் 25

வேண்டுமென்ற செய்தியை மக்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக, இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு திட்ட ஆய்வாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சென்னை, காவல் பயிற்சிக் கல்லூரியில் 91 திட்ட ஆய்வாளர்களுக்கும், 15 காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் துறைத் துணைத் தலைவர்கள் ஆகியோருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் மாநிலத்தில் உள்ள பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட காவல் அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் இத்திட்டம் குறித்த முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி, பயிற்சி அளித்துள்ளனர். திருச்சியில், "காவல் துறை மக்களின் உற்ற நண்பன்", திருநெல்வேலியில் சாலை பாதுகாப்புப் பிரச்சாரங்கள், கருத்தரங்குகள், தொழிற்பட்டறைகள், காவல்-பொதுமக்கள் நல்லுறவுக் கூட்டங்கள் போன்ற புதிய முயற்சிகளும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டு வருகின்றன.

## முடிவுரை

*103.* விரைவான மேம்பாடு மற்றும் அதிவேக தொழில் வளர்ச்சி போன்றவற்றை எய்துவதற்குத் தற்போதைய சமூக பொருளாதாரச் சூழலில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் உருவாக்க வேண்டியது அவசியமாகிறது. சட்டம்-ஒழுங்கைத் திறம்படப் பேணுதல், உரிய நேரத்தில் குற்ற நிகழ்வுகளைத் தடுத்தல் மற்றும் கண்டுபிடித்தல் ஆகியவற்றின்மூலம் அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதில் காவல் துறை முக்கியப் பங்காற்றி வருகிறது. இத்துடன், சாதாரண மக்கள், காவல் துறையினரை அணுகிப் பயன்பெற வேண்டுமென்ற அரசின் அடிப்படை நோக்கத்தைப் பூர்த்தி செய்ய காவல் துறை பாடுபடும். இத்தகைய சவால்களைத் திறம்படக் கையாள, காவல் துறை தன்னைத் தயார்படுத்திக்கொண்டு, மாநில அரசு நல்லாட்சி நடந்திட முக்கியப் பங்காற்றும். இக்கொள்கைக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவற்றை நிறைவேற்றும் வகையில் காவல் துறைக்கு உதவி செய்திட அரசு உறுதிபூண்டுள்ளது.

## இணைப்பு - 1




மற்றுமுள்ள தமிழக அரசின் அமைப்புகள்

1. கா.து.இ./மேலாண்மை இயக்குநர், காவலர் வீட்டுவசதி வாரியம், சென்னை
2. கா.து.இ./முதன்மை விழிப்பு அலுவலர், மாநில போக்குவரத்துக் கழகம், திருச்சி
3. கூ.கா.து.இ./முதன்மை விழிப்பு அலுவலர், மாநகர போக்குவரத்துக் கழகம், சென்னை
4. கூ.கா.து.இ./விழிப்பு, தமிழ்நாடு மின்வாரியம், சென்னை
5. கூ.கா.து.இ./இயக்குநர், ஊழல் வழக்கு தொடர்பு, சென்னை
6. கூடுதல் சிறைத்துறை இயக்குநர், சென்னை
7. கூ.கா.து.இ./மாநில மனித உரிமை ஆணையம், சென்னை
8. கா.து.த./இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி, சென்னை
9. கா.து.த./முதன்மை விழிப்பு அலுவலர், ஆவின், சென்னை
10. கா.து.து.த./முதன்மை விழிப்பு அலுவலர், மாநில போக்குவரத்துக் கழகம், நாகர்கோவில்
11. கா.து.து.த./விழிப்பு அலுவலர், தமிழ்நாடு செய்தி அச்சு மற்றும் காகிதம் லிமிடெட், புகளூர்
12. கா.கண்./ஆளுநரின் மெய்க்காப்பாளர், சென்னை
13. கா.கண்./விழிப்பு அலுவலர், மாநகர போக்குவரத்துக் கழகம், சென்னை
14. கா.கண்./மாநில மனித உரிமை ஆணையம், சென்னை

| | |
|---|---|
| DGP | காவல்துறை தலைமை இயக்குநர் |
| ADGP | கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர் |
| IGP | காவல்துறை தலைவர் |
| DIG | காவல்துறை துணைத் தலைவர் |
| AIG | காவல்துறை உதவித் தலைவர் |
| SP | காவல்துறை கண்காணிப்பாளர் |
| COP | காவல்துறை ஆணையர் |
| JCP | காவல்துறை இணை ஆணையர் |
| DCP | காவல்துறை துணை ஆணையர் |
| CMD | தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் |
| JD | இணை இயக்குநர் |
| DD | துணை இயக்குநர் |
| CMT | தளவாய் |
| CVO | முதன்மை விழிப்பு அலுவலர் |
| V & AC | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை |

| | |
|---|---|
| SIC | சிறப்பு புலனாய்வு பிரிவு |
| STT | சிறப்பு புலனாய்வு குழு |
| STF | சிறப்பு அதிரடிப்படை |
| L&O | சட்டம் மற்றும் ஒழுங்கு |
| HQ | தலைமையிடம் |
| BOW | பொருளாதாரக் குற்றப் பிரிவு |
| ENF | அமலாக்கம் |
| CBCID | குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை |
| CSG | கடலோரப் பாதுகாப்புப் பிரிவு |
| HG | ஊர்க் காவல்படை |
| TS | தொழில்நுட்பப் பணிகள் |
| PTC | காவல் பயிற்சி கல்லூரி |
| TRNG | பயிற்சி |
| TNUSRB | தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு குழுமம் |

| | |
|---|---|
| STC | மாநில போக்குவரத்துக் கழகம் |
| MTC | மாநகர போக்குவரத்துக் கழகம் |
| TNPL | தமிழ்நாடு செய்திதாள் மற்றும் காகித நிறுவனம் புகளூர் |
| TNEB | தமிழ்நாடு மின்வாரியம் |
| SHRC | மாநில மனித உரிமை ஆணையம் |
| ADC | ஆளுநரின் மெய்க்காப்பாளர் |

## இணைப்பு-2

### 2006 மற்றும் 2007 (15-02-2007 வரை) ஆண்டுகளில் நிகழ்ந்த காவல் துறை துப்பாக்கிச் சூடு சம்பவங்களின் விவரம்

| வ. எண் | விவரம் | 2006 | 2007 (15-02-2007 வரை) |
|---|---|---|---|
| 1. | துப்பாக்கிச் சூடு நடைபெற்ற சம்பவங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை | 17 | 3 |
| | (அ) கலவரத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் | 3 | - |
| | (ஆ) கூட்டுக் கொள்ளையைத் தடுக்கும் நடவடிக்கையில் | - | - |
| | (இ) பிற குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கையில் | 13 | 3 |
| | (ஈ) மற்றவை | 1 | - |
| 2. | இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை | 7 | 2 |
| | (அ) காவல் துறையினர் (சம்பவங்களில்) | - | - |
| | (ஆ) பொதுமக்கள் (காவல் துப்பாக்கிச் சூட்டில்) | 7 | 2 |
| 3. | காயமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை | 32 | 3 |
| | (அ) காவல் துறையினர் (சம்பவங்களில்) | 29 | 3 |
| | (ஆ) பொதுமக்கள் (காவலர் துப்பாக்கிச் சூட்டில்) | 3 | - |

## இணைப்பு-3

### சொத்து சம்பந்தமான குற்ற நிகழ்வு நிலவரத்தைக் காட்டும் வரைபடம்








## இணைப்பு-4

### 2003-2006 ஆம் ஆண்டுகளில் களவுபோன மற்றும் மீட்கப்பட்ட சொத்துக்களின் சதவிகிதம்

| | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|
| கண்டுபிடிப்பு சதவிகிதம் | 78.22 | 84 | 85 | 88 |
| களவுபோன சொத்துக்கள் (கோடியில்) | 49.56 | 43.94 | 39.56 | 43.07 |
| மீட்கப்பட்ட சொத்துக்கள் (கோடியில்) | 35.75 | 34.97 | 30.89 | 34.81 |
| மீட்பு சதவிகிதம் | 72.13 | 80 | 78 | 81 |

## இணைப்பு-5

### 2005 மற்றும் 2006 ஆண்டுகளுக்கான குற்ற நிகழ்வுகள் சம்பந்தமான ஒப்பீட்டுப் பட்டியல்

| வ. எண் | குற்றத் தலைப்பு | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | |
|---|---|---|---|
| | | 2005 | 2006 |
| 1. | கொலை | 1,365 | 1,274 |
| 2. | ஆதாயக் கொலை | 74 | 89 |
| 3. | கூட்டுக் கொள்ளை | 73 | 95 |
| 4. | வழிப்பறி | 437 | 450 |
| 5. | கன்னக் களவு | 3,738 | 3,300 |
| 6. | திருட்டு | 15,851 | 13,651 |
| | மொத்தம் | 21,538 | 18,859 |
| | கண்டுபிடிப்பு சதவிகிதம் | 86 | 89 |
| | களவுபோன சொத்துக்கள் | ரூ.39.56 கோடி | ரூ.43.07 கோடி |
| | மீட்கப்பட்ட சொத்துக்கள் | ரூ.30.89 கோடி | ரூ.34.81 கோடி |
| | மீட்பு சதவிகிதம் | 78 | 81 |

53-137—16a

[2007 ஏப்ரல் 25

## இணைப்பு - 6

### பெண்களுக்கு எதிரான குற்றங்கள் - பதிவானவை






2007 ஏப்ரல் 25]

## இணைப்பு - 7

### கடந்த நான்கு வருடங்களில் பல குற்ற வகைகளின்கீழ் பெண்களுக்கு எதிராக பதிவானக் குற்றங்கள்

| வ. எண் | தலைப்பு | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|
| 1. | கற்பழிப்பு | 547 | 618 | 571 | 457 |
| 2. | ஆட்கடத்தல் | 641 | 692 | 783 | 718 |
| 3. | வரதட்சணை மரணங்கள் | 222 | 225 | 215 | 187 |
| 4. | கணவர் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை | 1,494 | 1,437 | 1,650 | 1,248 |
| 5. | மானபங்கம் | 2,048 | 1,861 | 1,764 | 1,179 |
| | மொத்தம் | 4,952 | 4,833 | 4,983 | 3,789 |

## இணைப்பு - 8

### காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி (கோடியில்)

| காவல் துறை நவீனமயமாக்கல் வருடம் | மத்திய அரசின் ஒதுக்கீடு | மாநில அரசின் ஒதுக்கீடு | மொத்தம் (ரூபாய் மதிப்பு கோடியில்) |
|---|---|---|---|
| 2001-2002 | 68.10 | 68.10 | 136.20 |
| 2002-2003 | 68.10 | 68.10 | 136.20 |
| 2003-2004 | 52.47 | 36.67 | 89.14 |
| 2004-2005 | 56.76 | 37.84 | 94.60 |
| 2005-2006 | 59.99 | 20.01 | 80.00 |
| 2006-2007 | 51.00 | 17.00 | 68.00 |
| மொத்தம் | 356.42 | 247.72 | 604.14 |

[2007 ஏப்ரல் 25

## இணைப்பு-9

### காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் பல்வேறு இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி

| வ. எண் | இனங்கள் | ஒதுக்கப்பட்ட நிதி-ரூபாய் இலட்சத்தில் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2000-2001 | 2001-2002 | 2002-2003 | 2003-2004 | 2004-2005 | 2005-2006 | 2006-2007 |
| 1. | கட்டடங்கள் | 452.00 | 1720.90 | 1720.90 | 1531.00 | 2624.00 | 1257.44 | 1219.00 |
| 2. | வீட்டு வசதி | 8267.00 | 5976.24 | 5976.24 | 2255.00 | 1953.00 | 3015.75 | 2562.50 |
| 3. | வாகன வசதி | 2562.00 | 2249.50 | 2249.50 | 2218.15 | 1665.65 | 1534.14 | 1122.60 |
| 4. | ஆயுதங்கள் | 236.00 | 187.50 | 187.50 | 4.95 | 191.39 | 198.06 | 44.80 |
| 5. | தகவல் தொடர்பு | 555.00 | 774.32 | 774.32 | 235.08 | 781.52 | 281.35 | 235.40 |
| 6. | பயிற்சி | 570.00 | 966.22 | 966.22 | 454.05 | 621.00 | 151.00 | 179.00 |
| 7. | த.அ.து./ கை.வி.ரே.பி. | 484.00 | 197.75 | 197.75 | 45.00 | 380.50 | 308.00 | 227.82 |
| 8. | சாதனங்கள் | 2102.00 | 1020.38 | 1020.38 | 1443.69 | 700.06 | 682.81 | 691.54 |
| 9. | கணினிகள் | 72.00 | 527.41 | 527.41 | 726.88 | 361.25 | 268.80 | 378.14 |
| 10. | ஊர்க்காவல் படை | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 181.53 | 134.57 | 40.50 |
| 11. | ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 168.09 | 98.70 |
| | மொத்தம் | 15300 | 13620.22 | 13620.22 | 8913.8 | 9459.9 | 8000.01 | 6800 |



2007 ஏப்ரல் 25]

## இணைப்பு-10

### தமிழ்நாடு காவல் துறையில் உள்ள வாகனங்களின் இனவாரியான நிலவரம்




| | | |
|---|---|---|
| கனரக வாகனங்கள் | : | பேருந்து/லாரி |
| மிகரக வாகனங்கள் | : | சிறிய பேருந்து/வேன் |
| இலகுரக வாகனங்கள் | : | கார்/டாடா சுமோ மற்றும் ஸ்பேசியோ/ போலேரோ/ டோயோடோ குவாலீஸ்/ஜீப் |
| இருசக்கர வாகனங்கள் | : | மொபெட்/மோட்டார் சைக்கிள் |
| இதர வாகனங்கள் | : | வஜ்ரா/க்ரேன்/கைதி பாதுகாப்பு வாகனம்/ தண்ணீர் பீச்சியடிக்கும் வாகனம்/ ஆம்புலன்ஸ் |

## இணைப்பு-II

*(229 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 23—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

### I. முன்னுரை

தீ, இயற்கையின் அனைத்து மூலப் பொருட்களைப் போன்று மனித வளர்ச்சிக்கு மிகவும் உதவிகரமானதாகவும், அதேசமயம் அதைக் கவனமாகக் கையாளாவிடில், மதிப்பிட முடியாத உயிர் மற்றும் உடைமைகளுக்குச் சேதத்தை ஏற்படுத்தக் கூடியதுமாகும். எண்ணெய், இரசாயனம், மின் உற்பத்தி போன்ற தொழிற்சாலைகளின் வேகமான வளர்ச்சி மற்றும் நகர்ப்புறங்களில் ஏற்பட்டுவரும் நெரிசல் ஆகியவற்றினால் தீ விபத்துகள் அதிகரித்து வருகின்றன. இதன் காரணமாகத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல்பாடுகளும் அதற்கேற்றவாறு அதிகரித்துள்ளன. மேலும், தீத் தடுப்புப் பணி மட்டுமின்றி, இயற்கைச் சீற்றங்களான வெள்ளம், புயல், ஆழிப் பேரலை, நில நடுக்கங்கள், ஏனைய சீரழிவுகளான கட்டடம் இடிந்து விழுதல், வெடி விபத்துகள், குண்டுவெடிப்புகள் போன்றவை ஏற்படும் அவசர காலங்களில் மீட்புப் பணிகளையும் இந்தத் துறை மேற்கொண்டு வருகிறது.

### II. குறிக்கோள்கள்

2. தமிழகத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, "காக்கும் பணி எங்கள் பணி" என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு தீத் தடுப்பு மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்தி வருகிறது. காவல், வருவாய், மருத்துவம் போன்ற பிற துறைகளுடன் இணைந்து, தீவிரவாதிகளின் தாக்குதல், சாதி, சமய மோதல்கள், தேர்தல்கள், விழாக்கள், பண்டிகைகள் போன்ற தருணங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றில் மிகுந்த விழிப்புடன் செயல்பட்டு வருகிறது. நோய்வாய்ப்பட்டவர்கள், காயம் அடைந்தவர்கள் ஆகியோருக்கு உடனடியாக மருத்துவ உதவி அளிப்பதற்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல இத்துறையில் உள்ள நோயாளர் ஊர்திகள் பயன்பட்டு வருகின்றன. முக்கியப் பிரமுகர்கள் வருகை,

[2007 ஏப்ரல் 25

முக்கியக் கூட்டங்கள் மற்றும் விழாக்களுக்காகப் பெரிய அளவில் பந்தல்கள் அமைக்கப்படும் இடங்களில் இத்துறை பாதுகாப்புப் பணியினையும் மேற்கொள்கிறது. தனியாரால் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கும், வரையறுக்கப்பட்ட கட்டண அடிப்படையில் பாதுகாப்புப் பணியினை இத்துறை மேற்கொள்கிறது. மேலும், வரையறுக்கப்பட்டுள்ள பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் அடிப்படையில் தடையின்மைச் சான்று / தீ உரிமங்கள் வழங்கும் பல்வேறு குழுமங்களுக்குத் தீத் தடுப்பு நோக்கில் ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது.

3. பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் தீ விபத்தினைத் தடுப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, அவர்களுக்கு உரிய பயிற்சி அளிப்பதை முக்கியப் பணியாகத் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆற்றி வருகிறது. இத்துறை பொது இடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பிரச்சாரம், விளம்பரம் மற்றும் ஒத்திகைப் பயிற்சிகளை நடத்தி வருகிறது.

4. காலப்போக்கில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணிகளில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அண்மைக் காலத்தில் டிசம்பர், 2004-ல் சென்னையை உலுக்கிய நில அதிர்வு மற்றும் கடலோரப் பகுதிகளில் எழுந்த ஆழிப் பேரலையினால் ஏற்பட்ட வரலாறு காணாத உயிர்ச் சேதம் மற்றும் உடைமைகளுக்கு ஏற்பட்ட பொருட்சேதம் போன்றவைகளைக் கருத்தில் கொள்ளும்போது, இத்துறையானது, பெரிய சவால்களைக் கையாள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகும். இதுபோன்ற பேரழிவு நேரங்களில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலாளரது தலைமையின்கீழ், "உயர்நிலைப் பேரிடர் மேலாண்மைக் குழுமம்" (Disaster Management Authority) ஏற்படுத்தப்பட்டு, அவ்வமைப்பில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் இயக்குநரும் ஓர் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தப் பேரிடர் மேலாண்மைக் குழுமமானது, தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களை அமைத்து, அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்புகளை இத்துறையிடம் அளித்துள்ளது. இத்துறை பெரும் பேரழிவுகளைச் சமாளிக்கும் வகையில் திறமைகளை மேம்படுத்த, தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாவட்டங்கள்தோறும் ஓர் உதவிக் கோட்ட அலுவலரின் தலைமையின்கீழ் இத்துறைப் பணியாளர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள தேடுதல் மற்றும் மீட்புக் குழுவில், பொதுப் பணித் துறையின் பொறியாளர்கள் மற்றும் மருத்துவர்கள் உறுப்பினர்களாகச்



2007 ஏப்ரல் 25]

சேர்க்கப்பட்டுள்ளார்கள். இந்தத் தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்கள், மாதந்தோறும் கூட்டாக ஒத்திகைகளை நடத்தி வருகின்றன. பள்ளிக் குழந்தைகளின் மத்தியில் விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஒத்திகைப் பயிற்சிகளைப் பள்ளிகளில் நடத்த முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

## III. நிருவாக அமைப்பு

5. தமிழ்நாடு அரசின், உள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநராக, இந்தியக் காவல் துறைப் பணியினைச் சேர்ந்த கூடுதல் காவல் துறை இயக்குநர் தரத்திலுள்ள ஓர் அலுவலர் உள்ளார். இயக்குநருக்கு உதவியாக ஐந்து துணை இயக்குநர்கள் உள்ளனர். இவர்கள் செப்டம்பர், 2006-ல் புதிதாகத் தொடங்கப்பட்ட வடமேற்கு மண்டலம் உட்பட, ஒவ்வொரு மண்டலத்திற்கும் பொறுப்பு வகித்து வருகின்றனர். இதற்கும் கூடுதலாக, துணை இயக்குநர் (நிருவாகம்) மற்றும் இரண்டு நிருவாக நேர்முக உதவியாளர்களும் (நிருவாகம் மற்றும் கணக்கு) இயக்குநருக்கு உதவி புரிந்து வருகின்றனர். ஐந்து மண்டலங்களும் 29 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டமும் ஒரு கோட்ட அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. கோயம்புத்தூர்-நீலகிரி மற்றும் இராமநாதபுரம்-சிவகங்கை கோட்ட அலுவலர்களைத் தவிர, ஏனைய கோட்ட அலுவலர்களுக்கு ஒரு வருவாய் மாவட்டம் அதிகார வரம்பில் உள்ளது. இந்தக் கோட்டங்களின் அதிகார வரம்பில் 4 முதல் 16 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் உள்ளன. ஒரு நிலைய அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தின் பொறுப்பினை வகிக்கிறார். 12 கோட்டங்களில் தீத் தடுப்புப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. துணை இயக்குநர் பதவித் தரத்தில் நியமிக்கப்பட்டுள்ள இயக்குநர்(பயிற்சி)-ன் கட்டுப்பாட்டின்கீழ் தாம்பரத்தில் மாநிலப் பயிற்சி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையமானது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் உள்ள பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதுடன், மற்றவர்களுக்கும் குறைந்த கட்டணத்தில் பயிற்சிகளை அளித்து வருகிறது. இயக்குநர் (பயிற்சி) அவர்களின் மேற்பார்வையின் கீழ் சென்னையில் ஒரு மாநிலப் பணிமனை ஒன்றும் செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிருவாக அமைப்பு குறித்த விளக்கப்படம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 25

6. புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் தொடங்குவதற்கான பெருமுயற்சியை அரசு மேற்கொள்ளும்போது, அவை

(i) 25 கி.மீ. சுற்றளவிற்குள் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையமாவது இருக்க வேண்டும்;

(ii) ஒவ்வொரு நிலையமும் குறைந்தது 50,000 மக்களுக்காவது பயன்பட வேண்டும்;

(iii) அது ரூ.50,000/—க்குக் குறைவில்லாத பொருட்சேதம் மற்றும் அழிவுகளை ஏற்படுத்த வாய்ப்புள்ள பகுதிகளில் அமைய வேண்டும்;

## IV. உள் கட்டமைப்பு வசதிகள்

### (அ) மனித ஆற்றல்

7. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல் மற்றும் நிருவாகப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 6,643 ஆகும். கோட்ட அலுவலர்கள், தானியங்கிப் பொறியாளர் (மாநிலப் பட்டறை), நிலைய அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பதவிகளுக்கு நேரடி நியமன முறை மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணி நியமனம் செய்யப்படுகிறார்கள். தீயணைப்போர் என்ற பதவி வகிப்பவர்கள், தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தீயணைப்போர் பதவியில் உள்ள காலியிடங்களை நிறைவு செய்யும் விதமாக, ஜூலை, 2006 முதல் பிப்ரவரி, 2007 வரை தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 597 நபர்கள் தீயணைப்போராகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

### (ஆ) ஊர்திகள் மற்றும் சாதனங்கள்

8. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மீட்புப் பணி ஆற்றுவதில் மாறுபட்ட பங்கு வகிக்கிறது. இதன் செயல்பாடு சிறப்பானதாக அமைவது, இத்துறையில் உள்ள ஊர்திகள், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் ஆகியவற்றை நல்லமுறையில் பராமரித்தலைச் சார்ந்துள்ளது. அதனடிப்படையில், இத்துறை பின்வருமாறு ஊர்திகளைக் கொண்டுள்ளது:—



2007 ஏப்ரல் 25]

338 நீர்தாங்கி ஊர்திகள், 81 நோயாளர் ஊர்திகள், 13 சிறு நுரை தகர்வு ஊர்திகள், 5 அவசரகால மீட்பு ஊர்திகள், நீராற்றலால் இயங்கும் மேடை கொண்ட (இங்கிலாந்து-சைமன் ஸ்நார்கல்) ஊர்தி ஒன்று, சுழல் மேஜை ஏணி ஊர்தி (இசுசூ மோரிடா ஜப்பான் தயாரிப்பு) ஒன்று, 37 மீட்டர் மற்றும் 42 மீட்டர் உயரம் செல்லக்கூடிய நீராற்றலால் இயங்கும் மேடை கொண்ட மற்றும் சுழல் மேஜை ஏணி ஊர்திகள் பிராண்டோ ஸ்கைலிப்ட்டுகள்(பின்லாந்து தயாரிப்பு)-2, நீர்விடுகுழாய் பதிக்கும் ஊர்தி ஒன்று, 53 தண்ணீர் லாரிகள், மீட்பு ஊர்தி ஒன்று, 2 நடமாடும் பழுதுபார்க்கும் ஊர்திகள், 228 அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய பம்புகள், 93 மிதவைப் பம்புகள், இவை தவிர, இத்துறை சீருந்துகள், ஈப்புகள், பேருந்து மற்றும் விசை மிதிவண்டி ஊர்திகளையும் கொண்டுள்ளது. இந்த அரசு 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.95.80 இலட்சம் செலவில் கழிவு செய்யப்பட்ட பழைய வாகனங்களுக்குப் பதிலாக, புதியதாக 7 நோயாளர் ஊர்திகள், 1 பெரிய பேருந்து, 2 சிறிய பேருந்துகள், 4 சீருந்துகள், 4 ஈப்புகள் ஆகியவற்றை வழங்கியுள்ளது. மேலும், இந்த அரசு பழைய நீர்தாங்கி வண்டிகளுக்குப் பதிலாக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.157 இலட்சம் செலவில் 10 புதிய நீர்தாங்கி வண்டிகள் கட்டுமானம் செய்ய ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அவை, கோவை, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திடம் கட்டுமானத்தில் உள்ளன.

9. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை மிகவும் திறமையாகக் கையாளும் பொருட்டு, நவீன உபகரணங்களான, தூக்கும் பைகள், புகை வெளியேற்றும் கருவிகள், நச்சு வாயுக் கண்டுபிடிப்பான்கள், மின் ஆக்கிகள் மற்றும் மீட்புப் பணிக்கான அனைத்து உபகரணங்களையும் கொண்ட ஒரு பெட்டி ஆகிய மீட்புக் கருவிகள் தேவையான அளவுக்குத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. புயல் மற்றும் வெள்ளம் ஏற்படும் காலங்களில் உபயோகப்படுத்துவதற்காக, இத்துறையில் 8 கண்ணாடி இழை விசைப் படகுகளும், 36 மிதவைப் படகுகளும் உள்ளன; இவை தவிர அனல்வழி உருவம் அறியும் நிழற்படக் கருவி பொருத்திய தலைக் கவசம்-1, கையில் எடுத்துச் செல்லக் கூடிய அனல்வழி உருவம் அறியும் நிழற்படக் கருவிகள்-2, உயிர் உள்ளவர்கள் சிக்கியுள்ள இடங்களைக் கண்டுபிடிக்கும் கருவிகள்-2, பல்வகை வாயுக் கண்டுபிடிப்பான்கள்-2, தீ பாதிக்காத உடைகள்-81, இரசாயனப் பாதுகாப்பு உடைகள்-83 மற்றும் தீ பாதிக்காத 222 இணை கையுறைகள் ஆகியவைகளும் இத்துறையின் பயன்பாட்டில் உள்ளன. இந்த அரசு, 2006-2007 ஆம் ஆண்டில் தீயணைப்பு வீரர்களின் பயன்பாட்டிற்கென ரூ.74.10 இலட்சம் செலவில் மூச்சுக்

கருவிகள் வாங்க ஒப்பளிப்பு செய்துள்ளது. இந்த ஒதுக்கீட்டிலிருந்து 88 மூச்சுச் கருவிகள் மற்றும் 2 உபரி உருளைகள் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

10. துறையின் ஊர்திகள் மற்றும் இயந்திரங்களின் பழுதுகளைச் செப்பனிட, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சென்னையில், மாநிலப் பட்டறை ஒன்றைப் பராமரித்து வருகிறது.

## (இ) தொலைபேசிகள் மற்றும் கம்பியில்லாத் தொலைத் தொடர்புக் கருவிகள்

11. ஆபத்து குறித்த செய்திகளைத் துல்லியமாக அறிந்திடவும், ஆபத்து நிகழ்ந்த இடங்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் சென்றடையவும் ஏற்ற தகவல் தொடர்புக் கட்டமைப்பு ஒன்று மிக அவசியமான ஒன்றாகும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி தொடர்பானவற்றில் உடனடி நடவடிக்கை மேற்கொள்வதற்கான நேரம் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. உடனடி செயல்படுவதற்கான நேரம் என்பது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளில் திறமைகளை அளவீடு செய்யும் முக்கிய அம்சமாக உள்ளது. திறமையான தீயணைப்புப் பணியானது துரிதமான தகவல் தொடர்பு பரிமாற்றம், மனித மற்றும் இயந்திரங்களின் ஆற்றலைச் சேகரிப்பதைச் சார்ந்துள்ளது. ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திலும் ஒரு தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. "101" என்ற இலவசத் தொலைபேசி இணைப்புகள் பெரும்பாலான மாவட்டத் தலைநகரங்களிலும் மற்றும் நகரங்களிலும் உள்ளன. சென்னைப் பெருநகர், திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் குறைந்த வேக உயர் அலைவரிசை கம்பியில்லாத் தொலைத் தொடர்பு வசதிகளைக் கொண்ட வாக்கி டாக்கிகள் மற்றும் மறு அஞ்சல் கருவிகள் இயங்கி வருகின்றன. மேலும், மாநிலத் தலைநகரமானது அனைத்து மாவட்டத் தலைநகரங்களுடனும் மற்றும் சில முக்கியப் பகுதிகளுடனும் அதி நுண் அலைவரிசைக் கருவிகள்மூலம் இணைக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில், 42 அதி நுண் அலைவரிசைக் கருவிகள் பொருத்தப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகின்றன. சென்னைப் பெருநகர், திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் தகவல் தொடர்பு வசதிகளை நவீனப்படுத்தும் வகையில், உயர் அலைவரிசையில் இயங்கும் நிலையான, நடமாடும் மற்றும் வாக்கி டாக்கிகள் வாங்க 2006-2007 ஆம் ஆண்டில் இந்த அரசு ரூ.5.5 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.



## V. பதில் செயல்பாட்டு நேரம்

12. மேற்குறிப்பிட்டபடி விபத்து நிகழ்ந்த இடத்திற்குத் துரிதமாகச் செல்லுதல் தீயணைக்கும் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதனை உறுதி செய்கிறது. விபத்து பற்றிய தகவல் பெறப்பெற்ற கணத்திலிருந்து முதல் தீயணைப்பு ஊர்தி விபத்து நடந்த இடத்தைச் சென்று அடைய எடுத்துக்கொள்ளும் நேரமே "பதில் செயல்பாட்டு" நேரமாகும். தீ விபத்து அல்லது மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலைகளில் பதில் செயல்பாட்டு நேரத்தைக் குறைக்க இத்துறை தொடர்ந்து அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. சென்னை மாநகரில் இந்த பதில் செயல்பாட்டு நேரத்தினை 10 நிமிடங்களுக்கும் மற்றும் மாவட்டந்தோறும் பதில் செயல்பாட்டு நேரத்தினை 20 நிமிடங்களுக்கும் குறைவாகக் கொண்டு வருவதில் இத்துறை வெற்றி கண்டுள்ளது. விரைவான பதில் செயல்பாட்டு நேரத்தினை உறுதி செய்ய தகவல் தொடர்பு உடனடித் தேவையாகும். இந்த பதில் செயல்பாட்டு நேரம் அனுசரிக்கப்படுவதைக் கண்காணிக்கும் வகையில் தகவல்களை விரைந்து அளிப்பதற்கென தனியே ஒரு தகவல் தொடர்பு மையமும், "101" மற்றும் "102" எண்கள் கொண்ட தொலைபேசி இணைப்புகள் மற்றும் வான்தந்தி கருவி இணைப்புகள் பொருத்திய ஒரு கட்டுப்பாட்டு அறையும் சென்னையில் இயங்கி வருகின்றன. சென்னைப் பெருநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் கம்பியில்லாத் தகவல் தொடர்புத் திட்டத்தின்மூலம் இணைக்கப்பட்டுள்ளதால் இதன்மூலம் பதில் செயல்பாட்டு நேரத்தினைக் குறைக்கும் வகையில் தகவல் பரிமாற்றத்தை விரைந்து மேற்கொள்ள இயலும். பதில் செயல்பாட்டு நேரத்தை மாவட்டங்களில் மேலும் குறைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

## VI. துறை இணைய தளம்

13. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கென இணைய தளம் ஒன்று தேசிய தகவல் தொடர்பு மையத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் http:/www.tn.nic.in/fireservice என்பதாகும். இது தீத் தடுப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்துப் பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து விவரங்களையும் கொண்டதாகவும், இதனைப் பயன்படுத்திக் கொள்பவர்களுக்கு ஒரு நல்ல நண்பனாகவும் செயல்பட்டு வருகிறது.

## VII. பயிற்சி வசதிகள்

14. எந்தவொரு சாதனமும் அதனை இயக்கும் மனிதன் அதன் செயல்பாட்டினை அறிந்திராவிடில் துறையின் செயல்பாட்டில் முன்னேற்றம் இருக்காது. பொதுமக்களுக்குச் சேவை புரிந்திடும் துறையான இத்துறையின் செயல்பாட்டினை நன்கு கணக்கிடும் வகையில், அதன் பல்வேறு தரத்தில் உள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிப்பதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் மீட்புப் பணி தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள நவீன மாற்றங்களுக்கு ஏற்ப இதன் பணியாளர்களுக்குப் பணியில் சேரும்போதும் மற்றும் வெவ்வேறு காலக் கட்டங்களிலும் நினைவுகூர் பயிற்சி அனைத்து நிலைகளில் உள்ளவர்களுக்கும் அளிக்கப்படுகின்றன. இதற்கெனத் தாம்பரத்தில் நன்கு பராமரிக்கப்படும் மாநிலப் பயிற்சி மையம் ஒன்றில் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இது தவிர, தொழிற்சாலைகள், பொதுத் துறை நிறுவனங்கள், ஏனைய மாநில மற்றும் மத்திய அரசு அமைப்புகளிலிருந்து அனுப்பப்படும் பணியாளர்களுக்கும், குறைந்த கட்டணத்தில் இம் மாநிலப் பயிற்சி மையமானது பயிற்சிகளை அளித்து வருகிறது. தாம்பரத்தில் அமைந்துள்ள மாநிலப் பயிற்சி மையமானது, பயிற்றுவிப்பதற்குத் தேவையான அவசரகால மீட்பு ஊர்தி, இழுத்துச் செல்லும் வசதி கொண்ட நீட்டிப்பு ஒளி தாங்கி சாதனம், கணினிகள், இரசாயனப் பாதுகாப்பு உடைகள், நீரினுள் மூழ்க பயன்படும் உடைகள், "மல்டி மீடியா" புரொஜெக்டர்கள், நடமாடும் பழுதுபார்க்கும் ஊர்திகள் மற்றும் உடற்கட்டு பராமரிக்கும் கருவிகள் ஆகிய நவீன சாதனங்களைக் கொண்டுள்ளது. அனைத்துப் பருவ காலங்களுக்கும் ஏற்ற பயிற்சி மைதானம், புகை உருவாக்கும் கூடம் மற்றும் "வி நாச்" தொட்டிகள் ஆகியவைகளுடன், போதுமான இட வசதியுள்ள பயிற்சி வகுப்பறைகள், சிறந்த நூலகம், மாதிரி வடிவமைப்புகள், நல்ல உணவுக் கூடம் மற்றும் தங்குமிட வசதிகளும் அமைந்துள்ளதால், அவை இங்கு அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தினை மேலும் உயர்த்துகின்றன. இந்தப் பயிற்சி மையமானது நாகபுரியில் உள்ள தேசிய தீயணைப்புக் கல்லூரிக்கு இணையானது. இந்திய அரசின் உள் துறை அமைச்சகம், நாகபுரியிலுள்ள தேசிய தீயணைப்புக் கல்லூரியினால் வழங்கப்பெறும் பயிற்சியினை வழங்கும் மண்டலப் பயிற்சி மையங்களில் ஒன்றாக, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாநிலப் பயிற்சி மையத்தினை அங்கீகரித்துள்ளது. இது தவிர, அனைத்துக் கோட்டங்களிலும் பயிற்சியினை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் நிருவாகத் திறமையினை மேம்படுத்துவதற்காகவும் கணினிகள்



வழங்கப்பட்டுள்ளன. பேரழிவு மேலாண்மையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சிறப்புமிக்க தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களுக்கு மாநில அளவில் பயிற்சி அளிக்கும் நிறுவனமாகத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாநிலப் பயிற்சி மையமானது அறிவிக்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில், பல்வேறு பயிற்சிகள் 746 நபர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

## VIII. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களின் கட்டட நிலை

15. மாநிலத்தில் தற்பொழுது ஓகேனக்கல்லில் செயல்பட்டு வரும் 1 மீட்புப் பணி நிலையம் தவிர்த்து, 282 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் உள்ளன. இவற்றுள், 161 நிலையங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 30 நிலையங்கள் ஓரளவு நிரந்தரக் கட்டடங்களிலும், 91 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

## IX. ஆற்றிய பணிகள்

### (அ) தீத் தடுப்பு

16. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணிகள் அடுக்கடுக்காக இருந்தபோதிலும், தீத் தடுப்பு இதன் முதன்மைப் பணிகளில் ஒன்றாகும். இதனைச் செயல்படுத்திட ஏதுவாக, இத்துறை 12 கோட்டங்களில் தீத் தடுப்புக் குழுக்களைக் கொண்டுள்ளது. இக்குழுக்கள் தீத் தடுப்பு முறைகளைக் கிராமம் மற்றும் நகரப் பகுதி மக்களிடம் கற்பித்தலில் முக்கியப் பொறுப்பாற்றி வருகிறது. கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், கிராமங்கள் மற்றும் குடிசைப் பகுதிகளில் தேர்வு செய்யப்பட்ட குழுவினருக்குச் சொற்பொழிவுகள் மற்றும் செயல்முறை விளக்கங்கள் மூலம் தீத் தடுப்பு பாதுகாப்பு முறைகள் குறித்து இத்துறை பயிற்சி அளித்து வருகிறது. 2006 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் பொது இடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் போன்ற 4,971 இடங்களில் தீத் தடுப்பு முறைகள் குறித்த கல்வியறிவு பயிற்றுவிக்கப்பட்டுள்ளது. 7 நோயாளர் ஊர்திகள் நடமாடும் திரையரங்குகளாக மாற்றியமைக்கப்பட்டு, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களுக்குத் தீப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பள்ளிகளில் போதுமான எண்ணிக்கையில் உள் நுழைவாயில், வெளியேறும் நுழைவாயில் மற்றும் அவசரகால வெளியேறும் வாயில் ஆகியவை அமைந்திருப்பதை உறுதி செய்யும் பொருட்டு கட்டாய அடிப்படையில், தீப் பாதுகாப்பு ஆய்வினைச்

[2007 ஏப்ரல் 25

சம்பந்தப்பட்ட பகுதிக்குட்பட்ட நிலைய அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் ஏற்படுத்தியுள்ள பாதுகாப்புத் தன்னார்வலர்கள் குழுமத்திற்கு இந்த அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது தீத் தடுப்புப் பணிகளில் பொதுமக்களை அதிக அளவில் பங்கு கொள்ளச் செய்வதற்கு வழிவகுக்கும்.

17. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் அதிரடிப் படை உருவாக்கப்பட்டு, அப்படை வீரர்களுக்கு பேரழிவுக் காலங்களில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக அனைத்து விதத்திலும் தீவிரப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

18. ஒவ்வோர் ஆண்டும் தீத் தொண்டு நாள் ஏப்ரல் திங்கள் 14 ஆம் தேதியிலிருந்து ஒரு வார காலத்திற்கு மாநிலம் முழுவதும் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் எங்கெல்லாம் விழா ஏற்பாடு செய்ய முடியுமோ அவ்விடங்களில் எல்லாம் விழாவினை ஏற்பாடு செய்து இத்துறை கொண்டாடி வருகிறது. இவ்விழாவின்போது, நாளிதழ்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் தீத் தடுப்புப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### (ஆ) குடிசைப் பகுதிகளில் கோடைக் காலத்தில் சுற்றுக் காவல் பணி புரிதல்

19. கோடைக் காலத்தில் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகளில் பெரும்பாலானவை கவனமின்மையாலும், அலட்சியத்தினாலும் ஏற்படுவன ஆகும். இது போன்ற தீ விபத்துகளைச் சமாளிக்கும் நோக்கத்தில், ஆபத்தான பகுதிகளில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் முடிய தீயணைப்பு ஊர்திகளைச் சுற்றுக் காவல் பணியில் ஈடுபடுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த கோடைக் காலத்தின்போது 10 தீயணைப்பு ஊர்திகள் 24 மணி நேரமும் சுற்றுக் காவல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு, முக்கியமான குடிசைப் பகுதிகள் விழிப்புடன் கண்காணிக்கப்பட்டன.

### (இ) திரையரங்குகள் / கட்டடங்களில் தீத் தடுப்பு :

20. திரை அரங்குகளில் தீப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளைப் பல் துறைக் குழு ஒன்று ஆண்டுதோறும் ஆய்வு செய்து வருகிறது. இக்குழுவானது திரையரங்குகளை ஆய்வு செய்து உரிம நிபந்தனை மீறல்கள் ஏதுமிருப்பின் அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க உரிமம் வழங்கும் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்கிறது. இதன்படி



2007 ஏப்ரல் 25]

2006-ஆம் ஆண்டில் 924 திரையரங்குகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், 2006-ஆம் ஆண்டில் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் ஏறத்தாழ 20,815 கட்டடங்கள் தீத் தடுப்புக்கு என்னென்ன செய்யப்பட்டுள்ளன என்பதைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

### (ஈ) தீ விபத்து குறித்த அழைப்புகள்:

21. 2006-ஆம் ஆண்டில், மொத்தத்தில் 17,442 தீ விபத்து அழைப்புகள் வரப்பெற்றன. அவ்விபத்துகளினால் 65 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன; 122 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. இழப்பு ஏற்பட்ட உடைமைகளின் இழப்பு மதிப்பு ரூ.27.74 கோடியும், மீட்கப்பெற்ற உடைமைகளின் மதிப்பு ரூ.131.03 கோடியும் ஆகும். சென்னை மாநகரில் தீ விபத்து நிகழும் இடங்களில் சென்னை மாநகரக் குடிநீர் வடிகால் வாரியத்தின் தண்ணீர் லாரிகள் மூலம் மீண்டும் நீர் நிரப்பப்பட்டு, தொடர் தீயணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய பணிகள் தீயணைப்புப் பணிகள் தங்கு தடையின்றி நடைபெறுவதற்கும், மிகப் பெரிய அளவில் உயிர்களையும், பொதுமக்களின் உடைமைகளையும் தீயின் அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கும் உதவிகரமாக இருந்து வருகின்றன.

22. 2006-ஆம் ஆண்டில் வரப்பெற்ற 17,442 தீ விபத்து பற்றிய தகவல்களில் பெருந் தீ விபத்துகள், நடுத்தர தீ விபத்துகள் மற்றும் சிறிய தீ விபத்து அழைப்புகளின் எண்ணிக்கை முறையே 126, 366 மற்றும் 16,950 ஆகும். மேலும், பெருந் தீ விபத்து மற்றும் நடுத்தர தீ விபத்து பற்றிய தகவல்களின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது அவை முறையே 1 விழுக்காடு மற்றும் 2 விழுக்காடு மட்டுமே என்பது பின்வரும் படத்தின் மூலம் விளங்கும்:—



பெருந் தீ விபத்து அழைப்புகளின் எண்ணிக்கை கடந்த 4 ஆண்டுகளில் நிகழ்ந்தவற்றுடன் ஒப்பிடும்போது 2006-ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளதைப் பின்வரும் வரைபடம் விளக்குகிறது:—




### (உ) மீட்பு அழைப்புகள்

23. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையால் பெறப்படும் மீட்பு அழைப்புகள், பெரும்பாலும் சாலை விபத்தில் சிக்குண்டவர்கள், இரயில் விபத்துகளில் சிக்குண்டவர்கள், கிணறுகளில் தவறி விழுந்தவர்கள், நச்சுப்பூச்சிகளின் தாக்குதலுக்கு உள்ளானவர்கள், நச்சு வாயுக்களைச் சுவாசித்தவர்கள், கட்டட இடிபாடுகளில் சிக்குண்டவர்கள், இயற்கையான மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் இன்னல்கள் போன்றவற்றில் சிக்குண்டவர்கள் ஆகியோரைக் காப்பாற்றக் கோரும் அவசர அழைப்புகளாகவே உள்ளன. 2006 ஆம் ஆண்டில் மொத்தம் 8,345 மீட்பு அழைப்புகள் பெறப்பட்டுள்ளன. இந்த மீட்பு அழைப்புகளில் 6,163 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

### (ஊ) நோயாளர் ஊர்தி அழைப்புகள்:

24. 81 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. தீ விபத்து மற்றும் இதர விபத்துகளின்போது காயமடைந்த நபர்கள் உடனடி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள். மேலும்,



நோயாளிகளும், காயமடைந்தோரும் அழைப்பின்பேரில் குறைந்த வாடகையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். 2006-ஆம் ஆண்டில், 1,324 அழைப்புகளை ஏற்று, நோயாளர் ஊர்திகள் செயல்பட்டுள்ளன. இவற்றுள் 1047 வாடகைக் கட்டண அழைப்புகளாகும். நோயாளர் ஊர்திகள் மூலம் அழைப்புகளை மேற்கொண்டவகையில் ரூ.2.40 லட்சம் வாடகைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### (எ) பொது நலன் கருதி ஆயத்த நிலைப் பணி:

25. முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போதும், முக்கிய கருத்தரங்குகள் மற்றும் பொதுக் கூட்டங்கள்/ விழாக்களின்போதும் பெரிய பந்தல்கள் அமைக்கப்படும் தருணங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் வாகனங்கள் தயார் நிலையில் அங்கு நிறுத்தி வைக்கப்படுகின்றன. மேலும், பாதுகாப்புப் பணிக்காகவும், ஆயத்த நிலை நிறுத்தப் பணிக்காகவும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி ஊர்திகள் பயன்படுத்தப்படுகின்றன. இது தவிர, தனியார்களின் விழாக்களிலும் கட்டண அடிப்படையில் தீயணைப்பு ஊர்திகள் ஆயத்த நிலை நிறுத்தப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றன. 2006-ஆம் ஆண்டில் 2,035 தருணங்களில் ஆயத்த நிலை நிறுத்தப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவற்றுள், கட்டண அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை 1,209 ஆகும். 2006-ஆம் ஆண்டில் ஆயத்த நிலை நிறுத்தப் பணி கட்டணமாக ரூ. 35.29 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

26. இத்துறை மேற்கொண்டுள்ள குறிப்பிடத்தக்க பாதுகாப்புப் பணியானது, நாகப்பட்டினத்தில் கொடிய சுனாமியின் பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கொட்டகைகள் அமைந்துள்ள இடங்களில் தொடர்ந்து பாதுகாப்புப் பணி மேற்கொண்டு வருவதாகும். நாகப்பட்டினம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் உள்ள 2 நீர்தாங்கி வண்டிகள் தவிர, 11 நீர்தாங்கி வண்டிகளுடன் நூற்றுக்கணக்கான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி வீரர்கள் தொடர்ந்து இன்றுவரை மேற்குறிப்பிட்ட இடங்களில் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

## X. ஊக்குவித்தலும் ஊக்கத் தொகைகளும்

27. இத்துறைப் பணியாளர்களை மேலும் திறம்படப் பணிபுரிய ஊக்குவிக்கும் வகையிலும், விரும்பிய இலக்குகளையும் நோக்கங்களையும்

அடைவதற்கு ஏதுவாகவும், விருதுகள் வழங்கப்படுவதோடு நலத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன:—

**(அ) விருதுகள்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் கடமை உணர்வுடனும், அஞ்சா நெஞ்சத்துடனும் ஆற்றிய பணியினை அங்கீகரிக்கும் வகையில், மாநில அரசால் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் விருதுகள் விவரம் பின்வருமாறு:—

**(1) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம் (அண்ணா பதக்கம்)**

இப்பதக்கம் பெற்றவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ரூ.2,000/- முதல் ரூ.5,000/- வரை ஒட்டுமொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவார்கள். 2006 ஆம் ஆண்டில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளர்களுக்கு 10 பாராட்டத்தக்க பணிகளுக்கான பதக்கங்களும், 2 வீரப் பதக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**(2) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம் (பொங்கல் தினத்தன்று வழங்கப்படுகிறது)**

இப்பதக்கம் பெறும் தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ளவர்களுக்கு மாதந்தோறும் ரூ.40/-ம், முன்னணித் தீயணைப்போர்/இயந்திரக் கம்மியர் ஓட்டுநர், தீயணைப்போர் ஓட்டுநர், தீயணைப்போர்/இயந்திரக் கம்மியர் ஆகியவர்களுக்கு மாதந்தோறும் ரூ.50/-ம் ரொக்கப் படியாக வழங்கப்படுகிறது. 2007-ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம் 80 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(3) சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சர் தீயணைப்புப் பணி பதக்கம்**

இந்தப் பதக்கமானது, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் திறனறிந்து அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்கள் தங்கள் கடமையைத் திறமையுடனும், ஊக்கத்துடனும் ஆற்றிட உற்சாகம் அளிக்கும் வகையிலும் ஏற்படுத்தப்பட்டது. நிலைய அலுவலர், முன்னணித் தீயணைப்பாளர், தீயணைப்பாளர்



ஆகியோருக்கு, பதவிக்கு ஒன்று வீதம் ஆண்டுதோறும் மூன்று பதக்கங்கள் தீத் தொண்டு நாளான ஏப்ரல், 14 ஆம் நாள் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் 22 காரட் தங்கத்தில் செய்யப்பட்டதாகும். மேலும், 8 கிராம் எடையில் நிலைய அலுவலருக்கு ரூ.3,000/-ம், முன்னணித் தீயணைப்போருக்கு ரூ.2,500/-ம், மற்றும் தீயணைப்போருக்கு ரூ.2,000/-ம் ஒட்டுமொத்த மானியமாக வழங்கப்படுகிறது. இப்பதக்கம் அவர்களுடைய பணியில், விஞ்சிய சாதனை படைத்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

(4) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு, மாநில விருதுகள் தவிர, மத்திய அரசால் பின்வரும் விருதுகளும் வழங்கப்படுகின்றன:—

(அ) சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்;

(ஆ) குடியரசு தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்;

(இ) வீர தீரச் செயல்களுக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்.

**(ஆ) நலத் திட்டங்கள்**

**(1) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சேம நல நிதி**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சேர்ந்த துயருற்ற பணியாளர்களுக்கு நிதி உதவி செய்வதற்கென 1962-ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சேம நல நிதி ஏற்படுத்தப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. உறுப்பினர்களின் நலனுக்காகப் பின்வருமாறு நிதியுதவி அளிக்கப்படுகிறது:—

(அ) தீயணைப்புப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போர் காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டிருப்பின் ஊட்டச் சத்துள்ள உணவு வாங்கிக் கொள்ள;

(ஆ) உறுப்பினர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விச் செலவுக்காக;

(இ) ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு அடையாளத் தொகை வழங்க;

(ஈ) உறுப்பினர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச் சடங்கு செலவுக்காக;

அரசு மானியமாக ரூ 4 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் இந்நல நிதிக்கு வழங்கி வருகிறது. இத்திட்டத்தில் தற்போது 5,044 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். மேலும், 2006-2007-ஆம் ஆண்டில் உறுப்பினர்களிடமிருந்து சந்தாத் தொகையாக ரூ.6.33 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிவாரணத் தொகை ரூ.7.36 இலட்சம் ஆகும்.

## 2. குடும்ப நல நிதித் திட்டம்

பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளர் குடும்பத்தினருக்குக் குடும்ப நல நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக ரூ.1,50,000/- அரசால் அளிக்கப்படுகிறது.

## 3. கருணைத் தொகை

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கருணைத் தொகை விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| அ | பணியில் ஈடுபட்டிருக்கும்போது மரணமடையும் பணியாளர்களின் குடும்பத்திற்கு | ரூ.5,00,000/– |
| ஆ | பணியாற்றும்போது நிரந்தர ஊனம் ஏற்பட்டவர்களுக்கு | ரூ.1,00,000/– |
| இ | பணியாற்றும்போது கடுமையான காயமடைந்தவர்களுக்கு | ரூ.20,000/– |
| ஈ | பணியாற்றும்போது சிறு காயம் அடைந்தவர்களுக்கு | ரூ.10,000/– |

## 4. குழுக் காப்பீட்டுத் திட்டம்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் இயக்குநர் முதல் தீயணைப்போர் வரையிலான பணியாளர்களில் (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக) எவரேனும் பணியில் ஈடுபடும்போது உயிர் இழக்க நேரிட்டால் அவரது குடும்பத்திற்கு உதவுவதற்காகக் குழுக் காப்பீட்டுத் திட்டம் ஒன்று நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1 லட்சம் ரூபாய இறந்த பணியாளரின் குடும்பத்திற்கு நிவாரணமாக வழங்கப்படுகிறது.





## 5. உணவுப் பொருட்களை மானிய விலையில் வழங்கும் திட்டம்

உதவிக் கோட்ட அலுவலர் பதவி வரையிலான பணியாளர்களுக்கு அரிசி, கோதுமை, ரவை/மைதா, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இதற்காக ஆண்டொன்றுக்குச் சராசரியாக ரூ.55 இலட்சம் அரசு செலவிடுகிறது.

## 6. குடியிருப்புகள் கட்டுதல்

இத்துறையினைச் சேர்ந்த அனைத்து அலுவலர்களும் மற்றும் பணியாளர்களும் பணி நிபந்தனைகளின்படி வாடகையில்லாக் குடியிருப்புகள் பெறத் தகுதி பெற்றவர்கள். அவசரக் காலங்களில் உடனடியாக எளிதாக ஆட்களைத் திரட்டவும், செயல்திறனைக் கூட்டவும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களை அவர்களது பணியிடத்திற்கு அருகிலேயே குடியமர்த்துவதை அரசு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. தற்போது பல்லடம், பேட்டை, இராஜபாளையம், சேலம், கள்ளக்குறிச்சி, பெண்ணாகரம், ஆரணி, பொன்னேரி, பொன்னமராவதி, சிதம்பரம் மற்றும் ஊட்டி ஆகிய 11 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 200 குடியிருப்புகள் கட்டித்தர இந்த அரசானது ரூ.988.24 இலட்சத்திற்கு இந்நிதியாண்டில் ஒப்பளிப்பு அளித்துள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் அமைத்துத் தரும் எண்ணிக்கையினை உயர்த்துவதாக அது அமையும் என்பதுடன், நாளடைவில் இவர்களின் செயல்படும் திறமையினை மேலும் வலுப்படுத்துவதாகவும் அமையும்.

## 7. பிற நலத் திட்டங்கள்

நலத் திட்டமாக, தீயணைப்போர் பதவி முதல் உதவிக் கோட்ட அலுவலர் பதவியில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இடர்ப் படி மாதம் ரூ.40/-லிருந்து ரூ.120/- ஆகவும் மற்றும் கோட்ட அலுவலர்களுக்கு மாதம் ரூ.60/-லிருந்து ரூ.140/-ஆகவும் 1-9-2006 முதல் உயர்த்தி வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

## XI. புதிய முயற்சிகள்

28. 2007-2008-ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ், மொத்தம் ரூ.129.70 இலட்சம் செலவில் பின்வரும் பெருந்திட்டங்கள் இந்த அரசினால் செயல்படுத்தப்படவுள்ளன:—

(அ) ரூ.14.40 இலட்சம் செலவில் சென்னையில் உள்ள தீக் கட்டுப்பாட்டு அறையினை நவீனப்படுத்துதல்;

(ஆ) ரூ.46.60 இலட்சம் செலவில் தீயணைப்புப் பணியின் செயல்பாட்டினை மேம்படுத்துவதற்காகத் தீயணைப்பு நீர்விடுகுழாய்கள் அதற்குரிய இணைப்புகளுடன் வாங்குதல்;

(இ) ரூ.32.25 இலட்சம் செலவில் கழிவு செய்யப்பட்ட ஐந்து நோயாளர் ஊர்திகளுக்குப் பதிலாகப் புதிய ஐந்து நோயாளர் ஊர்திகள் வாங்குதல்;

(ஈ) ரூ.30 இலட்சம் செலவில் கழிவு செய்யப்பட்ட இரண்டு நீர்தாங்கி வண்டிகளுக்குப் பதிலாகப் புதிய இரண்டு நீர்தாங்கி வண்டிகள் வாங்குதல்;

(உ) ரூ.6.45 இலட்சம் செலவில் ஒகேனக்கல் மீட்புப் பணி நிலையத்திற்குப் புதிதாக ஒரு நோயாளர் ஊர்தி வாங்குதல்.

## முடிவுரை

29. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற மற்றும் தகுதியான பணியாளர்களைக் கொண்டதாகும். அவர்கள் தீ, இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பேரழிவுகளிலிருந்து, தமிழக மக்களின் உயிர் மற்றும் உடைமைகளைக் காப்பதற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர். மாறிவரும் சமுதாயச் சூழ்நிலைக்கேற்ப புதிய சவால்களை எதிர்கொள்ளத் தக்கவகையில் துறையில் அளிக்கப்பட்டுவரும் பயிற்சியினை மேலும் வலுப்படுத்தவும் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தினை ஏற்படுத்தவும் அதிக வாய்ப்புகளை உருவாக்கி, இத்துறையின் செயல்பாட்டுத் திறமையினை மேலும் மேம்படுத்தவும் இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.




| வடமண்டலம் | தீமீபநி | தீதகு | மற்றவை |
|---|---|---|---|
| 1. வட சென்னை | 14 | 1 | 1* |
| 2. தென் சென்னை | 11 | 1 | 1* |
| 3. வட மண்டலம் | – | – | 2** |
| மொத்தம் | 25 | 2 | 4 |

| வட மேற்கு மண்டலம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. வேலூர் | 15 | 1 |
| 2. திருவண்ணாமலை | 12 | -- |
| 3. காஞ்சிபுரம் | 9 | 1 |
| 4. திருவள்ளூர் | 13 | -- |
| மொத்தம் | 49 | 2 |

| மத்திய மண்டலம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. திருச்சி | 8 | 1 |
| 2. புதுக்கோட்டை | 12 | 1 |
| 3. தஞ்சாவூர் | 9 | -- |
| 4. நாகப்பட்டினம் | 9 | -- |
| 5. கடலூர் | 14 | -- |
| 6. விழுப்புரம் | 11 | -- |
| 7. கரூர் | 4 | -- |
| 8. பெரம்பலூர் | 6 | -- |
| 9. திருவாரூர் | 11 | -- |
| மொத்தம் | 84 | 2 |

| தென் மண்டலம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. மதுரை | 9 | -- |
| 2. திருநெல்வேலி | 13 | -- |
| 3. கன்னியாகுமரி | 7 | -- |
| 4. தூத்துக்குடி | 9 | -- |
| 5. விருதுநகர் | 8 | 1 |
| 6. இராமநாதபுரம் சிவகங்கை | 16 | -- |
| 7. தேனி | 8 | -- |
| மொத்தம் | 70 | 1 |

| மேற்கு மண்டலம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. கோயமுத்தூர் நீலகிரி | 14 | 1 |
| 2. ஈரோடு | 10 | 1 |
| 3. சேலம் | 8 | 1 |
| 4. தர்மபுரி | 4+1@ | 1 |
| 5. கிருஷ்ணகிரி | 6 | -- |
| 6. திண்டுக்கல் | 8 | 1 |
| 7. நாமக்கல் | 4 | -- |
| மொத்தம் | 54+1@ | 5 |

மொத்த தீயணைப்பு மீட்புப் பணி நிலையங்களின் எண்ணிக்கை 282 +1 @

பிற நிறுவனங்கள்

| | |
|---|---|
| மாநில பயிற்சி மையம் | 1 |
| மாநிலப் பட்டறை | 1 |
| இசை மேளக் குழு | 1 |
| மீட்புப் பணி நிலையம் | 1 @ |

குறிப்பு— தீமீபநி : தீயணைப்பு மீட்புப் பணி நிலையம்

தீதகு: தீத் தடுப்புக் குழு

மற்றவை:

*புகைப்படப் பிரிவு

**தீக்கட்டுப்பாட்டறை மற்றும் வான்தந்தி பிரிவு

2007 ஏப்ரல் 25]

## இணைப்பு – III

*(229 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் – 37 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின்கீழ் உள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை பிரிவின்கீழ் பின்வரும் துறைகள் இயங்கி வருகின்றன:—

(1) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

(2) மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

(3) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்**

2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையாளர் இத்துறையின் தலைவர் ஆவார். தலைமையிடத்தில் இவருக்கு உதவியாக இரு இணை ஆணையாளர்கள், ஒரு நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் நான்கு உதவி ஆணையாளர்கள் பணிபுரிகின்றனர். ஓர் உதவி ஆணையாளர் தலைமையில் பறக்கும் படை ஒன்று திடீர் சோதனைகளையும் ஆய்வுகளையும் மேற்கொள்கிறது.

3. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர், 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தையும் (தமிழ்நாடு சட்டம் 10/1937), மேற்படிச் சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் செயற்படுத்துகிறார். வடிப்பாலைகள் அமைப்பதற்கும், சாராவி தயாரிப்பதற்குரிய சிறப்பு உரிமைகள் மற்றும் உரிமங்கள், மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் வகைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான சிறப்பு உரிமைகள், மற்றும் உரிமங்களையும் அரசின் முன்அனுமதியுடன் வழங்குவதற்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்தொழிற்சாலைகளின் உரிமங்களை ஆண்டுதோறும் புதுப்பிக்கும் அதிகாரமும் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 25

4. மாவட்ட அளவில் ஆயத்தீர்வை நிருவாகத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் கண்காணிக்கிறார். அவர் மதுவிலக்குச் சட்டம் மற்றும் அதனடிப்படையில் இயற்றப்பட்ட விதிகளின்கீழ் வழங்கப்பட்டுள்ள பல்வேறு சட்ட ரீதியான பொறுப்பினை நிறைவேற்றுகிறார். சென்னை, கோயம்புத்தூர் தவிர, மற்ற மாவட்டங்கள் அனைத்திலும் துணை ஆட்சியர் நிலையில் ஓர் ஆயத்தீர்வை உதவி ஆணையாளர் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் துணை புரிகிறார். சென்னை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஆயத்தீர்வைத் துணை ஆணையாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றனர். துணை ஆட்சியர் நிலையில் வடிப்பாலை அலுவலர்கள் மற்றும் ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்கள் முறையே வடிப்பாலைகள் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை உற்பத்தித் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் அலுவலர்களாக நியமிக்கப் படுகின்றனர். 1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டு மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்புச் சட்டம் மற்றும் அவற்றின்கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி ஆயத்தீர்வை விதிக்கப்பட வேண்டிய பொருட்களுக்கு ஆயத்தீர்வை விதித்தல், இரசாயனத் தொழிற்சாலைகள் மற்றும் பிணை முறி கிடங்குகள் ஆகியவற்றில் சாராவி முறையாகப் பயன்படுத்துவதைக் கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக, ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும், பிணை முறி அலுவலர்களாகவும் வட்டாட்சியர், துணை வட்டாட்சியர் நிலையில் உள்ள வருவாய்த் துறை அலுவலர்கள் பணியமர்த்தப்படுகின்றனர்.

5. துணை ஆட்சியர் பதவி நிலையில், வடிப்பாலைகளில் 13 வடிப்பாலை அலுவலர்களும், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் உற்பத்தித் தொழிற்சாலைகளில் 9 ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். டி.எல்.உரிமப் பிரிவுகளில் (இயல்பு மாற்றப்பட்ட சாராவியைப் பயன்படுத்தும் இரசாயனத் தொழிற்சாலைகள்) வட்டாட்சியர் பதவி நிலையில் 4 ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும், துணை வட்டாட்சியர் பதவி நிலையில் 4 ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும், தெளிந்த சாராவியைப் பயன்படுத்தும் இரசாயனப் பிரிவு ஒன்றில், வட்டாட்சியர் பதவி நிலையில் ஓர் ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலரும், ஆயத்தீர்வைக்குட்பட்ட தயாரிப்புக் கிடங்குகளில் வட்டாட்சியர் நிலையில் 2 ஆயத்தீர்வைக்குட்பட்ட தயாரிப்பு அலுவலர்களும் உள்ளனர்.



2007 ஏப்ரல் 25]

## சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

6. இம்மாநிலத்தில் 38 சர்க்கரை ஆலைகள் உள்ளன. கூட்டுறவுத் துறையில் 16 ஆலைகளும், பொதுத் துறையில் 3 ஆலைகளும், தனியார் துறையில் 19 ஆலைகளும் உள்ளன. இவ்வாலைகள் சர்க்கரை தயாரிப்பில் கருப்பஞ்சாற்றுக் கசண்டினைத் துணைப் பொருளாகப் பெறுகின்றன. சர்க்கரை ஆலைகள் பற்றிய விவரம் இணைப்பு-1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுவாகத் தெளிந்த சாராவியை வடிப்பதற்குக் கருப்பஞ்சாற்றுக் கசண்டு மூலப் பொருளாக பயன்படுத்தப்படுகிறது.

7. கருப்பஞ்சாற்று கசண்டின்மீது விலைக் கட்டுப்பாடு ஏதுமில்லை என்றாலும், எந்தவொரு தவறான உபயோகத்திற்கும் அதனைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காகக் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வைத்திருத்தல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல், ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றிற்காக 1958-ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைபடுத்துதல் விதிகளின்கீழ் உரிமம் வழங்கப்படுகிறது. ஏற்றுமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.300/- நிருவாக சேவைக் கட்டணமாக 3-8-2006 முதல் வசூலிக்கப்படுகிறது.

## வடிப்பாலைகள் மற்றும் சாராவி

8. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள், பிற வேதியியல் பொருள்கள் மற்றும் வார்னிஷ் தயாரிப்பதற்குச் சாராவி மூலப் பொருளாகப் பயன்படுகிறது. கல்விக் கூடங்கள், ஆய்வுக் கூடங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள் ஆகியவைகளும் சாராவியைச் சிறிய அளவில் பயன்படுத்துகின்றன. தமிழ்நாட்டில் 2 கூட்டுறவு வடிப்பாலைகளும், 13 தனியார் வடிப்பாலைகளும், கருப்பஞ்சாற்றுக் கசண்டிலிருந்து சாராவியை உற்பத்தி செய்கின்றன. சாராவி தயாரிக்கும் வடிப்பாலைகளின் விவரம் இணைப்பு-2-ல் கொடுக்கப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டின் தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகளும், 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளும் பல்வேறு உபயோகங்களுக்காகச் சாராவி பயன்படுத்தப்படுவதை முறைப்படுத்துகின்றன.

## எத்தனால் கலந்த பெட்ரோல் திட்டம்

9. மத்திய அரசு எத்தனால் கலந்த பெட்ரோலை எரிபொருளாக அறிமுகப்படுத்த எடுத்த முடிவினைத் தொடர்ந்து, வடிப்பாலைகளுக்கு

எத்தனால் உற்பத்தி செய்ய மாநில அரசு கொள்கையளவில் அனுமதி வழங்கியுள்ளது. இதுவரை, எட்டு வடிப்பாலைகளுக்கு எத்தனால் கலந்த பெட்ரோல் தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எண்ணெய் நிறுவனங்களுக்கு, அவை அனுமதி கோரிய பதினான்கு இடங்களுக்கும் தேவையான உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் உற்பத்தித் தொழிற்சாலைகள்

*10.* இம்மாநிலத்தில் ஆறு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தித் தொழிற்சாலைகளும், மூன்று பீர் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. அவை, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் வகைகளை விநியோகம் செய்து வருகின்றன. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் வகைகள் உற்பத்தி விவரங்கள் இணைப்பு-3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## மாநில ஆய வில்லைகள்

*11.* அதிக பாதுகாப்பு அம்சங்கள் கொண்ட பாலியஸ்டரைஸ்டு ஹோலோகிராம் ஆயத்தீர்வை வில்லைகளைப் பயன்படுத்துவது நடைமுறையில் உள்ளதால், கள்ளத்தனமாகச் சாராவியினைக் கொண்டு செல்வது/போலி மது விற்பனை செய்வது ஆகியவை தடுக்கப்படுகின்றன. இதனால், மாநில அரசின் ஆயத்தீர்வை வருவாய் பாதுகாக்கப்படுகிறது. இந்த ஆயத்தீர்வை வில்லைகள் இயந்திரத்தின்மூலம் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகை மற்றும் பீர் பாட்டில்களின்மீது ஒட்டப்படுகின்றன.

## ஆயத்தீர்வைத் துறையில் கணினிமயம்

*12.* ஆயத்தீர்வை நிருவாகத்தினைக் கணினிமயமாக்குதல் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தலைமைச் செயலகம் மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையரகத்திற்குக் கணினி, தொலை நிகரி, ஒளிநகல் இயந்திரம் போன்றவைகளை வாங்க 2007-2008-ல் ரூ.10.51 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது.

## மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

*13.* கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றை அடியோடு ஒழிப்பதையும், போலியான மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைப்





பிற மாநிலங்களிலிருந்து கடத்தி வந்து விற்பனை செய்வதைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு செயல்பட்டு வருகிறது. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலுவலகம் கூடுதல் காவல் இயக்குநர் நிலையிலான அலுவலரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. அவருக்கு உதவியாகச் சென்னை, மத்திய புலனாய்வுப் பிரிவு காவல் கண்காணிப்பாளர் மற்றும் சென்னை, சேலம் மற்றும் மதுரை மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் கண்காணிப்பாளர்கள் ஆகிய நான்கு காவல் கண்காணிப்பாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். மத்திய புலனாய்வுப் பிரிவு முதன்மையான ஒரு நுண்ணறிவுப் பிரிவு ஆகும். இப்பிரிவு காவல் கண்காணிப்பாளரின் தலைமையில், 2 துணை காவல் கண்காணிப்பாளர்கள், 6 காவல் ஆய்வாளர்கள், 8 உதவி ஆய்வாளர்கள், 1 தலைமைக் காவலர் ஆகியோர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

*14.* தமிழ்நாட்டில் மொத்தம் 94 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள், காவல் ஆய்வாளர்களின்கீழ் இயங்கி வருகின்றன. இப்பிரிவில் மொத்தம் 38 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களும், 38 காவல் துணைக் கண்காணிப்பாளர்களும் பணியாற்றி வருகின்றனர். மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் மற்றும் அலுவலர்கள், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், மாநகரக் காவல் ஆணையர்கள் ஆகியோரது நேரடி மேற்பார்வையில் செயல்பட்டு வருகின்றனர். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துவதற்காக மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மதுவிலக்குச் சட்ட குற்றவாளிகள் மீதும், கள்ளச்சாராயம், தெளிந்த சாராவி மற்றும் போலி/தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் ஆகியவற்றைக் கடத்துபவர்கள்மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாண்டிச்சேரி, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் ஆகிய இடங்களிலிருந்து தீர்வை செலுத்தப்படாத/போலி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், சாராய உறைகள் ஆகியவை தமிழ்நாட்டுக்குக் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைக் கண்காணித்துத் தடுக்கும் வகையில், 21 சோதனைச் சாவடிகளும், 6 நடமாடும் சோதனைச் சாவடிகளும் இயங்கி வருகின்றன.

*15.* மதுவிலக்குச் சட்ட கொடிய குற்றவாளிகள் தமிழ்நாடு தடுப்புக்காவல் சட்டம் 14/1982-இன்கீழ், தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றனர். கள்ளச்சாராயம் மற்றும் கள்ளச்சாராயத்தைக் கடத்தப் பயன்படும் வாகனங்கள் வைக்கப்படுகின்றன. கடுமையான அமலாக்க நடவடிக்கைகள், மறுவாழ்வுப் பணிகள், விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் மதுவிலக்குக் கண்காணிப்புக் குழுக்களின் ஒத்துழைப்பு

போன்றவை பெருமளவில் கள்ளச்சாராயத்தை ஒழிக்க உதவுகின்றன. குறிப்பாக, ஏழை மற்றும் நலிந்த குடும்பங்களைப் பாதிக்கும் கள்ளச் சாராயத்தை ஒழித்திட, அனைத்து வகையிலும் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## காந்தியடிகள் காவலர் விருது

*16.* கள்ளச்சாராயத்தை ஒழிப்பதில் சிறந்த வகையில் பணியாற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கும் காவலர்களுக்கும் "காந்தியடிகள் காவலர் விருது" வழங்கப்படுகிறது. இவ்விருதுகள் குடியரசு தினத்தில் வழங்கப்பட்டு வருகிறது. பதக்கத்துடன் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்ட 10,000 ரூபாய், 2006-ஆம் ஆண்டு முதல் 20,000 ரூபாயாக அரசால் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

*17.* மனம் திருந்தி வாழ முன்வரும் கள்ளச்சாராயக் குற்றவாளிகள் மாற்றுவகை வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்டந்தோறும், மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மறுவாழ்வு குழுக்கள் இயங்கி வருகின்றன. கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பனையில் ஈடுபட்டிருந்த முன்னாள் குற்றவாளிகளுக்கு மாற்றுவகை வாழ்வாதாரம் அமைக்கும் பொருட்டு மறுவாழ்வு நிதி ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுகிறது.

## போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

*18.* போதை மருந்துகள் - மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவை தொடர்பான செயல்பான செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தவும், போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனைகள்மூலம் பெறப்பட்ட சொத்துக்கள் அல்லது அவற்றைக் கள்ளத்தனமாகக் கொண்டுசெல்வதின்மூலம் பெறப்பட்ட அல்லது கள்ளத்தனமாகக் கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் போன்றவைகளைப் பறிமுதல் செய்ய வகை செய்யவும், போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருள்கள் குறித்த பன்னாட்டு ஒப்பந்தங்களின் விதிகளைச் செயல்படுத்தவும், மத்திய அரசு 1985-ஆம் ஆண்டு போதை மருந்துகள் மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டத்தை (மத்திய சட்டம் 61/1985) இயற்றியது. இச்சட்டமும், இதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளும் 14-11-1985 முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. இச்சட்டத்தின்கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் ஒவ்வொன்றும் பிடியாணையின்றிக் கைது செய்வதற்குரிய மற்றும் ஜாமீனில் விடுதலை செய்ய முடியாத குற்றமாகும்.



*19.* மத்திய அரசு 1988 ஆம் ஆண்டு போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்களின் கள்ள வியாபாரத் தடுப்புச் சட்டம் (மத்திய/1988) என்ற மற்றொரு சட்டத்தையும் இயற்றியுள்ளது. இச்சட்டம் 1-7-1988 முதல் செயல்பாட்டில் உள்ளது. இதன்படி, போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்களைக் கள்ளத்தனமாக வியாபாரம் செய்யும் நபர்களைத் தடுப்புக் காவலில் வைக்கப்படும் நாளிலிருந்து குறைந்தது ஓர் ஆண்டுக் காலமும், அதிகபட்சமாக இரண்டாண்டுக் காலமும் காவலில் வைக்க, மாநில, மத்திய அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மாவட்டக் காவல் துறை, இரயில்வே காவல் துறை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவு ஆகியவையும் மத்திய அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, சுங்கத் துறை கலெக்டரேட், வருவாய் உளவுத் தகவல் இயக்ககம் ஆகியவையும் போதைப்பொருள் தடுப்புச் சட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

*20.* குற்றப் புலனாய்வுத் துறையின் மாநில போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவிற்கு, காவல் துறைக் கண்காணிப்பாளர் ஒருவர் தலைவராக உள்ளார்; அவருக்கு உதவியாக, காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் ஒருவர், 12 காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள், 16 காவல் ஆய்வாளர்கள், 17 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் ஏனைய பதவி நிலைகளில் 126 பேர் உள்ளனர். மாநிலம் முழுவதும் 15 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

*21.* தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், 1956-ஆம் ஆண்டைய கம்பெனிகள் சட்டத்தின்கீழ், 1983-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் பதிவு அலுவலகம் சென்னையில் உள்ளது. இந்நிறுவனம், இம்மாநிலம் முழுவதும், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது மற்றும் பீர் வகைகளின் கொள்முதல் மற்றும் விற்பனை முதலியவற்றைக் கண்காணித்து வருகிறது. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு, 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) கீழ், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது மற்றும் பீர் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்ய தனித்த சிறப்புரிமை அளிக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 25

22. மாவட்ட வருவ்ாய் அலுவலர் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் தலைமையின்கீழ் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து இடங்களில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மண்டல அலுவலகங்கள் செயல்படுகின்றன. இம்மாநிலத்தில் மொத்தம் 33 மாவட்ட மேலாளர் அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் 3 அலுவலகங்கள் சென்னையிலும், 2 அலுவலகங்கள் கோயம்புத்தூரிலும், ஏனைய 28 அலுவலகங்கள் மாவட்டத்திற்கு ஒன்று என்ற விகிதத்திலும் உள்ளன. மாவட்ட மேலாளர் பதவிகளைத் துணை ஆட்சியர்கள் வகித்து வருகின்றனர். மாநிலம் முழுவதும் 41 மதுபானக் கிடங்குகள் உள்ளன.

23. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான சில்லறை விற்பனைக் கடைகளின் வணிக நடவடிக்கைகளைப் படிப்படியாகக் கணினிமயமாக்கும் கருத்துரு, தீவிர பரிசீலனையில் உள்ளது. விற்பனையாகும் சரக்குகளுக்கான விற்பனைத் தொகை சம்பந்தப்பட்ட சரியான கணக்குகள் பராமரிக்கப்படுவதை உறுதி செய்து கொள்வதற்கு இது உதவியாக இருக்கும். சில்லறை விற்பனைக் கடைகளுக்குக் கணினி வழங்குவதால் சில்லறை விற்பனைக் கடைகளின் விற்பனை பற்றிய புள்ளிவிவரங்களைச் சம்பந்தப்பட்ட மதுபானக் கிடங்குகளுக்கு நாள்தோறும் அனுப்புவதற்கு ஏதுவாக இருக்கும். இதனால், பணம் கையாடல் செய்வது தடுக்கப்படும். மேலும் ஒருங்கிணைந்த கணினி இணைப்பால், கிடங்குகள் மற்றும் சில்லறை விற்பனைக் கடைகளில் உள்ள இருப்பு நிலவரங்களை உடனுக்குடன் கண்காணிக்க இயலும்.

**அரசு வருவாய்**

24. 2006-2007 ஆம் ஆண்டில் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகை மற்றும் பீர் விற்பனை மற்றும் வருவாய் விவரங்களை இணைப்பு 4 மற்றும் 5-இல் காணலாம்.

கள்ளச்சாராயம் வடித்தல், தவறான காரணங்களுக்குச் சாராவியைப் பயன்படுத்துதல், போலி மற்றும் இரண்டாந்தர மதுபானங்களை எடுத்துச் செல்லுதல், விற்பனை செய்தல் ஆகியவற்றை ஒழித்திடும் திறமையான ஆயத்தீர்வை நிருவாகத்தினை அளிப்பதில் இந்த அரசு முனைப்புடன் உள்ளது. இந்த நடவடிக்கைகள் கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் உயிர் இழப்புகளைத் தடுக்கவும், அரசின் ஆயத்தீர்வை வருவாயினைப் பாதுகாத்திடவும் உதவும்.



2007 ஏப்ரல் 25]

## இணைப்பு–1

## மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் அவற்றின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு கொள்ளளவு பற்றிய விவரங்கள்

(பத்தி 6–ஐ பார்க்கவும்)

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ்சாற்றுக் கசண்டு கொள்ளளவு (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| | **கூட்டுறவுத் துறை** | |
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, கோயம்புத்தூர் | 11,000.000 |
| 2 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை (இயங்கவில்லை) | 0.000 |
| 3 | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை | 14,000.000 |
| 4 | தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை | 21,400.000 |
| 5 | சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை, தர்மபுரி | 12,000.000 |
| 6 | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுரை | 17,000.000 |
| 7 | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 14,500.000 |
| 8 | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 17,620.000 |
| 9 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 21,000.000 |
| 10 | செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை, கடலூர் | 16,000.000 |
| 11 | கள்ளக்குறிச்சி, கூட்டுறவு சர்க்கரை ஆலை பிரிவு–1 | 15,000.000 |
| 12 | எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி, கூட்டுறவு சர்க்கரை ஆலை, கடலூர் | 12,000.000 |
| 13 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை பிரிவு–2 | 12,000.000 |
| 14 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 19,000.000 |
| 15 | என்.பி.கே. ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை | 18,000.000 |
| 16 | செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 12,000.000 |
| | **மொத்தம்** | **2,32,520.000** |
| | **பொதுத் துறை** | |
| 17 | மதுரா சுகர்ஸ் | 6,000.000 |
| 18 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை | 16,502.922 |
| 19 | பெரம்பலூர் சர்க்கரை ஆலை லிமிடெட் | 12,000.000 |
| | **மொத்தம்** | **34,502.922** |

[2007 ஏப்ரல் 25

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ்சாற்றுக் கசண்டு கொள்ளளவு (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| | **தனியார் சர்க்கரை ஆலைகள்** | |
| 20 | எஸ்.வி. சுகர் மில்ஸ் லிமிடெட் | 30,100.000 |
| 21 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட், தேனி | 12,000.000 |
| 22 | தரணி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் | 12,600.000 |
| 23 | சக்தி சுகர்ஸ் லிமிடெட், யூனிட்-2 | 12,000.000 |
| 24 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட் | 12,194.750 |
| 25 | சக்தி சுகர்ஸ் லிமிடெட் | 19,278.000 |
| 26 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட், துகிலி | 20,170.712 |
| 27 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட், நெல்லிக்குப்பம் | 18,600.000 |
| 28 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட், முண்டியம்பாக்கம். | 16,500.000 |
| 29 | பொன்னி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் | 13,755.000 |
| 30 | திரு. ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், பிரிவு-1 | 12,000.000 |
| 31 | திரு. ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், பிரிவு-2 | 17,333.725 |
| 32 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட், பேட்டவாய்த்தலை | 7,000.000 |
| 33 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட், புகளூர் (டெகான்) | 16,273.000 |
| 34 | கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் | 10,459.000 |
| 35 | தரணி சுகர்ஸ்-யூனிட் 2 | 9,599.660 |
| 36 | அம்பிகா சுகர்ஸ், பெண்ணாடம், கடலூர் | 38,000.000 |
| 37 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட், குரும்பூர் | 10,000.000 |
| 38 | அருணாசலம் சுகர்ஸ், திருவண்ணாமலை (இயங்கவில்லை) | 0.000 |
| | **மொத்தம்** | **2,87,863.847** |
| | **ஆக மொத்தம்** | **5,54,886.769** |



2007 ஏப்ரல் 25]

## இணைப்பு-2

### வடிப்பாலைவாரியான சாராவி உற்பத்தி குறித்த விவரம் (சாராவி ஆண்டு டிசம்பர் முதல் நவம்பர் வரை) (பத்தி 8-ஐ பார்க்கவும்)

| வ. எண் | வடிப்பாலையின் பெயர் (திருவாளர்கள்) | கருப்பஞ் சாற்றுக் கசண்டு கையிருப்பு அளவு (மெட்ரிக் டன்களில்) | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிப்பு அளவு (மெட்ரிக் டன்களில் | உற்பத்தி டிசம்பர் 2005 முதல் நவம்பர் 2006 வரை (லிட்டர் (கோடிகளில்) |
|---|---|---|---|---|
| | **கூட்டுறவு வடிப்பாலை நிறுவனங்கள்** | | | |
| 1. | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட் | 55,000 | 13,750 | 0.74 |
| 2. | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட் | 55,000 | 12,000 | 0.83 |
| | **தனியார் வடிப்பாலை நிறுவனங்கள்** | | | |
| 3. | திரு. ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட் | 82,500 | 20,625 | 1.51 |
| 4. | பன்னாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட் | 71,350 | 22,800 | 1.65 |
| 5. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், மரிகம்பள்ளி அலகு-1 (06-07-2002 முதல் இயங்கவில்லை) | 60,000 | 15,046 | 0.00 |
| 6. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், காடாம்புலியூர் அலகு-2 | 1,10,000 | 24,523 | 1.73 |
| 7. | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் | 36,000 | 12,600 | 0.95 |
| 8. | ஈ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட் | 60,000 | 14,077 | 1.02 |
| 9. | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் | 60,000 | 10,000 | 1.17 |
| 10. | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் | 40,000 | 12,480 | 0.96 |
| 11. | சதர்ன் அக்ரிபுரேன் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் | 25,000 | 10,217 | 0.45 |
| 12. | சக்தி சுகர்ஸ் லிமிடெட் | 1,19,260 | 18,600 | 2.95 |
| 13. | திருச்சி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் | 1,06,000 | 26,700 | 1.35 |
| 14. | மோகன் புரூவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் லிமிடெட் | 45,000 | 11,785 | 0.87 |
| 15. | பவானி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் (29-3-2007 முதல் செயல்பட்டு வருகிறது) | 20,000 | 5,034 | 0.00 |
| | **ஆக மொத்தம்** | **9,45,110** | **2,30,237** | **16.18** |

[2007 ஏப்ரல் 25

## இணைப்பு–3

### இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் உற்பத்தி பற்றிய விவரம்

(பத்தி 10–ஐ பார்க்கவும்)

### இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம்

| ஆண்டு | உற்பத்தி அளவு (கோடி பல்க் லிட்டர்களில்) |
|---|---|
| 1994–1995 | 8.10 |
| 1995–1996 | 8.13 |
| 1996–1997 | 12.78 |
| 1997–1998 | 10.90 |
| 1998–1999 | 9.81 |
| 1999–2000 | 11.74 |
| 2000–2001 | 12.43 |
| 2001–2002 | 13.32 |
| 2002–2003 | 11.62 |
| 2003–2004 | 14.04 |
| 2004–2005 | 16.82 |
| 2005–2006 | 19.86 |
| 2006–2007 | 23.87 |
| பீர் | |
| 1994–1995 | 4.18 |
| 1995–1996 | 5.79 |
| 1996–1997 | 5.33 |
| 1997–1998 | 5.25 |
| 1998–1999 | 5.29 |
| 1999–2000 | 4.23 |
| 2000–2001 | 5.76 |
| 2001–2002 | 5.06 |
| 2002–2003 | 4.32 |
| 2003–2004 | 5.95 |
| 2004–2005 | 7.78 |
| 2005–2006 | 10.62 |
| 2006–2007 | 13.68 |



2007 ஏப்ரல் 25]



[2007 ஏப்ரல் 25




அரசு மைய அச்சகம், சென்னை — 600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.